# வருடாந்த அறிக்கை 2013



பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை இலங்கை

www.pdn.ac.lk

# வருடாந்த அறிக்கை

## (நிர்வாகம் மற்றும் கணக்குகள்)

## 2013

## பேராதனைப் பல்கலைக்கழகம்

## தூர நோக்கக் கூற்று

தேசிய, பிராந்திய மற்றும் பூகோள தராதரத்துடனான உயர் கல்வியில் மிகச் சிறந்ததொரு நிலையமாக இருத்தல்

## பிரதான பணிக்கூற்று

பேராதனைப் பல்கலைக்கழகமானது கல்வி அடிப்படையிலான ஒரு சமூகத்தினை கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்பதில் நேர்மையானதும் தெளிவானதுமான வினைத்திறன் மற்றும் செயற்திறன் மிக்க உயர் மட்டத்தை பராமரிக்கின்ற அதேவேளை தேசிய,பிராந்திய மற்றும் பூகோள தேவைக்கான உயர் தரத்திலான ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் கற்றலினூடாக கல்வி,பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நிகழ்த்துதல், மற்றும் பட்டப்படிப்பு, பட்டபின் படிப்பு மற்றும் பட்டம் சாரா மட்டங்களில் அறிவினை தேடுபவர்களுக்கு பூகோள ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய அறிவு மற்றும் கல்வியினை வழங்குவதற்கு பேராதனைப் பல்கலைக்கழகம் முயலுகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகம்
இலங்கை

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | உபவேந்தரின் மீளாய்வு | 1 |
| | 1.1 சுருக்க அறிமுகம் | 1 |
| | 1.2 அடைவுகளும் அங்கீகாரங்களும் | 4 |
| | 1.3 தோல்விகளும் நியாயப்படுத்தல்களும் | 15 |
| | 1.4 எதிர்காலத் திட்டங்கள | 15 |
| | 1.5 பேரவை மற்றும் மூதவை | 15 |
| 2. | வளங்கள் மற்றும் மாணவர்களின் விபரங்கள | 16 |
| 3. | உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள | 17 |
| 4. | வெளிநாட்டு மாணவர்களின் விபரங்கள் | 18 |
| 5. | அ).கல்விசார் அலுவலர்களின் விபரங்கள் | 18 |
| | ஆ)கல்வி உதவி அலுவலர்களின் விபரங்கள் | 20 |
| 6. | கல்விசாரா அலுவலர்களின் விபரங்கள் | 21 |
| 7. | ஆராய்ச்சி, புதுமைப்படைத்தல் மற்றும் வெளியீடுகள் | 22 |
| 8. | நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளின் விபரங்கள | 22 |
| 9. | பெறப்பட்ட விருதுகளின் விபரங்கள | 23 |
| 10. | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கை நெறிகளின் விபரங்கள் | 23 |
| 11. | மீளெழும் செலவுகளின் விபரங்கள் | 24 |
| 12. | மூலதனச் செலவுகளின் விபரங்கள் | 24 |
| 13. | கருத்திட்டங்களின் விபரங்கள் (உள்ளூர் /வெளிநாட்டு நிதி) | 24 |
| 14. | கருத்திட்ட செலவுகளின் விபரங்கள் (உள்ளூர் /வெளிநாட்டு நிதி) | 24 |
| 15. | நிதி முன்னேற்ற விபரங்கள்(செலவுகள்) | 25 |
| 16. | நிதி முன்னேற்ற விபரங்கள்(பொது வருமானம்) | 25 |
| 17. | நிதி செயற்திறன் பகுப்பாய்வு 2013 | 25 |
| 18. | உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான விபரங்கள் 2013 | 26 |
| | அ). 2013ம் ஆண்டிற்காக நடைமுறையிலிருக்கும் மூலதன கருத்திட்டங்கள | 26 |
| | ஆ). 2013ம் ஆண்டிற்காக நடைமுறையிலிருக்கும் மறுசீரமைப்பு கருத்திட்டங்கள் | 26 |
| | இ). 2013ம் ஆண்டிற்காக பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டங்கள் | 29 |
| | ஈ). 2013ம் ஆண்டிற்காக பூர்த்தியடைந்த மறுசீரமைப்பு கருத்திட்டங்கள் | 29 |


## 19. பின்னிணைப்புகள்

### பின்னிணைப்பு A - பீட அறிக்கைகள்


| | | |
|---|---|---|
| A1 | விவசாய பீடம | 30 |
| A2 | இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் | 32 |
| A3 | கலைப்பீடம | 35 |
| A4 | பல்மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம் | 39 |
| A5 | பொறியியல் பீடம | 42 |
| A6 | மருத்துவ பீடம | 44 |
| A7 | விஞ்ஞான பீடம | 48 |
| A8 | மிருக வைத்திய மற்றும் விலங்கு விஞ்ஞான பீடம் | 51 |
| A9 | பட்டப்பின் படிப்பு நிறுவகங்கள | 54 |
| | A9.1 உயர்ப்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம் (PGIA) | 54 |
| | A9.2 உயர்ப்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகம்(PGIS) | 58 |


### பின்னிணைப்பு B-பல்கலைக்கழகத்தின் பிரதான நிலையங்கள்


| | | |
|---|---|---|
| B1 | விவசாய உயிரியல் தொழினுட்ப நிலையம | 64 |
| B2 | விவசாய வியாபார நிலையம | 67 |
| B3 | தொலை மற்றும் தொடர்க்கல்வி நிலையம | 69 |
| B4 | பொறியியல் வடிவமைத்தல் நிலையம | 71 |
| B5 | மனித உரிமைகள் கற்கை நிலையம | 74 |
| B6 | சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையம் | 76 |
| B7 | சர்வதேச ஆராய்ச்சி நிலையம | 79 |
| B8 | அவசர சுகாதார மற்றும் அனர்த்த முகாமைத்துவ பயிற்சி நிலையம் | 82 |

### பின்னிணைப்பு C - உதவிச் சேவைகள

C1 பேராதனைப் பல்கலைக்கழக நூலக வலையமைப்பு 84
C2 தகவல் தொழிநுட்ப நிலையம் 86
C3 ஆங்கில மொழி கற்பித்தல் அலகு 88
C4 தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை அலகு 89

### பின்னிணைப்பு D- துணைச் சேவைகள

D1 ஊழியர் அபிவிருத்தி நிலையம 92
D2 சுகாதார நிலையம் மற்றும் சுகாதார சேவைகள 95
D3 இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர்க்கல்வி (HETC) 97
D4 உடற்கல்விப் பிரிவு 98
D5 மாணவர் சேவைகள 101
D6 பாதுகாப்பு சேவைகள 103
D7 மார்சல் பிரிவு 104
D8 நில வடிவமைப்புப் பிரிவு 105

### பின்னிணைப்பு E– பேரவை மற்றும் மூதவை

E1 பேரவை 107
E2 மூதவை மற்றும் அதன் அங்கத்தவர்கள 108

### பின்னிணைப்பு F- கருத்திட்டங்களின் விபரங்கள

F1 கருத்திட்டங்களின் விபரங்கள (உள்நாட்டு / வெளிநாட்டு நிதி வழங்கல்)- 2013 113
F2 கருத்திட்ட செலவு விபரங்கள(உள்நாட்டு /வெளிநாட்டு நிதி வழங்கல்)- 2013 122

### பின்னிணைப்பு G– நிதிக்கூற்றுக்கள்

G1 நிதிநிலைமைக் கூற்று- 2013 134
G2 நிதிச் செயற்பாட்டு கூற்று- 2013 136
G3 ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று- 2013 137
G4 ஆண்டிற்கான பகிர்வுக் கணக்கு- 2013 139
G5 ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று- 2013 140

### பின்னிணைப்பு H–கணக்காய்வு குழு அறிக்கை 2013 141

### பின்னிணைப்பு I - கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

I1 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 142
I2 பேராதனை பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில் 179



# 01 உபவேந்தரின் மீளாய்வு

## 1.1 சுருக்க அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழகமானது இலங்கைப் பல்கலைக்கழகமாக கொழும்பில் 1942 ஜுலை மாதம் முதலாம் திகதி தாபிக்கப்பட்ட நாட்டின் மிகப் பழைமையானதும் மிகப்பெரிய பல்கலைக்கழகமுமாகும். இலங்கைப் பல்கலைக்கழமானது அதன் கலைப்பீடத்தை 1952 ஒக்டோபர் 06ம் திகதி பேராதனைக்கு மாற்றியதன் மூலம் இலங்கைப் பல்கலைக்கழகத்தை பேராதனையில் நிறுவியது. இது மத்திய மலைநாட்டில் கண்டி நகரிலிருந்து 8 கிலோமீற்றர் தொலைவில் இயற்கை அழகுடைய பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், பல்கலைக்கழகமானது 1947 ஏக்கர் நிலப்பரப்பை விஸ்தீரணமாகக் கொண்டதாக மனரம்யமான அழகிய இடத்தில் காணப்படுவதோடு பேராதனைப் பல்கலைக்கழகமானது இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்கிடையில் நிகரற்ற கல்வி, விடுதி வாழ்க்கை, விளையாட்டு மற்றும் கலாசார ரீதியாக அனுபவங்களை வழங்குகின்றது.

பல்கலைக்கழமானது மிகச்சிறந்த கற்றல் நிலையமாக கடந்த 72 ஆண்டுகளாக தரரீதியாகவும் அளவுரீதியாகவும் விஸ்தீரணமடைந்து சர்வதேச அங்கீகாரத்தை அடைந்துள்ளதோடு நாட்டில் தனது தனித்துவ அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. பீடங்களின் எண்ணிக்கையானது 1942 இல் 4 ஆகவிருந்து தற்போது 8வரை அதிகரித்துள்ளது: விவசாய, இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள், கலை, பல்மருத்துவ விஞ்ஞானங்கள், பொறியியல், மருத்துவம், விஞ்ஞானம் மற்றும் மிருகவைத்திய மற்றும் விலங்கு விஞ்ஞானம். ஆரம்பத்தில் காணப்பட்ட 18 கல்வித் துறைகளுடன் ஒப்பிடும்போது தற்போது 74 கல்வித் துறைகள் பல்வேறுபட்ட ஒழுக்கங்களில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகமானது உயர்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம் (PGIA) மற்றும் உயர்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகம்(PGIS) என்ற இரு பட்டப்பின்படிப்பு நிறுவகங்களையும் உள்ளடக்கியுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகமானது வதிவிட பல்கலைக்கழகமாக பெரும்பாலான உள்ளக மாணவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா அலுவலர்களுக்கு வசதிகளை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகும். பதினேழு மாணவர் விடுதிகளின் மூலமாக உள்ளக மாணவர் சனத்தொகையில் 80% மான மாணவர்களுக்கு விடுதிவசதியை வழங்கியுள்ளது. சுகாதார நிலையம், வணக்க ஸ்தலங்கள் மற்றும் விளையாட்டு முதல் பெருமளவான எண்ணிக்கையுடைய சங்கங்கள் மற்றும் அமைப்புகள் மூலமாக சமுகங்களின் பல பாகங்களையும் திருப்திப்படுத்தக்கூடிய கலாசார நிகழ்ச்சிகளின் மூலமாக பேராதனைப் பல்கலைக்கழகமானது மாணவர்களின் மற்றும் அதன் அலுவலர்கள் மத்தியில் அதிகளவு கவனயீர்ப்பை பெற்றுள்ள உயர் கற்றலின் மையமாக அமைவதற்கு காரணமாயுள்ளது.

இளமானிப்பட்ட மாணவர் சனத்தொகையானது ஏறக்குறைய 10000 ஆகும். பேராதனைப் பல்கலைக்கழகமானது கல்விசார் அலுவலர், நிர்வாக அலுவலர், மற்றும் சேவைப் பிரிவுகள் அடங்கலாக ஏறத்தாழ 3300 ஊழியர்களை கொண்டுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகமானது 58 இளமானிப்பட்டங்களை தாராள கலை, சட்டம், மானுடவியல், பௌதீக மற்றும் உயிரியல் விஞ்ஞானங்கள், பொறியியல் மற்றும் கணினி விஞ்ஞானம், விவசாயம், பல்வைத்திய, மருத்துவம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் மற்றும் மிருக வைத்தியம் மற்றும் விலங்கு விஞ்ஞானம் போன்ற துறைகளில் வழங்குகின்றது. இந்நாட்டில் பேராதனைப் பல்கலைக்கழகம் மாத்திரமே இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், பல்வைத்திய விஞ்ஞானங்கள் பீடம், மிருக வைத்தியம் மற்றும் விலங்கு விஞ்ஞான பீடம் மற்றும் பூமியியல் திணைக்களத்தை கொண்டுள்ளது.

உயர்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம் மற்றும் உயர்ப்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகம் அடங்கலாக 6416 மாணவர்கள் பட்டப்பின் படிப்பிற்காக பதிவுகளை மேற்கொண்டு கல்வி பயில்கின்றனர்.

தொலை மற்றும் தொடர்கல்வி நிலையமானது வெளியக பயிற்சி வாய்ப்புக்களை சான்றிதழ், டிப்ளோமா, மற்றும் பட்டப்படிப்பு மட்ட தகுதிகளோடு பல்வகைத் துறைகளுக்காக பாரம்பரிய மற்றும் இணைய முறைகளினூடாக வடிவமைத்தல் மற்றும் அமுல்படுத்தலை கொள்கையாக கொண்டுள்ளது. தொலை மற்றும் தொடர்கல்வி நிலையத்தில் தற்போது வெளியக இளமானி நிகழ்ச்சித்திட்டங்களை சுமார் 25000 மாணவர்கள் கலை மற்றும் விஞ்ஞான துறைகளில் பயில்வதோடு சுமார் 500 மாணவர்கள் ஏனைய தொடர் கல்வி கற்கை நெறிகளை பயில்கின்றனர்.

பல்கலைக்கழகத்தின் மத்திய நிர்வாகமானது 8 பிரிவுகைளையும் (பொது நிர்வாக முறைமை) நிதிப்பிரிவு, உள்ளக கணக்காய்வு பிரிவு, 9 சேவைப் பிரிவுகள் (பொது சேவைகள் முறைமை) மற்றும் 22 நிலையங்கள்/ அலகுகளையும் அடக்கியுள்ளது. மத்திய நிர்வாகத்தின் அமைப்பு வரைப்படம் 3ம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் கல்வி நிகழ்ச்சிகள் பேராதனைப் பல்கலைக்கழக நூலக வலையமைப்பு, தகவல் தொழினுட்ப நிலையம், தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைப் பிரிவு, ஆங்கில மொழி கற்பித்தல் அலகு (ELTU) போன்ற நான்கு முக்கிய கற்றல் உதவி சேவைகள் மூலமாக உதவியை பெறுகின்றன. ஏனைய பல நிலையங்களும் அலகுகளும் குறிப்பிட்ட விசேட பயிற்சிகளை மற்றும் சேவை செயற்பாடுகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளதோடு அவை பல டிப்ளோமாமட்ட மற்றும் சான்றிதழ்மட்ட கற்கை நெறிகளை வடிவமைத்து வழங்குவதோடு தொழினுட்ப மற்றும் தொழிற்துறை சார்ந்த சேவைகளை கட்டணமற்ற அடிப்படையில் வழங்குகின்றன. பிரதான நிலையங்கள் மற்றும் அலகுகளின் பொது விபரிப்பும் மற்றும் அடைவுகளும் பின்னிணைப்பு B யில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

# Organization Chart




DR - Deputy Registrar
DB - Deputy Bursar
DIA - Deputy Internal Audit
SAR - Senior Assistant Registrar
AR - Assistant Registrar
SAB - Senior Assistant Bursar
AB - Assistant Bursar
PGIA - Postgraduate Institute of Agriculture

PRO - Public Relations Officer
PM - Project Manager
SO - Statistical Officer
CMO - Chief Medical Officer
CSO - Chief Security Officer
SSA - Senior System Analyst
PGIS - Postgraduate Institute of Science

## 1.2 அடைவுகளும் அங்கீகாரங்களும்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பீடங்கள், பட்டப்பின் படிப்பு நிறுவகங்கள், நிலையங்கள் மற்றும் அலகுகளின் பொது விபரங்கள் மற்றும் அடைவுகள் பின்னிணைப்பு A இல் விரிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டிற்கான முக்கிய அடைவுகளை கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

### 1.2.1 பொதுப் பட்டமளிப்பு விழா 2012

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 75ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா இரண்டு கட்டங்களாக 30.05.2013 இல் பேராதனைப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. 2454 முதற்பட்டங்களும் 766 பட்டப்பின்படிப்பு பட்டங்களும் இதில் வழங்கப்பட்டன. இங்கு பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட பழைய பட்டதாரிகளான திரு. ஜயலத் மனோரத்ன மற்றும் வைத்தியர் எச்.ஏ.பீ. அபேவர்தன என்போரின் சமூகத்திற்கான பங்களிப்பிற்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் அவ்விரண்டு தனிநபர்களுக்கும் கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு D.Ltt. Honoris causa என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

### 1.2.2 பேராதனைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி அமர்வு (PURSE)

பேராதனைப் பல்கலைக்கழகமானது ஆராய்ச்சி அமர்வு தொடர்பான வருடாந்த மகாநாடு பல்கலைக்கழக நாளேட்டில் சிறப்பித்துக் காட்டப்படும் ஒன்றாகும். 2012ம் ஆண்டில் PURSE ஆனது 267 ஆராய்ச்சிப் பத்திரங்களையும் பின்வரும் 10 தலைப்புகளிலான 19 சுவரொட்டி வெளிப்படுத்தல்களையும் கவர்ந்துள்ளது. அவையாவன: சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம், உணவு, போசாக்கு மற்றும் கால்நடை,தாவரவியல் விஞ்ஞானங்கள் மற்றும் வனம், இயற்கை விஞ்ஞானங்ள், தகவல் தொழினுட்பம், கணிதவியலும் கணக்கிடலியலும், பொறியியல், கல்வி, சமுகவியல் மற்றும் மானுடவியல் தலைப்புளாகும். 2013 இல் சர்வதேச பேராதனைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி அமர்வாக (iPURSE) இது நடாத்தப்படும்.

**1.2.3** கல்வி செயற்பாட்டு அடிப்படையில் தரப்படுத்தல்களில் பேராதனைப் பல்கலைக்கழகமானது இலங்கையில் 1ம் இடத்தையும் சர்வதேச தரப்படுத்தலில் 1466ம் இடத்தையும் பெற்றுள்ளது. இந்த அடைவுக்கு பங்களிப்பு செய்த பல்கலைக்கழக சமுகத்திற்கு உபவேந்தர் நன்றிகளை தெரிவித்துள்ளார்.

### 1.2.4 ஜப்பான் தூதரக உதவியுடனான ஜப்பான் இலங்கை கற்கை நிலைய தாபிப்பு

ஜப்பான் தூதரகத்தோடு இணைந்து ஜப்பான் இலங்கை கற்கை நிலையம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தாபிக்கப்பட்டது. இலங்கை ஜப்பான் கற்கை நிலையத்தின் முதன்மை நோக்கமானது இலங்கை மற்றும் ஜப்பான் நாடுகளுக்கிடையிலான ஆராய்ச்சி ஒன்றிணைவை வலுப்படுத்துவதாகும். இந்நிலையமானது பேராசிரியர் அதுல சேனாரத்ன-பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் அவர்களால் 29 மார்ச் 2013 இல் கண்டி ஏல்ஸ் ரீஜன்சி ஹோட்டலில் அங்குரார்ப்பனம் செய்யப்பட்டது.

**1.2.5** உலக வங்கியின் உதவியுடன் நில சுவீகரிப்பு முகாமைத்துவம், மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு சிறப்பு நிலையம்(MLARR) தாபிக்கப்படல்.

### 1.2.6 பேராதனைப் பல்கலைக்கழக அச்சக மீள்தாபிப்பு

### 1.2.7 மோட்டார்வாகன அலகு -6/9/2013 இருந்து பணிக்கு திரும்புதல்

பல்லாண்டுகளாக முழுமையாக செயற்படாதிருந்த மோட்டார் வாகன அலகானது அண்மைக்காலமாக உபவேந்தரினதும் பொறியியல் பீட பீடாதிபதி பேராசிரியர் எல். ராஜபக்ஷ என்போரின் வழிகாட்டல் மூலமும் கலாநிதி. பிரசன்ன குணவர்தன- பதில் பணிப்பாளர் மற்றும் இயந்திர பொறியியல் துறை திரு. டி.எம்.எம். திஸாநாயக்க (வேலை மேற்பார்வையாளர்) மற்றும் அவ்வலகின் ஊழியர்களின் பங்குபற்றுதலுடனும் திருத்தியமைக்கப்பட்டு முகாமைத்துவ கட்டமைப்பும் விருத்திசெய்யப்பட்டது. தற்போது மோட்டார் வாகன அலகானது பல்கலைக்கழகத்திற்கு உரித்தான திருத்துதல் மற்றும் பராமரிப்பு சேவை என்பவற்றில் ஈடுபடும் இயலுமையை பெற்றுள்ளது.

### 1.2.8 விஞ்ஞான கல்வி வள நிலைய தாபிப்பு

விஞ்ஞான கல்வி வள நிலையமானது 2013 மார்ச் மாதம் 18ம் திகதி கண்டி பாடசாலைகளின் விஞ்ஞான ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்குபற்றுதலுடனும் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அதுல சேனாரத்ன அவர்களால் திறந்துவைக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையின் பல்கலைக்கழக முறைமையில் முதற் தடவையாக நிரந்தர கண்காட்சிகளுடனும், செயற்பாடுகளின் மூலமும் அனுபவங்களை பெறல், வர்ணமயமான விளக்கமளித்தல் மற்றும் ஒலிப்பட வெளிக்காட்டல்களுடனும் இது காணப்படுகிறது. பீட அலுவலர்கள் விஞ்ஞான கண்காட்சியில் பாடசாலை மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் விஞ்ஞான எண்ணக்கரு விளக்கங்களை வழங்கும் வளவாளர்களாக கலந்து கொள்வர்.

### 1.2.9 கல்விசார் அலுவலர்களினால் பெறப்பட்ட விருதுகள்

- **உபவேந்தர் அவர்களுக்கு ஆனந்த குமாரசுவாமி ஞாபகார்த்த பதக்கம் வழங்கப்பட்டது.**

பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அதுல சேனாரத்ன அவர்களுக்கு ஆனந்த குமாரசுவாமி ஞாபகார்த்த பதக்கம் வழங்கப்பட்டது.ஆனந்த குமாரசுவாமி ஞாபகார்த்த பதக்கமானது இலங்கையின் பூகோளவியல் துறையின் விருத்திக்காக தனித்துவ பங்களிப்பு வழங்கும் ஒரு நபருக்கு வருடாந்தம் வழங்கப்படும் விருதாகும். இலங்கை பூகோளவியல் சங்கமானது இதுவரையில் இலங்கை பூகோளவியல் துறை உயர்விற்காக அதியுயர் பங்களிப்பு நல்கிய 14 பூகோளவியலாளர்களுக்கு ஆனந்த குமாரசுவாமி ஞாபகார்த்த விருதினை வழங்கியுள்ளது.

- **இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய பேராதனை அணியொன்று பாகிஸ்தான் அணியை அபுறொபோகொன் (Aburobocon) சர்வதேச றொபோ போட்டி 2013 இல் தோற்கடித்தது.**

அபுறொபோகொன்(ABU ROBOCON) வரலாற்றில் முதற்தடவையாக இலங்கையானது அதியுயர் போட்டி நிறைந்த றொபோ ஆட்டத்தில் வென்றுள்ளது. இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய பேராதனைப் பல்கலைக்கழக பொறியில் பீட மாணவர்களால் பாகிஸ்தான் அணியானது ஆரம்பக்கட்ட போட்டிகளில் 20 இற்கு 0 புள்ளிகள் என்ற வகையில் தோற்கடிக்கப்பட்டது.

இலங்கை இப்போட்டிகளில் 2005ம் ஆண்டு முதல் பங்கெடுத்து வந்துள்ளது. இலங்கையின உள்ளூர் போட்டிகளின் மூலம் அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்கள் 2005 முதல் 2008 வரையிலும் மீண்டும் 2011 ம் ஆண்டிலும் இலங்கை உள்ளூர் போட்டிகளில் முதலிடம் பெற்றதன் மூலமாக அவ்வாண்டுகளில் அபுறொபோகொன் போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் தனியிடத்தை பெற்றுள்ளனர். இவ்வாண்டிலும் கூட பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்கள் இலங்கையின் உள்ளூர் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்று அபுறொபோகொன் 2013 இல் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவத்தைப் பெற்றுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர் அணியின் செயலாற்றலானது மிகவும் உண்மையாக பாராட்டுக்குரியதாகும். பலர் போட்டிகளில் தடுமாறினாலும் இலங்கை அணியானது தொர்ந்து தனது நிலையை முன்னேற வைத்துள்ளது. இலங்கை பெற்ற புள்ளிகளானது றொபோ துறையில் அதிக தொழினுட்ப வளர்ச்சி கொண்ட பல நாடுகளுடன் ஒப்பிடும்போது பாரிய முன்னேற்றம் காணப்படுகின்றது. இவ்வெற்றியானது பலநாட்களாக இரவு கண்விழித்திருந்து அயராது உழைத்த பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவர்களின் மற்றும் விரிவுரையாளர்களின் உழைப்பின் பெறுபேராகும்.

- பேராதனைப் பல்கலைக்கழ பொருளியல் துறையை சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி. திலினி குணவர்தன அவர்கள் சிறிய-நடுத்தர வருமான நாடுகளில் விவசாய மற்றும் உபயோக பொருளியல் அமைப்பின் (AAEA) அனுசரணையில் அதன் 2013 வருடாந்த மகாநாட்டிற்காக தெரிவுசெய்யப்பட்ட ஆறு பிரதான ஆராய்ச்சியாளர்களுள் ஒருவராக அதன் பிரயான மானியம் பெறுவதற்காக வெற்றி பெற்றுள்ளார்.

- **சரஸ்வதி சங்ஸ்கிரத பரிசு 2012: ரோஹன செனவிரத்ன, பண்டைய மொழித்துறை, கலைப்பீடம்**

கௌரவமிக்க சரஸ்வதி சங்ஸ்கிரத பரிசானது 2012 இற்காக கலைப்பீடத்தின்பண்டைய மொழித்துறையின் திரு. ரோஹன செனவிரத்னவினால் வெல்லப்பட்டது. இருவருடத்திற்கொருமுறை வழங்கப்படும் சரஸ்வதி சங்ஸ்கிரத பரிசானது 2008 இல் இந்தியாவின் கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவை (ICCR) யுடன் இணைந்து ஜெர்மனியின் ஹீடல்பேர்க் பல்கலைக்கழகத்தின் தென்னாசியாவின் கலாசார மற்றும் சமய வரலாற்று துறையும் ஐரோப்பாவில் இந்திய பாரம்பரியமான சங்ஸ்கிரதத்தை விளங்கிக்கொள்ளலை பிரசித்திப்படுத்தலை கௌரவிப்பதற்காகவும் அவர்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காகவும் அமைக்கப்பட்டது. உத்தியோக பூர்வமான விருது வழங்கல் விழாவானது 2013 மார்ச் மாதம் 25ம் திகதி புதுடில்லியில் நடைபெற்றதோடு திரு. செனவிரத்ன தனது பரிசை கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவையின் தலைவரும் ஜம்மு மற்றும் காஷ்மீரின் பெயரளவு மகாராஜாவுமான கலாநிதி கரன் சிங் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். இப்பரிசானது அனைத்து வசதியளிப்புகளுடனும் இந்தியாவிற்கான 10 நாட்களுக்கான சுற்றுலாவையும் உள்ளடக்கியிருந்தது. திரு. செனவிரத்ன தற்போது தனது சங்ஸ்கிரத கலாநிதிப் பட்டத்தினை ஐக்கிய இராச்சியத்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்துள்ளதோடு இது முதற்தடவையாக இலங்கையர் ஒருவர் ஐக்கிய இராச்சிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஒரு பங்குபற்றும் நாடாக இவ்விருதினை பெற்றுள்ளார்.

- **SUSRED விருது 2013- பேராசிரியர் ஐ.பீ.கவரம்மான**

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஐ.பீ.கவரம்மான என்பவர் “Comparative in-vivo toxicity of the venoms of south Asian hump-nosed pit vipers(genus:Hypnale)” என்ற தத்துவவியல் முதுமாணிப்பட்டப்படிப்பிற்கான ஆராய்ச்சிக் கட்டுரையை மேற்பார்வை செய்தமைக்கான அங்கீகாரமாக ஆராய்ச்சிப் பட்டப்படிப்பு மேற்பார்வைக்கான உதவித்திட்ட விருதினை(SUSRED AWARDS 2013) பெற்றுக்கொண்டார்.

- **இலங்கையின் கல்வியாளர் கௌரவத்திற்குரிய “தனக்கு மேலானரோட்டரி சேவை விருது2013”இனை ஐக்கிய அமெரிக்கா நாடுகளின் ரோட்டரி சர்வதேசத்திடமிருந்து பெற்றார்.**

பேராதனைப் பல்கலைக்கழக பல் மருத்துவ விஞ்ஞான பீட சமுக பல் மருத்துவ விஞ்ஞான துறை தலைவர், வைத்திய கலாநிதி வி.விஜயகுமாரன் தனது சமாதானத்தை கட்டியெழுப்பும் அர்ப்பணிப்பு மற்றும் முன்னுதாரண முயற்சிகளுக்காக ஐக்கிய அமெரிக்க ரோட்டரி சர்வதேச அமைப்பின் மூலம் “தனக்கு மேலான ரோட்டரி சேவை விருது 2013” இனை பெற்று கௌரவிக்கப்பட்டார். ரோட்டாரி சர்வதேசமானது தனது உலகின் 200 நாடுகளையும் சேர்ந்த 1.2 மில்லியன் அங்கத்தவர்களின் மூலமாக தனித்துவம் வாய்ந்த ரோட்டரியன்களை வருடாந்தம் அங்கீகரிக்கும். இந்த விருதானது இவருக்கு சர்வதேச ரோட்டரி பணிப்பாளர் தாஸ் அவர்களால் 2013 பெப்ரவரி 16 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற ரோட்டரி மாவட்ட மகாநாட்டில் வழங்கப்பட்டது. இவர் பெற்ற விருதானது தொழிலுக்கு கௌரவத்தை வழங்கியுள்ளதோடு நாட்டிற்கும் கௌரவமாகும். கலாநிதி விஜயகுமாரன் அவர்கள் 2001 / 2002 ஆண்டுகளில் இலங்கையின் மாவட்ட ஆளுநராக ரோட்டரி அமைப்பில் இருந்துள்ளதோடு தற்போது உலகின் ரோட்டரி ஆளுநராக இருந்து இலங்கைக்கும் அங்கீகாரத்தை பெற்றுக்கொடுத்துள்ளார்.

- **பேராதனைப் பல்கலைக்கழக தொல்பொருள் ஆராய்ச்சி துறையின் சிரேஷ்ட பேராசிரியர் சுதர்ஷன் செனவிரத்ன அவர்கள் ஐக்கிய அமெரிக்காவின் உயர்ந்த விருதுகள் இரண்டினை பெற்றுள்ளார்.**

எட்வட் எப் ஆனோல்ட் இன் மிகச்சிறந்த தொல்பொருளியல் பேராசிரியர் (2012 – 2013) மானுடவியல் துறை வைட் மென் கல்லூரி, வல வல,WA, ஐக்கிய அமெரிக்கா

தொல்பொருளியல் மற்றும் மரபுரிமை முகாமைத்துவத்தில் சிறந்த அப்பியாசத்திற்கான 2013ம் ஆண்டிற்கான விருது அமெரிக்காவின் சீட்டல் தொல்பொருளியல் நிறுவகத்தினால் 2013 ஜனவரியில் இவருக்கு வழங்கப்பட்டது. (1879 இல் இந்நிறுவனத்தை ஆரம்பித்தது முதல் ஆசிய நாட்டவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட முதல் விருதாக இது காணப்படுகிறது).

- பேராதனைப் பல்கலைக்கழகமானது இரண்டு விசேட விருதுகளை SLFI இல் நடந்த QIGs விருது வழங்கும் வைபவத்தில் ஜூலை 29ம் திகதி (திங்கள்) பின்வரும் அடைவுகளுக்காக பெற்றது.

1) பல்கலைக்கழகமானது அதிகூடிய எண்ணிக்கையான QIGsகளைப் பெறுகின்றது. (களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து)

2) பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சி நிகழ்ச்சிகளுக்கான அதிகூடிய புள்ளிகளைப் பல்கலைக்கழகம் பெறுகின்றது.

- கலாநிதி லியனகே அமகீர்த்தி என்கின்ற சிங்களத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் வித்யோதய இலக்கிய விருதினை *அர மியிரி சீனு நாதய* (அந்த சுவையான மணியோசை ) என்ற கதைத் தொகுப்பிற்காக வென்றார்.

- **வர்த்தகத்திற்கு வாய்பான ஆராய்ச்சிக்கான நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் ஆராய்ச்சி விருது 2012**

இவ்விருதானது விஞ்ஞான பீடத்தை சேர்ந்த ஆராய்ச்சிக் குழுவிற்கு விளையாட்டிற்கான கிரய செயற்றிறனுடைய செயற்பாட்டு மதிப்பீட்டுக் கருவியை விருத்தி செய்வதற்கான ஆராய்ச்சி வேலைக்காக வழங்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி வேலையானது புள்ளிவிபரவியல் மற்றும் கணனி விஞ்ஞானத்துறை மற்றும் உயர்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவனத்தின் மூலம் பேராசிரியர் சாலுக கொடிதுவக்கு மற்றும் கலாநிதி அமல்கா பினிதியாராச்சி என்ற பிரதான ஆய்வாளர்களினாலும் மற்றும் திரு. கிஹான் குறுப்பு என்கின்ற தத்துவியல் பட்டப்பின்படிப்பு மாணவரினாலும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி செயற்றிட்டமொன்றின் பெறுபேறாகும். தேசிய ஆராய்ச்சிப் பேரவையினால் நிதிவசதியளிக்கப்பட்ட இந்த ஆராய்ச்சியின் நோக்கமானது இலங்கையானது சர்வதேச விருதுகளை விளையாட்டுப் போட்டிகளில் வெல்வதற்கான இடைவெளிக்கான பாலமாக அமைவதோடு இலங்கை விளையாட்டு வீரர் மற்றும் வீராங்களைகளுக்கான எதிர்காலத்திற்குமாகும்.

விருது வழங்கும் வைபவமானது 2013ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் திகதி திங்கட்கிழமை விஞ்ஞான பீட இரசாயனவியல் கேட்போர் கூடத்தில் பிரதம அதிதி பேராசிரியர் எரிக் கருனாநாயக்க, தலைவர்-NRC மற்றும் சிறப்பு விருந்தினர் பேராசிரியர் அதுல சேனாரத்ன என்போர் தலைமையில் நடைபெற்றது. விஞ்ஞான பீட பீடாதிபதி,சர்வதேச ஆராய்ச்சி நிலைய பணிப்பாளர், நேச்சர்ஸ் பியூட்டி கிறியேசன் கம்பனியின் பணிப்பாளரான திரு. சமந்த குமாரசிங்க மற்றும் பலர் பேராதனைப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த அதிதிகளாக இதில் கலந்துகொண்டனர்.

- பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறையைச் சேர்ந்த கலாநிதி (திருமதி). கே.எம்.ஆர். கருனாரத்ன என்ற பொருளியல் விரிவுரையாளர் 2012 ம் ஆண்டிற்கான அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தினால் மிகச்சிறந்த கலாநிதிப்பட்ட ஆராய்ச்சி கட்டுரை விருதிற்கான பீடாதிபதியின் பரிந்துரைக்கான விருத்திற்காக தெரிவுசெய்யப்பட்டார்.

## 1.2.10 மாணவர்களால் பெறப்பட்ட விருதுகள்

- சிவில் பொறியியல் துறையை சேர்ந்த இரு திறன்மிக்க மாணவர்களான செல்வி. ஷிஹாரா பெரேரா மற்றும் திரு. மேனக ரெவெல் என்ற பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்தவர்கள் நிர்மான் சர்வதேச சிவில் பொறியியல் மாணவர்கள் ஆய்வரங்கு 2013 இல் முறையே முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை வென்றனர். இந்நிகழ்வானது இந்தியாவின் பெங்களூரில் செப்டெம்பர் 28ம் 29ம் திகதிகளில் நடைபெற்றது. நிர்மான் சர்வதேச சிவில் பொறியியல் மாணவர்கள் ஆய்வரங்கு இந்தியாவின் பெங்களூரின் BMS பொறியியல் கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- செல்வி. ஷிஹாரா பெரேராவின் பட்டமானி ஆராய்ச்சியானது கண்டி குளத்தை சுற்றிய புதிய நடைபாதையை கருத்திட்ட முன்மொழிவாகவும் திரு. மேனக ரெவெல் என்பவரின் பட்டமானி ஆராய்ச்சியானது நீர்த்தேக்க படிவுகளிற்கான பரிசோதனை ஆய்வை கொண்டதாகவும் சமர்ப்பிக்கப்பட்டது.

- தல்காகொடஆர்.எஸ், இலங்கசேகரவை.ஏ, மற்றும் அபேகுணவர்தன ஏ.எஸ் என்பவர்களால் எழுதப்பட்ட“குழந்தைப்பருவ சிறுநீர் வடிகுழாய் நோயின் விளைவு” என்றஆய்வின் சுருக்கமானது 2013 டிசம்பர் 6ம் மற்றும் 7ம் திகதிகளில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் குழந்தையியல், கஸ்ட்ரோஎன்தரோலஜி மற்றும் போசாக்கு (CAPGAN) தொடர்பான 13ம் விஞ்ஞான ஆராய்ச்சித் தொடரில் சமர்ப்பிக்கப்பட்ட 35 சுவரொட்டிகளில் சிறந்த நிகழ்த்துகைக்கான விருதினை வென்றது.

- **இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்-2013 (SLUG-2013)**

இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளில் பேராதனைப் பல்கலைக்கழக பெண்கள் ஹொக்கி அணியானது விளையாட்டுத் தொடரில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு போட்டிகளில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்ததோடு தனது பல்கலைக்கழகத்திற்கும் பெருமையைப் பெற்றுத்தந்துள்ளனர். இறுதிப் போட்டியில் கொழும்பு பல்கலைக்கழகஅணியுடன் 1 – 0 என்ற ரீதியில் வெற்றிபெற்றனர். பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஹொக்கி போட்டித் தொடர் 2013 மே மாதம் 8 முதல் 10 வரையில் கொழும்பு பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இன்னுமொரு வெற்றியானது மொரட்டுவ பல்கலைக்கழக புதிய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற SLUG மல்யுத்த சம்பியன் போட்டி-2013 இல் பேராதனை பல்கலைக்கழக மல்யுத்த வீரர்களால் பெறப்பட்டது. எம்முடைய மல்யுத்த அணியானது 2 தங்கப்பதக்கங்களையும் 3 வெள்ளிப்பதக்ககங்களையும் 2 வெண்கலப் பதக்கங்களையும் வென்றதன் மூலமாக சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக்கொண்டது.

ரகர் விளையாட்டு இறுதிப் போட்டி கொழும்பு எவ்லொக் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பேராதனைப் பல்கலைக்கழக ரகர் அணியினர் இறுதிப்போட்டியில் மயிரிலையில் 2ம் இடத்தை கைப்பற்றினார்கள்.

ஆண்களுக்கான மற்றும் பெண்களுக்கான டென்னிஸ் போட்டிகளில் முறையே மொரட்டுவ பல்கலைக்கழக மற்றும் கொழும்பு கல்கலைக்கழக ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளை வீழ்த்தியதன் மூலம் இரண்டாம் இடத்தை அவ்வணிகள் கைப்பற்றின. பல்கலைக்கழக டென்னிஸ் சம்பியன் பட்டத்திற்கான விளையாட்டுப் போட்டிகள் மே மாதம் 5ம் திகதி முதல் 7ம் திகதிவரை கொழும்பில் இலங்கை டென்னிஸ் சங்க திடலில் நடைபெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழக ஆண்களுக்கான செஸ் அணியானது குறிப்பிடத்தக்க மட்டத்தில் சிறப்பாக விளையாடி இறுதிப் போட்டியில் இரண்டாம் இடத்தை கைப்பற்றியது.

பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்கள் நானாவித போட்டிகளான வலைப்பந்து, பெண்கள்-கரம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கராத்தே அத்துடன் பேஸ்போல்-ஆண்கள் போட்டிகளிலும் இரண்டாம் இடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளனர். இப்போட்டிகள் தேசிய இளைஞர் நிலையம்,மஹாரகம மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகம் உட்பட பல்வேறு விளையாட்டு இடங்களில் நடைபெற்றன.

- திரு. எம்.பீ.எம். எரங்க பிரபாத் என்ற இறுதியாண்டு பல்மருத்துவ பீட மாணவன் தனது சுவரொட்டியை ஜப்பானில் ஒக்டோபர் மாதம் 12ம் திகதி முதல் 14ம் திகதி வரை நடைபெற்ற 5வது பற்சிகிச்சையில் கல்வி மற்றும் விஞ்ஞான ஹிரோசிமா மகாநாட்டில் மற்றும் சர்வதேச உணவு, போசாக்கு மற்றும் சுகாதாரத்திற்கான ஆய்வரங்கில் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொண்டார்.

- **11வது மருத்துவ பாடசாலைகளுக்கிடையிலான உடலியல் புதிர்ப் போட்டி**

சர்வதேச 11வது மருத்துவ பாடசாலைகளுக்கிடையிலான உடலியல் புதிர்ப் போட்டியானது மலேசியாவின் கோலாலம்பூரின் மலாயா பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் 2013 ஓகஸ்ட் மாதம் 28ம் 29ம் திகதிகளில் நடைபெற்றது. இந்நிகழ்வானது உலகலாவிய ரீதியல் மருத்துவ மாணவர்களின் கல்வி மற்றும் சமுக பரிமாற்றங்களை மேற்கொள்ள உதவிய மலேசியாவின் முதலாவது உடலியல் பேராசிரியரான பேராசிரியர். ஏ.ராமன் அவர்களை கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வானது உடலியல் துறையால் விளம்பரப்படுத்தப்பட்டதோடு முதலாம் மற்றும் இரண்டாம் பருவ பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இரண்டாம் வருடத்தை சேர்ந்த (2010/2011 அணி) 5 மருத்துவ மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். ராஜரட்ணம் எ, பமினிவத்த எ.கே.எ.பீ, யாபா டப்லியூ.எல்.பீ.வை.யு.எல், வீரசிங்ஹ என்.டி, விஜேரத்ன் ஐ.டி, என்ற பேராதனைப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த மருத்துவ பீட மாணவர்களே இந்நிகழ்வில் பங்குபற்றுவதற்காக தெரிவுசெய்யப்பட்டனர்.

எங்களுடைய மாணவர்கள் எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மொழி புதிர் போட்டிகளில் சிறப்பாக செயலாற்றியதோடு பங்குபற்றிய 83 அணிகளிடையில் 7வது இடத்தை தக்கவைத்துக்கொண்டதோடு புதிதாக வருகைத்தந்த அணிகளில் மிகச்சிறந்த அணி என்று நடுவர்களால் தெரிவுசெய்யப்பட்டனர். திரு. அருண் ராஜரட்ணம் என்ற எமது மாணவன் பங்குபற்றியவர்களுக்கிடையில் முதல் சிறப்பு போட்டியாளர்கள் 15 பேர்களில் ஒருவராக தெரிவுசெய்யப்பட்டார்.

- **மருத்துவபீட பல்கலைக்கழகங்களுக்கிடையேயான குழதையியல் புதிர்ப்போட்டி 2013 இன் வெற்றியாளர்கள்**

இலங்கை குழந்தையியல் மருத்துவக் கல்லூரியினால் தொடர்ச்சியாக 7வது வருடமாகவும் நடைபெற்ற வருடாந்த மருத்துவபீட பல்கலைக்கழகங்களுக்கிடையேயான குழந்தையில் புதிர்ப்போட்டிகள் 2013ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29ம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்க இலங்கை மன்ற நிறுவகத்தில் நடைபெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் இதில் அதிசிறப்பாக செயற்பட்டதோடு புகழ்பெற்ற விருதினை ஏனைய 7 மருத்துவ பீடாங்களையும் தோற்கடித்து 5வது தொடர் வருடமாகவும் வென்றனர்.

வைத்தியர் பீ.ஏ.சி.எல். தலுகம, வைத்தியர். டப்லியு.ஆர்.எல்.எம்.ஆர்.ஏ. ஹிக்கொட, வைத்தியர் பீ.எல். கமகே, வைத்தியர் ஜே.பீ. ரன்கொத்கும்புர மற்றும் வைத்தியர் ஓ.எல். நல்லபெரும என்போர்களே அணியின் அங்கத்தவர்களாவர்.

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் இதே போட்டியில் 2007, 2009, 2010, 2011, 2012 ஆம் ஆண்டுகளில் முதலிடத்தையும் 2008ம் ஆண்டில் 2ம் இடத்தையும் கைப்பற்றினர்.

## 1.2.11 மத்திய நிர்வாகம்

நிறுவன கட்டமைப்பு செயற்பாடுகள் மற்றும் பொது நிர்வாகத்தின் கடமைகள் மிக நுணுக்கமாக மீளாய்வு செய்யப்பட்டு சீர்த்திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதிய பிரிவுகள் மற்றும் அலகுகள் அமைக்கப்பட்டுள்ளதோடு புதிய முறைமைகளை விரிவாக்குவதற்கும் பேரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. நிர்வாகமானது நிர்வாக மட்டங்களுக்கிடையேயான பொறுப்புக்களை கருத்திற்கொண்டு சுமுகமான முறையில் கடமைகளை மாற்றுவதற்காக அமைப்பு நிர்வாகத்தை மீள் கட்டமைப்பு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. பொது நிர்வாகத்தில் ஈடுபடும் கல்விசார், நிர்வாக, மற்றும் கல்விசாரா அலுவலர்களுக்களுக்காக பல்வேறுபடட பெறுமதிவாய்ந்த பயிற்சிப்பட்டறைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. கடமைகளை வினைத்திறனான மற்றும் செயற்திறனான முறையில் நிறைவேற்றுவதற்காக பலவீனங்களை அடையாளங்கண்டு அவற்றை விருத்தி செய்வதற்கு உதவியாக இவை அமைந்தன.

## 1.2.12 நிதி மற்றும் கணக்கீடு

பேராதனைப் பல்கலைக்கழகமானது நிதி நிர்வாக வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக செயன்முறைகளை சீரமைத்தல் மற்றும் குறைபாடுகளை சீர்செய்வதற்காக நிதிப்பிரிவை மீள் ஒழுங்கமைத்தல் போன்ற மறுசீரமைப்பு செய்வதற்கான பல்வேறு முன்னேற்ற படிமுறைகளை மேற்கொண்டுள்ளது.

நிர்வாகமானது நிதி அதிகாரங்களை பரவலாக்கல் என்ற தலைப்பில் விரிவான ஆவனமொன்றையும் தொகுத்து வழங்கியுள்ளது.

பிரதான நிதியாளரின் நிதி முகாமைத்துவ அறிக்கை பின்னிணைப்பு G1 இல் வழங்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு குழுவானது (AC) பொதுத்திறைசேரியினால் விளக்கமளித்துள்ளபடி நிதி முகாமைத்துவ வினைத்திறனை அதிகரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. பொருத்தமான திருத்த மற்றும் குறைகளை களைவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்வதற்காக கணக்காய்வு குழுவால் உள்ளக மற்றும் அரச கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. 2013ம் ஆண்டிற்கான கணக்காய்வு குழு அறிக்கை பின்னிணைப்பு Hஇல் தரப்பட்டுள்ளது.

## 1.2.13 துணைச்சேவைகள்

துணைச்சேவைகள் தொடர்பில்விளக்கங்கள் மற்றும் அடைவுகள் பின்னிணைப்பு D இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2.14 அலுவலர் பயிற்சி

பொதுநிர்வாக அலுவலர்களுக்கான தொடர்ச்சியான பயிற்சியானது உணரப்பட்டுள்ளது. மறுசீரமைப்பு மற்றும் நிதி முகாமைத்துவ வழிகாட்டிகளை அமுல்படுத்தியதன் மூலமாக நிர்வாகமானது பொருத்தமான தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை அனைத்துமட்ட பொதுநிர்வாக அலுவலர்களுக்கும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுத்துள்ளது. அலுவலர் அபிவிருத்தி நிலையத்திற்கு (SDC) கல்விசார் மற்றும் கல்விசாரா பல்கலைக்கழக அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை அடிவமைப்பதற்கும் அமுல்படுத்துவதற்குமான ஆணை வழங்கப்பட்டுள்ளதை கட்டாயமாக குறிப்பிடவேண்டும். ஆதலால் உயர்ந்த வேலைக்கான கலாசாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக கூட்டுரு முகாமைத்துவ பிரிவானது அலுவலர் அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்து பல்வேறு அலுவலர் பயிற்சி நிகழ்சிகளை வழங்கியுள்ளது. அதுமாத்திரமன்றி தகவல் தொழினுட்ப நிலையம், தொழில் வழிகாட்டல் நிலையம் மற்றும் தொலை மற்றும் தொடர்கல்வி நிலையமும் மொழித்திறன் மற்றும் தகவல் தொாழினுட்பம் சார்ந்த அபிவிருத்தித்திக்காக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளது.

### 1.2.15 தகவல் தொழினுட்ப மற்றும் ஆங்கிலமொழி திறன்கள்,நூலக சேவைகள், தொழில் வழிகாட்டி மற்றும் ஆலோசனை

பேராதனை பல்கலைக்கழகமானது ஆங்கிலமொழி கற்பித்தல் அலகு மற்றும் தகவல் தொழினுட்ப நிலையத்தினூடாக பல்வகை ஆங்கில மொழி திறன்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப சேவைகளை பல்வேறுபட்ட மட்டங்களில் நிபுணத்துவத்தை அளிப்பதற்காக பல்வேறு பாடநெறிகளை விருத்திசெய்து வழங்கியுள்ளது. ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழினுட்ப பாடவிதானங்களானவை அறிமுகப்படுத்தல் நிகழ்ச்சியின்போது அனைத்து பீடங்களினதும் முதலாம் வருட புதிய மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஆங்கில மொழியாற்றல் பரீட்சையில் சித்திபெறவேண்டியது பட்டத்தை பெறுவதற்கான தகுதிக்கான கட்டாய பரீட்சையாகும். ஆங்கிலமொழி கற்பித்தல் அலகு தகவல் தொழினுட்ப நிலையம், மற்றும் நூலக சேவைகள் தொழில் வழிகாட்டி மற்றும் ஆலோசனை சேவைகள் போன்ற ஏனைய உதவிச் சேவைகளினதும் தொடர்புபட்ட விபரங்கள் பின்னிணைப்பு C இல் வழங்கப்பட்டுள்ளன.

### 1.2.16 ஆராய்ச்சி மற்றும் சர்வதேச அலுவல்கள்

- **ஆராய்ச்சி**

குறிப்பிடப்பட்டபடி பேராதனைப் பல்கலைக்கழகமானது இலங்கையின் மிகவும் விசாலமான பல்கலைக்கழகமாகும். 60 வருடங்களுக்கும் மேலாக ஆராய்ச்சியானது பீடங்களுக்குள்ளும் அவற்றின் பிரிவுகளுக்குள்ளும் செய்யப்பட்டுள்ளது. நிர்வாகத்தின் நிகழ்கால குறிக்கோளானது பல்வகை துறைகளுக்கிடையேயான அபிவிருத்திக்காக ஆராய்ச்சி நிகழ்ச்சிகளுக்காக பரந்துகிடக்கும் பல்கலைக்கழக வளங்களை பயன்படுத்துவதாகும். இந்நோக்கத்துடன் சர்வதேச ஆராய்ச்சி நிலைய தாபிப்பு போன்ற பல்வேறுபட்ட முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தின் பிரதான நோக்கமாக சர்வதேச மற்றும் தேசிய ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் காணப்படுகிறது. பல்கலைக்கழகமானது பல்கலைக்கழகத்தின் உள்ளக மற்றும் வெளியக ஆராய்ச்சியாளர்களுக்காக சோதனை மின்னனு நுண்நோக்கி மற்றும் காமா கமரா போன்ற உயர் முடிவு கருவிகளை வாங்குவதற்கு திட்டமிட்டிருக்கின்றது.

டருகா(TARUGA) என்கின்ற மரத்தவளை இனத்தைச் சேர்ந்த இலங்கையின் உயிரினமொன்றை கலாநிதி. மீகஸ்கும்புர என்கின்ற விஞ்ஞான பீடத்தை சார்ந்த விலங்கியல் துறையின் விரிவுரையாளரால் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களின் ஆய்வு பத்திரங்கள் உலகின் பிரபல்யமான "**விஞ்ஞானம்**" மற்றும் "**இயற்கை**" என்ற ஆய்விதலிலும் பல்லாண்டுகளாக வெளியிடப்பட்டுள்ளமையும் முக்கியமாக குறிப்பிட வேண்டும்.

- **சர்வதேசமயமாக்கல்**

**சர்வதேச மகாநாடுகளும் சர்வதேச கூட்டுறவுகளும்**

2013ம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகமானது பல்வேறு சர்வதேச மகாநாடுகளை நடத்தியுள்ளதோடு பல்வேறுபட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. 2013 இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள், புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விபரங்கள் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 2013 ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் நிகழ்த்தப்பட்ட மகாநாடுகள் / பயிற்சிப் பட்டறைகள் அட்டவணை

| இல | நிகழ்ச்சி /தலைப்பு | ஒழுங்கமைப்பு (பீடம் /துறை /பிரிவு /அலகு) | நடைபெற்ற திகதி | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | இலங்கை ஜப்பான் கூட்டு மகாநாடு | சர்வதேச ஆராய்ச்சி நிலையம் | மார்ச் - 2013 | 250 |
| 02 | வருடாந்த கல்விசார் கூட்டத்தொடர் 2013 - இலங்கை மனநோயியல் கல்லூரி – மீள் கூட்ட பயிற்சிப் பட்டறை | மனநோயியல் துறை மருத்துவ பீடம் | 01.03.2013 | 60 |
| 03 | சர்வதேச ஆய்வரங்கு- நீர் தரம் மற்றும் ஆளணி சுகாதாரம்:எதிர்கால சவால்கள் | PGIS மற்றும் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் பேராதனைப் பல்கலைக்கழகம், மற்றும் டொயாமா பிரிபெக்டுரல் பல்கலைக்கழகம் ஜப்பான் மற்றும் டொயாமா தேசிய தொழினுட்ப கல்லூரி ஜப்பான் | மார்ச் 15 - 16 | 118 |
| 04 | விதை செயன்முறை மற்றும் சந்தைப்படுத்தல் (நேபாள பிரஜைகளுக்காக) | உயர்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம்- விவசாய பொறியியல் கற்கை சபை | 2013 மே 5 - 10 | 11 |
| 05 | வெளிநாட்டில் கற்றல் பயிற்சி நிகழ்ச்சி நிரந்தர வெப்பவலய விவசாய முறைமை | விவசாய கல்வி பிரிவு விவசாய பீடம் | 9 மே – 4 ஜுன் 2013 | 15 வெளிநாட்டு மாணவர்கள் |
| 06 | குறைபாவனை பழவகைகளுக்கான புதிய செயன்முறை தொழினுட்ப ஆராய்ச்சி மூலம் சிறிய நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவித்தல் வசதியளித்தல் | விவசாய கல்வி பிரிவு விவசாய பீடம் | 13 – 15 மே 2013 | 35 வெளிநாட்டு மாணவர்கள் |
| 07 | நரம்பியல், நாளமில்லாத சுரப்பி, திரவ சிகிச்சை | மிருகவைத்திய சிகிச்சை விஞ்ஞான துறை | ஜுன் 6 | 85 |
| 08 | சுபீட்சமடையும் இலங்கை ஜப்பானிய நல்லாட்சியுடன் இலங்கை அபிவிருத்தி அனுபத்தை பகிர்தல் | இலங்கை கல்வியளர்கள் அமைப்பு ஜப்பான் | ஜுன் 2013 | 300 |
| 09 | நாய் இன மற்றும் பூனையின போசாக்கு | மிருக வைத்திய சிகிச்சை விஞ்ஞான துறை | 30 ஒக்டோபர் | 60 |
| 10 | ஒட்டுயிர்க்கொல்லி தொடர்பான CIC நிறுவன கருத்தரங்கு | மிருகவைத்திய சிகிச்சை விஞ்ஞான துறை | 16 நவம்பர் | 45 |
| 11 | NCP இலங்கையின் சூழல் மாசடைவும் தீராத சிறுநீரக நோய்களும் | பொறியியல் பீடம் மற்றும் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் | நவம்பர் 2013 | 80 |
| 12 | இலங்கை பொருளியல் ஆராய்ச்சி மகாநாடு | பொருளியல் துறை | 13-14 டிசெம்பர் 2013 | 2000 |
| 13 | ICISS 2013 | மின்னியல் இலத்திரனியல் பொறியியல் துறை | 17-20 டிசெம்பர் 20132 | 200 |
| 14 | நோய்களை கண்டறிதலை அனுமானித்தல் தொடர்பான CPD நிகழ்ச்சி | மிருக வைத்திய சிகிச்சை விஞ்ஞானங்கள் துறை | 18 டிசெம்பர் | 70 |
| 15 | இதயவியல் தொடர்பான CPD நிகழ்ச்சி | மிருக வைத்திய சிகிச்சை விஞ்ஞானங்கள் துறை | 30 டிசெம்பர் | 70 |

## 2013 இல் கைச்சாத்திடப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்கள், புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் அட்டவணை

| இல | நிறுவனம் | பீடம் /துறை /நிலையம் | கருப்பொருள் | கைச்சாத்திட்ட திகதி |
|---|---|---|---|---|
| 1 | திரித்துவக் கல்லூரி -டுப்பலின் | பேராதனைப் பல்கலைக்கழகம் | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கல்விப் பரிமாற்றங்கள் | செப்டெம்பர் 2013 |
| 2 | உட்சுனோமியா பல்கலைக்கழகம் -ஜப்பான் | பேராதனைப் பல்கலைக்கழகம் | அலுவலர் பரிமாற்ற நிகழ்ச்சியை தாபித்தல் | செப்டெம்பர் 2013 |
| 3 | சிசுஓகா பல்கலைக்கழகம் -ஜப்பான் | கலை | மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சி | டிசெம்பர் 2013 |
| 4 | ஹொகைடோ பல்கலைக்கழகம் -ஜப்பான் | பேராதனைப் பல்கலைக்கழகம் | மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சியை விஸ்தீரணம் செய்தல் | ஜூலை 2013 |
| 5 | நன்யன்ங் தொழினுட்ப பல்கலைக்கழகம் | பேராதனைப் பல்கலைக்கழகம் | அலுவலர் பரிமாற்ற நிகழ்ச்சி | மார்ச் 2013 |
| 6 | சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் தென்ஆசிய நீர் ஒத்துழைப்பு | உயர்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம் | | ஜனவரி 2013 |
| 7 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி NIPPON KOEI CO. LTD. ஜப்பான் | பொறியியல் | | பெப்ரவரி 2013 |
| 8 | சார்க் விவசாய நிலையம் | விவசாயம் | | மார்ச் 2013 |
| 9 | வரையறுக்கப்பட்ட பிரண்டிக்ஸ் இலங்கை கம்பனி | பொறியியல் | | ஏப்ரல் 2013 |
| 10 | CIC விவசாய வியாபாரம் | விவசாயம் | | மே 2013 |
| 11 | டிமோ பொதுக்கம்பனி | பொறியியல் | | ஜூன் 2013 |
| 12 | திரிபுவான் பல்கலைக்கழகம்-நேபாளம் | கலை | | ஜூலை 2013 |
| 13 | ஹொகைடோ பல்கலைக்கழகம்-ஜப்பான் | மிருகவைத்தியம் | | ஓகஸ்ட் 2013 |
| 14 | வரையறுக்கப்பட்ட பிலென்டிபுட்ஸ் கம்பனி | வைத்தியம் | | ஒட்டோபர் 2013 |
| 15 | சுகாதார விஞ்ஞானங்களுக்கான பாடசாலை, நிகாடா பல்கலைக்கழகம் - ஜப்பான் | மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் துறை, கதிரியக்க துறை, தாதியியல் துறை | மாணவர்கள் மற்றும் அலுவலர் பரிமாற்ற நிகழ்ச்சி | பெப்ரவரி 2010<br>செப்டெம்பர் 2011<br>செப்டெம்பர் 2012<br>செப்டெம்பர் 2013 |
| 16 | குன்மா பல்கலைக்ககழகம் -ஜப்பான் | தாதியியல் துறை இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் தொலைக்கல்வி முறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் மூலவைத்திய துறைகல்விக்கும் அபிவிருத்திக்கும் உதவுதல் என்ற தொனிப்பொருளிலான கூட்டிணைந்த ஆராய்ச்சி கருத்திட்டம் | ஓகஸ்ட் 2011 |
| 17 | பெர்லின், ஜெர்மனியின் ப்பரி பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக புரிந்துணர்வு உடன்படிக்கை | தொல்பொருளியல் துறை மற்றும் பூகோளவியல் துறை | புராதன நீர்ப்பாசன முறைமை, சூழல் சமுக தொல்பொருளியல் தொடர்பான இணைந்த ஆராய்ச்சியை மேற்கொள்ளல். | ஏப்ரல் 2013 |
| 18 | திரிவுவான் பல்கலைக்கழகம்-நேபாளம் | அரசறிவியல் துறை | கொள்கை, நல்லாட்சி கல்வி பிராந்திய பட்டப்பின்படிப்பு மற்றும் கலாநிதிப்பட்ட நிகழ்ச்சிகள் | ஜூலை 2013 |
| 19 | நோராட்(NORAD)-நோர்வே | பேராதனைப் பல்கலைக்கழகம் | நீர்முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றங்களை பொருந்தச் செய்தல் தொடர்பான நிறுவன இயலளவை கட்டியெழுப்புதல் | டிசெம்பர் 2013 |
| 20 | பொறியியல் மற்றும் தொழினுட்ப பங்கலாதேஸ் பல்கலைக்கழகம் | பேராதனைப் பல்கலைக்கழகம் | நீர்முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றங்களை பொருந்தச் செய்தல் தொடர்பான நிறுவன இயலளவை கட்டியெழுப்புதல் | டிசெம்பர் 2013 |
| 21 | கொலம்பியாவின் தொழினுட்ப நிறுவகம் | பேராதனைப் பல்கலைக்கழகம் | நீர்முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றங்களை பொருந்தச் செய்தல் தொடர்பான நிறுவன இயலளவை கட்டியெழுப்புதல் | டிசெம்பர் 2013 |

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | உயிர் விஞ்ஞானங்கள் பல்கலைக்கழகம் - நோர்வே | பேராதனைப் பல்கலைக்கழகம் | நீர்முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றங்களை பொருந்தச் செய்தல் தொடர்பான நிறுவன இயலளவை கட்டியெழுப்புதல் | டிசெம்பர் 2013 |
| 23 | டெலிமார்க் பல்கலைக்கழகம்-நோர்வே | பேராதனைப் பல்கலைக்கழகம் | நீர்முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றங்களை பொருந்தச் செய்தல் தொடர்பான நிறுவன இயலளவை கட்டியெழுப்புதல் | டிசெம்பர் 2013 |
| 24 | யாழ்ப்பாண பல்கலைக்கழகம் | பேராதனைப் பல்கலைக்கழகம் | நீர்முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றங்களை பொருந்தச் செய்தல் தொடர்பான நிறுவன இயலளவை கட்டியெழுப்புதல் | டிசெம்பர் 2013 |
| 25 | சிசுஓகா பல்கலைக்கழகம்-ஜப்பான் | விஞ்ஞான பீடம் | சூரிய வலு பயன்பாடு | ஒக்டோபர் 2013 |
| 26 | ஷிமென் பல்கலைக்கழகம்-ஜப்பான் | பூகோளவியல் துறை, விஞ்ஞான பீடம் | இணைந்த ஆராய்ச்சி | டிசெம்பர் 2013 |
| 27 | கலிபோனியா –டாவில் பல்கலைக்கழகம் | விவசாய பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம் | | |
| 28 | யேசுவா தொழினுட்ப நிறுவகம் | உயர்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம் | உயிரியல் புள்ளிவிபரவியலுக்கானமுது மானிப்பட்டத்தினை வழங்குதல் மற்றும் பிரயோக மற்றும் உயிரியல் புள்ளிவிபரவியல் இற்கான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பட்டங்களை வழங்குதல் | |

## 1.2.17 மாணவர், அலுவலர் பொதுநல வசதி மற்றும் சேவைகள்

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அலுவலர்களின் நலத்திட்ட முறைமைகளுக்கான நன்கு வரையப்பட்ட பொறிமுறைகள் காணப்படுவதோடு புதிதாக தாபிக்கப்பட்ட பொதுநல பிரிவின் மூலமாக பிரதானமாக பொதுநல முறைமைகள் ஒருங்கிணைக்கப்படுவதோடு பல்வேறு ஏனைய பிரிவுகள் மற்றும் அலகுகள் மூலமாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு மேலாக பொதுநல சேவைகளின் குறைபாடுகள் தொடர்பாக மாணவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உபவேந்தரினால் தலைமை தாங்கப்படும் கூட்டம் மாதாந்தம் நடைபெறுகிறது.

பொதுநலத் திட்ட முறைமைகளில் மாணவர் விடுதி, உணவக முறைமை, மாணவர் சேவைகள், மாணவர் பதிவு, துறைசார் மாணவர் ஆலோசனைச் சேவை மற்றும் சுகாதாரம் என்பன அடங்கும். இந்த முறைமையானது சிரேஷ்ட மாணவர் ஆலோசகர், மாணவர் சேவைகள் பிரிவு, விடுதிக் காப்பாளர்கள் மற்றும் உதவிக்காப்பாளர்கள், பொது உறவுகள் அலுவலர், பாதுகாப்புப் பிரிவு, மார்சல் பிரிவு, பல்கலைக்கழக ஒழுங்குக்காவலர், பொதுநல நிறுவனங்கள், மாணவர் அமைப்புகள் மற்றும் சேவை அலகுகளான சுகாதார நிலையம், உடற்கல்வி பிரிவு, தொழில் வழிகாட்டி அலகு, வேலை பிரிவு என்ற வளங்கள் மூலமாக சேவை பெறப்படுகின்றது.

### அலுவலர் பொதுநல வசதி

- பொதுநலவசதி பிரிவு தாபிக்கப்பட்டது
- பல்கலைக்கழக மாணவர் மற்றும் அலுவலர்களுக்காக வாகன போக்குவரத்து சேவை வழங்கப்பட்டது.
- பொதுநலசேவை சார்ந்த கடைகட்டடத்தொகுதிக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- நிதி உதவி சேவை உருவாக்கப்பட்டது- மரணச் சடங்கு, திருமணம், குழந்தைப் பிறப்பு

## 1.2.18 கல்வி அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் தர உத்தரவாதம்

தேசிய மற்றும் பூகோள உயர்கல்வியின் மாற்ற போக்குகளுக்கிணங்க பேராதனைப் பல்கலைக்கழகமும் எப்போதும் நகர்வை மேற்கொண்டுள்ளது. புதிதாக உதயமாகும் தேவைகள், போக்குகளுக்கிணங்க. புதிய கல்விப் பயிற்சிகள் செயன்முறைகள் மற்றும் கல்வி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தியில் மறுசீரமைப்புகளும் தொடரப்பட்டுள்ளது.

### 1.2.19 நிறுவன கூட்டுருத் திட்டம் /தந்திரோபாயத் திட்டம்

நிறுவன உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நீண்டகால திட்டமானது பேராதனைப் பல்கலைக்கழகத்திற்காக தயாரிக்கப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலமாக உயர்கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது பல்கலைக்கழகத்தின் 1947 ஏக்கர் நிலப்பரப்பிற்கான நிகழ்கால மற்றும் எதிர்காலத்திற்கான பரிந்துரைக்கப்பட்ட அபிவிருத்திக்களை உள்ளடக்கியுள்ளது.

உயர்கல்வி அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட புதிய முன்னெடுப்புகளுக்கிணங்க பல்கலைக்கழக முறைமைகளில் அதன் கூட்டுருத் திட்டங்களையும் தந்திரோபாயத் திட்டங்களையும் தயாரிக்கப்பட்ட முறைகளை மீளாய்வு செய்வது அவசியமாயிருந்தது. பேராதனைப் பல்கலைக்கழகமானது இதற்காக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளில் ஊக்கமாக பங்குபற்றியிருந்தது. அடிப்படையாக பல குழுக்கள் பல மட்டங்களில் திட்டங்களை பூரத்திசெய்வதற்காக அமைக்கப்பட்டன. பல்கலைக்கழக சமுகமானது கட்டமைப்பில் மாத்திரமன்றி தனிநபர்களின் பொது நடத்தையிலும் வெளித்தோற்றத்திலும்கூட தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக கடுமையாக செயற்பட்டனர். 2014 – 2018 ஆம் ஆண்டுகளுக்கான கூட்டுத் திட்டமானது 2013 இல் பூரத்திசெய்யப்பட்டது.

### 1.2.20 மூதவையின் பரிந்துரைகள்

மீளாய்வு செய்யப்பட்ட காலத்திற்காக பல்கலைக்கழக மூதவையினால் முக்கியமாக பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:

- நூலகத்தின் ஆய்வறிக்கைகளை பிரதியெடுத்தல் (20.03.2013 இல் 376 ஆவது மூதவைக்கூட்டத்தில் ஏற்கொள்ளப்பட்டு 28.05.2013 இல் நடைபெற்ற பல்கலைக்கழகத்தின் 420 ஆவது பேரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.)

- மூதவையின் உயர் மட்டங்களுக்கான குழுவின் தொழிற்பாடுகளை மூதவையின் ஆராய்ச்சிக் குழுவிற்கு மாற்றுதல் (15.05.2013 இல் நடைபெற்ற மூதவையின் 378 ஆவது கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 27.07.2013 இல் நடைபெற்ற பேரவையின் 422 ம் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.)

- கல்வி அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் குழு மற்றும் மூதவைக்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களுக்கான வழிகாட்டிகளை மீளாய்வு செய்தல் (17.07.2013 இல் நடைபெற்ற மூதவையின் 380 ம் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 28.09.2013 இல் நடைபெற்ற பேரவையின் 424 ம் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.)

- குழு படமெடுத்தல் தொடர்பான அவதானிப்பு- பல்கலைக்கழக ஒழுக்கக் காப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்டது (19.12.2012 இல் நடைபெற்ற மூதவையின் 373ம் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 03.03.2013 இல் நடைபெற்ற பேரவையின் 417ம் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.)

- சுருக்க குறியீடுகளை ஏற்றுக்கொள்ளாதிருத்தலோடு அதற்கு பதிலாக முழுமையாக பேராதனை எனும் முழுப்பெயரை பேராதனைப்பல்கலைக்கழக பட்டங்களை வழங்கும்போது பயன்படுத்துவதற்கான (உதாரணம் B.Sc. – (Peradeniya) )கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (17.07.2013 இல் நடைபெற்ற 380ம் மூதவைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 28.09.2013 இல் நடைபெற்ற 424 ஆவது பேரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.)

- விடுமுறையிலிருக்கும் கல்விசார் அலுவலர்களுக்கு நூலக வசதிகளை பயன்படுத்துவற்கான ஏற்பாடுகளை வழங்குதல் (31.01.2013 இல் நடைபெற்ற 110 ஆவது நூலக குழுக்கூட்டத்தல் பரிந்துரைக்கப்பட்டு 31.10.2013 இல் நடைபெற்ற 383 ஆவது மூதவைக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.)

- விடுமுறையிலுள்ள கல்விசார் அலுவலர்கள் பின்வருவனவற்றை தொடரலாம்.

1. ஆராய்ச்சி மாணவர்களை மேற்பார்வை செய்தல்
2. பட்டப்பின் படிப்புக்காக பதிவு செய்தல்
3. ஆராய்ச்சி மானியங்களுக்காக விண்ணப்பித்தல்
4. எந்தவொரு ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருத்தல்

(06.06.2012 இல் நடைபெற்ற மூதவையின் உயர்பட்டங்களுக்கான குழுக்கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டு 28.01.2013 இல் நடைபெற்ற மூதவையின் 375 ம் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.)

**எமிரிடஸ் பேராசிரியர் அந்தஸ்து வழங்கல்**

| | |
|---|---|
| பேராசிரியர் சிரில் போகாவத்த | – விவசாய பீடம் |
| பேராசிரியர் ஏ.எல்.டி. பெரேரா | – விவசாய பீடம் |
| பேராசிரியர் எம்.எம்.ஏ.என்.கே. சேனாநாயக்க | – மருத்துவ பீடம் |
| பேராசிரியர் டி.டி.பீ. தென்னகோன் | – விஞ்ஞான பீடம் |
| பேராசிரியர் ஐ.ஏ.யு.என். குணதிலக | – விஞ்ஞான பீடம் |
| பேராசிரியர் வி.கே. குணவர்தன | – மிருக வைத்திய பீடம் |

**D.Litt பெறுநர்கள் (கௌரவ பட்டம்)**

30.05.2013 இல் நடைபெற்ற வருடாந்த பொதுப்பட்டமளிப்பு விழாவில் பின்வருவோருக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

திரு. கே.எம். ஜயலத் மனோரத்ன
கலாநிதி எச்.ஏ.பீ. அபேவர்தன

**கௌரவ வருகை பதவிநியமனங்கள்**

| பெயர் | துரை | பீடம் | பதவி | நியமனத்திகதி | நியமன காலம் |
|---|---|---|---|---|---|
| கலாநிதி. லக்ஸ்மன் கரல்லியத்த | மருந்தாக்கவியல் துறை | மருத்துவம் | வருகை பேராசிரியர் | 01.01.2012 | 31.12.2016 |
| கலாநிதி டி.ஜே. அபேசேகர | மருந்தாக்கவியல் துறை | மருத்துவம் | Visiting fellow | 01.01.2012 | 31.12.2016 |

## 1.3 தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

2013ம் ஆண்டிற்காக திட்டமிட்டிருந்த அநேகமான கருத்திட்டங்கள் சில சந்தர்ப்பங்களில் தாமதமேற்பட்டிருப்பினும் அடையப்பட்டுள்ளன. இணையத்தள தரநிலைப்படுத்தலுக்கு விசேட அவதானம் செலுத்தப்பட்டிருந்ததோடு பல்கலைக்கழக இணையத்தளமும் மீள் நிர்மானம் செய்யப்பட்டது. இக்காலகட்டத்தில் தரநிலையில் சற்று பின்னடைவு காணப்பட்டது. எனினும் புதிய இணையத்தளத்தின் மீள் நிர்மானத்தில் காணப்படும் புதிய சேர்க்கைகள் மூலமாக நிலைப்படுத்தலில் நீண்ட வளர்ச்சி ஏற்படுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## 1.4 எதிர்காலத் திட்டங்கள்

2014ம் ஆண்டானது“கலைப்பீடத்தின் மீள் விழித்தெழும் வருடமாக” பெயர் சூடப்பட்டுள்ளது. கல்வி இளமானிப்பட்டம், மும்மொழி மற்றும் தகவல் தொழினுட்பம் + பாரம்பரிய பாடநெறிகளும் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டுள்ளன.

2014ம் வருட நிறைவிற்கு முன்பதாக 2000 ஆராய்ச்சி பத்திரங்களை அடைவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 1.5 பேரவை மற்றும் மூதவை

பேரவை மற்றும் மூதவையின் விபரங்கள் பின்னிணைப்பு Eஇல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 02. வளங்கள் மற்றும் மாணவர்களின் விபரங்கள் (31.12.2013 இல் உள்ளவாறு)

| பீடம் | பாடநெறி | மொத்த மாணவர்கள் எண்ணிக்கை | மொத்த கல்வி அலுவலர் எண்ணிக்கை | மொத்த கல்விசாரா அலுவலர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| விவசாயபீடம் | விவசாய தொழினுட்பம் மற்றும் முகாமைத்துவம் | 501 | 102 | 99 |
| | உணவு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் | 52 | | |
| | விலங்கு விஞ்ஞானம் மற்றும் மீன்தொழில் | 137 | | |
| இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் | மருந்தியல் | 70 | 29 | 42 |
| | மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் | 91 | | |
| | தாதியியல் | 183 | | |
| | இயன் மருத்துவம் | 125 | | |
| | ஊடுகதிர்ப்படமெடுத்தல் | 109 | | |
| கலைப்பீடம் | கலை | 2833 | 195 | 80 |
| | வியாபார நிர்வாகம் | 544 | | |
| | சட்டம் | 203 | | |
| பல் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம் | பல்மருத்துவ விஞ்ஞானங்கள் | 416 | 51 | 136 |
| பொறியியல் பீடம் | பொறியியல் | 1307 | 100 | 161 |
| மருத்துவபீடம் | மருத்துவம் | 1064 | 105 | 166 |
| விஞ்ஞான பீடம் | உயிரியல் விஞ்ஞானம் | 429 | 96 | 109 |
| | பௌதீகவியல் விஞ்ஞானம் | 653 | | |
| | கணக்கியல்மற்றும் முகாமைத்துவம் | 180 | | |
| | புள்ளிவிபரவியல் மற்றும் செய்முறை ஆராய்ச்சி | 129 | | |
| மிருக மருத்துவ பீடம் | மிருக மருத்துவம் | 294 | 37 | 58 |
| **மொத்தம்** | | **9320** | **715** | **851** |

# 03. உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள் (31.12.2013 இல் உள்ளவாறு)

| பீடம் | பாடநெறி | மொழி மூலம் | 1ம் ஆண்டு | 2ம் ஆண்டு | 3ம் ஆண்டு | 4ம் ஆண்டு | 5ம் ஆண்டு | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| விவசாய பீடம் | விவசாய தொழிநுட்பம் மற்றும் முகாமைத்துவம் | | 151 | 171 | 179 | - | - | 166 |
| | உணவு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் | | 12 | 22 | 18 | - | - | 22 |
| | விலங்கு விஞ்ஞானம் மற்றும் மீன் தொழில் | | 45 | 42 | 50 | - | - | 38 |
| இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் | மருந்தியல் | ஆ | 27 | 23 | 20 | - | - | 25 |
| | மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் | | 28 | 26 | 24 | 13 | - | 22 |
| | தாதியியல் | | 49 | 46 | 49 | 39 | - | 43 |
| | இயன் மருத்துவம் | | 40 | 30 | 24 | 31 | - | 30 |
| | கதிரியக்கவியல் | | 51 | 19 | 21 | 18 | - | 27 |
| கலைப்பீடம் | கலை | ஆ,சி,த | 956 | 668 | 709 | 500 | - | - |
| | வியாபார நிர்வாகம் | ஆ | 82 | 135 | 156 | 171 | - | - |
| | சட்டம் | ஆ | 57 | 46 | 51 | 49 | - | - |
| பல் மருத்துவவிஞ்ஞானங்கள் பீடம் | பல் மருத்துவ விஞ்ஞானங்கள் | ஆ | 100 | 80 | 82 | 83 | 71 | - |
| பொறியியல் பீடம் | பொறியியல் | | 477 | 415 | 415 | - | - | - |
| மருத்துவ பீடம் | மருத்துவம் | | 231 | 195 | 197 | 200 | 196 | 172 |
| விஞ்ஞான பீடம் | உயிரியல் விஞ்ஞானம் | ஆ | 144 | 150 | 135 | - | - | 137 |
| | பௌதீக விஞ்ஞானம் | | 194 | 239 | 220 | - | - | 203 |
| | கணக்கிடல் மற்றும் முகாமைத்துவம் | | 83 | 50 | 47 | - | - | 50 |
| | புள்ளி விபரவியல் மற்றும் செய்முறை ஆராய்ச்சி | | 54 | 46 | 29 | - | - | 48 |
| மிருக மருத்துவ பீடம் | மிருக மருத்துவம் | | 80 | 79 | 72 | 63 | - | 59 |
| **மொத்தம்** | | | **2861** | **2482** | **2498** | **1167** | **267** | **1042** |

ஆ- ஆங்கிலம் சி – சிங்களம் த- தமிழ்

## 04. வெளிநாட்டு மாணவர்களின் விபரங்கள் (31.12.2013 இல் உள்ளவாறு)

| பீடம் | பாடநெறி | மொழி மூலம் | 2013 ஆட் தெரிவு | 1ம் ஆண்டு | 2ம் ஆண்டு | 3ம் ஆண்டு | 4ம் ஆண்டு | 5ம் ஆண்டு | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விவசாய பீடம் | விவசாய தொழிநுட்பம் மற்றும் முகாமைத்துவம் | | - | - | - | - | - | - | - |
| | உணவு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் | | - | - | - | - | - | - | - |
| | விலங்கு விஞ்ஞானம் | ஆ | - | - | - | - | - | - | - |
| இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் | - | | - | - | - | - | - | - | - |
| கலைப்பீடம் | - | | 145 | 48 | 24 | 35 | 26 | 25 | 42 |
| பல்மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம் | - | | 02 | 02 | 01 | 02 | 05 | - | - |
| பொறியியல் பீடம் | - | | - | - | - | - | - | - | - |
| மருத்துவ பீடம் | மருத்துவம் | | 10 | 10 | 09 | 10 | 07 | 09 | 04 |
| விஞ்ஞான பீடம் | - | | - | - | - | - | - | - | - |
| மிருக மருத்துவ பீடம் | - | | - | 01 | - | - | - | - | - |
| **மொத்தம்** | | | **157** | **60** | **34** | **47** | **38** | **34** | **46** |

## 05. (அ) கல்விசார் அலுவலர்களின் விபரங்கள் (31.12.2013 இல் உள்ளவாறு)

| பீடம் | துறை | மொழி மூலம் | இணைப் பேராசிரியர் | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் |
|---|---|---|---|---|---|---|---|
| விவசாய பீடம் | விலங்கு விஞ்ஞானம் | ஆ | 01 | 03 | 05 | 05 | 02 |
| | விவசாய உயிரியல் | | 02 | 01 | 02 | 04 | 02 |
| | பயிர் விஞ்ஞானம் | | 01 | 04 | 05 | 09 | 02 |
| | விவசாய பொருளியல் | | - | - | 03 | 01 | 03 |
| | விவசாய பொறியியல் | | 01 | 02 | 02 | 07 | - |
| | விவசாய விரிவாக்கல் | | - | 01 | 01 | 03 | 01 |
| | உணவு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் | | 02 | - | 01 | 05 | - |
| | மண் விஞ்ஞானம் | | - | 02 | 03 | 03 | 02 |
| | உயிரியல் தொழிநுட்ப நிலையம் | | - | - | - | 01 | - |
| | மகா இலுப்பல்லம | | - | - | - | 07 | 03 |
| இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் | மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் | ஆ | - | - | - | 04 | 01 |
| | தாதியியல் | | - | - | - | - | 05 |
| | மருந்தியல் | | - | - | - | 02 | 06 |
| | இயன் மருத்துவம் | | - | - | - | - | 05 |
| | ஊடுகதிர் படமெடுத்தல் துறை | | - | - | - | 01 | 04 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கலைப்பீடம் | அராபிய மற்றும் இஸ்லாமிய நாகரீகம் | ஆ,த | - | - | - | 05 | 01 |
| | தொல்பொருளியல் | ஆ,சி | - | - | 01 | 06 | - |
| | புராதன மொழிகள் | ஆ,சி | - | - | - | 03 | 03 |
| | பொருளியல் | ஆ,சி,த | - | - | 01 | 18 | 03 |
| | கல்வி | ஆ,சி.த | 01 | - | - | 03 | 04 |
| | ஆங்கிலம் | ஆ | - | 01 | 01 | 05 | 02 |
| | கவின் கலைகள் | ஆ,சி | - | - | - | 04 | 01 |
| | புவியியல் | ஆ,சி,த | 01 | - | 03 | 11 | 08 |
| | வரலாறு | ஆ,சி,த | - | - | 03 | 06 | 04 |
| | சட்டம் | ஆ | - | - | - | 01 | 02 |
| | முகாமைத்துவக்கற்கைகள் | ஆ,சி,த | - | - | 01 | 10 | 10 |
| | பாலி மற்றும் பௌத்த கற்கைகள் | ஆ,சி,த | 01 | - | 01 | 03 | - |
| | தத்துவவியலும் மற்றும் உளவியல் | ஆ,சி,த | - | - | 01 | 12 | 04 |
| | அரசறிவியல் | ஆ,சி,த | - | 03 | - | 05 | 04 |
| | சிங்களம் | சி | - | - | - | 08 | 05 |
| | சமுகவியல் | ஆ,சி,த | - | 01 | 04 | 09 | 04 |
| | தமிழ் | த | - | - | 01 | 01 | 02 |
| பல்மருத்துவ பீடம் | அடிப்படை விஞ்ஞானங்கள் | ஆ | - | 01 | - | 10 | - |
| | சமூக பல்மருத்துசவ சுகாதாரம | | - | 02 | 01 | 04 | 02 |
| | வாய் மருத்துவ மற்றும் Period ontology | | - | - | 03 | 06 | 03 |
| | வாய் நோயியல் | | - | - | 03 | 03 | - |
| | வாய் மற்றும் தாடைமுக சத்திரசிகிச்சை | | - | - | 01 | 04 | - |
| | Prosthetic dentistry | | - | - | - | 03 | - |
| | பல் மீள் நிரப்பல் | | - | - | 02 | 02 | - |
| | பல் மருத்துவ அபிவிருத்தி கல்வி அலகு | | - | - | - | 01 | - |
| பொறியியல் பீடம் | இரசாயன மற்றும் செயற்பாட்டு பொறியியல் | ஆ | - | 01 | - | 03 | 01 |
| | குடிசார் பொறியியல் | | - | 02 | 05 | 17 | 06 |
| | கனணி பொறியியல் | | - | - | - | 08 | - |
| | மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் | | - | - | 03 | 15 | 03 |
| | பொறியல் கணிதம் | | - | 01 | - | 09 | 02 |
| | கைத்தொழில் பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டி | | - | - | - | 02 | 02 |
| | தகவல் தொழிநுட்ப நிலையம் | | - | - | - | - | 01 |
| | இயந்திர பொறியியல் | | - | - | 01 | 07 | 01 |
| | உற்பத்தி பொறியியல் | | - | - | 01 | 03 | 05 |
| மருத்துவ பீடம் | உடற்கூற்றியல் | ஆ | - | 01 | - | 06 | 04 |
| | மயக்கவியல் | | - | - | - | 01 | 01 |
| | உயிரிரசாயனவியல் | | 01 | - | 01 | 05 | 01 |
| | சமுக மருத்துவம் | | 03 | - | - | 04 | 01 |
| | சட்ட மருத்துவம் | | - | - | - | 03 | 02 |
| | மருத்துவம் | ஆ | - | - | 03 | 03 | 02 |
| | நுண்ணுரியியல் | | - | 01 | - | 02 | 03 |
| | மருத்துவ கல்வி அலகு | | - | - | - | 01 | 01 |
| | அணுசக்தி மருத்துவ அலகு | | - | - | - | 02 | - |
| | மகப்பேற்றியல் | | - | - | - | 04 | 01 |
| | குழந்தையியல் | | - | - | 03 | 02 | 03 |
| | ஒட்டுண்ணியல் | | - | - | - | 03 | 01 |
| | நோயியல் | | - | 01 | 01 | 03 | 02 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மருந்தாக்கவியல் | | - | - | - | 01 | 03 |
| | உடலியல் | | - | - | 01 | 07 | 02 |
| | மனநோயியல் | | - | - | - | 03 | 02 |
| | ஊடுகதிரியல் | | - | 01 | - | 01 | - |
| | சத்திரசிகிச்சை | | - | - | 01 | 04 | 03 |
| விஞ்ஞான பீடம் | தாவரவியல் | ஆ | - | 01 | 01 | 09 | 03 |
| | இரசாயனவியல் | | 01 | 04 | 03 | 05 | 02 |
| | விஞ்ஞான கல்வி அலகு | | - | - | - | 01 | - |
| | பூகோளவியல் | | - | - | 02 | 08 | - |
| | கணிதம் | | 01 | - | 02 | 02 | 09 |
| | கரு உயிரியல் மற்றும் உயிரசாயனவியல் | | - | - | - | 03 | 01 |
| | பௌதீகவியல் | | - | 01 | 01 | 10 | 02 |
| | புள்ளிவிபரவியல் மற்றும் கணனி விஞ்ஞானம் | | - | - | 02 | 02 | 07 |
| | விலங்கியல் | | - | 02 | 01 | 07 | 03 |
| மிருக வைத்திய பீடம் | அடிப்படை மிருக வைத்திய விஞ்ஞானம் | ஆ | - | - | 01 | 07 | 02 |
| | விலங்கு நோய் உயிரியல் துறை | | - | - | 01 | 03 | 03 |
| | பண்ணை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார துறை | | - | 01 | 01 | 05 | 01 |
| | விலங்கு சிகிச்சை விஞ்ஞானம் | | - | 01 | - | 04 | 02 |
| | விலங்கு பொது சுகாதார மருந்தாக்கவியல் | | - | 01 | - | 02 | 02 |
| ஏனையவை | நூலகம் | | - | - | - | - | 17 |
| | தகவல் தொழிநுட்ப நிலையம் | | - | - | - | - | 01 |
| | ஆங்கில மொழி கற்பித்தல் அலகு | | - | - | - | - | 01 |
| **மொத்தம்** | | | **16** | **40** | **84** | **382** | **207** |

ஆ- ஆங்கிலம் சி – சிங்களம் த- தமிழ்

## 05. (ஆ) கல்வி உதவி அலுவலர்களின் விபரங்கள் வருமாறு(31.12.2013 இல் உள்ளவாறு)

| கிளை | அலுவலர்களின் பதவிகள் | | மொத்தம் |
|---|---|---|---|
| | நிரந்தரம் | தற்காலிகம் | |
| ஆங்கில மொழி கற்பித்தல் அலகு | 08 | 59 | 67 |
| நூலகம் | 03 | - | 03 |
| உடற்கல்வி | 06 | - | 06 |
| CGU | 02 | - | 02 |
| விவசாயம் | - | - | - |
| பல்மருத்துவ விஞ்ஞானங்கள் | 01 | - | 01 |
| பொறியியல் | 09 | - | 09 |
| மருத்துவம் | 01 | - | 01 |
| விஞ்ஞானம் | 03 | - | 03 |
| பொது நிர்வாகம் | 01 | - | 01 |
| நிதி நிர்வாகம் | - | - | - |
| தகவல் தொழிநுட்ப நிலையம் | 08 | 03 | 11 |
| **மொத்தம்** | **42** | **62** | **104** |

## 06. கல்விசாரா அலுவலர்களின் விபரங்கள் (31.12.2013 இல் உள்ளவாறு)

| பீடம் / பிரிவு | அதி சிரேஷ்ட | சிரேஷ்ட அலுவலர் | கனிஷ்ட அலுவலர் | சிற்றூழியர் |
|---|---|---|---|---|
| பொது நிர்வாகம் | 18 | 25 | 76 | 39 |
| நிதி நிர்வாகம் | 9 | 12 | 43 | 7 |
| களஞ்சிய மற்றும் விநியோக சேவைகள் | 3 | 2 | 13 | 7 |
| பாதுகாப்பு சேவைகள் | - | - | 38 | 32 |
| போக்குவரத்து சேவைகள் | - | - | 2 | 56 |
| பரீட்சை சேவைகள் | 1 | - | 1 | 1 |
| விவசாய பீடம் | 2 | 22 | 35 | 40 |
| இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் | 2 | 1 | 22 | 16 |
| கலைப்பீடம் | 2 | 8 | 37 | 33 |
| பல்மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம் | 1 | 23 | 70 | 41 |
| பொறியியல் பீடம் | 2 | 25 | 48 | 86 |
| மருத்துவ பீடம் | 2 | 42 | 70 | 60 |
| விஞ்ஞான பீடம் | 2 | 18 | 31 | 61 |
| மிருக மருத்துவ பீடம் | 2 | 6 | 21 | 32 |
| நூலக சேவைகள் | 2 | 20 | 36 | 38 |
| சுகாதார சேவைகள் | 1 | 6 | 18 | 44 |
| உடற்கல்வி | 1 | - | 1 | 18 |
| மாணவர் சேவைகள் | - | 2 | 8 | 3 |
| காணிகள் மற்றும் கட்டடங்கள் | 4 | 1 | 18 | 211 |
| மின்சார விநியோகம் | - | 1 | - | 26 |
| நீர் விநியோகம் | - | - | - | 6 |
| தொலை மற்றும் தொடர்கல்வி நிலையம் | 2 | 8 | 13 | 3 |
| மாணவர் விடுதிகள் | 1 | 1 | 17 | 106 |
| தங்கொல்ல பரிசோதனை நிலையம் | 1 | 1 | 5 | 38 |
| உடபேராதனை கால்நடை நிலையம் | 1 | - | - | 24 |
| மகா இலுப்பல்லம | 1 | - | 3 | 11 |
| தரவு செய்முறை அலகு /தகவல் தொழிநுட்ப நிலையம் | 1 | - | 1 | - |
| **மொத்தம்** | **61** | **224** | **627** | **1039** |

1 நிர்வாக மட்ட மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்
2 சிரேஷ்ட அலுவலர் தரம்
3 இலிகிதர் மற்றும் இணைந்த தரங்கள்
4 மேலுள்ளவற்றை விட குறைந்த தரங்கள்

## 07. ஆராய்ச்சி புதுமைப்படைத்தல் மற்றும் வெளியீடுகள்

| | விடயம் | வெளியிடப்பட்டவை | வர்த்தக மயமாக்கப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட் டவை |
|---|---|---|---|---|
| அ | ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 316 | - | 236 |
| ஆ | புதுமைபடைத்தல்களின் எண்ணிக்கை | 10 | - | 08 |
| இ | ஆய்விதழ்களின் எண்ணிக்கை | 168 | - | 06 |
| ஈ | புத்தகங்களின் எண்ணிக்கை | 493 | 03 | 21 |
| உ | ஆய்வுக்கட்டுரைகளின் எண்ணிக்கை | 437 | 06 | 91 |
| ஊ | ஏனையவை | 283 | - | 147 |
| **மொத்தம்** | | **1707** | **09** | **509** |

## 08. நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளின் விபரங்கள்

| | விடயம் | பங்குபற்றியவை | பூர்த்திசெய்யப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட் டவை |
|---|---|---|---|---|
| அ | பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | 245 | 72 | 122 |
| ஆ | பட்டப்பின்படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்கள் | 52 | 43 | 42 |
| இ | பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 379 | 242 | 66 |
| ஈ | டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்கள் | - | 01 | - |
| உ | சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டங்கள் | 19 | 13 | 04 |
| ஊ | பொழிப்புகள் | 62 | 56 | 172 |
| எ | புத்தக அத்தியாயங்கள் | 23 | 33 | 25 |
| ஏ | நிகழ்த்துகைகள் | 74 | 17 | 110 |
| ஐ | நடப்பு பத்திரங்கள் | 09 | 15 | 03 |
| ஒ | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 110 | 82 | 88 |
| ஓ | பயிற்சிப்பட்டறைகள் | 332 | 96 | 136 |
| ஔ | கருத்தரங்குகள் | 158 | 94 | 110 |
| க | ஏனையவை | 152 | 71 | 70 |
| **மொத்தம்** | | **1615** | **835** | **948** |

## 09. பெறப்பட்ட விருதுகளின் விபரங்கள்

| | விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்விசார் அலுவலர் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அ | உள்ளூர் விருதுகள் | 12 | 08 | 07 |
| ஆ | தேசிய விருதுகள் | 21 | 14 | 11 |
| இ | சர்வதேச விருதுகள் | 14 | 06 | 02 |
| ஈ | ஏனையவை | 5 | 01 | 02 |
| | **மொத்தம்** | **52** | **29** | **22** |

## 10. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கை நெறிகளின் விபரங்கள்

| பீடம் | கற்கைநெறி | மொழிமூலம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விவசாயம் | - | - | - | - | - | - | - | - | - |
| இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் | - | - | - | - | - | - | - | - | - |
| கலை | பூகோளவியல் | ஆ | - | 1 | - | - | - | - | - |
| | - | ஆ,சி,த | 1 | - | - | - | - | - | - |
| பல்மருத்துவ விஞ்ஞானங்கள் | - | - | - | - | - | - | - | - | - |
| பொறியியல் | MSC Eng/PG Dip- கட்டட சேவைகள் பொறியியல் | ஆ | - | - | - | 1 | 1 | - | - |
| | PR 480- கைத்தொழில் பொறியியல் மற்றும் தீர்மான விஞ்ஞானங்கள் | ஆ | 1 | - | - | - | - | - | - |
| | PR 409- முகாமைத்துவ கோட்பாடுகள் மற்றும் பொருளியல் | ஆ | 1 | - | - | - | - | - | - |
| | PR-513 மாதிரிப்படுத்தல் மற்றும் mechantronics முறைமைகளை கட்டுப்படுத்தல் | ஆ | 1 | - | - | - | - | - | - |
| | PR – 515 பொறியியலாளர்களுக்கான நிதியியல் மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு | ஆ | 1 | - | - | - | - | - | - |
| | புவிதொழிநுட்ப பொறியியல் மற்றும் பொறியியல் பூகோளவியல் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | ஆ | - | - | - | 1 | 18 | - | - |
| மருத்துவம் | - | - | - | - | - | - | - | - | - |
| விஞ்ஞானம் | Phytogeography | ஆ | √ | - | - | - | - | - | - |
| | உடலியங்கியல் மற்றும்அலங்கார தாவர முகாமைத்துவம் | ஆ | √ | - | - | - | - | - | - |
| | Biological Mitrogen Fixation | ஆ | √ | - | - | - | - | - | - |
| | விஞ்ஞான ரீதியாக எழுதுதல் +ஆராய்ச்சி முறையியல் | ஆ | - | - | - | - | √ | - | - |
| மிருக மருத்துவம் | ஆராய்ச்சி மூலமான தத்துவவியல் முதுமாணி | ஆ | - | - | - | - | - | 2 | - |

1. இளமானிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்
2. சான்றிதழ்
3. டிப்ளோமா
4. பட்டப்பின்படிப்பு டிப்ளோமா
5. முதுமாணி
6. தத்துவவியல் முதுமாணி
7. கலாநிதிப்பட்டம்

ஆ- ஆங்கிலம் சி- சிங்களம் த- தமிழ்

## 11 மீளெழும் செலவுகளின் விபரங்கள்

| விடயம் | ரூபா 2013 |
|---|---|
| அ) தனிப்பட்ட ஊதியங்கள் | 2,362,377,978 |
| ஆ) போக்குவரத்து | 9,879,168 |
| இ) வழங்கல்கள் | 168,380,024 |
| ஈ) பராமரிப்பு | 26,096,230 |
| உ) ஒப்பந்த சேவைகள் | 325,653,070 |
| ஊ) ஏனையவை | 718,669,287 |
| மொத்தம் | **3,611,055,757** |

## 12 மூலதனச் செலவுகளின் விபரங்கள்

| விடயம் | ரூபா 2013 |
|---|---|
| அ) தளபாட மற்றும் அலுவலக உபகரண கொள்வனவு | 392,318,574 |
| ஆ) இயந்திர கொள்வனவு | 43,681,147 |
| இ) கட்டட மற்றும் கட்டமைப்பு கொள்வனவு | 118,712,921 |
| ஈ) ஏனையவை | - |
| **மொத்தம்** | **554,712,642** |

## 13. கருத்திட்டங்களின் விபரங்கள் (உள்நாட்டு, வெளிநாட்டு நிதி)

கருத்திட்டங்களின் விபரங்கள் (உள்நாட்டு, வெளிநாட்டு நிதி) பின்னிணைப்பு Fஇல் தரப்பட்டுள்ளன

## 14. கருத்திட்ட செலவுகளின் விபரங்கள் (உள்நாட்டு வெளிநாட்டு நிதி)

கருத்திட்ட செலவுகளின் விபரங்கள் (உள்நாட்டு வெளிநாட்டு நிதி) பின்னிணைப்பு Fஇல் தரப்பட்டுள்ளன

## 15. நிதி முன்னேற்ற விபரங்கள்(செலவுகள்)

| விடயம் | ஏற்பாடுகள்-2013 ரூபா | செலவுகள்-2013 ரூபா | சேமிப்பு/மேலதிகம்ரூபா |
|---|---|---|---|
| அ.) மீளெழும் கருத்திட்டமற்றவை | 2,880,960,000 | 3,611,055,757 | (730,095,757) |
| ஆ.)மூலதனக்கருத்திட்டமற்றவை | 1,018,525,000 | 554,712,641 | 463,812,359 |
| இ.)கருத்திட்டம்- (உள்நாட்டு நிதி) | | | |
| ஈ)கருத்திட்டம்- (வெளிநாட்டு நிதி) | | | |

## 16. நிதி முன்னேற்ற விபரங்கள்(பொது வருமானம்)

| வருமான மூலம் | ஏற்பாடுகள்-2013 ரூபா | சேர்க்கப்பட்டவை-2013ரூபா | பற்றாக்குறை/மிகை ரூபா |
|---|---|---|---|
| அ) இளமானிப்பட்ட கற்கைகள் | 51,850,000 | 89,184,630 | (37,334,630) |
| ஆ) பட்டப்பின்படிப்பு கற்கைகள் | 2,500,000 | 3,749,950 | (1,249,950) |
| இ) ஆலோசனை சேவைகள் | - | - | - |
| ஈ) ஏனையவை | 114,110,000 | 149,416,692 | (35,306,692) |

## 17. நிதி செயற்றிறன் பகுப்பாய்வு -2013

| விடயம் | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு (பீட ரீதியாக ) ரூ'000' | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | விவசாயம் | இ.சு.வி | கலை | பல்மருத்துவம் | பொறியியல் | மருத்துவம் | விஞ்ஞானம் | விலங்கு மருத்துவம் |
| அ) ஒரு மாணவருக்கான மீளெழும் செலவு | மீ.செ/ மாணவர் எண்ணிக்கை | 285 | 239 | 1483 | 172 | 541 | 440 | 576 | 121 |
| ஆ) ஒரு மாணவருக்கான மூலதன செலவு | மூ.செ/ மாணவர் எண்ணிக்கை | 42 | 35 | 217 | 25 | 79 | 64 | 84 | 17 |
| மொத்தம் | | **327** | **274** | **1700** | **197** | **620** | **504** | **660** | **138** |

## 18. உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான விபரங்கள்-2013

### 18. (அ) 2013ம் ஆண்டிற்காக நடைமுறையிலிருக்கும் மூலதன கருத்திட்டங்கள்

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | ஒப்பந்தக்காரரின் பெயர் | கேள்விமனு பெறுமதி VAT உள்ளடங்களாக ரூபா | இடைக்கால கொடுப்பனவுகள் 01.01.2013 வரை ரூபா | மிகுதி செலுத்த வேண்டியவை ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்திற்காக உத்தேசிக்கப்பட்ட கட்டடத்தொகுதியின் நிர்மானம் | வரையறுக்கப்பட்ட வோட்டமேன் (தனியார்) | 43,214,598.56 | 14,533,111.51 | 28,681,487.05 |
| 2 | சரசவிஉயன மாணவர் விடுதி விஸ்தீரணம் | ஏ.எஸ்.பீ. கன்ஸ்டரக்ஷன் | 77,739,160.97 | 15,285,752.00 | 62,453,408.96 |
| 3 | மாக்கஸ் பர்னாந்து மாணவர் விடுதிக்கான நீர் விநியோகம் | NWS & DB | 7,840,000.00 | 3,733,968.00 | 4,106,032.00 |
| 4 | சிகிச்சை ஆராய்ச்சி மற்றும் சேவை ஆய்வுகூடத்திற்காக உத்தேசிக்கப்பட்ட கட்டடம்,மருத்துவ பீடம் | SEC | 38,778,142.03 | 12,665,112.84 | 26,113,029.19 |
| 5 | Paraclinical கட்டட நிர்மாணம் (நிலை II) | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 608,874,537.92 | 91,331,180.67 | 517,543,357.25 |
| 6 | கலைப்பீட முகாமைத்துவக் கற்கைத் துறைக்காக உத்தேசிக்கப்பட்ட கட்டடத்தின் நிர்மாணம் (நிலை I, கட்டம் III) | வரையறுக்கப்பட்ட சுமனசேகர கன்ஸ்ரக்ஷன் (தனியார்) | 19,927,276.99 | 7,329,903.89 | 12,597,373.10 |
| 7 | உத்தேசிக்கப்பட்ட கலைக்காட்சியகம் மற்றும் நூதனசாலை | Furni Dynamic Eng | 7,832,683.04 | 2,527,999.35 | 5,304,683.69 |

### 18. (ஆ) 2013ம் ஆண்டிற்காக நடைமுறையிலிருக்கும் மறுசீரமைப்பு கருத்திட்டங்கள்

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | ஒப்பந்தக்காரரின் பெயர் | கேள்விமனு பெறுமதி VAT உள்ளடங்களாக ரூபா | இடைக்கால கொடுப்பனவுகள் 01.01.2014 வரை ரூபா | மிகுதி செலுத்த வேண்டியவை ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | உள்ளக விளையாட்டரங்கின் ஒளி முறைமையை மறுசீரமைத்தல் | Luminex(Pvt)Ltd | 7,842,776.20 | 6,351,248.22 | 1,491,527.98 |
| 2 | மின்னியல் துறை புதிய கட்டடத்திற்கான தரைத்தள ஜன்னல்களை மூடுதல் | Gayan Cons | 178,080.00 | 124,656.00 | 53,424.00 |
| 3 | பராமரிப்பு கட்டடத்திற்கான புதிய பாதை நிர்மாணம் | Dynamic Construction | 2,800,000.00 | 1,765,867.25 | 1,034,132.75 |
| 4 | மார்ஸ் மாணவர் விடுதியின் மலசலகூட அலகு புணரமைத்தல் வேலை | ITCS Group | 1,109,556.00 | 330,305.48 | 779,250.52 |
| 5 | மகா இலுப்பல்லம உப பல்கலைக்கழகத்தின் புனரமைப்பு வேலை | Ganegedara Builders | 1,346,800.00 | 419,721.82 | 927,078.18 |
| 6 | ராமநாதன் மாணவர் விடுதிக்கு வர்ணம் பூசுதல் | Gamini Eng. | 15,761,776.80 | 10,129,387.38 | 5,632,389.42 |
| 7 | கலைப்பீட விசேட தேவையுள்ள மாணவர்களுக்காக உத்தேசிக்கப்பட்ட இலகுவில் அணுகத்தக்கதான வசதிகள் | Luminex(Pvt)Ltd | 2,161,282.03 | 1,304,007.79 | 857,274.24 |
| 8 | இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்திற்கான விசேட தேவையுடைய மாணவர்களுக்காக உத்தேசிக்கப்பட்ட இலகுவில் அணுகத்தக்க வசதிகள் | Luminex(Pvt)Ltd | 3,180,519.77 | 1,984,435.90 | 1,196,083.87 |
| 9 | குடிசார் பொறியியல் வேலைத்தளத்திற்காக உத்தேசிக்கப்பட்ட விஸ்தீரணம் | Luminex(Pvt)Ltd | 11,330,008.10 | 7,807,554.97 | 3,522,453.13 |
| 10 | வரைபட காரியாலயம் ll ஐ(DOll) மாற்ற திருத்தம்செய்தல் நிலை I, கட்டம் I | SD&CC | 11,817,519.42 | 8,701,225.98 | 3,116,293.44 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | உணவு விஞ்ஞானங்கள் மற்றும் தொழிநுட்ப துறை ஆய்வுகூட கட்டடத்தின் இறுதி வேலைக்கான நிர்மாணம் மற்றும் பூர்த்திசெய்தல் கட்டம் 2- விவசாய பீடம் | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 34,178,475.41 | 11,413,600.00 | 22,764,875.41 |
| 12 | நீச்சல் தடாகத்திற்கான தாங்குசுவரை திருத்துதல் | Luminex(Pvt)Ltd | 3,281,236.44 | 1,672,120.97 | 1,609,115.47 |
| 13 | பல்மருத்துவ வைத்தியசாலையின் நோயாளர் பிரிவிற்கான உத்தேசிக்கப்பட்ட விஸ்தீரணம் | செனவிரத்ன என்ட்பிரைடர்ஸ் | 3,291,680.00 | 1,638,593.60 | 1,653,086.40 |
| 14 | மருத்துவ பீட மேற்கு விரிவுரை அரங்கை மறுசீரமைத்தல் | ITCS Group | 2,682,444.80 | 2,129,816.84 | 552,627.96 |
| 15 | விவசாய பீட அலுவலரன்களின் பொது அறையின் கற்கலவை கூரையை மீளமைத்தல் | DAD Construction | 192,567.20 | 108,548.72 | 84,018.48 |
| 16 | அக்பார் நெல் மாணவர் விடுதியின் பின்புற பகுதிக்கான சங்கிலி வேலி நிர்மாணம் | ITCS Group | 2,196,488.00 | 600,808.32 | 1,595,679.68 |
| 17 | உற்பத்தி பொறியியல் துறையின் ஆய்வுகூட பகுதியாக்கலுக்கான நிர்மாணம் | Span Consruction | 432,880.00 | 295,708.00 | 137,172.00 |
| 18 | மஹாகநத்த வாசஸ்தள இல 88 இற்கான புனரமைப்பு வேலை | Weerarathne Constructor | 675,852.80 | 540,682.24 | 135,170.56 |
| 19 | அக்பார் நெல் மாணவர் விடுதிக்கான வர்ணம் பூசுதல் | Gamini Eng Works | 16,268,000.00 | 11,237,062.03 | 5,030,937.97 |
| 20 | விவசாய பீட புதிய நிர்வாக கட்டடத்திற்காக உத்தேசிக்கப்பட்ட நிலத்தோற்ற அமைப்பு ஏற்பாடு | Weerarathne Constructor | 609,728.00 | 187,139.74 | 422,588.26 |
| 21 | புதிய வேலைகள் திணைக்கள கட்டடத்திற்கான அலுமீனிய பகுதிப்பிரிப்பு வேலை | Luminex(Pvt)Ltd | 3,430,126.00 | 2,924,131.95 | 505,994.05 |
| 22 | விவசாய பீடத்தின் விவசாய விரிவாக்கல் துறையின் புனரமைப்பு வேலை (உள்ளக வர்ணம் பூசுதல் 1ம் மாடி) | Kandy Builders | 285,768.00 | 200,037.60 | 85,730.40 |
| 23 | மகாஇலுப்பல்லம உப பல்கலைக்கழக மாணவர் பொது அறைக்காக உத்தேசிக்கப்பட்ட அலுமீனிய யன்னல்கள் | DAD Construction | 1,077,787.20 | 821,618.64 | 256,168.56 |
| 24 | மிருக வைத்திய மற்றும் விலங்கு விஞ்ஞான பீடத்தின் மிருக வைத்திய சிகிச்சை சேவைக்காக உத்தேசிக்கப்பட்ட சங்கிலி வேலி | ITCS Group | 1,447,437.60 | 295,725.03 | 1,151,712.57 |
| 25 | மகா இலுப்பல்லம உப பல்கலைக்கழகத்தின் பெண்கள் மாணவ விடுதிக்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் (வர்ணம் பூசுதல் மற்றும் உட்கூரை வேலை) | Jayaruwan Construction | 3,328,830.40 | 1,174,248.38 | 2,154,582.02 |
| 26 | மருத்துவ பீட அணுசக்தி மருத்துவ துறைக்காக உத்தேசிக்கப்பட்ட மாற்ற திருத்தம் | Luminex (Pvt)Ltd | 3,746,144.59 | 1,589,576.53 | 2,156,568.06 |
| 27 | கலைப்பீட கவின் கலைகள்துறை கட்டட புனரமைப்பு | Luminex (Pvt)Ltd | 6,721,433.36 | 1,191,520.35 | 5,529,913.01 |
| 28 | மருத்துவபீட நுண்ணுயிரியல் துறைக்காக உத்தேசிக்கப்பட்ட மாற்ற திருத்தம் | Gamini Eng | 4,722,608.80 | 843,323.00 | 3,879,285.80 |
| 29 | தொலை மற்றும் தொடர்கல்வி நிலையத்தின் திருத்தப்பணி | Gamini Eng | 5,915,240.97 | 1,056,293.03 | 4,858,947.94 |
| 30 | மிருக வைத்திய பீடத்தில் காணப்படும் முன்சிகிச்சை கட்டடத்திற்காக உத்தேசிக்கப்பட்ட மாற்ற திருத்தம் | Luminex (Pvt)Ltd | 3,076,941.84 | 1,123,730.11 | 1,953,211.73 |
| 31 | விஞ்ஞான பீட பூகோளவியல் கட்டடத்திற்கு 800 JVA மின்மாற்றி மூலமான வலு விநியோகம் | Luminex (Pvt)Ltd | 8,830,701.60 | 5,616,443.00 | 3,214,258.60 |
| 32 | மிருக வைத்திய பீடத்திலுள்ள பீடாதிபதி காரியாலயத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலை | Luminex (Pvt)Ltd | 13,595,146.88 | 4,502,956.64 | 9,092,190.24 |
| 33 | கல்பங்களாவின் புனரமைப்பு வேலைகள் | ITCS GRoup | 1,273,440.00 | | 1,273,440.00 |
| 34 | DOll மாற்ற திருத்தம் வேலை நிலை I, கட்டம் I | State Development | 19,964,835.23 | 3,565,149.15 | 16,399,686.08 |
| 35 | ஹில்டா ஒபேசேகர மாணவர் விடுதி மீள் மின்கம்பியிடல் | Chance electric | 11,263,084.00 | 3,260,239.08 | 8,002,844.92 |
| 36 | மருத்துவபீட பீடாதிபதி காரியாலய புனரமைப்பு | Luminex (Pvt)Ltd | 8,141,601.16 | 1,553,280.23 | 6,588,320.93 |
| 37 | விலங்கியல் துறைக்காக உத்தேசிக்கப்பட்ட மாற்ற திருத்தம் | Gamini Eng | 2,972,188.80 | 526,748.00 | 2,445,440.80 |
| 38 | இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்திற்காக உத்தேசிக்கப்பட்ட மின்மாற்றி வீடு | Kandy Builders | 830,489.80 | | 830,489.80 |
| 39 | விவசாய பீடத்தின் உணவகம் மற்றும் மாணவர் பொது அறைக்காக உத்தேசிக்கப்பட்ட எஞ்சிய வேலைகள் (கூரை ஈயவேலை) | DAd Construction | 1,262,380.00 | 156,161.25 | 1,106,218.75 |
| 40 | விலங்கு விஞ்ஞான துறைக்காக உத்தேசிக்கப்பட்ட Al.flymesh யன்னல் | Ajith construction | 1,653,120.00 | 1,061,522.78 | 591,597.22 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 41 | பண்ணை முகாமையாளர் வாசஸ்தளத்திற்காக உத்தேசிக்கப்பட்ட மலசலகூட அலகு- மாவலவத்தை பண்ணை | ITCS Group | 889,832.16 | | 889,832.16 |
| 42 | உத்தேசிக்கப்பட்ட பரீட்சை மண்டபம் (இரண்டு விரிவுரை அரைகளை ஒரு பரீட்சை மண்டபமாக மாற்றுதல்)- மருத்துவ பீடம் | Luminex (Pvt)Ltd | 8,490,047.16 | 1,683,449.43 | 6,806,597.73 |
| 43 | கவின் கலைகள் துறைக்காக உத்தேசிக்கப்பட்ட மாணவர் மலசலகூடம் | Isara Builders | 2,832,376.96 | 415,367.57 | 2,417,009.39 |
| 44 | தகவல் தொழிநுட்ப நிலையத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலை | Isara Builders | 2,342,676.00 | 1,874,140.80 | 468,535.20 |
| 45 | மிருக வைத்திய மற்றும் விலங்கு விஞ்ஞான பீடத்தின் விலங்கு நோய் உயிரியல் துறையை மாற்ற திருத்தம் செய்தல் | Gamini Eng.Works | 7,157,481.97 | 1,023,421.78 | 6,134,060.19 |
| 46 | மிருக வைத்திய பீட உயிரசாயணவியல் துறைக்கான உத்தேசிக்கப்பட்ட மாற்ற திருத்தம் | Gamini Eng.Works | 3,452,775.20 | 584,467.00 | 2,868,308.20 |
| 47 | இயந்திர பொறியியல் துறையின் வெப்பவியக்கவியல் ஆய்வுகூடத்திற்காக உத்தேசிக்கப்பட்ட மாற்ற திருத்தம் | Luminex (Pvt)Ltd | 8,241,499.62 | 1,596,331.91 | 6,645,167.71 |
| 48 | விவசாய பீடத்திலுள்ள பன்றித்தொழுவத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் | Isara Builders | 2,686,908.00 | | 2,686,908.00 |
| 49 | விஞ்ஞான பீடத்தின் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தொழிநுட்ப ஆய்வு கூடத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் | DAD Construction | 244,063.96 | | 244,063.96 |
| 50 | உத்தேசிக்கப்பட்ட மகாஇலுப்பல்லம உப பல்கலைக்கழக பொது மண்டப புனரமைப்பு வேலைகள் (களஞ்சியசாலையை பொது மண்டபமாக மாற்றல்) | Ajith construction | 1,539,916.00 | | 1,539,916.00 |
| 51 | மகா இலுப்பல்லம உப பல்கலைக்கழகத்திலுள்ள சமயலறைக்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் | Ajith construction | 2,621,043.60 | | 2,621,043.60 |
| 52 | மகா இலுப்பல்லம உப பல்கலைக்கழகத்தின் B2 வகையை சேர்ந்த அலுவலலர்களின் வாசஸ்தலளத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் | Ajith construction | 1,469,199.20 | | 1,469,199.20 |
| 53 | மகா இலுப்பல்லம உப பல்கலைக்கழகத்தின் B3 வகையை சேர்ந்த அலுவலர்களின் வாசஸ்தளத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் | Ajith construction | 1,476,759.20 | | 1,476,759.20 |
| 54 | மகா இலுப்பல்லம உப பல்கலைக்கழகத்தின் B1 வகையைச் சேர்ந்த அலுவலர்களின் வாசஸ்தலத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் | Ajith construction | 1,397,659.20 | | 1,397,659.20 |
| 55 | விவசாய பீட மண் விஞ்ஞானத்துறையின் பௌதீகவியல் ஆய்வு கூடத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் | Kandy Builders | 672,000.00 | | 672,000.00 |
| 56 | தொலை மற்றும் தொடர்கல்வி நிலையத்தின் ஆண்கள் மற்றும் பெண்கள் மலசலகூடத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் | Span Construction | 2,730,892.08 | | 2,730,892.08 |
| 57 | A-01 வகையைச் சேர்ந்த அலுவலர் வாசஸ்தளத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் | Span Construction | 1,483,076.00 | | 1,483,076.00 |
| 58 | பொறியியல் பீடத்தின் அதிமின்னழுத்த ஆய்வுகூடத்திற்காக உத்தேசிக்கப்பட்ட மாற்று திருத்த வேலை | Gamini Eng.Works | 2,383,981.32 | 419,710.95 | 1,964,270.37 |
| 59 | பல்மருத்துவ பீடத்தின் தளபாடங்களுடனான விரிவுரையரங்கு | Gamini Eng | 7,966,784.00 | 1,422,640.00 | 6,544,144.00 |
| 60 | பல்மருத்துவ பீட உணவகத்திற்காக உத்தேசிக்கப்பட்ட விஸ்தீரணம் | Malwatta Cons. | 13,689,636.49 | 2,443,837.94 | 11,245,798.55 |

## 18. (இ) 2013 ம் ஆண்டிற்காக பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த பெறுமதி (VAT உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| 1. | மருத்துவ பீடத்திற்காக Paraclinical கட்டடத்தொகுதி நிர்மாணம் | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 280,000,000.00 |
| 2. | விஞ்ஞான பீடத்தின் புதிய பூகோளவியல் கட்டட வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | CECB | 87,000,000.00 |
| 3. | விலங்கியல் துறையின் உத்தேசிக்கப்பட்ட மிருக இல்லத்திற்கான விஸ்தீரண நிர்மாணம் | Luminex(Pvt)Ltd | 11,111,111.03 |
| 4. | கலைப்பீட முகாமைத்துவத் துறைக்காக உத்தேசிக்கப்பட்ட கட்டடத்திற்கான நிர்மாணம் (நிலை I, கட்டம் II) | Gamini Engineerig works | 9,647,558.23 |

## 18. (ஈ) 2013ம் ஆண்டிற்காக பூர்த்திசெய்யப்பட்ட மறுசீரமைப்பு கருத்திட்டங்கள்

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த பெறுமதி (VAT உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பீட விளையாட்டுக் கழக மற்றும் பொழுதுபோக்கு கழக மறுசீரமைப்பு | ITCS Group | 938,025.76 |
| 2 | கூட்ட அரையின் தரைக்கு கம்பளமிடல் | Isuru Interiors | 105,336.00 |
| 3 | நிலற்படத்துறை ஆய்வுகூடத்தை GIA ஆய்வுகூடமாக மாற்றல் | Yasitha Enterprises | 1,800,500.80 |
| 4 | பல்மருத்துவ பீட வைத்தியசாலை கட்டடத்திற்கு வர்ணம் பூசுதல் | Gamini Eng. | 3,502,156.00 |
| 5 | பல்மருத்துவ பீடத்திற்காக உத்தேசிக்கப்பட்ட சங்கிலி வேலி நிர்மாணம் | Weerarathne Construction | 1,464,680.00 |
| 6 | பண்ணை விலங்கு மற்றும் சுகாதார துறைக்கான புனரமைப்பு வேலைகள் (தரைத்தளம்) | MBR Construction | 1,445,662.40 |
| 7 | உத்தேசிக்கப்பட்ட அலுமீனிய உருளும் கதவுகள் மற்றும் அலுமீனிய கதவுகள் | DAD Construction | 186,989.60 |
| 8 | விஞ்ஞான பீட நிதிப்பிரிவிற்காக உத்தேசிக்கப்பட்ட மாற்றல் திருத்தம் | Span Construction | 476,707.00 |
| 9 | கலைப்பீட கல்வித்துறையில் அலுவலர் அரையை நிர்மானிப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட இரகசிய அரைக்கான பகுதிப்பிரிப்பு | DAD Construction | 369,715.92 |
| 10 | மருத்துவ பீட வடிகாலமைப்பு முறைமை புனரமைப்பு வேலை | CH Jayasinghe Construction | 1,952,242.88 |
| 11 | விலங்கியல் துறையின் சீமேந்து தாங்கி நிர்மாணம் | ITCS Group | 264,936.00 |
| 12 | இராமநாதன் மாணவர் விடுதியின் மாணவர் அரைகளுக்காக உத்தேசிக்கப்பட்ட பகுதிப்பிரிப்பு செய்வதற்கான வேலைகள் (இரண்டாம் தளம்) | Durra Building | 1,779,758.40 |
| 13 | விஜேவர்தன மாணவர் விடுதியின் மாணவர் அரைகளுக்காக உத்தேசிக்கப்பட்ட பகுதிப்பிரிப்பு செய்வதற்கான வேலைகள் (மூன்றாம் தளத்தின் DH ஒன்று ) | Durra Building | 1,812,832.00 |
| 14 | விஜேவர்தன மாணவர் விடுதியின் மாணவர் அரைகளுக்காக உத்தேசிக்கப்பட்ட பகுதிப்பிரிப்பு செய்வதற்கான வேலைகள் (மூன்றாம் தளத்தின் DH ஒன்று ) | Durra Building | 1,795,550.40 |

பேராசிரியர் அதுல சேனாரத்ன
உபவேந்தர்
பெப்ரவரி 2013

# பின்னிணைப்பு A பீட அறிக்கைகள்

## A1 விவசாய பீடம்

*(பீடாதிபதி பேராசிரியர் கே.சமசிங்க அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

விவசாய உயர்கல்வியானது 1948 ம் ஆண்டில் பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விவசாய மற்றும் மிருகவைத்திய பீடத்தினால் 4 கல்விசார் அலுவலர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பகட்டத்தில் 3 கல்வியாண்டுகளாக கல்வி நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு ஒரு வருடத்திற்கான நீடித்த பண்ணைப் பயிற்சி கற்கைநெறியுடன் சேர்க்கப்பட்டதான 4 வருட கல்வி நிகழ்ச்சிகளாக 1968 இல் மாற்றமடைந்தது. இக்கற்கை நெறியானது 1968ம் ஆண்டு தாபிக்கப்பட்ட மகா இலுப்பல்லம உப பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்டது. அதே வருடத்தில் இன்னுமொரு காணியும் 79.06 எக்ரேயர் நிலப்பரப்பை கொண்டதாக தொடங்கொல்ல குண்டசாலை எனும் பிரதேசத்திலிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தினால் வழங்கப்படும் விவசாய பட்டத்தினை மேலும் வலுப்படுத்துவதற்காக பரிசோதனை நிலையமொன்றை தாபிப்பதற்காக பெறப்பட்டது. 1972ம் ஆண்டில் முழுமையாக தனித்துவமான பீடமாக விவசாய பீடம் ஆறு கற்கைத் துறைகளுடன் ஆரம்பிக்கப்பட்டதோடு பின்பு அது எட்டு கற்கைத் துறைகளாக விஸ்தீரணமடைந்தது.

பிரதான பட்டப்படிப்பு நிகழ்ச்சியாக வழங்கப்பட்ட விவசாய விஞ்ஞானமாணிப் பட்டமானது விவசாய தொழிநுட்பம் மற்றும் முகாமைத்துவ விஞ்ஞானமாணிப் பட்டமாக நாட்டின் தேவைகளை ஈடுசெய்வதற்காக முழுமையாக மாற்றப்பட்டது. மீள்திருத்தப்பட்ட பட்டப்படிப்பு நிகழ்ச்சியானது இக்கால உலகிற்கு தேவையான பல்வேறுபட்ட திறன்களை அபிவிருத்தி செய்யக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதற்கான இயலுமையை கொண்டுள்ளது. பீடமானது மேலும் உணவு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப விஞ்ஞானமாணிப் பட்டம் , விலங்கு விஞ்ஞானம் மற்றும் மீனவ விஞ்ஞானமாணிப் பட்டம் என்கின்ற நான்கு ஆண்டுகளைக் கொண்டதான இரண்டு பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளை புதிதாக அறிமுகம் செய்ததோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலமாக வருடாந்தம் 275 மாணவர்களை மொத்தமாக அனுமதித்திருக்கின்றது. மேலும் அதற்கு மேலாக பீடமானது நாட்டின் கைத்தொழில்துறைக்கு பங்களிப்பு செய்வதற்காக மனித வளங்களின் பயிற்சிக்காக விசேட ஒதுக்கங்கள் மூலமாக 18 மாணவர்களை அதிகூடிய எல்லை அளவாக அனுமதிக்கின்றது. இன்று பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடமானது மிகப் பழைமையான பீடமாக மட்டுமல்லாமல் இலங்கை பல்கலைக்கழக முறைமையின் மிகப் பெரிய விவசாய பீடமாகவும் மிகஅதிகமாக அங்கீகரிக்கப்பட்ட விவசாய பீடமாகவும் காணப்படுகிறது.

### அடைவுகள்

விவசாய பீடத்தில் கல்விசார் அலுவலர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் தொடர்ந்து வைத்திருத்தல் தொடர்ச்சியான கடினமான செயலாக காணப்படுகிறது. 2013ம் ஆண்டினுள் பீடமானது ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் நான்கு தகுதிகாண் விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் வெற்றிகண்டுள்ளது. சில அங்கத்தவர்கள் அவர்களின் வெளிநாட்டு கல்வி விடுமுறையில் கலாநிதிப்பட்டங்களை சிறப்பாக பூர்த்திசெய்து சேவைக்கு திரும்பியுள்ளனர். இரண்டு பேராசிரியர்கள் சிரேஷ்ட பேராசிரியர்களாகவும் மேலும் இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பேராசிரியர்களாகவும் சிறப்பு தேர்வு அடிப்படையில் பதவியுயர்த்தப்பட்டனர். பீடத்தை சேர்ந்த ஒரு பேராசிரியர் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தினால் D.Sc (Honoris causa) என்ற பட்டத்தினை 2013 இல் பெற்றுள்ளார். கடந்த வருடங்களில் அநேக முயற்சிகள் தோல்வியடைந்த நிலையிலும் விவசாய உயிரியல் தொழிநுட்ப நிலையத்திற்காக ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர் நிரந்தர அடிப்படையில் பணிப்பாளராக முதல் தடவையாக நியமனம் வழங்குவதில் பீடமானது வெற்றி கண்டுள்ளது. இளைப்பாரிய இரண்டு பேராசிரியர்கள் எமிரிடஸ் பேராசிரியர் அந்தஸ்தை பெற்றுக்கொண்டுள்ளனர். கல்விசாரா ஊழியர்களின் பதவி வெற்றிடங்கள் சிலவும் 2013 இல் நிரப்பப்பட்டுள்ளது.

விவசாய பீடமானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் இரண்டு பிரதான கருத்திட்டங்களுக்கு (மீளெழுச்சி கருத்திட்டம் மற்றும் இரண்டாம் சமுக அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழில்விருத்தி கருத்திட்டம்) தொடர்ச்சியான உதவியை வழங்கியுள்ளது. பொது விவசாயத்திற்கான முதலாவது வதிவிட பயிற்சியானது விவசாய கல்வி அலகின் மூலமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட பங்குபற்றுனர்களுக்காக 2013 ஒக்டோபர் 8ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. பீடமானது விவசாய இரசாயனங்களை எதிர்காலத்தில் விற்பனை செய்வதற்கு அனுமதிப்பத்திரம் கட்டாயமாக்கப்படவுள்ளமையால் இந்த பயிற்சியை விவசாய திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் விவசாய இரசாயன விற்பனையாளர்களுக்காக சான்றிதழ் கற்கை நெறியாக அதனை உறுதிப்பத்திரமாக பாவிப்பதற்காக வழங்கியுள்ளது. முதலாவது குழுவின் பயிற்சிபெற்றவர்கள் 2013 செப்டெம்பர் மாதம் 28ம் திகதி தமது கற்கை நெறியை நிறைவு செய்து பல்கலைக்கழக உபவேந்தரினால் தமது சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். இரண்டாம் குழுவினர் தமது கற்கை நெறியை ஆரம்பித்துள்ளனர். அமெரிக்காவின் மிச்சிகன் அரச பல்கலைக்கழக மாணவர்களுக்காக விவசாய கல்வி அலகானது தொடர்ச்சியான வெப்பவலய விவசாய முறைமைகள் என்ற தலைப்பிலான வெளிநாட்டு கல்வி நிகழ்ச்சியை இலங்கையில் வெற்றிகரமாக நடாத்தியுள்ளது. நான்கு கிழமைகளாக நடைபெற்ற நிகழ்ச்சியானது பங்குபற்றுநர் மத்தியில் அதிக மதிப்பை பெற்றுள்ளது.

வழமைபோலவே பீடமானது பயிற்சிப்பட்டறைகள், மகாநாடுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை வெளிக்கள நிகழ்ச்சிகளாக செயல்திறனாக நடாத்தியுள்ளது. 2013ம் ஆண்டினுள் பீடமானது இரண்டு சர்வதேச பயிற்சிப்பட்டறைகள், மகாநாடுகள் மற்றும் 20 தேசிய, உள்நாட்டு பயிற்சிப்படறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளது/ ஒழுங்கமைத்துள்ளது. ஆராய்ச்சிகளை வலுவடையச் செய்வதற்காக கல்விசார் அலுவலர்கள் ரூபா 62 மில்லியனை ஆராய்ச்சி மானியமாக உள்ளூர் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளனர். பீடமானது மூன்று தர மற்றும் புதுமைபடைத்தல் மானியங்களை உலகவங்கியின் உதவியினால் HETC (21ம் நூற்றாண்டுக்கான உயர்க்கல்வி), கருத்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொண்டது. இம்மானியங்களானவை உணவு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப பட்டப்படிப்பு நிகழ்ச்சி, விவசாய தொழிநுட்ப மற்றும் முகாமைத்துவ பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளுக்காக HETC Window 2 இன் மூலமாகவும் விவசாய வியாபார நிலையத்திற்காக HETC Window 4 மூலமாகவும் பெறப்பட்டது. இம்மூன்று மானியங்களின் மொத்தப் பெறுமதியாக ரூ. 60 மில்லியன் காணப்பட்டதோடு விவசாய பீடமானது அதிகபெறுமதியான HETC மானியங்களில் பெறப்பட்ட பீடமாகவும் காணப்படுகிறது.

அதிக தாமதங்களிற்கு பின்பு பீடமானது அதன் பிரதான திட்டத்தினை அமுல்படுத்துவதில் உட்கட்டமைப்பு வசதிகளை பீடத்தில் விருத்தி செய்வதனை முன்னெடுப்பதற்கு இயலுமை ஏற்பட்டுள்ளது. பிரதான திட்டமானது 2008 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதால் 2013 இல் அமைச்சரவையின் அங்கீகாரமும் பெறப்பட்டு கேள்விமனு முறைமைகள் நிர்மாணப்பணியினை தொடர்வதற்காக ஆண்டின் இறுதிப்பகுதியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

தனிப்பட்ட காரணங்களுக்காக சிரேஷ்ட பேராசிரியர் ஒருவர் பல்கலைக்கழக சேவையை விட்டு பதவிவிலகி தனியார் துறையில் இணைந்துள்ளார். மேலும் மூன்று சிரேஷ்ட கல்வி அலுவலர்கள் பல்கலைக்கழக சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளனர். பீடமானது மிகக்குறைந்தளவிலான உட்கட்டமைப்பு வசதிகள் காரணமாக விலங்கு விஞ்ஞானம் மற்றும் மீனவத்தொழில் விஞ்ஞானமாணிப்பாடநெறியினை அதன் 4ம் குழுவுக்காக கல்வி நிகழ்ச்சிகளை நடாத்துவதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியது. நிதிக்குறைபாடுகள் காரணமாக சில பெறுகைகள் திட்டமானது முறையாக அமுல்படுத்தப்பட முடியாதிருந்தது.

## எதிர்காலத்திட்டங்கள்

பீடமானது மேலதிக வசதிகளை வழங்கக்கூடிய புதிய ஆய்வுகூட கட்டடத்தொகுதியின் நிர்மானப் பணிகள் பூரத்தியடையும் கட்டத்திலுள்ளமையால் உணவு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப பட்டப்படிப்பிற்காக எதிர்வரும் வருடத்தில் மாணவர் அனுமதியை அதிகரிப்பதற்காக எதிர்பார்த்துள்ளது.

## A2 இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்

*(பீடாதிபதி கலாநிதி டி.பீ.எம். விக்கரமரத்ன அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

இணைந்த சுகாதாரங்கள் விஞ்ஞான பீடமானது 2007ம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இலங்கையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இளமையான மற்றும் 8வது பீடமுமாகும். பீடமானது தற்சமயம் 4 வருட மற்றும் 3 வருட பொது + 1 வருட விசேட இளமாணிப்பட்டங்களாக 6 பட்டப்படிப்புகளை தாதியியல் மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்களில் தகுதிகளான தாதியியல், இயன்மருத்துவ, மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான, மருந்தியல், கதிரியக்க மற்றும் ஊடுகதிர்ப்படமெடுத்தல் விஞ்ஞானமாணிப்பட்டங்களை வழங்குகின்றது. பீடமானது இவ்வொழுக்கங்களை வழங்குவதற்கதாக ஐந்து கற்கைத் துறைகளை 28 கல்வி அலுவலர் மற்றும் 41 கல்விசாரா அலுவவர்களையும் உள்ளடக்கியதாக கொண்டுள்ளது. இப்பீடத்திற்காக சேர்க்கப்பட்ட மூன்றாம் குழு மாணவர்கள் தற்போது அவர்களின் கற்கைநெறியை பூர்த்தி செய்துள்ளனர். பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றில் முதற்தடைவையாக 2012ம் ஆண்டு நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் 5 B.Sc. பட்டங்களும் ஏழு B.Pherm பட்டங்களும் பட்டமளிக்கப்பட்டன. தற்போது மேற்குறிப்பிட்ட பல்வேறு துறைகளில் 722 மாணவர்கள் பட்டப்படிப்பினை தொடர்கின்றனர். 322 மாணவர்கள் இதுவரையில் பட்டப்படிப்பினை நிறைவுசெய்துள்ளனர். பீடமானது வைத்தியசாலை சார்ந்த பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்காக அரச மற்றும் தனியார் வைத்திசாலைகளுடன் இணைவாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. பீடத்தின் பட்டதாரிகள் தனியார் வைத்திசாலைகளிலும் ஆய்வு கூடங்களிலும் பதவிநியமனம் பெற்றுள்ளனர். எனினும் பீடமானது ஏனைய பீடங்களின் பீடாதிபதிகளின் மற்றும் அவற்றின் அலுவலர்களின் நன்மதிப்பையும் உதவியையும் பெற்றுக்கொள்வதில் அதிகமாக தங்கியுள்ள நிலை காணப்படுகிறது.

பீடத்தின் இயன்மருத்துவ சேவைக்கிளை வெளிநோயாளிகளுக்கு தரமான இயன்மருத்துவ சேவைகளை வழங்குவதோடு நோயாளர் சேவையை பீடத்தினுள் பெற்றுக்கொள்ளவும் சிறந்த சிகிச்சை பயிற்சி முன்னேற்ற சூழலை மாணவர்களுக்கு ஏற்படுத்தவும் உதவுகிறது. ஊடுகதிர் அலகானது நோயாளர் சேவை வழங்குவதோடு பட்டதாரி மாணவர் கல்விக்கு முன்னுரிமை வழங்குகின்றது.

### அடைவுகள்

2009,2010 தாதியியல் மாணவர் குழுவிற்கான 4ம் குத்துவிளக்கேற்றல் 2013 ஜனவரி 4ம் திகதி இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் நடைபெற்றது. குத்துவிளக்கேற்றல் பவனியானது பணிப்பாளர்-தாதியியல் கல்வி, சுகாதார அமைச்சு (பிரதான அதிதி), உபவேந்தர் மற்றும் பல்கலைக்கழக அலுவவலர்களால் ஆரம்பிக்கப்பட்டது. தாதியியல் மாணவர்களுக்கான சத்தியப்பிரமானம் செய்யும் வைபவத்தின் முக்கியத்துவமானது தாதிகள் துறைத்தலைவரினால் விளக்கப்பட்டது.

- 2011/2012ம் புதிய குழு மாணவர்களுக்கான அங்குராப்பண நிகழ்ச்சி 2013 ஏப்ரல் 1ம் திகதி இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் நடைபெற்றது.

- மருந்தியல் துறையின் புதிய மருந்தாக்க கருவி ஆய்வுகூடமானது 2013 ஏப்ரல் 1ம் திகதி இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இவ்வாய்வுகூடமானது மருந்தளவு படிவ அபிவிருத்திக்காகவும் சிறிய அளவிலான மருந்து உற்பத்திக்கும் பயன்படுத்தப்படும். இது பீட மருந்தியல் துறையின் மிகச்சிறந்த அடைவோடு எதிர்காலத்தில் பட்டதாரி மாணவர்களின் செயல்முறை பயிற்சிக்காகவும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காகவும் பயன்படுத்தப்படும்.

- ஒரு சிகிச்சை மருந்தாக்கவியல் குழுவானது பேராசிரியர் இயன்கூம்பஸ் தலைமையில் 4 வருகை விரிவுரையாளர்களுடன் அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்திலிருந்து இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் மருந்தியல் துறைக்கு 2013 ஜுன் மாதம் 17ம் திகதிமுதல் 21ம் திகதிவரை வருகைத் தந்தனர். அவர்கள் இங்கு தங்கியிருந்த காலப்பகுதியில் வைத்தியசாலை நோயாளர் பிரிவு அடிப்படையான சிகிச்சை பயிற்சி நெறிகளை இறுதியாண்டு மாணவர்களுக்காக 3 நாள் பயிற்சியாக குருநாகல் போதனா வைத்திசாலையிலும் 2ம், 3ம் மருந்தியல் பட்டதாரி மாணவர்களுக்காக சிகிச்சை மருந்தியல் விரிவுரைகள் மற்றும் பயிற்சிகளை நடாத்தினர்.

- 2013 ஜுன் மாதம் 28ம் திகதிகளில் கிளிநொச்சி பாதுகாப்பு படையினர் கிளிநொச்சியில் ஏற்பாடு செய்திருந்த கல்விக் கண்காட்சியில் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடமானது ஊக்கத்துடன் பங்குபற்றியது. இக்கண்காட்சியில் பீடத்தின் 5 கல்வித் துறைகளையும் சேர்ந்த 47 மாணவர்கள் பங்குபற்றினர். ஒவ்வொரு கல்வித்துறைகளுக்கும் தனித்னியான கண்காட்சி நிலையங்கள் வழங்கப்பட்டதோடு இலங்கையின் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் துறையின் பெறுமதிகளின் முக்கியத்துவம் மற்றும் மாணவர்களின் காட்சி பொருட்களைக் குறித்து பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

- 2010/2011 குழுவைச் சேர்ந்த தாதியியல் மாணவர்களுக்கான 5ம் குத்துவிளக்கேற்றல் வைபவமானது 2013ம் வருடம் ஓகஸ்ட் மாதம் 28ம் திகதி இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இக்குத்துவிளக்கேற்றல் வைபவமானது ஜப்பான், நிகாடா பல்கலைக்கழக பேராசிரியர் எச். தன்னோ (பிரதம அதிதி), உபவேந்தர் மற்றும் பல்கலைக்கழக அலுவலர்களின் பவனியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

- 1895 நவம்பர் மாதம் 8ம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட ஊடுகதிர்களை (X-rays) அனுஷ்டிக்கும் ஆண்டுவிழாவான உலக ஊடுகதிர்படமெடுப்பு தினம் ஊடுகதிர் படமெடுத்தல் துறையினால் 2013 நவம்பர் மாதம் 8ம் திகதி பீட வளாகத்தினுள் கொண்டாடப்பட்டது. இது ஊடுகதிர் படமெடுத்தல் துறையின் விளிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அக்கரையை தூண்டுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட வருடாந்த சர்வதேச நிகழ்வாகும். இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேலதிகமான கல்விசார் அலுவலர், கல்விசாரா அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

- சிறந்த உலகிற்காக மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களுடன் இணைதல் எனும் நிகழ்ச்சியானது 2013ம் ஆண்டு பெப்ரவரி 11ம் திகதி இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் சர்வதேச வலதுகுறைந்தோர் தினத்தை அனுஷ்டிப்பதற்காக நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியானது பீடத்தின் இயன் மருத்துவ துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- ஜப்பான் நிகாடா பல்கலைக்கழக மருத்துவ தொழிநுட்ப துறையை சேர்ந்த எமிரிடஸ் பேராசிரியர் எஸ். ஹிறானோ அவர்கள் இரண்டு மாதங்களுக்காக வருகை பேராசிரியராக மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான துறைக்கு வருகைத் தந்தார்.

- இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் பதிவுசெய்த 2ம் குழுவை சேர்ந்த (2006/2007) மாணவர்கள் தமது கற்கை நெறிகளை பூர்த்திசெய்து பட்டத்தினை பெற தகுதிபெற்றுள்ளனர். 147 மாணவர்கள் அவர்களுக்குரிய பட்டத்தினை 2013 மே மாதம் 29ம் திகதி நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பெற்றுக்கொண்டனர்.

- ஜப்பானின் சுகாதார விஞ்ஞானங்கள் பாடசாலை, நிகாடா பல்கலைக்கழக மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட மாணவர் பரிமாற்றல் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக 3 பேராசிரியர்களையும் 8 மாணவர்களையும் உள்ளடக்கியதாக குழுவொன்று (தாதியியல் மற்றும் மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பம்) நிகாடா பல்கலைக்கழகத்திலிருந்து பீடத்திற்கு 2013 ஓகஸ்ட் மாதம் 25 முதல் செம்டெம்பர் மாதம் 04ம் திகதி வரை நான்காவது ஆண்டாகவும் சமுகமளித்தனர். இந்த சகோரத்துவ இணை நிகழ்ச்சியின் கீழ் திருமதி. எம்.எல். பதிரத்ன மற்றும் திரு. யு.டப்லியு.எஸ். ரத்னாயக என்ற தாதியியல் துறையை சேர்ந்தவர்களும் ஜப்பான் நிகாடா பல்கலைக்கழகத்தில் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டத்தில் 2013 மார்ச் 04ம் திகதி முதல் 9ம் திகதி வரை பங்குபற்றினர்.

- தாதியியல் ஊடுகதிர் படமெடுத்தல் மற்றும் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் துறையை சேர்ந்த 09 மாணவர்கள் ஒக்டோபர் மாதம் முதலாம் கிழமை தொடக்கம் 2014 பெப்ரவரி மாதம் கடைசி கிழமை வரையான 5 மாத காலப்பகுதிக்காக ஜப்பான் நிகாடா பல்கலைக்கழக சுகாதார விஞ்ஞானங்கள் பாடசாலையில் தமது ஆராய்ச்சிக் கல்வியை தொடர்வதற்கான புலமைப்பரிலை பெற்றனர்.

- தாதியியல் மற்றும் இணைந்த சுகாதார பட்டப்படிப்புகளுக்கான 3+1 பாடவிதானமானது பல்கலைக்கழக மூதவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஊடுகதிர் படமெடுத்தல் மற்றும் இயன்மருத்துவ B.Sc. வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பாடவிதானமானது மூதவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- ஜப்பானிய குன்மா பல்கலைக்கழகம் மற்றும் தாதியியல் துறையினால் கூட்டாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கூட்டு மருத்துவ நிபுணர்களின் அபிவிருத்தி மற்றும் கல்வி உதவிக்காக தொலைக்கல்வி முறையை அபிவிருத்தி செய்தல் எனும் ஆராய்ச்சி கருத்திட்டம் வெற்றிகரமாக நிறைவுபெற்றது.

- மிகச்சிறந்த வாய்மூவல நிகழ்த்துகை விருதானது Sri Lanka Association of Oral & Maxzillaxacial surgeons எனும் அமைப்பின் மூலம் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் துறையை சேர்ந்த கலாநிதி. ஆர்.பீ. இலேபெறும என்ற சிரேஷ்ட விரிவுரையாளரால் பெறப்பட்டது.

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

- பழைய கட்டடத்தின் புனரமைப்பானது தொழிலாளர் படை குறைவினால் பூர்த்திசெய்யப்படாததோடு பீடத்தின் புதிய கட்டடத்தின் நிர்மாணமானது ஒப்பந்ததாரரின் அர்ப்பணிப்பு குறைவால் பூர்த்தி செய்யப்படவில்லை.
- சுகாதார அமைச்சின் அர்ப்பணிப்பின்மை காரணமாக அண்மையிலுள்ள வைத்தியசாலைகளில் வைத்தியசாலை சார்ந்த பயிற்சிகளை வழங்குவதற்காக எடுத்த அனைத்து முயற்சிகளும் பயனளிக்கவில்லை.

## எதிர்காலத்திட்டங்கள்

- மருந்தியல் உபபிரிவொன்றை தாபித்தல்.
- மருந்தியல் முதுமாணிப்பட்டம், இயன் மருத்துவ மற்றும் ஊடுகதிர்படமெடுத்தல் வெளிவாரி விஞ்ஞானமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்தல்.
- இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் துறையானது சுகாதார பராமரிப்பு சேவைகளை வயோதிபர் இல்ல சேவை வழங்குபவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதனை அடிப்படையாகக் கொணடு சமுக சுகாதார கல்வி நிலையமொன்றை தாபிக்க விருப்பம் தெரிவித்துள்ளது.
- நோயாளி ஆய்வுகூடம், அனைத்து கருவிகளுடனான நுண்உயிரியல் ஆய்வுகூடம் மற்றும் மாணவர் ஆராய்ச்சி ஆய்வுகூடம் என்ற ஒவ்வொரு ஆய்வுகூடங்களையும் பீடத்தில் தாபித்தல்.
- இரசாயன கழிவகற்றல் முறைமையை தாபித்தல் மற்றும் இயன் மருத்துவ மற்றும் ஊடுகதிரியக்க படமெடுத்தல் துறைகளினால் நோயாளர் சேவை அலகை தரமுயர்த்துதல்.

## A3 கலைப்பீடம்

*(பீடாதிபதி பேராசிரியர் ஏ.எம். நவரத்ன பண்டார அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

கலைப்பீடமானது இதுவரையில் சமுக விஞ்ஞானம் மற்றும் மானுடவியலில் 15 ஒழுக்கங்களில் இளமாணிப்பட்டங்களை வழங்குவதோடு தற்போது வியாபார நிர்வாக மாணிப்பட்டம் (BBA) மற்றும் சட்டமாணிப் பட்டம் என்ற இளமாணிப பட்டங்களை நான்கு வருடங்களுக்கு முன்பதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட இரு கல்வித்துறைகள் மூலமாகவும் வழங்குகின்றது. முதலாவது வியாபார நிர்வாக மாணவர் அணியானது 2013இல் பட்டமளிக்கப்பட்டுள்ளதோடு சட்டமானி இறுதியாண்டு மாணவர்களின் கற்கை நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு கல்வியாண்டு நிறைவில் அவர்களும் கல்விநெறியை பூர்த்திசெய்து வெளியேறவுள்ளனர்.

### அடைவுகள்

2013ம் ஆண்டு பீடமானது மேலதிக மாணவர்களை அனுமதிக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு சாதகமாக பதிலளிக்கும் வகையில் நடைமுறை கல்வியாண்டிற்காக 1251 மாணவர்களை அனுமதித்துள்ளது. (இரு அணிகளுக்கு சமமான எண்ணிக்கை) அதன்படி பீடமானது மேலதிகமாக 501 மாணவர்களை (கலை-432, வியாபார நிர்வாகம் -51, சட்டம்-18) 2013ம் ஆண்டில் அனுமதித்துள்ளது (பேராதனைப் பல்கலைக்கழக 2013 இற்கான புதிய மாணவர் அனுமதியில் 41 சதவீதமாகும்). புதிய மாணவர்களின் கல்வி நிகழ்ச்சிகள் சிரேஷ்ட மாணவர்களை விட இரண்டு மாதங்கள் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டாலும் பீடமானது கல்வியாண்டு இறுதியில் சிரேஷ்ட மாணவர்களுடன் கல்வியாண்டு அட்டவணையை ஒரே காலத்துக்கு கொண்டுவந்துள்ளது.

2013இல் பீடமானது 871 பட்டதாரிகளை உருவாக்கியுள்ளதோடு (BA-732, BBA-119, B.Com-20) 152 முதுகலைமாணி, 8 தத்துவவியல் முதுமானி, 3 கலாநிதிப் பட்டதாரிகளையும், மற்றும் 223 பட்டப்பபின்படிப்பு டிப்ளோமா பட்டதாரிகளையும் உருவாக்கியுள்ளது.

பீடமானது வழமைபோல் Modern Ceylon Studies, Sri Lanka Journal of Humanities, சம்பாவனா (சிங்களத்தில்) மற்றும் பல்கலை (தமிழில்) என்ற நான்கு ஆய்விதழ்களையும் வெளியிட்டுள்ளது. பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல், தத்துவவியல் மற்றும் உளவியல், பாலி மற்றும் பௌத்த கற்கைகள், புவியியல் என்ற கல்வித்துறைகளினால் அத்துறைகளைச் சார்ந்த மாணவர்களினதும் அலுவலர்களினதும் கல்வி ஆராய்ச்சிக் கட்டுரைகளை பரந்தளவிலான வாசகர்களின் நன்மைக்காக துறைரீதியான ஆய்விதழ்களாக வெளியிடுகின்றன.

பீட கருத்தரங்குதொடர்கள் 9 கருத்தரங்குகளை 2013 இல் ஒழுங்கமைத்திருந்தது. கனடாவின் தத்துவவியலாளரான பேராசிரியர் சால்ஸ் டேய்லர் தொடர் கருத்தரங்குகளுக்காக 2013 இல் பேராதனைக்கு வருகைத் தந்தார். பொருளியல் துறையானது வருடாந்த எச்.எ.டி.எஸ். குணசேகர ஞாபகார்த்த உரையை அவுஸ்திரேலிய பல்கலைக்கழக பேராசிரியர் பிரேமசந்திர அதுகோரல அவர்கள் நிகழ்த்தியதோடு பீடமானது சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கை ஏற்பாடு செய்ததன் மூலமாக இலங்கை பொருளாதார மன்றத்தை ஏற்படுத்தியது. மேலும் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறையானது முதலாவது பேராதனை பொருளியல் ஆராய்ச்சி கருத்தரங்கை அத்துறையின் மாணவர்களினதும் ஆராய்ச்சியாளர்களினதும் நன்மைக்காக ஏற்பாடு செய்திருந்தது. அரேபிய மற்றும் இஸ்லாமிய கற்கைத் துறையானது பல்லின சமுதாயத்தில் முஸ்லிம்களின் பாத்திரம் எனும் தொனிப்பொருளிலான தேசிய கருத்தரங்கையும் தமிழ்த்துறையானது தமிழியல் எனும் தொனிப்பொருளிலான தேசிய கருத்தரங்கினையும் ஒழுங்கமைத்திருந்தது.

2013இல் பீடமானது ரூ. 10 மில்லியனுக்கும் மேலதிகமான தொகையானது 19 கல்வி அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்காக பெற்றுக்கொண்டது. 2012இல் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையிலிருக்கும் ஆராய்ச்சிகளையும் சேர்த்து 2013/24 ஆண்டில் சுமார் 40 ஆராய்ச்சிகளில் பீடத்தின் அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர். பீடத்தின் அலுவலர்கள் 2013 இல் நடைபெற்ற பேராதனைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி தொடருக்காக 33 ஆராய்ச்சிச்சுருக்கங்களை சமர்ப்பித்துள்ளனர். புவியியல் துறையானது அத்துறையில் ஆராய்ச்சி மற்றும் கற்பித்தலுக்காக புவியியல் தகவல் முறைமை தொழிநுட்பத்தை பயன்படுத்துவதற்காக பலகாலங்களாக எதிர்பார்த்திருந்த GISP இற்கான இட அனுமதிப்பத்திரத்தை 2013 இல் பெற்றுக்கொண்டனர்.

2013 ஆம் ஆண்டில் பீடமானது கணனி வசதிகளை தரமுயர்த்தியதன் மூலமாக இலகு வழி மொழி ஆய்வுகூடத்தை (EALL)மீளவும் செயற்படவைத்தது. 2013 டிசெம்பர் மாதம் பீடமானது 50 புதிய கணனிகளை HETC அனுசரணையில் பல்கலைக்கழக அபிவிருத்தி மானிய கருத்திட்டத்தின் மூலமாக கணனி உதவியுடனான ஆங்கில மொழி கற்பித்தல் நிகழ்ச்சியை நடாத்தும் EALL இன் விஸ்தீரணத்திற்காக பெற்றது. பீடத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கலை மாணவர்களுக்கான புதுமைபடைத்தல் அபிவிருத்தி என்ற கருத்திட்ட பிரேரணையும் உலக வங்கியால் 2013இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த புதிய கருத்திட்டத்தின் மூலம் பீடமானது ரூபா 68 மில்லியன் மதிப்பிடப்பட்ட மூன்று ஆய்வுகூடங்களை 150 கணனிகளுடன் தகவல் தொழிநுட்ப ஆய்வுகூடம் ஆங்கில ஆய்வுகூடம், மென்திறன் ஆய்வுகூடம் என்ற பெயர்களையுடைய ஆய்வுகூடங்களுக்காக பெறவுள்ளது.

ஆண்டினுள் அலுவலர் அபிவிருத்தி குழுவானது தகுதிகாண் விரிவுரையாளர்களுக்காக கல்விசார் எழுத்துப்பயிற்சி மற்றும் ஆங்கில பயிற்சி நிகழ்ச்சியை கொழும்பு பிரித்தானிய கவுன்சில் மூலமாக வடிவமைத்து வழங்கியது. எதிர்கால பீடத்தின் அபிவிருத்தியானது கனிஷ்ட விரிவுரையாளர்களின் கையிலிருப்பதால் பீடமானது இந்த பயிற்சி நிகழ்ச்சியை மேலும் விஸ்தரித்து 2ம் தடவையாக இதனை 2014 இல் செய்யவும் அதனை முதற்தடவையாக அக்கரையுரடைய சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு வழங்க திட்டமிட்டுள்ளது.

விசேட தேவையுடையோருக்கான வள நிலையமானது 2008 இல் தாபிக்கப்பட்டதோடு அதன் பெயர் "விசேட தேவைகளுயுடைய மாணவர்களுக்கான பேராசிரியர் டி.பீ.எம். வீரக்கொடி வள அலகு(WRUSNS)" என மாற்றப்பட்டது. 2013ம் ஆண்டில் 6 புதிய மாணவர்களின் பதிவுகளின் பின்னர் இவ்வலகிலிருந்து சேவைகளை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்தது. 2013இல் இவ் அலகானது 04 டிஜிட்டல் பதிவாக்கல் இயந்திரங்களையும் விக்டோரியா அவுஸ்திரேலிய கிளையின் பேராதனைப் பல்கலைக்கழக பழைய மாணவர் அமைப்பினாலும் 2 அச்சுப்பதிவு இயந்திரங்களையும் மாதம் மூன்று தடவைகளுக்காக மதிய உணவு வழங்குவதற்காக நிதியுதவியும் பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் கொழும்பு கிளை மூலமாகவும் மூன்று சக்கர நாட்காலிகளை கண்டி பௌத்த சேவை அமைப்பின் மூலமாகவும் பெற்றுக்கொண்டது.

## புலமைப்பரிசில்கள்/Fellowships

2013ம் ஆண்டினுள் பீடமானது பல மாணவர்களுக்கும் கல்வி அலுவலர்களுக்குமாக பல்வேறு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களினுடனான இணை நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் புலமைப்பரிசில்களையும் fellowship களையும் வழங்கியது. கல்லூரிகளுக்கிடையிலான இலங்கை கல்வி (ISLE) நிகழ்ச்சியில் பல அமெரிக்க நாடுகள் பங்குபற்றுவதோடு அவர்கள் கலைப்பீட கனிஷ்ட விரிவுரையாளரொருவர் மலேசிய பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப்பட்டத்தை பூர்த்தி செய்வதற்காக பகுதியளவிலான நிதியுதவியையும் வழங்கி மானியத்தை வழங்குகின்றனர். இந்த நிகழ்ச்சி மூலமாக 2013இல் அமெரிக்காவின் இரண்டு மாணவர் அணிகள் கலைப்பீடத்திற்கு வருகை தந்ததோடு அவர்கள் வெளிக்கள ஆராய்ச்சிகளில் ஈடுபட்டதோடு கற்பித்தல் நிகழ்ச்சிகள் பீடத்தின் விரிவுரையாளர்கள் மற்றும் எமிரிடஸ் பேராசிரியர்களை கொண்ட வளவாளர் குழுவால் நடைபெறுகிறது. ஜப்பானின் புகுஓகா மகளிர் பல்கலைக்கழகம் மற்றும் கலைப்பீடத்திற்கிடையேயான மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சியின் மூலம் 4 மாணவிகள் புகுஓகா பல்கலைக்கழகத்தின் கல்வி நிகழ்ச்சிக்கு 2013 இல் சேர்ந்துள்ளதோடு புகுஓகா பல்கலைக்கழக மாணவியொருவரும் 2013ம் ஆண்டின் இரண்டாம் பருவத்திற்காக கலைப்பீடத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். 2014ம் ஆண்டில் புகுஓகா பல்கலைக்கழகமானது கலைப்பீடத்தின் 05 மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

உபவேந்தர் பீடம் சார்பாக 2013இல் 02 புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளார். முதலாவது உடன்படிக்கையின் கீழ் தொல்பொருளியல் துறையும் பூகோளவியல் துறையும் இணைந்து ஜெர்மனியின் பிறை பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஜெர்மனி அரசாங்கத்திற்கு ஆராய்ச்சி மானிய பிரேரணையை சமர்ப்பிக்கும். இரண்டாம் உடன்படிக்கையின் கீழ் அரசறிவியல் விஞ்ஞான துறையானது நேபாளத்தின்

திரிபுவான் பல்கலைக்கழகத்துடனும் மேலும் இரு பல்கலைக்கழகங்களான பங்களாதேசத்தின் வடக்கு தெற்கு பல்கலைக்கழகம் மற்றும் நோர்வேயின் பெர்ஜென் பல்கலைக்கழகத்துடனும் இணைந்து நோர்வே அரசாங்கத்தின் உயர்கல்விக்கான இயலுமை அபிவிருத்தி மற்றும் அபிவிருத்திக்கான ஆராய்ச்சி என்ற நிகழ்ச்சியின் கீழ் மானியத்தை பெறுவதற்காக தொன்னாசியாவின் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியை முன்னெடுப்பதற்கான நிகழ்ச்சிக்காக கைச்சாத்திடப்பட்டது.

2013ம் ஆண்டில் இணை ஆராய்ச்சிகள் நடத்தப்படுவதற்கும் மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சிகள் அல்லது வருகை நிகழ்வுகளின் சாதகத்தன்மையும் ஆய்வதற்காக பல வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பீடத்திற்கு வருகை தந்தனர். ஆண்டின் ஆரம்பக்கட்டத்தில் நேபாள திரிபுவான் பல்கலைக்கழக மற்றும் பங்களாதேஷ் வடக்கு தெற்கு பல்கலைக்கழக உபவேந்தர்கள் மற்றும் நோர்வேயின் பெர்ஜென் பல்கலைக்கழகத்தின் இரு சிரேஷ்ட கல்வியாளர்கள் பீடத்திற்கு வருகை தந்ததோடு அந்நிகழ்வை பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் திரிவுவான் பல்கலைக்கழக புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உபவேந்தரின் அலுவலகத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் மெருகேற்றினார். அவுஸ்திரேலியாவின் மெக்குவாரி பல்கலைக்கழகத்தை சேர்ந்த இரண்டு பீடாதிபதிகளையும் நோர்வேயின் அகர்சுஸ் பல்கலைக்கழக கல்லூரியை சேர்ந்த ஒரு பிரதிநிதியையும் உள்ளடக்கிய பிரதிநிதிகள் குழுவொன்று பீடத்திற்கு வருகைத்தந்ததோடு எதிர்காலத்தில் இணை ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகள் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் ஆராயப்பட்டன.

## எதிர்காலத் திட்டங்கள் 2014 – 2015

2014ம் ஆண்டில் பீடமானது சவால்களான பட்டதாரி வேலைவாய்ப்பு குறித்து கவனம் செலுத்துவதற்காக அலுவலர் அபிவிருத்தி, பாடவிதான அபிவிருத்தி, மற்றும் புதிய பட்டப்படிப்பு அறிமுகம் போன்றவற்றில் கவனம் செலுத்தவுள்ளது. 2013ம் ஆண்டு கலை கல்வி அலகை தாபிப்பதற்கும் அதன்மூலம் நிலையான மூன்று நிகழ்ச்சிகளான (அ) தர உத்தரவாதம் மற்றும் கலைப்பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பை நோக்கிய பாடவிதான அபிவிருத்தி மற்றும் கண்காணிப்பு (ஆ) அலுவலர் அபிவிருத்தி (இ) விசேட நிகழ்ச்சி (மாணவர் உள்ளக பயிற்சி, தொழில் வழிகாட்டி மற்றும் தொழில் சந்தை) என்ற பிரேரணைக்கு கலைப்பீட சபையானது அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்காக நிதியினை இரு வருடங்களுக்காக வழங்க கருத்திட்டம் இணக்கம் தெரிவித்துள்ளமையால் அனுமதிக்கப்பட்ட கருத்திட்ட பிரேரணை மற்றும் அதற்கான பாதீடானது HETC காரியாலயத்திற்கு டிசம்பர் 2013 இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு 2014ம் ஆண்டின் பீடத்திற்கான நாளேட்டில் முதலாவது காரணங்களில் ஒரு அங்கமாக கலை கல்வி அலகை தாபித்தல் குறிப்பிட்டுள்ளது.

பீடத்தின் அநேக கல்வித்துறைகள் தொழிலை நோக்கிய கற்கை நெறிக்கான தொழில்வாய்ப்பை கலைப்பட்டதாரிகளுக்கு விருத்திசெய்வதற்காக வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர். பீடத்தின் கல்வி துறையானது புதிய கல்வி இளமானி பட்டப்படிப்பு கலைப்பீட அனுமதி பெறும் மாணவருக்கு அறிமுகம் செய்வதற்கு இணங்கியுள்ளது. மாணவர்கள் அவர்களின் முதலாம் ஆண்டு இறுதியில் இப்பட்டப்படிப்பிற்கு பதிவுசெய்யப்படுவதற்கான இந்தப் புதிய கல்வி நிகழ்ச்சிக்கான பாடவிதானமானது பீடங்களுக்கிடையேயான வளவாளர் குழுவினால் இதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு பயிற்சிப்பட்டறைகளின் பங்குபற்றலோடு தயாரிக்கப்பட்டு விருத்திசெய்யப்பட்டது. இந்த புதிய பாடவிதானமானது ஜனவரி மாத கலைப்பீட சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும். தொழில் வாய்ப்பினை நோக்கமாகக்கொண்டு சமுகவியல் துறையானது தற்சமயம் சமுகசேவை பட்டப்படிப்பிற்கான பாடவிதானத்தை தயாரித்து வருகின்றது.

பீடமானது கலை மாணவர்களுக்காக அவர்களின் தகவல் தொழிநுட்பம் திறன்கள் மற்றும் அறிவை விருத்திசெய்யும் நோக்கில் 200 ம் மற்றும் 300 ம் மட்டங்களிலுள்ள மாணவர்களுக்காக தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் பாடங்களை விருப்பத்தெரிவு கற்கை நெறிகளாக அறிமுகம் செய்ய எதிர்பார்த்துள்ளது. கருத்திட்ட பிரேரணையானது sabbatical விடுமுறையிலுள்ளவர் ஒருவரை இதற்காக தெரிவுசெய்யவோ அல்லது விஞ்ஞான மற்றும் பொறியியல் பீடங்களிலிருந்து இக்கற்கை நெறிகளுக்கான பாடத்திட்டங்களை தயாரிப்பதற்கான உதவியை பெறுவதற்கும் விரைவில் அனுமதிக்காக பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்படும். கடைசி நோக்கமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலை மற்றும் மானுடவியல் நிரந்தர குழுவின் பரிந்துரைக்கமைவாக தகவல் தொழிநுட்ப சிறப்புடனான கலைமாணிப் பட்டத்தினை கலை பட்டதாரிகளுக்கு வழங்குவதாகும்.

2014இல் பீடமானது கல்விசார் பிரதான திட்டத்தினை 2013 இல் கலைப்பீட சபையினால் மற்றும் கல்வித்துறைகளினால் எடுக்கப்பட்ட முன்னெடுப்புகள் மற்றும் தீர்மானங்களை உள்ளடக்கியதாக தயாரிப்பதோடு கல்வித்துறைகளுக்கு அவற்றிற்கான தனித்துவ அபிவிருத்தி திட்டங்களை தயாரித்துக்கொள்ளவும் ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. இது பீடத்திற்கு சரியான திசைநோக்கி செல்லக்கூடியதாகவும் அதன் குறைபாடுகளை அடையாளம் காணவும் அபிவிருத்தியை எதிர்வுகூறவும் வசதியளிக்கிறது.

கலைப்பீடமானது மாணவர்கள், கல்விசார் அலுவலர், கல்விசாரா அலுவலர்களுக்கு போதிய இடவசதியின்மை காரணமாக சிரமங்களை எதிர்நோக்கியுள்ளது. தற்போது காணப்படும் கட்டடமானது சில நூற்றுக்கணக்கான மாணவர்களை நோக்காகக்கொண்டு திட்டமிடப்பட்டிருப்பினும் தற்போது அதில் கிட்டத்தட்ட 4000 மாணவர்களுக்கு விரிவுரை அறை வசதி வழங்கப்படுகிறது. வருடந்தோரும் அதிகரிக்கப்படும் மாணவர் எண்ணிக்கைக்கு அமைவாக பீடமானது கட்டட வசதிகளை பெறவில்லை. பீடமானது முற்காலத்தில் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பொது மண்டபங்களையும் கூட தற்போது விரிவுரை அறைகளாக மாற்றியுள்ளது. பீடமானது தனிநபர் அலுவலர் அறைகளை 198 கல்விசார் அலுவலர்களில் 71 அலுவலர்களுக்கு மாத்திரமே வழங்க இயலுமை கொண்டுள்ளது. பீடமானது 2016ம் ஆண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருக்கும் புதிய கலை கட்டடத்தை 2015 இற்கு முன்னெடுப்பதற்காக உரிய அதிகாரிகளின் உதவியை நாடியுள்ளதோடு பீட திட்டங்களுக்கமைய அதன் கல்வி நிகழ்ச்சிகளின் தரத்தை உயர்த்துவதற்கு எதிர்பார்த்துள்ளது.

# A4 பல்மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம்

*(பீடாதிபதி பேராசிரியர் உபுல் பீ. திஸாநாயக்க அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

## அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழக பல்மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம் மற்றும் பல்மருத்துவ (போதனா) வைத்தியசாலையும் கற்பித்தலுக்கு, ஆராய்ச்சி மற்றும் நோயாளர் பராமரிப்புக்கு உதவுவதோடு அதன் கட்டடத்தொகுதிகள் சர்வதேச நியமங்களுக்கு அமைவான நவீன கருவி வசதிகளையும் கொண்டுள்ளது. பல்மருத்துவ விஞ்ஞான பீடமானது நாட்டின் பல்மருத்துவர்களை பயிற்றுவிக்கும் ஒரே நிறுவனமாக காணப்படுவதோடு அதன் 7 கல்வித்துறைகளாக அடிப்படை விஞ்ஞானங்கள், சமூக பல்மருத்துவ சுகாதார துறை, வாய் மருத்துவம் ,மற்றும் வாய் மற்றும் தாடைமுக சத்திர சிகிச்சை, வாய் நோயியல், பல்கட்டுதல், மற்றும் பல் நிரப்பல் துறைகளை கொண்டுள்ளது. பல்மருத்துவ விஞ்ஞான பீடமானது வருடாந்தம் 80 பல் மருத்துவர்களை பயிற்றுவிக்கின்றது. பட்டதாரி மாணவர்களை பயிற்றுவிப்பதற்கு மேலதிகமாக பல்மருத்துவ நிபுணர்களை உயர்பட்டங்களுக்கான மருத்துவ நிறுவகத்துடன் கூட்டிணைத்து பயிற்றுவிக்கவும் ஏனைய உதவி பல்மருத்துவர்களை பயிற்றுவிப்பதும் ஏனைய தொழிற்பாடுகளாக காணப்படுகின்றது. மேலும் பீடத்தின் பல்மருத்துவ (போதனா) வைத்தியசாலையானது மூன்றாம் நிலை ஆலோசனை நிலையமாக நோயாளர் பராமரிப்பிற்காக காணப்படுவதோடு அதன் வசதிகளை மருத்துவ பீட மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீட மாணவர்களும் அவர்களின் பயிற்சிகளுக்காக பயன்படுத்துகின்றனர்.

பல்மருத்துவ பீடமானது/ வைத்தியசாலையானது இந்நாட்டு மக்களுக்கு மிகவும் தனித்துவமான சேவையாக வாய்புற்றுநோய் சத்திரசிகிச்சை, வாய்முக மீள் நிர்மாண சத்திரசிகிச்சை, உதடு மற்றும் மேல்வாய் வெடிப்புடன் பிறந்த குழந்தைகளுக்கான முழுமையான பராமரிப்பு, வீதி விபத்துக்களின் மற்றும் புற்றுநோய் சத்திரசிகிச்சையின் பின்னர் நோயாளிகளுக்கான பல்கட்டுதல்,செயற்கை உறுப்பு பொருத்துதல் புனர்வாழ்வு (உதாரணம்: செயற்கை பதில் மூக்கு, காதுகள், கண்கள், தாடைகள் என்பன),பற்குழி எலும்பு ஊணத்திற்கான விசேட பல் அமைப்பியல் பராமரிப்பு ,புகுத்துதல் சத்திரசிகிச்சை போன்ற விசேட சேவைகளை வழங்குகின்றது. இது இலங்கையிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்குமான புற்றுநோய் இனங்காணும் இடமாக காணப்படுகிறது.

## அடைவுகள்

அமைச்சரவையானது பல்மருத்துவ விஞ்ஞான பீடத்திற்காக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 209 மில்லியன் பெறுமதியுடைய 5 மாடி கட்டடத்தினை நிர்மானிப்பதற்கான அனுமதியினை வழங்கியுள்ளது. இரண்டு மாடிகளைக்கொண்ட உணவக கட்டடம் மற்றும் புதிய விரிவுரை மண்டபத்திற்கான நிர்மானப்பணிகள் 2013ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

மருத்துவ பீடத்தின் சத்திரசிகிச்சை கல்வி துறையினால் பொது சத்திரசிகிச்சை கற்பிக்கும் பொறுப்பு ஏற்கப்பட்டது. இரண்டு பீடங்களினாலும் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு அந்த உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கிணங்க பல்மருத்துவ பீடத்தின் அனுமதிக்கப்பட்டிருந்த ஆளணியிலிருந்து ஒருவர் சத்திரசிகிச்சை துறைக்கு மாற்றப்பட்டார்.

பீடமானது 18 புதிய நுண்பரிசீலனை கருவிகளையும் 25 பற்சிகிச்சை நாட்காலிகளையும் மேலதிக மாணவர் அனுமதி மூலம் பெற்றுக்கொண்டது.

பீடமானது யொன்செய் பல்கலைக்கழகம் மற்றும் பல்மருத்துவ விஞ்ஞான பீட இணைவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் Cone Beam Dental CT இயந்திரத்தை அன்பளிப்பாக பெற்றுக்கொண்டது.

கட்டடத்திற்கான வர்ணம் பூசுதல் செயற்திட்டமானது பூர்த்தியடைந்துள்ளது.

பல்மருத்துவ விஞ்ஞானபீடமானது 2013 இல் பதிவு செய்த வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து ரூ. 700,000.00 இனை வருமானமாக பெற்றுள்ளது.

திரு. எம்.பி.எம். எரங்க பிரபாத் என்ற இறுதியாண்டு மாணவர் பல்மருத்துவத்தில் கல்வி மற்றும் விஞ்ஞானம் என்ற 5வது ஹிரோஷிமா மகாநாட்டிலும் ஜப்பானில் ஒக்டோபர் 12 முதல் 14 வரை நடைபெற்ற உணவு போசாக்கு மற்றும் சுகாதார சர்வதேச ஆய்வரங்கிலும் தனது சுவரொட்டியின் நிகழ்த்துகைக்கான சந்தர்ப்பம் பெற்றுக்கொண்டார்.

பேராசிரியர் உபுல் பீ. திஸாநாயக்க அவர்கள் பீடத்தின் பீடாதிபதியாக 2ம் தவணையாகவும் 2013 ஏப்ரல் 10ம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் வகையில் 3 ஆண்டுகளுக்காக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

பேராசிரியர் டப்லியு.எம். திலகரத்ன மற்றும் வைத்திய கலாநிதி திருமதி. பீ.எஸ்.எம்.எஸ். சிரிவர்தன என்ற வாய் நோயியல் துறையை சேர்ந்தவர்கள் தேசிய ஆராய்ச்சி பேரவையினால் ரூ. 7 மில்லியன் மானிய தொகையை வென்றனர்.

கலாநிதி வி. விஜயகுமாரன் என்பவர் சர்வதேச ஐக்கிய அமெரிக்க ரோட்டரி கழகத்தினால் ரோட்டரி சேவை விருதினை 2013 இற்காக அவரின் முன்னுதாரணமான முயற்சிகளை தொண்டர் சேவை மூலம் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்காக எடுத்த முயற்சிகளுக்காக பெற்று கௌரவிக்கப்பட்டார். மேலும் அவர் அதிசிறந்த தொழிற்பயிற்சி சேவை விருதினையும் கொழும்பு ரோட்டரி கழகத்தினால் தேவையுள்ள மக்களுக்கான அவரின் அர்ப்பணிப்புள்ள சேவையை அங்கீகரிக்கும் நோக்கிலும் பெற்றுக்கொண்டார்.

கலாநிதி சித்தார்த்த சக்ரவோதி,இந்திய கல்கத்தாவின் தாடைவாய் நிபுணர் பயிலுனர் தமது ஓராண்டு சான்றிதழ் பாடநெறியான வாய்புற்று நோயினை மீள் நிர்மான முறைமை என்ற சத்திரசிகிச்சை முகாமைத்துவ பாடநெறியினை OMF இல் திருப்திகரமாக நிறைவுசெய்தார்.

திரு. டி.எம்.பீ.பீ. தென்னகோன் அவர்கள் கருஉயிரியல் தொழிநுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை இரண்டு மாதங்கள் கொரிய நாட்டின் யொன்செய் பல்மருத்துவ பல்கலைக்கழக கல்லூரி சியொல் இனை சேர்ந்த வாய்ப்புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தில் தொடர்வதற்கான புலமைப்பரிசிலை பெற்றுக்கொண்டார்.

பல் மருத்துவ விஞ்ஞான பீடமானது 15 இற்கும் மேலான சமுக சேவை அடிப்படையான வெளிக்கள நிகழ்ச்சிகள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகளை 2013 இல் நடாத்தியது.

### 2013ம் ஆண்டில் பின்வரும் புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

1. கலாநிதி திருமதி. டி.ஐ. அமரதுங்க- மனதிற்கு சுகமளிக்கும் வாய்சுகாதாரம் (சிங்களம்)
2. கலாநிதி எ.கே.எஸ். அரம்பவத்த, கலாநிதி எச்.ஆ.டி. பீரிஸ், கலாநிதி திருமதி. பீ.ஜீ.டி.எல். நந்தசேன மற்றும் பேராசிரியர் திருமதி. சி.டி. நானாயக்கார MCQs & OSPE மாதிரிவினாவிடைகள்- வாய் உயிரியல்
3. பேராசிரியர் திருமதி. சீ.டி. நானாயக்கார மற்றும் பேராசிரியர் எம். சந்திரசேகர-MCQs in Anatomy – an aid to revision and self-assesment-Head and Neck-1st Edition,
4. பேராசிரியர் டப்லியு.எம். திலகரத்ன மற்றும் பேராசிரியர் சமன் வர்ணகுலசூரிய –Oral Medicine & Pathology-A Guide to Diagnosis and Management
5. கலாநிதி திருமதி. எச்.என்.எஸ். சொய்சா மற்றும் பேராசிரியர் தனியெல் பெக்கர-Teaching of local Anaesthetics for the second year dental students

### தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

பீடத்திற்கு 5 மாடிக்கட்டடத்திற்கான நிர்மானப்பணியினை ஆரம்பிக்க முடியாதிருந்தது. மேலும் இவ்வாண்டும் புதிய ஐந்து ஆண்டு பாடவிதானத்தை நிறைவு செய்ய முடியாமற்போனது.

## எதிர்காலத் திட்டங்கள்

1. வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பல இணை ஆராய்ச்சி நிகழ்ச்சினை ஆரம்பித்தல்.

2. நோயாளர் பராமரிப்பு பிரிவுகளை மற்றும் ஏனைய சிகிச்சை வசதிகளை சேவை தொழிற்பாடுகளை விரிவாக்கும் நோக்கில் விஸ்தீரணம் செய்யவும் அதனை பொது சிகிச்சை மற்றும் சிகிச்சைக்கு தொடர்புபடுத்துவதால் அது பட்டதாரி மாணவர்களுக்கு அவ்விடயங்களில் அதிக வளர்ச்சி காணவும் முடியும்.

3. கருத்திட்டம் மூலமாக புதிய திறன்கள் ஆய்வுகூடமொன்றை தாபித்தல்.

4. மாணவர்கள் நோயாளிகளுடன் வேலை செய்வதற்கு முன்பதாக உயிரற்ற நிலை பயிற்சிகளை பெறுமளவில் அறிமுகம் செய்தல்.

# A5 பொறியியல் பீடம்

*(பீடாதிபதி பேராசிரியர் லீலாநந்த ராஜபக்சவினால் அறிக்கையிடப்பட்டது)*

## அறிமுகம்

2013ம் ஆண்டில் முக்கிய வேலையாக 480 பட்டதாரி மாணவர்களை கல்வி நிகழ்ச்சியில் சேர்த்துக்கொள்வதாக காணப்பட்டதோடு அதில் 65 மாணவர்கள் சாதாரண பதிவுக்கு மேலதிகமாக காணப்பட்டனர். பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடமானது 2011 இல் உயர்தரப்பரீட்சையை பூரணப்படுத்தி Z புள்ளி பிரச்சினை காரணமாக பல்கலைக்கழக அனுமதி தாமதமாக காணப்பட்டிருந்ததோடு அம்மாணவர் குழுவை நாட்டின் முதல் பீடமாக விரைவாக பதிவுசெய்து கல்வி நடவடிக்கைகளையும் ஆரம்பித்தது. அதிகரித்த மாணவர் அனுமதியுடன் எண்ணிக்கையால் வளங்களை வரையறைக்கு மேலாக பயன்படுத்த முடியாவிடினும் வளங்களுக்கான அவ்வரையறைகள் அனைத்தையும் அனுமதித்தது. பீடமானது E/II மாணவர் குழுவினருக்கு திட்டமிட்டிருந்தபடியே முதலாம் கல்வியாண்டினை சிறப்பாக பூர்த்திசெய்துள்ளனர். மேலதிக மாணவர் அனுமதியுடன் பீடமானது ரூபா. 40 மில்லியன் பெறுமதியான நிதி உதவியினை முக்கியமான ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் வசதிகளை விருத்திசெய்யவும் மாணவர் நலன் செயற்பாடுகளை விருத்தியடையச் செய்யவும் பெற்றுக்கொண்டது. மேலும் பீடமானது வழமையான கல்வி நிகழ்ச்சிகளை நடாத்துவதோடு மேலும் இளைய பொறியிலாளர் குழுவொன்றையும் 400 இற்கும் மேலான பட்டதாரிகள் மூலம் உருவாக்கியது. மொத்தமான பொறியியலாளர் மத்தியில் 150 குடிசார் பொறியியலாளர்கள், 100 மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியிலாளர்கள், 60 கணனி பொறியியலாளர்கள், மற்றும் எஞ்சிய தொகையில் உற்பத்தி இயந்திரவியல் பொறியியலாளர் மற்றும் செயன்முறை பொறியியலாளர்கள் அடங்குவர்.

பாராட்டுக்குரிய அடைவுகளாக கல்வி நிகழ்ச்சிக்கான எல்லாவிதமான தடைகளுக்கு மத்தியிலும் பீட மாணவர்கள் குறிப்பிடத்தக்க அளவு தேசிய தொழிநுட்ப போட்டிகளில் மற்றும் சர்வதேச போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளனர். இவை திறந்த போட்டிகளாக காணப்பட்டதோடு நாட்டின் ஏனைய பொறியியல் பீடங்களும் அடங்களாக பல பல்கலைககழக மாணவர்களும் பங்குபற்றினர். சில செயற்பாடுகளில் தேசிய போட்டிகளில் வெற்றிபெற்ற பினனர் எமது மாணவர்கள் வெளிநாடுகளில் நடைபெற்ற சர்வதேச மட்ட போட்டிகளில் அவர்கள் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினர். அர்ப்பணிப்புள்ள அலுவலர்களின் வழிகாட்டல் மட்டும் மேற்பார்வையானது இவை அடையப்பட வழிவகுத்தன.

பீடத்தினால் நடாத்தப்பட்ட ஆராய்ச்சியானது 200 இற்கும் மேலான வெளியீடுகளையும் அதில் கட்டுரைகளை பிரசித்தி பெற்ற ஆய்விதல்களிலும் புத்தகங்களிலும் அத்தியாயங்களிலும் வழங்கியுள்ளது. பீடமானது பல்வேறு CPD நிகழ்ச்சிநெறி ,கருத்தரங்குகளை இலங்கை பொறியியல் நிறுவனத்துடன் இணைந்து வழங்கல், தொழிநுட்ப நிபுணத்துவம் மற்றும் பரிசோதனை சேவைகள் அடங்களாக உள்ளூர் கைத்தொழிலுக்கு சேவை வழங்குவதன் மூலமாக கைத்தொழில் துறையின் உறவை பேணுகிறது. ஜப்பானிய விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப முகவர் மற்றும் JICA நிறுவனங்களால் நிதியளிக்கப்படும் நிரந்தர அபிவிருத்திக்கான விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப ஆராய்ச்சி பங்குடமை(SATREP) என்ற நிதியினை செழிப்பில்லா நிலத்தை நிரப்புதல் என்ற ஐந்தாண்டு கருத்திட்டத்திற்காக சைதமா பல்கலைக்கழகத்துடன் இணைந்து பெற்று 2013 இல் மிகச் சிறப்பாக முன்னேற்றமடைந்ததோடு வெற்றிகரமான இடைக்கால மதிப்பீடு பெறப்பட்டுள்ளது.

தொழிநுட்ப முன்னேற்றங்களுக்கிணங்க புதிய கற்கை நெறியினை அறிமுகம் செய்வதானது தொடர்கிறது. சில கல்வித்துறைகளானவை அவற்றின் பாடவிதானங்களை நிகழ்கால மற்றும் எதிர்கால கேள்விகளுக்கேற்ப மாற்றியமைத்துள்ளதோடு புதிய பல தொழிநுட்ப கற்கை நெறிகள் இளமானிப்பட்ட நிகழ்ச்சிக்காக கல்வித்துறைகளால் சேர்க்கப்பட்டுள்ளன. பாரியளவான பாடவிதான மீளாய்வானது பீடத்தினால் செய்யப்பட்டு வருவதோடு அதற்காக பீடத்தின் கல்வித்துறைகள் முதலாம் வருடத்திற்கான நிகழ்ச்சியை மீளாய்வு செய்து வருவதோடு அதற்காக புதிய கட்டமைப்பு மாற்றங்களை சர்வதேச வழிகாட்டிகளுக்கு அமைவாகவும் பொது அங்கீகாரங்களுக்கான தேவையை பூர்த்தி செய்வதற்காகவும் மற்றும் பெறுபேற்றை நோக்கிய கல்வி என்ற

அடிப்படையில் சிறப்பாக தயாரிக்கப்பட்டு வருவதோடு விரைவில் அது நிறைவு பெறும். பீடத்தின் அனைத்து கல்வி நிகழ்ச்சிகளும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உத்தரவாதக் குழுவினால் கல்வித்துறைகளினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு மதிப்பீடுகள் நிறைவு பெற்றுள்ளதோடு அவை IESL இன் பொது அங்கீகாரத்தையும் பெற்றுள்ளன. சில கல்வித்துறைகள் IESL இன் பொது அங்கீகாரத்திற்கான 2ம் சுற்றுக்கு உட்படுத்தப்பட்டு வருவதோடு அது ஏனைய பொறியில் பீடங்களுக்கும் கல்வித்துறைகளுக்குமான மாதிரி தரங்களை உருவாக்கியுள்ளது.

CPD நிகழ்ச்சிகள் மூலமாக தனிப்பட்ட கல்வித்துறைகளும் மற்றும் பொறியில் வடிவமைப்பு நிலையம் மூலமாகவும் உள்ளக தொழில்சார்ந்தவர்களுக்கான அறிவு தொடர்ச்சியாக பரப்பப்பட்டு வருகிறது. 35 இற்கும் மேலான குறுங்கால கற்கை நெறிகள் கருத்தரங்குகள் மற்றும் ஆய்வரங்குகளானவை சில விடயங்களில் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களின் வளவாளர்களின் வருகையுடனும் நடாத்தப்பட்டன. பீடமானது வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காகவும் கைத்தொழில் உறவுகளை மேம்படுத்துவதற்காகவும் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. ஆராய்ச்சி இணைவுகளுக்காகவும் ஆராய்ச்சி நிபுணர்களை பரிமாற்றிக்கொள்வதற்காகவும் தேசிய மற்றும் சர்வதேச மகாநாடுகள் குறித்த ஆண்டினுள் பீடத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டன.

திட்டமிடப்பட்டிருந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் பீடத்தினுள் திருப்திகரமான வளர்ச்சியை காட்டவில்லை. இந்த தோல்விக்கான பிரதான காரணமாக திட்டமிடப்பட்டிருந்த அட்டவணைப்படி நிதிப்பாய்ச்சல் இடம்பெறாமையாகும். பீடத்தினுள் மாணவர்களின் திடீர் அதிகரிப்பு, கடந்த பத்தாண்டுகளில் 150 இலிருந்து 480 இற்கும் மேலாக ஒரு குழுவிற்கான மாணவர் தொகை மொத்தமாக 1150 முழு நேர இளமானி பட்டதாரி மாணவர்கள் ஒரு பருவத்தவணைக்காக அதிகரிக்கப்பட்டமை போன்றன பௌதீக மற்றும் கல்வி வளங்களில் அழுத்தத்தை ஏற்படுத்தியதோடு இது அதிகளவில் பீடத்தின் கல்வித்துறைகளின் உட்கட்டமைப்பு வசதிகளிலும் மாணவர் நல சேவைகளிலும் உடனடியான முன்னேற்த்திற்கான தேவை சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2013 ம் ஆண்டில் சிரேஷ்ட கல்வி அலுவலர்களிலும் கடுமையான குறைபாடு காணப்பட்டது. சில மட்டங்கள் வரை தகுதிவாய்ந்த கல்வி அலுவலர்களை கல்வித் துறைக்கு ஆட்சேர்த்தல் வெற்றிகரமாக நடந்தது. அனுமதிக்கப்பட்ட அலுவலர் படையில் சில விசேடத்துவம் வாய்ந்த துறைகளுக்காக குறைந்தளவான விண்ணப்பதாரர்கள் எதிர்பார்க்கப்பட்ட விசேட துறைகளுக்கு பெறப்பட்டமையால் பதவிகள் நிரப்பப்படவில்லை. நிபுணத்துவம் வாய்ந்த பொறியியலாளர்களை உருவாக்குவதற்காக இளைய அலுவலர்களை ஆட்சேர்த்தல், பயிற்சியளித்தல் மற்றும் பீடத்தில் தக்கவைத்தல் என்பன முக்கிமாக காணப்படுகிறது. தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக பொறியிலாளர்களுக்கும் பொறியியல் கல்வியாளர்களுக்கும் கேள்வி மற்றும் அதிக ஊழியர்கள் வழங்கப்படுவதனால் அது அலுவலர் பலத்தில் மறைமுக விளைவை ஏற்படுத்தியுள்ளது. பல்கலைக்கழக கல்வி அலுவலர் பதவிகளில் கவர்ச்சியை ஏற்படுத்துவதற்காக சில தந்திரோபாயங்கள் (பொறியியல் கொடுப்பனவொன்றை செலுத்துதல், ஆராய்ச்சிகளுக்கு நிதி வழங்கல், பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதிக்கு உதவுதல்) தகுதிவாய்ந்த அலுவலர்களை பராமரிக்கவும் அதன்மூலம் அதிக தரத்தையும் சர்வதேச அங்கீகாரத்தை பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளுக்கு பராமரிக்கவும் முடியும். வளக்குறைபாடுகளுக்கு மத்தியிலும் கல்வி அலுவலர் குறைபாடுகளுக்கு மத்தியிலும் இருக்கின்ற ஆலவலர்களின் அயராத உழைப்பினால் திருப்திகரமான வெளியீட்டை வருடத்தினுள் அடைய முடிந்தது.

பொறியியல் முகாமைத்துவம் என்ற புதிய கல்வித்துறையானது புதிய ஆட்சேர்த்தலுடன் கல்வி நிகழ்ச்சிகளுக்கு உதவுகிறது. எனினும் இட தேவைப்பாடுகள் தற்சமயம் பிரச்சினையாக ஏற்பட்டுள்ளது. எனவே பீடமானது பல்கலைக்கழகத்தின் உதவியை பிரதான திட்டத்திலுள்ள கட்டடங்களை பெறுவதற்கு நாடியுள்ளது. மேலும் நாட்டின் அபிவிருத்தி செயன்முறைக்கு உதவும் வகையில் பொறியல் துறைக்கான நாட்டின் கேள்வியை ஈடுசெய்யக்கூடிய வகையில் புதிய பாடநெறிகளை மற்றும் கல்வி நிகழ்ச்சிகளை அறிமுகம்செய்ய பீடம் எதிர்பார்த்துள்ளது.

## A6 மருத்துவ பீடம்

*(பீடாதிபதி பேராசிரியர் எம்.டீ. லமாவன்ச அவர்களினால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

பீடமானது தற்போது 52 வயதையடைந்துள்ளது. 2013ம் ஆண்டானது அலுவலர்களுக்கும் மாணவர்களுக்கும் வேலைமிகு ஆண்டாக இருந்தது. அண்மையிலுள்ள வைத்தியசாலை வைத்தியர்களின் தொடர்ச்சியான பங்குபற்றலானது பீடத்திற்கு கிடைக்கப்பெற்றது. கூட்டங்களானது ஒழுங்காக நடைபெற்று வந்ததோடு அலுவலர்களின் பங்குபற்றலானது தீர்மானமெடுத்தல் மற்றும் அமுல்படுத்தல்களில் அதிகம் காணப்பட்டது. மாணவர்கள் மற்றும் கல்விசாரா அலுவலர்களினுடனான கூட்டங்களும் வருடத்தினுள் ஒழுங்காக (அடிக்கடியின்றி) நடைபெற்றதையும் குறிப்பிட வேண்டும். Z புள்ளி பிரச்சினையின் பெறுபேறாக 2012ம் ஆண்டு மாணவர் அனுமதியும் தாமதமாகியதோடு அதிகூடிய எண்ணிக்கையுடைய மாணவர்கள் (240 மாணவர்கள்-வரலாற்றில்மிக அதிமான எண்ணிக்கை) அனுமதிக்கப்பட்டதோடு அளவுக்கு மிகையாக வளங்கள் பாவிக்கப்பட்டன.

### அடைவுகள்

ஆண்டினுள் 173 மருத்துவ மாணவர்கள் பட்டமளிக்கப்பட்டனர். எமது இரண்டு மாணவர்கள் தேசிய மட்ட பொது தகுதியின் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை கடந்த நான்கு வருடங்கள் நடைபெற்றது போலவே பெற்றனர். ஏழாவது தொடர்ச்சியான ஆண்டாகவும் எமது இறுதியாண்டு மாணவர்கள் நாட்டில் அனைத்து மருத்துவ பீடங்களுக்கிடையிலும் நடைபெற்ற குழதையியல் புதிர்ப்போட்டியில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தனர். எமது உடலியல் மாணவர்கள் மலேசியாவில் நடைபெற்ற 70 அணிகள் பங்குபற்றிய சர்வதேச உடலியல் புதிர்ப்போட்டியில் ஏழாவது இடத்தைப் பெற்றனர்.

### பாடவிதானம்

2012இல் ஆரம்பிக்கப்பட்ட சிகிச்சை சாரா பாடவிதான மீளாய்வானது நிறைவுசெய்யப்பட்டது. சிகிச்சை பாடவிதான மீளாய்வும் பெறுமளவு நிறைவடைந்துள்ளது. சமமட்ட கல்விசார் அலுவலர்களின் விரிவுரை மீள்மதிப்பீடானது ஆரம்பிக்கப்பட்டதோடு அது சிறந்த வளர்ச்சியை காட்டுகின்றது. கற்பித்தல் நிகழ்ச்சிகளை மாணவர் மூலமாக மதிப்பீடு செய்தலானது நிறுவப்பட்டுள்ளதோடு அது ஒவ்வொரு பருவத்தின் இறுதியிலும் நடைபெறும்.

### மாணவர் நலன்புரி மற்றும் உதவிச்சேவைகள் மற்றும் நிகழ்ச்சிகள்

ஆங்கிலத்தில் குறைவுள்ள மாணவர்களுக்காக மேலதிக கற்பித்தலானது வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டது. புதிய மாணவர் அணி 2011/2012 இற்காக கல்வி ஆலோசனை நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்பட்டது. ஆலோசனை சேவை நிகழ்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டிருப்பினும் மாணவர்கள் அந்த சேவைகளை முழுமையாக பயன்படுத்தவில்லை. மென்திறன்கள் பயிற்சி நிகழ்ச்சியானது (நேர முகாமைத்துவம், செயற்திறனாக

படித்தலுக்கான வழிகள், முறன்பாட்டு தீர்வு போன்றன) இளமானிப்பட்ட கற்பித்தல் நிகழ்ச்சிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டதோடு மாணவர்களால் அவை சிறப்பாக அடையப்பட்டன. நிதியானது மாணவர்களுக்கு அவர்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கான வெளிநாடு பயணங்களுக்காக காணப்படுகிறது.

## பரீட்சைகள்

நல்ல பரீட்சைக்கான பயிற்சி என்ற ஆவணமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. பரீட்சைகளின் பரீட்சையாளர்களுக்காக அனைத்து பரீட்சை வினாக்களுக்கும் மாதிரி விடைகள் கிடைப்பது உறுதிசெய்ப்பட்டுள்ளது. அனைத்து பரீட்சைகளுக்குமான பெறுபேறுகள் ஆறு கிழமைகளுக்கிடையில் வெளியிடப்பட்டுள்ளன.

## உட்கட்டமைப்பு

நுண்உயிரியல் துறையில் மேற்கு விரிவுரை மண்டபத்தை புனரமைத்தல் மற்றும் மழைநீர் வடிகாலமைப்பு முறைமையின் ஒரு பகுதியும் பூர்தியடைந்துள்ளது. பீடாதிபதி காரியாலய புனரமைப்பு மற்றும் அணுசக்தி மருத்துவ அலகு மற்றும் உயிரியல் இரசாயன விரிவுரை மண்டபங்களை ஒரு பரீட்சை மண்டபமாக மாற்றும் வேலையும் வளர்ச்சிக் கட்டத்திலுள்ளது. paraclinical கட்டடத்தின் தரைத்தள மற்றும் முதலாம் தளங்கள் பூர்த்தியடைந்துள்ளதோடு நோயியல் மற்றும் சட்ட மருத்துவ கட்டடங்களின் வேலைகள் நகர்த்தப்பட்டுள்ளன. நோயியல் துறையின் கட்டடத்திற்கான மேலுள்ள நான்கு தளங்களின் நிர்மாண வேலைகள் தற்போது நடைமுறையிலுள்ளன. உழைத்த நிதியிலிருந்து சிகிச்சை ஆராய்ச்சி மற்றும் சேவைகள் கட்டடத்தை நிர்மானிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிகிச்சை அலகிற்காக விஸ்தரிப்பு நிர்மாண கருத்திட்டமானது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கண்டி போதனா வைத்தியசாலையின் உளவியல் கட்டடத்திலுள்ள மாணவர் உணவகம் மற்றும் மாணவர்களுடைய அறைகளை திருத்துவதற்காக படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இணையம் மூலமாக விரிவுரை மண்டபங்கள் மற்றும் விரிவுரை அறைகளை ஒதுக்கும் முறைமையானது அமுல்படுத்தப்பட்டுள்ளது. இணையத்தின் நாளாந்த பாவனையும் மிகச்சிறந்த முன்னேற்றமடைந்துள்ளது. இலத்திரனியல் நூலகமானது (e-library) மேலதிக கணனிகள் மூலமாக பலப்படுத்தப்பட்டுள்ளன. பீடத்திற்காக உழைத்த நிதியிலிருந்து ஒரு பஸ் மற்றும் ஒரு முச்சக்கர வண்டியொன்றும் பீடத்தினால் கொள்வனவு செய்யப்பட்டது.

## பட்டப்பின்படிப்பு பயிற்சிகள் ஆராய்ச்சி மற்றும் உயர்ப்பட்டங்கள்

பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சிகளுக்காக 8 புதிய விண்ணப்பதாரிகள் பதிவு செய்துள்ளனர். ஒருவர் கலாநிதிப்பட்டத்தை பூர்த்தி செய்துள்ளதோடு மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்காக ஆறு பட்டப்பின்படிப்பு மாணவர்கள் பயிற்சியளிக்கப்பட்டனர். 62 வெளியீடுகளானவை மதிப்புரை ஆய்விதழ்களில் காணப்படுவதோடு அதில் 40 சர்வதேச ஆய்விதழ்களிலும் காணப்படுகின்றன. மருத்துவ பீடமானது பேராதனைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் தொடர் 2012 இனை 2013 ஜுலையில் நடாத்தியது. வெப்பவலய மருத்துவ ஆராய்ச்சி நிலையமானது செயற்படாதிருந்ததோடு மீள் செயற்படுகின்றது. ஆராய்ச்சிகளுக்கான மேலதிக நிதியானது காணப்படுகிறது. இரண்டு அங்கத்தவர்கள் தே.ஆ.பே மாணியங்களை பெற்றனர். ரூ. 11,439 மில்லியன் ஆராய்சிக்காக செலவிடப்பட்டது. பீடத்தின் ஆராய்ச்சிப் பணிகளை வலுப்படுத்துவதற்காக ஐக்கிய இராச்சியத்திலிருந்து வந்த வருகை பேராசிரியர் பீட ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கான தீவிர கருத்தாய்வு நடாத்தினார்.

## உயர் மருத்துவ விஞ்ஞானங்கள் பாடசாலை

அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2013 நவம்பர் அரச பாதீடு வாசிப்பில் பிரகடனப்படுத்தப்பட்ட உயர் மருத்துவ விஞ்ஞானங்கள் பாடசாலையை தாபிப்பதற்கான கருத்திட்டப் பிரேரணையை அபிவிருத்தி செய்வதற்காக கவனத்தில் கொள்ளத்தக்க நேரத்தை பீடம் செலவழித்துள்ளது.

## சேவைகள்

சமூகத்திற்கான சிகிச்சை சேவைகள் மேலும் விருத்தியை காட்டுகிறது. ஆண்டினுள் Lower Gastrointestinal சேவைகள், வலி சிகிச்சை மற்றும் Hepato-biliary சேவைகளும் சேர்க்கப்பட்டன. தொற்றாத வியாதிகள் மற்றும் தடுப்பு சேவைகள் தொடர்பான சமுக ஆய்வு கருத்திட்டமொன்று வடிவமைக்கப்பட்டது. கல்விசார் அலுவலர்களின் பங்களிப்புடன் கடுகண்ணாவை வைத்தியசாலையில் வயோதிபர் பராமரிப்பு சிகிச்சையொன்று ஆரம்பிக்கப்பட்டது. பல்கலைக்கழகமானது அணுசக்தி மருத்துவ சேவைகளை மேம்படுத்துவதற்கான கம்மாகமராஒன்றினை வாங்குவதற்கான கிரயத்தில் ஒரு பகுதிக்கு பங்களிப்பு செய்வதற்கான தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. பேராதனை போதனா வைத்தியசாலையின் சிகிச்சை மற்றும் ஆய்வுகூட சேவைகளானவை பீடத்திற்கு அதிக வேலைச்சுமையை சேர்த்துள்ளன. நோயாளர் தரவு சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான கணனி வலைப்பின்னல் தாபிப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

## ஆளணி மூலதன அபிவிருத்தி

கல்வி சாரா அலுவலர்களின் ஆங்கில மொழி மற்றும் கணனி அறிவை அபிவிருத்தி செய்யக்கூடிய நிகழ்ச்சியானது அமுல்படுத்தப்பட்டது. அலுவலக முகாமைத்துவம் மற்றும் ஆய்வுகூட தொழிநுட்பங்கள் தொடர்பான விசேட பயிற்சி நடைபெற்றன.

## அலுவலர்கள்

ஒருவர் சிரேஷ்ட பேராசிரியராக தரமுயர்த்தப்பட்டார். இரண்டு அங்கத்தவர்கள் ஓய்வுபெற்றதோடு இருவர் பதவிவிலகினார். ஒன்பது புதிய அங்கத்தவர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர். ஐந்து கல்விசார் அனுமதிக்கப்பட்ட அலுவலர் படையானது பத்து கல்வித்துறைகளுக்கு (சிகிச்சை மற்றும் சிகிச்சைசாரா) கற்பித்தல் நிகழ்ச்சிகளில் கல்விசார் அலுவலர்களின் செங்குத்தான பங்களிப்பினை விருத்திசெய்வதற்காக பங்கீடு செய்யப்பட்டது. ஏழு கல்விசாரா அலுவலர்கள் ஓய்வு பெற்றதோடு 12 புதிய அங்கத்தவர்கள் பதவி நியமிக்கப்பட்டனர். புதிய நிகழ்ச்சிகளுக்கான தேவைகளை கருத்திற்கொண்டு கல்விசாரா அலுவலர்கள் சிலர் மீள மாற்றப்பட்டுள்ளனர்.

## வெளிநாட்டு கூட்டுறவுகள்

பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிக்கான இருபக்க பொறுப்பு கூட்டுறவானது UCD யுடன் ஆரம்பிக்கப்பட்டதோடு பயிற்சி பேராதனையில் நடைபெற்றது. "ஒரு சுகாதாரம" என்ற கருப்பொருளிலான சர்வதேச மகாநாடானது பேராதனையில் 2014 இல் நடாத்தவிருப்பதோடு அது இரு பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கூட்டுறவை வலுப்படுத்துவதில் இன்னுமொரு படியாக அமையும்.

## விசேட விருதுகள்

நான்கு கல்விசார் அலுவலர்கள் விசேட விருதுகளை பெற்றனர்

## வெளிமுகவர் நிறுவனங்களுடனான ஒன்றிணைவு

பீடமானது உயர்தரமான நோயாளர் பராமரிப்பினை வழங்குவது தொடர்பில் சுகாதார அமைச்சுடன் தொடர்ந்து நெருக்கமாக தொழிற்படுகிறது. அநேக அலுவலர்கள் இதற்காக அதன் கற்கைச் சபைகளில் அங்கத்தவர்களாக பணியாற்றுவதோடு பட்டப்பின்படிப்பு பயிற்சியாளர்களாகவும் பரீட்சகர்களாகவும் பணியாற்றினர். UNFPDA உடனான கூட்டிணைவு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்கிறன.

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

பீடத்தில் இணை பீடாதிபதிகள் (அல்லது சமமான பதவிகள்) மூவரை பெறுவதற்கான அங்கீகாரம் பெறுவதில் குறைந்தளவிலான முன்னேற்றம் காணப்படுகிறது. பீடாதிபதியின் வேண்டுகோலுக்கிணங்க மேலதிக மாணவர் அனுமதிக்கான பரீட்சை மண்டபம் மற்றும் விரிவுரை மண்டப நிர்மானமானது செயன்முறைப்படுத்தப்படாதபடியால் உருவாக்கப்பட முடியவில்லை.

## எதிர்கால திட்டங்கள்

தீராத சிறுநீரக வியாதி, தொற்றாத வியாதிகள், குடும்ப மருத்துவம் போன்றவற்றுக்காக ஆராய்ச்சி குழுக்கள் மற்றும் நிலையங்களை தாபிப்பதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். தொற்றாத வியாதி நிலையத்திற்காக உலக சுகாதார தாபனத்தின் அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். நஞ்சு எதிர்ப்பு உற்பத்திக்கான இயந்திரமொன்றை நிறுவுவதற்கான கருத்திட்ட பிரேரணை சமர்ப்பிக்கப்படும். உயர் மருத்துவ விஞ்ஞானங்கள் பாடசாலையின் கீழ் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படும்.

## A7 விஞ்ஞான பீடம்

*(பீடாதிபதி பேராசிரியர் அநுர விக்கிரமசிங்ஹ அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடமானது 1942 இல் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டதோடு தற்போதுள்ள இடத்திற்கு 1961 ஜூலை மாதம் மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் இப்பீடமானது ஐந்து கல்வித்துறைகளான தாவரவியல், இரசாயனவியல், கணிதவியல், பௌதீகவியல் மற்றும் விலங்கியல் துறைகளுடன் காணப்பட்டது. பூகோளவியல் துறையானது இலங்கையின் பல்கலைக்கழக முறைமையினுள் காணப்படும் ஒரேயொரு கல்வித்துறையாவதோடு விசேட பூகோளவியல் பட்டத்தையும் பொதுப்பட்டப்படிப்பில் பூகோளவியலை ஒரு பாடமாகவும் வழங்குவதோடு இது 1964 இல் தாபிக்கப்பட்டது. கரு உயிரியல் மற்றும் உயிரியல் தொழிநுட்பம் மற்றும் புள்ளிவிபரவியலும் கணனி விஞ்ஞானமும் என்ற கல்வித்துறைகளும் 1997 இல் தாபிக்கப்பட்டன. பீடமானது விஞ்ஞான கல்வி அலகொன்றையும் கட்டியெழுப்பியுள்ளது.

பீடமானது 14 இளமானிப்பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளை வழங்குவதற்காக ஏறத்தாழ 500 மாணவர்களை வருடாந்தம் அனுமதிக்கிறது. பீடத்தில் ஏறத்தாழ 96 கல்விசார் அலுவலர்கள் காணப்படுவதோடு ஏறத்தாழ 1800 மாணவர்களும் பீடத்தில் காணப்படுகின்றனர். பீடமானது எல்லா பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளிலும் குறிப்பாக 2004/2005 இல் ஆரம்பிக்கப்பட்ட பிரயோக விஞ்ஞானங்கள் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளிலும் உள்ள மாணவர்கள் கைத்தொழில் பயிற்சிகளில் அமர்த்தப்படுவதாலும் கைத்தொழில் துறையினுடனான உறவை வலுப்படுத்தி உள்ளது. விஞ்ஞான தொழிற்துறை இடைத்தொடர்பு கலம் (SIIC) மூலமாக பீடத்தின் கல்விசார் அலுவலர்களுக்கும் அக்கைத்தொழில் துறையின் அலுவலர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு உருவாக்கப்பட்டுள்ளதோடு அது பீடத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு சிறப்பாக வசதியளிக்கும் சூழலை ஏற்படுத்தியுள்ளது. பீடமானது இளமானிப்பட்ட கற்பித்தல் நிகழ்ச்சிகளுக்காக சிறந்த அறிவை வழங்குவதற்கும் ஊக்கமளிப்பதற்காகவும் நாட்டின் அபிவிருத்தித் தேவைகளுக்காகவும் பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சியின் பங்கிற்கான முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளதோடு உயர்ப்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகத்துடன் பட்டப்பின் படிப்பு கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிகளில் நெருக்கமாக பணிபுரிகின்றது. பீடமானது பல்வகையான உபகரணங்களையும் மற்றும் பௌதீக வழங்களையும் உயர்தரத்திலான ஆராய்ச்சிகளை அடிப்படை விஞ்ஞானங்கள் மற்றும் பிரயோக விஞ்ஞானங்ளில் நடாத்துவதற்காக கொண்டுள்ளது. பீடத்தின் பல கல்விசார் அலுவலர்கள் பிரபல்யமான தேசிய மற்றும் சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளனர். பல்வகை வெளியீடுகளும் ஆக்கவுரிமைகளும் தேசிய ரீதியில் மற்றும் சர்வதேச ரீதியில் பெறப்பட்டுள்ளமை இதற்கு மேலதிக சான்றாக காணப்படுகின்றது.

### அடைவுகள்

2013ம் ஆண்டில் பீடத்திற்காக சிரேஷ்ட விரிவுரையாளரொருவர் மற்றும் ஐந்து தகுதிகாண் விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய இயலுமை கிடைத்தது. விடுமுறையிலிருந்து மூன்று அலுவலர்களும் வெளிநாட்டு கற்கை விடுமுறையிலிருந்த இரண்டு அலுவலர்களும் அவர்கள் கலாநிதிப்பட்டங்களுக்கான ஆராய்ச்சியை நிறைவுசெய்து அறிக்கை சமர்ப்பித்து சேவையில் மீண்டும் இணைந்துள்ளனர். ஒரு அங்கத்தவர் சிரேஷ்ட பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார். இரண்டு அங்கத்தவர்கள் Sabbatical விடுமுறையில் Postdoctoral Fellowships ஏற்றுக்கொண்டு சென்றுள்ளதோடு ஒருவர் வருகை பேராசிரியராகவும் பதவி பெற்றுள்ளார். பல அங்கத்தவர்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு மற்றும் ஆய்வுகூடங்களுக்கு விசேட பயிற்சி நிகழ்ச்சிகள், பயிற்சிப் பட்டறைகள், மகாநாடுகள் மற்றும் கூட்டிணைவு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக சென்றுள்ளனர். ஆறு அங்கத்தவர்கள் தே.வி.மஇன் சிறந்த ஆராய்ச்சி விருதுகளை

தமது ஆராய்ச்சி வேலைகளை தே.வி.மஇன் ஆராய்ச்சி மானியத்தின் கீழ் பெற்று நிறைவு செய்ததற்காகவும் மேலும் மூவர் ஆராய்ச்சி வேலை மேற்பார்வைக்கான உதவித்திட்டத்திற்கான(SUSRED) விருதினை பெற்றனர். இரண்டு கல்வி அலுவலர்கள் மற்றும் ஒரு பட்டப்பின்படிப்பு மாணவரையும் சேர்ந்ததான அணியினர் இயற்கை அழகு உருவாக்கல் ஆராய்ச்சி விருதினை 2013ம் ஆண்டிற்காக வர்த்தகமயப்படுத்தக்கூடிய ஆராய்ச்சிக்காக பெற்றனர். பேராசிரியர் பீ. விஜேகோன் அவர்கள் சர்வதேச புள்ளிவிபரவியல் 2013 இனால் "வாரத்திற்கான சிறந்த புள்ளிவிபரவியலாளராக" பிரேரிக்கப்பட்டார்.

பீடமானது ஊவா மாகாண க.பொ.த(உ.த) உயிரியல் ஆசிரியர்களுக்கான மூன்று நாள் பயிற்சிப் பட்டறையொன்றையும் பௌதீகவியல் ஆசிரியர்களுக்காக மூன்று நாள் பயிற்சிப்பட்டறையொன்றையும் வெற்றிகரமாக நடாத்தியது. களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பீடமானது இரு நாள் வதிவிட புள்ளிவிபரவியல் முகாமை வெற்றிகரமாக நடாத்தியது. "விஞ்ஞானத்தின் இதயமாக தண்ணீர் 2013" என்ற தொனிப்பொருளிலான கண்காட்சியானது கூட்டாக எலியன்ஸ் பிரான்செய்ஸ் டி கண்டி மற்றும் சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவகம் (IWMI) என்பவற்றுடன் இணைந்து பீட வளாகத்தில் பத்து நாட்களாக நடாத்தியது. மேலும் பீடமானது அதன் அலுவலர்களுக்காக இலத்திரனியல் கற்றல் பயிற்சிப்பட்டறையையும் மாணவர்களுக்காக தொழில் வழிகாட்டி மற்றும் மென்திறன்கள் அபிவிருத்தி பயிற்சிப்பட்டறையையும் நடாத்தியது. பேராசிரியர் யுவான் டி.லீ என்ற இரசாயனவியலுக்கான பிரபல நோபல் பரிசுக்குரியவர்(1986) பீடத்திற்கு வருகைத்தந்ததோடு புள்ளிவிபரவியல் கல்வி மற்றும் பயிற்சி என்ற தலைப்பிலான விசேட விரிவுரையொன்றை நிகழ்த்தியதோடு மேலும் பல வெளிநாட்டு வருகையாளர்களும் பீடத்தில் பல்வேறுபட்ட தலைப்புகளில் பல்வேறு கருத்தரங்குகளை நடாத்தினர்.

பல்வேறு கல்விசார் அலுவலர்கள் தொடர்ச்சியாக தமது சேவைகளை அவர்கள் நாட்டின் தேசிய நிறுவனங்களில் கொண்டிருக்கும் பணிப்பாளர்கள், தலைவர், மற்றும் குழுத்தலைவர் போன்ற பதவிகள் மூலம் வழங்கிவருவதோடு மேலும் பலர் தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சித்திட்டங்களான கற்கையை கண்டி-பதுளை அதிவேக வீதியிலும், இலங்கை வடமத்திய மாகாணத்தில் தீராத சிறுநீரக நோய்கள் பிரச்சினை, வெலிகம இலைகள் வாடுதல் நோய்கள், இலங்கையில் பாய்ச்சல் சேமிப்பு நீர் மின்சார கருத்திட்டங்கள் தொடர்பான ஆரம்ப ஆய்வுகள், கனியவள சோதனை கருத்திட்டங்கள், மண்சரிவு ஆய்வு கருத்திட்டங்கள் மற்றும் அனர்த்த அச்சுறுத்தல் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்திட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

பீடமானது ஒருஅணுவளவு பகுப்பியந்திரம்,Biochchhrom asys VVM-340- Micro Plate Reader, Vacuum Furnace,ஒருமரபணு பகுப்பாக்கி, நில அளவைக்கான முழுநிலையம்,ஒரு நுண்கதிரலை செரிமானி மற்றும் நீர் Deionizer என்பவற்றை ரூபா 35 மில்லியன் கிரயத்தில் தே.ஆ.பே மானியம் மற்றும் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் என்பவற்றின் உதவியுடன் பெற முடிந்துள்ளது. பீடத்தின் கல்விசார் அலுவலர்கள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக ஆய்வுப்புத்தகங்களில் குறிப்பிடத்தக்களவு தமது ஆராய்ச்சிப்பத்திரங்களை பிரசுரித்துள்ளதோடு அவர்கள் தமது வேலைகளை சர்வதேச மகாநாடுகளிலும் சமர்ப்பித்துள்ளனர். கல்விசார் அலுவலர், தொழிநுட்ப ஊழியர், இளமானிப்பட்ட மற்றும் பட்டப்பின்படிப்பு மாணவர்களின் பரிமாற்றல் நிகழ்ச்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று பேராதனை பல்கலைக்கழகத்திற்கும் ஜப்பான் சிசுஓகா பல்கலைக்கழகத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்டது.

விஞ்ஞான கல்வி வள நிலையம் (SERC) 2013 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்திலிருந்து இதுவரையில் க.பொ.த (உயர்தர) விஞ்ஞான மாணவர்களுக்கான விஞ்ஞான செய்முறைப் பயிற்சிப் பட்டறைகள் ஒன்பது நடைபெற்றுள்ளன.

பூகோளவியல் துறையானது வெளிக்களப்பயிற்சிக்காகவும் ஆய்வுகூட வகுப்புகளுக்காகவும் குறைந்தளவு உபகரண வசதிகள் காணப்பட்டபோதும் தமது மாணவர் அனுமதியை 20% ஆல் உயர்த்த முடிந்துள்ளது.

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

ஐந்து சிரேஷ்ட அங்கத்தவர்கள் பல்கலைக்கழக சேவையிலிருந்து ஓய்வுபெற்றதோடு அவர்களில் நால்வர் பல்கலைக்கழகத்தில் நாற்பது வருடங்களுக்கு மேலாக சேவைபுரிந்துள்ளார். ஒரு சிரேஷ்ட விரிவுரையாளரொருவரும் பல்கலைக்கழகத்திலிருந்து பதவிவிலகி சென்றார். சிரேஷ்ட தொழிநுட்ப உத்தியோகத்தர் நால்வர் ஓய்வுபெற்றதோடு புதிய தொழிநுட்ப உத்தியோகத்தர் இருவர் நியமனம் பெற்றனர். பிரயோக விஞ்ஞானங்கள் நிகழ்ச்சியை முன்னேற்றுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட HETC Window 2 கருத்திட்ட பிரேரணையும் வெற்றியளிக்கவில்லை. பூகோளவியல் புதிய கட்டடத்திற்கான நிர்மான முதலாம் கட்டம் பூர்த்தியடைந்தபோதும் அதற்கான தளபாடங்களை பெறுவதிலுள்ள தாமதம் காரணமாக அக்கட்டத்தை பயன்படுத்த இயலாத நிலை காணப்படுகிறது. சில ஆய்வுகூடங்கள் மாத்திரமே இதுவரை இக்கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட நிர்மானம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட பிரேரணையானது

பல்கலைக்கழக ஆணைக்குழுவின் கருத்திட்ட மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்பு குழுவால் ஏற்கனவே பல்கலைக்கழகம் அனுமதி பெற்றிருந்த கருத்திட்டங்களை பூர்த்தி செய்யாத (அமுல்படுத்தியிராததால்) காரணத்தினால் நிராகரிக்கப்பட்டது. விலங்கு இல்ல விஸ்தீரணமானது விலங்கியல் துறைக்காக பூர்த்திசெய்யப்பட்டிருப்பினும் ஏனைய தரமுயர்த்தல், புனர்நிர்மான வேலைகள் பீடத்தில் மிகவும் மந்தகரமாகவே நடைபெறுகின்றன.

## எதிர்காலத் திட்டங்கள்

புள்ளிவிபரவியல் மற்றும் கணனி விஞ்ஞான துறைக்கான நான்கு மாடிக்கட்டடத்தொகுதிக்கான கருத்திட்ட பிரேரணை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு பீடமானது அதன் நிர்மானப்பணியை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளது. சுற்றாடல் விஞ்ஞான விசேட விஞ்ஞானமாணிப்பட்ட நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துவதற்கான பிரேரணையானது பல்கலைக்ககழக மூதவைக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பீடமானது பூகோளவியல் இளமானிப்பட்டத்திற்கான பாடத்திட்டத்தினை அதன் அக்கரை செலுத்துவோரின் ஆலோசனையுடன் மீளாய்வு செய்ய நோக்கமாகயிருக்கிறது.

# A8 மிருக வைத்திய மற்றும் விலங்கு விஞ்ஞான பீடம்

*(பீடாதிபதி, பேராசிரியர் எஸ்.பீ.எல். ஆரியரத்ன அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

## அறிமுகம்

மிருக வைத்தியமற்றும் விலங்கு விஞ்ஞான பீடமானது இலங்கை பல்கலைக்கழக முறைமையில் மிருக மருத்துவ மற்றும் விலங்கு விஞ்ஞான பட்டப்படிப்பினை வழங்கும் நோக்கத்தை கொண்ட ஒரே நிறுவனமாகும். வருடாந்த மாணவர் அனுமதியானது ஏறத்தாழ 100 ஆக இக்கற்கை நிகழ்ச்சிக்காக காணப்படுவதோடு இது நான்கு ஆண்டுகளை கொண்ட நிகழ்ச்சியாக காணப்படுகிறது. பீடத்தினது 37 கல்விசார் அலுவலர்கள் பல்வேறுபட்ட பாடங்களில் விசேடத்துவம் பெற்றிருப்பதோடு அவர்கள் பீடத்தின் ஐந்து துறைகளுக்கும் சேவைக்கமர்த்தப்பட்டுள்ளனர். தரமான கல்வி மற்றும் நிர்வாக முறையை ஏற்படுத்துவதற்காக பீடாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி பீட சபையால் நியமிக்கப்பட்ட 15 உபகுழுக்களுக்கு பொறுப்புக்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. பீடத்தின் கல்விச் சூழலானது மிருக வைத்தியபோதனா வைத்தியசாலை, நடமாடும் சிகிச்சை, மிருக வைத்திய போதனா பண்ணை, மிருக வைத்தியநூலகம், கணனி நிலையம், நீர்வாழ் விலங்கு நோய்கள் நிர்ணய மற்றும் ஆராய்ச்சி மற்றும் நவீன பால் நிலையம், மற்றும் மிருக நோய் நிர்ணய அலகு போன்ற பல சேவை அலகுகள் மூலமாகவும வளமாக்கப்பட்டுள்ளது. எட்டு பருவகாலங்களுக்கான கற்றல் நிகழ்ச்சியானது மொத்தமாக 23 பாடங்களை கொண்டுள்ளதோடு ஒன்று அல்லது இரண்டு பருவகாலங்களுக்கு மேலாக ஆராய்ச்சி கருத்திட்டங்களுடன் விலங்கு சுகாதாரத்தை அல்லது உற்பத்தியை கொண்டதாக கற்பிக்கப்படுகிறது. அதன்படி பீடமானது பல்வேறுவிதமான மதிப்பீட்டு முறைமைகளை கற்றல் நிகழ்ச்சியிலுள்ளான மதிப்பீடு, இறுதி பருவகால மற்றும் வருட இறுதி பரீட்சைகளின் போன்றவற்றின் மூலம் நடாத்துகின்றது.

## அடைவுகள்

மாணவர் அனுமதியை 100 ஆக அதிகரிப்பதற்கான நோக்கத்துடன் அடிப்படை விஞ்ஞானங்கள், உயிரசாயனவியல் கட்டடம், நோயுயிரியல் கட்டடம் மற்றும் பண்ணை விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதார கட்டடம் போன்றவற்றில் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுகூடங்களின் விஸ்தீரணம் அடங்கலாக பல்வேறு நிர்மாணம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் பீடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பழைய மிருக வைத்தியபோதனா வைத்தியசாலையின் தரைத்தளம் பீடாதிபதி காரியாலயமாக அனைத்து வசதிகளுடனும் கூடியவாறு மாற்றப்பட்டுள்ளதோடு அதே கட்டடத்தில் முதலாவது தளமும் சேவை அலகுகளாக மாற்றப்பட்டுள்ளன. நிர்மானப் பணிகள் முடிவுற்றதால் மிருக வைத்திய சிகிச்சை விஞ்ஞானங்கள் துறையானது புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டதோடு அதில் தாபிக்கப்பட்ட மிருக வைத்தியபோதனா வைத்தியசாலையின் நவீன வசதிகள் மூலமாக இருபத்தி நான்கு மணிநேரமும் விலங்கு சுகாதார பராமரிப்பிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. மிருக வைத்திய போதனா பண்ணையின் புனரமைப்பு வேலைகள் HETC –Window 2 கருத்திட்டத்தின் மூலம் நிதியினை பெற்றுள்ளதோடு அது மாணவர் விடுதியை நிர்மாணித்தல், வீட்டு கோழிப்பண்ணை அலகை மூடுதல், ஆட்டுப்பண்ணை அலகை மற்றும் அவைகளை வெட்டுமிடங்களை விஸ்தரித்தல் போன்றவற்றின் மூலம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. புதிய ஊழியப்படை அனுமதி எட்டு பேருக்காக கிடைக்கப்பெற்றமை மற்றும் தமது பட்டப்பின்படிப்புகளை பூர்த்திசெய்து சேவைக்கு திரும்பிய பல கல்விசார் அலுவலர்களின் காரணமாக பீடத்தின் கல்வி நிகழ்ச்சிகள் முன்னேற்றமடைந்துள்ளன.

### பின்வருவன கல்விசார் அலுவலர்களால் பெறப்பட்ட விசேட அடைவுகளாகும்

- மிருக வைத்திய மற்றும் விலங்கு சுகாதார பீடமானது இலங்கை வனவாழ்க்கை சுகாதார நிறுவனத்தின்(SLWHC) பங்காளராக கூட்டு ஆராய்ச்சி மானியத்தை நான்கு ஆண்டுகளுக்காக சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம்(IDRC) கனடாவிடமிருந்து "இலங்கையில் வனவாழ்க்கை மற்றும் ஆளணி சுகாதாரத்திற்கு ஆராய்ச்சி சிறப்பை கட்டியெழுப்புதல்" என்ற தொனிப்பொருளுக்காக பெறுவதில் வெற்றிகண்டுள்ளது.

- பீடமானது ஆராய்ச்சியை வர்த்தகமயப்படுத்தலுக்கான இருபத்தோராம் நூற்றாண்டிற்காக உயர்கல்வி(HETC-QIG) Window 2 திட்டத்திடமிருந்து போட்டி மானியத்தை பெற்றுக்கொண்டதில் வெற்றிபெற்றது.

- பீடமானது இளமானி பட்டங்களுக்கான பாடத்திட்டத்தை விருத்திசெய்தல் என்ற காரணத்திற்கான போட்டி மானியத்தை இருபத்தோராம் நூற்றாண்டிற்காக உயர்கல்வி (HETC-QIG) Window 4 திட்டம் மூலம் பெற்றது.

- லண்டன் பல்கலைக்கழகத்தின் றோயல் மிருக வைத்திய கல்லூரியினால் நடைமுறையிலிருக்கும் பட்டப்பின்படிப்பு சான்றிதழ் மிருக வைத்திய கல்விக்காக இரு புலமைப்பரிசில்கள் பீடத்திற்கு வழங்கப்பட்டன.

- 3 வருட கலாநிதிப்பட்ட நிகழ்ச்சிக்காக டாக்டர் கே.எஸ்.ஏ. கொட்டவத்த என்பவருக்கு ஹொங்கொங் பல்கலைக்கழகத்தினால் புலமைப்பரிசில் ஒன்று வழங்கப்பட்டது.

- பேராசிரியர் எச்.பீ.எல். ஆரியரத்ன, பேராசிரியர் ஆர்.பீ.வீ.ஜே. ராஜபக்ச, கலாநிதி பன்துக குணவர்தன மற்றும் கலாநிதி அநுர ஜயசூரிய என்வர்களுக்கு 2007 முதல் 2009 வரையான காலப்பகுதிக்காக ஆராய்ச்சி பங்களிப்புகளுக்காக ஜனாதிபதி ஆராய்ச்சி விருது வழங்கப்பட்டது.

- பீடத்தின் வரலாற்றில் முதல் தடவையாக வெள்ளை அங்கி விழாவானது சிகிச்சை பயிற்சியை ஆரம்பித்தலுக்கான அடையாளமாக மூன்றாம் வருட இறுதியில் இளமானிப்பட்ட மாணவர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்டது. இது எதிர்காலத்தில் வருடாந்த நிகழ்வாக நடைபெறும்.

- மறைந்த வைத்திய கலாநிதி எஸ். மகாலிங்கம் என்பவரின் பெயரில் புதிய தங்கப்பதக்கமொன்று நான்காம் பருவகாலத்தில் உயர் புள்ளிகளை மிருக மருத்துவ அணு உயிரியல் பரீட்சையில் பெறும் மாணவருக்கு வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு எதிர்காலத்தில் இவ்விருது வழங்கப்படும்.

- திரு. ஐ.பீ.ஜீ.எச்.யு. திஸாநாயக்க என்பவர் ஆக்கவுரிமை விருதை அவர் கண்டுபிடித்த "a method of preparing a novel injection solution for correosion casting of gross anatomical specimens using rigiform" என்பதற்காக பெற்றார்-வர்த்தமாணி அறிவித்தல் 2012 செப்டெம்பர் 14.

### தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் இன்மையால் கல்விசார் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் பல துறைகளுக்கு சாதகமாக காணப்படவில்லை. மேலும் ஒரு இடத்தை நோயுற்ற வனவிலங்குகளுக்காக அவற்றுக்கான சேவையை மிருக வைத்திய போதனா வைத்தியசாலை சேவையின் மூலம் வழங்குவதற்காக ஒதுக்குவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்காக நுழைவு பாதை வசதிகள் குறித்து இன்னும் பல்கலைக்கழக நிர்வாகம் இறுதித்தீர்மானம் எடுக்கவில்லை.

## எதிர்காலத் திட்டங்கள்

### உட்கட்டமைப்பு வசதிகள்

- பெருந்திட்டத்தில் பிரேரணை செய்யப்பட்டுள்ளபடி மூன்று மாடி கட்டடத்தை நிர்மானிக்க திட்டமிடப்பட்டுள்ளதோடு தற்போது மிருக மருத்துவ போதனா வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள நோயியல் துறையையும் அதில் உள்வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### கல்வி நிகழ்ச்சிகள்

- பாடத்திட்ட மீளாய்வானது நடைபெற்று வருவதோடு விரிவான பாடத்திட்டங்களை பீடத்திற்காக தொகுத்து புத்தகமாக வெளியிட தீர்மானமெடுக்கப்பட்டது.

- மிருக வைத்தியவிஞ்ஞான முதுமாணி நிகழ்ச்சியின் பாடத்திட்ட மீளாய்வானது நடைபெற்று முடிந்துள்ளதோடு மனித வளங்கள் மற்றும் நிதிகள் கிடைக்கும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் மிருக வைத்தியவிஞ்ஞான முதுமாணி பாடநெறிக்கான 3ம் மாணவர் அணியை பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# A9 பட்டப்பின்படிப்பு நிறுவகங்கள்

## A9.1 உயர்ப்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம்(PGIA)

*(பணிப்பாளர் பேராசிரியர் பீ.சி.என். பீரிஸ் அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

உயர்பட்டங்களுக்கான விவசாய நிறுவனகமானது (PGIA) 1979 ஆண்டு 9ம் இலக்க கட்டளைச்சட்டத்திற்கு அமைவாக 1975 இல் தாபிக்கப்பட்டு இலங்கையில் முதன்மையான பட்டப்பின்படிப்புகல்வியை வழங்குவதோடு இது பேராதனைப் பல்கலைக்கழகத்துடனும் இணைந்ததாகவும் காணப்படுகின்றது. இந்நிறுவகத்தின் ஆளுகையானது முகாமைத்துவ சபை மூலமாக நடைபெறுவதோடு அதில் பல்வேறு விவசாய ஒழுங்கங்களை சேர்ந்த கல்விசார் அலுவலர்கள் மற்றும் விவசாய கால்நடை, சுற்றாடல் மற்றும் வனவள, பெருந்தோட்ட , உயர்கல்வி, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம் போன்ற அமைச்சுக்களை சேர்ந்த பிரபல்யமான நபர்களையும் உள்ளடக்கிய பிரதிநிதித்துவம் காணப்படுகிறது. இந்நிறுவகத்தை தாபிப்பதற்கான பிரதான நோக்கம் உள்நாட்டு பட்டப்பின்படிப்பு கல்வி இயலளவை அபிவிருத்தி செய்தலும் போதுமான பயிற்சிகளை விஞ்ஞான ரீதியாக ஆளணிகளுக்கு துரிதமாக விரிவடைந்துவரும் விவசாய துறைக்காக வழங்குவதுமாகும். எதிர்பார்த்தபடி தேசிய தேவைகளானவை கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக அடையப்பட்டுள்ளதோடு சூழல் மாசடைவு உணவு பாதுகாப்பு மற்றும் உயிரியல் பல்லினத்தன்மை போன்ற காரணங்களால் ஏற்பட்ட புதிய சவால்களுக்கும் முகங்கொடுக்கக்கூடிய தந்திரோபாயங்களை தீட்டி வருகின்றது.

கற்பித்தலானது இந்நிறுவகத்தில் சிறப்பு தகுதிபெற்ற கல்விசார் அலுவலர்களை பேராதனைப் பல்கலைக்கழக விவசாயபீடம் மூலம் பெறப்படுவதோடு சில கல்விசார் அலுவலர்களை பல்கலைக்கழக முறைமையிலிருந்தும் ஏனையவர்கள் அரச நிறுவனங்களிலிருந்தும் தனியார் துறையிலிருந்தும் வருகை அடிப்படையில் பெறப்படுவதோடு சிறந்த மற்றும் அனுபவம் வாய்ந்த கல்விசாரா ஊழியப்படையானது ஆய்வு கூடம், தகவல் தொழிநுட்பம், நூலகம் மற்றும் விரிவுரை மண்டப வசதிகளையளிப்பதற்காக பீடத்திலும் நிறுவகத்திலும் உள்ளனர். 11 கற்கைச் சபைகள் மூலமாக விவசாயத்துறையின் விரிவான ஒழுக்கங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன 300 இற்கும் மேலான வருகை விரிவுரையாளர்கள் கற்பித்தலில்ஈடுபட்டுள்ளனர். நிறுவகமானது மொத்தமாக 31 பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளை 2 பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, 26 முதுமானிப்பட்ட நிகழ்ச்சிகளையும் வியாபார நிர்வாகம்,தத்துவவியல் முதுமாணி, வியாபார நிர்வாக கலாநிதிப்பட்டம் அடங்கலாகவும் வழங்குகின்றது. வருடாந்த மாணவர் அனுமதியாக 450-500 வரை காணப்படுவதோடு வருடாந்த மாணவர் சனத்தொகையாக சுமார் 2000 மாணவர்கள் காணப்படுகின்றனர். பேராதனைப் பல்கலைக்கழக குறிக்கோள் வாசகமாக காணப்படும் “வழக்கத்தை விட அதிகமாக திறந்திருத்தல்” என்பதற்கமைய பல்கலைக்கழக முறைமையுள் காணப்படும் எல்லா பீடங்களினதும் பட்டதாரிகள் இச்சனத்தொகையில் அடங்குகின்றனர். மதிப்பீட்டாண்டினுள் 431 புதிய மாணவர்கள் 11 கற்கை சபைகளில் பதிவு செய்துள்ளதோடு விபரம் வருமாறு

- 330 - 28 வேறுபட்ட விஞ்ஞான முதுமானிப்பட்ட நிகழ்ச்சிகள் 10 கற்கை சபைகளினால் வழங்கப்படுகிறன.
- 48 - வியாபார நிர்வாகமுதுமானிப்பட்டமானது வியாபார நிர்வாக கற்கை சபையினால் வழங்கப்படுகிறது.
- 35மற்றும் 18 - தத்துவவியல் முதுமானிப்பட்டம், கலாநிதிப்பட்டம் என்பன முறையே அடங்கும்.

2013ம் ஆண்டினுள் 283 மாணவர்கள் தமது பட்டப்படிப்பினை பூர்த்திசெய்துள்ளதோடு ஆண், பெண் அடிப்படையில் விபரங்கள் வருமாறு:

- M.SC-59/118, MBA-31/07, M.Phil-7/14, PhD-3/2 ((ஆண், பெண்)

உயர்ப்பட்டங்களுக்கான விவசாய நிறுவனகமானது தனது கல்வி மற்றும் ஆராய்ச்சி அடிப்படைகளை நாட்டின் தேசிய தேவைகளை நோக்கியதானதாக ஊக்கமுடன் வலுப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. இதனை அடைவதற்காக மதிப்பீட்டாண்டில் முழு பாடத்திட்டமும் அனைத்து கற்கைச்சபைகளுக்காகவும் மீளாய்வுக்குட்படுத்தி ஆலோசனை செய்முறைகளுக்கும் உட்படுத்தி சம்பந்தப்பட்ட நபர்களினதும் ஒத்துழைப்புடன் புதிய தகவல் அறிக்கை மற்றும் புதிய மாணவர் கையேடானது பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு அது நிறுவகத்தின் 2013/2014 கல்வியாண்டில் புதிய மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும். இதன் பெறுபேராக புதிய இரு பட்டப்படிப்பு நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதோடு மேலும் பல கற்கை அலகுகள் அறிமுகப்படுத்தப்பட்டும் திருத்தப்பட்ட கற்கை அலகுகள் சேர்க்கப்பட்டும் அவை நடைமுறையிலிருக்கும் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளை மெருகூட்டுவதாகவும் தொழில்வாய்ப்பை தொழிலற்ற பட்டதாரிகளுக்கு ஏற்படுத்துவதாகவும் பட்டதாரி ஊழியப்படையின் தரத்தை முன்னேற்றுவதாகவும் அமையும்.

மதிப்பீட்டாண்டானது விசேட ஆண்டாக வருடாந்த பேரவையில் நிறுவகத்தின் வெள்ளிவிழாவை கொண்டாடும் ஆண்டாக அமைந்ததோடு வருடாந்த நாளேட்டு அட்டவணையில் கவனத்தை கவரும் நிகழ்வாக தேசிய மற்றும் சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் நிறுவகத்தின் கல்விசார் அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் இதில் பங்குபற்றுவதோடு தமது ஆராய்ச்சிகள் மூலமாக பெற்றுக்கொண்ட அறிவை பகிரும் ஒரு மேடையாக இந்நிகழ்வு அமையும். இந்நிகழ்வானது வெகுவிமர்சியாக 2013 நவம்பர் மாதம் 20-22 வரை கண்டியில் திருமதி. பெத் எஸ். குரோபோட்என்ற இலங்கைக்கும் மாலைத்தீவுக்குமான FAO பிரதிநிதி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 55 நிகழ்த்துகைகள் காணப்பட்டதோடு அதில் 10 சுவரொட்டிகள் நிறுவக மற்றும் அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா நாடுகளை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மூலமாகவும் நிர்மானிக்கப்பட்டன. 12 தொனிப்பொருள்களில் 12 சிறந்த நிகழ்த்துநர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் அனைத்து முன்னால் நிறுவக பணிப்பாளர்கள் மற்றும் இணைப்பாளர்களுக்காக கௌரவமளிப்பு விழாவொன்றும் இவ்விழாவில் அவர்கள் நிறுவகத்திற்கும் வருடாந்த ஆராய்ச்சி பேரவைக்கும் செய்த பெருமதிமிக்க பங்களிப்புகளை கௌரவிக்கும் நோக்கில் இந்நிகழ்வில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## அடைவுகள்

1981 ம் ஆண்டு நிர்மானிக்கப்பட்ட பிரதான மண்டபத்திற்கு புதிய முகப்பு கொடுக்கப்பட்டது. 13 ஆக காணப்பட்ட வகுப்பறைகள் 17 ஆக அனைத்து நவீன வசதி வழங்களுடனும் அதிகரிக்கப்பட்டன. முகாமைத்துவ தகவல் முறைமை அறிமுகமானது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவர்கள் கற்பித்தல் கற்றலை இணைய சூழல் மூலம் பெற வசதியளிப்பதோடு முகாமைத்துவமும் காலத்திற்கேற்ப தீர்மானமெடுக்கவும் ஊழியப்படையின் வினைத்திறனை மற்றும் செயற்திறனை வலுப்படுத்தவும் உதவியது. மூலதன மானியமானது நிறுவகத்தின் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்காக சிறப்பாக பயன்படுத்தப்பட்டது. கற்கை நிகழ்ச்சி கட்டண அறவீடுகளானவை 80% வரை அடையப்பட்டுள்ளதோடு இது வரலாற்று ரீதியாக ஒப்பிடும்போது பாரிய முன்னேற்றமாக தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் தந்திரோபாயங்களின் உபயோகத்தால் ஏற்பட்டதாகும். நிலையான சொத்துக்கள் பதிவேடானது முடிவடையும் கட்டத்திலுள்ளதோடு தசாப்தத்திற்கு மேலாக காணப்படும் கணக்காய்வு விசாரணைகளை குறைத்துக்கொள்வதற்கான பல ஏற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன. 4 பதவி வெற்றிடங்களாக காணப்பட்டவை ஒரு இலிகிதர் (தரம் III ) மற்றும் 3 தொழிலாளர்கள் மூலமாக நிரப்பப்பட்டுள்ளன. மேலும் கற்கை சபைகளுக்கான கற்பித்தல் நடவடிக்கைகள் ஆட்சேர்க்கப்பட்ட முழுநேர போதனாசிரியர் ஒருவராலும் சிரேஷ்ட பேராசிரியர் ஒருவராலும் வசதியளிக்கப்படுகின்றன. புதிய ஓட்டுநர் ஒருவரின் பதவிக்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

மதிப்பீட்டான்றில் குறிப்பிடத்தக்களவு தோல்விகள் ஏற்படவில்லை. எனினும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு அனுமதியில் முன்னேற்றதை ஏற்படுத்தவோ மாணவர் இடைவிலகல் வீதத்தை குறைக்கவோ முடியாதிருந்தது. மேலும் புலமைப்பரிசில்களை அறிமுகப்படுத்தியிருப்பினும் கூட எதிர்பார்த்த எண்ணிக்கையில் வெளிநாட்டு மாணவர்கள் அனுமதியில் அதிகரிப்பு ஏற்படவில்லை. தோல்விகளானவை நாட்டின் மத்திய பிரதேசத்திலிருந்து தொலைவில் நிறுவகம் காணப்படுவதும் வெளிநாட்டு மாணவர்களுக்கான குறைந்தளவான வதிவிட வசதிகள் என்பன அமைந்தன. இரண்டு பதவி வெற்றிடங்களானவை தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் குறைவானதாலும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் சூழ்நிலை காரணமாகவும் நிரப்ப முடியாதிருந்தது.

## எதிர்காலத் திட்டங்கள்

ஏற்கனவே புகுத்தப்பட்டபடி தரமானது நிறுவனத்தின் எதிர்காலத்திலும் முக்கியமாக பிரதான மையப்பொருளாக கவனத்தில் கொள்ளப்படும். இந்த மைல்கல்லை அடைவதற்காக இலங்கை தர உத்தரவாத கட்டமைப்பு நியமங்களுக்கு அமைவாக அனைத்து கல்வி நிகழ்ச்சிகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக பூர்வாங்க வேலைகள் 2014 முதல் ஆரம்பிக்கப்படும். உயர் பட்டங்களுக்கான விவசாய நிறுவகம் மற்றும் யேசுவா தொழிநுட்ப நிறுவகம் என்பவற்றுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் கரைகடந்த ரீதியில் உயிரியல் புள்ளிவிபரவியலில் முதுமானி பட்டத்தை வழங்குவதற்கான குறிப்பிட்ட கற்கை 2014 மார்ச் மாதமளவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் கானா நாட்டிலிருந்தும் அண்மித்த நாடுகளிலிருந்தும் 30 மாணவர்களை ஆரம்பத்தில் சேர்க்கவும் நிறுவக கல்வி அலுவலர்கள் கானா நாட்டிற்கு கற்பித்தலுக்காக குறிப்பிட்ட காலம் விஜயம் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. நிறுவகமானது கற்கை நெறிக் கட்டணத்தை அனைத்து நிகழ்ச்சிகளுக்காகவும் சந்தைக் கட்டணத்திற்கு அமைவாக அதிகரிப்பதற்காகவும் எதிர்பார்த்துள்ளது. மிகவும் முக்கியமாக ஒரு மத்திய ஆய்வுகூடத்தை விசேடமாக உணவு தொடர்பான ஆராய்ச்சிகளுக்காக ஆரம்பிக்கவும் அதில் முதலாவதை கொழும்பில் அமைக்கவும் அதன் சாதகத்தன்மை அடிப்படையில் மற்றையதை கிளிநொச்சியில் தாபிக்கவும் பொது முயற்சியாண்மைக்கான பாராளுமன்ற ஆணைக்குழுவின் (COPE) பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் வெளிநாட்டு மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக அவர்களுக்கு விடுதிவசதிகளை வழங்குவதற்காக பேராதனைப் பல்கலைக்கழகத்திடமிருந்து கட்டடமொன்றை பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எல்லா முயற்சிகளும் 2014-2017 ஆண்டுக்கான நிறுவன கூட்டுருத்திட்டத்தின் பிரதான நோக்கங்களை அடைவதை அடிப்படையாகக் கொண்டுள்ளன. (உதாரணம்- எதிர்காலத்தில் நிதி ஸ்திரத்தன்மை)

### வளங்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்களின் விபரங்கள்

| கற்கை நெறி | மொத்த மாணவர்கள் | அலுவலர்கள் | | மாணவர்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கல்விசார் | கல்விசாரா | அனுமதி 2013 | | அனுமதி 2012 | | 2013 இல் பட்டம் பெற்றவர்கள் | |
| | | | | உ | வெ | உ | வெ | உ | வெ |
| பட்டப்பின்படிப்பு டிப்ளோமா | 431 | 2 | 40 | - | - | 10 | - | 16 | - |
| விஞ்ஞான முதுமானி | | | | 326 | 01 | 03 | - | 177 | - |
| வியாபார நிர்வாக முதுமானி | | | | 47 | - | 03 | - | 38 | - |
| தத்துவவியல் முதுமானி | | | | 28 | - | 03 | - | 21 | - |
| கலாநிதிப்பட்டம் | | | | 18 | - | 14 | - | 05 | - |
| தற்காலிக | | | | - | - | 02 | - | - | - |
| **மொத்தம்** | | | | 419 | 01 | 35 | - | 261 | - |

உ-உள்நாட்டு மாணவர்கள் வெ-வெளிநாட்டு மாணவர்கள்

### நிகழ்ச்சிகளின் விபரங்கள்- 2013

| விடயம் | பங்குபற்றியவை | பூர்த்திசெய்யப்பட்டவை | சமர்ப்பித்தவை |
|---|---|---|---|
| அ) பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சிகள் | - | - | 30 |
| ஆ) ஆராய்ச்சி சுருக்கங்கள் | - | - | 55 |
| இ) நிகழ்த்துகைகள் | - | 26 | 26 |
| ஈ) பயிற்சி நிகழ்ச்சிகள் | 20 | - | - |
| உ) பயிற்சிப்பட்டறைகள் | 05 | - | - |
| ஊ) கருத்தரங்குகள் | - | - | 26 |
| மொத்தம் | **25** | **26** | **137** |

**நடாத்தப்பட்ட கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், பயிற்சிகள், விளிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் குறுங்கற்கை நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் விபரங்கள்-2013**

| இல | நிகழ்வு /தலைப்பு | நிறுவனம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை | நடைபெற்ற திகதி |
|---|---|---|---|---|
| 1. | பரிசோதனை வடிவமைப்பு மற்றும் பகுப்பாய்வு | உயர்ப்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம் - உயிரியல் புள்ளிவிபரவியல் கற்கை சபை | 8 | 01-05/04/2013 |
| 2. | தண்ணீர் தொழில் தினம் | உயர்ப்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம்- விவசாய பொறியியல் கற்கை சபை | 150 | 01/10/2013 |
| 3. | குழுவேலை மற்றும் தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சி | உயர்ப்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம்- விவசாய விரிவாக்கல் கற்கை சபை | 45 | 22-24/11/2013 |
| 4. | மாதிரியெடுத்தல் தொழிநுட்பம், ஆய்வு வடிவமைப்பு மற்றும் பகுப்பாய்வு | உயிரியல் புள்ளிவிபரவியல் கற்கை சபை | 130 | 04-06/09/2013 |
| 5. | விதை செயன்முறை மற்றும் சந்தைப்படுத்தல் | உயர்ப்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம்- விவசாய பொறியியல் கற்கை சபை | 11 | 05-10/05/2013 |

**நிறுவனத்தில் 2013 இல் நடாத்தப்பட்ட சர்வதேச மகாநாடுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளின் விபரங்கள்**

| இல | நிகழ்வு /தலைப்பு | ஒழுங்கமைப்பு (பீடம் /கல்வித்துறை /நிலையம் /அலகு | பங்குபற்றியோர் எண்ணிக்கை | நடைபெற்ற திகதி |
|---|---|---|---|---|
| 01. | விதை செயன்முறையும் சந்தைப்படுத்தலும் | உயர்பட்டங்களுக்காக விவசாய நிறுவகம்-விவசாய பொறியியல் கற்கை சபை | 11 | 05-10/05/2013 |

## A9.2 உயர்ப்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகம் (PGIS)

(பணிப்பாளர், பேராசிரியர் எச்.எம்.டி.நாமல் பிரியந்த அவர்களால் அறிக்கையிடப்பட்டது)

### அறிமுகம்

உயர்ப்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகமானது பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த இலங்கையின் தேசிய நிறுவகமாகும். இது 1996 இல் உயர்க்கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பாராளுமன்ற கட்டளைச்சட்டத்திற்கு அமைவாக விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்தவும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை இலங்கையில் விஞ்ஞான ரீதியான ஒழுக்கங்களில் ஏற்படுத்துவதற்காகவும் தாபிக்கப்பட்டது. உயர்ப்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகத்தின் அடிப்படை நோக்கமாக உயர்ப்பட்டங்களுக்கான வழிகாட்டல்களை வழங்குதல், பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிகளை பல்வேறு விசேடத்துவங்களில் நடாத்துதல், பட்டதாரிகளின் கல்வி அனுபவங்களை அதிகரித்தல் என்பன காணப்படுகின்றன.

உயர்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகமானது விஞ்ஞான முதுமானிப்பட்டம், தத்துவவியல் முதுமானிப்பட்டம், மற்றும் கலாநிதிப்பட்டங்களையும் அத்துடன் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பட்டம், சான்றிதழ் கற்கை நெறிகள், என்பவற்றையும் உள்ளக பயிற்சி நிகழ்ச்சிகளையும், குறுங்கால கற்கைகளையும், பயிற்சிப்பட்டறைகளையும் நடாத்துகின்றது. இந்நிகழ்ச்சிகளானவை உயர்ப்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகத்தின் 10 கற்கைச் சபைகளின் மூலமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தின் நெருங்கிய இணைதலுடனும் நடாத்தப்படுகின்றன. ஆசிரிய குழாமின் அங்கத்தவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் எட்டு பீடங்களிலிருந்தும் பெறப்படுவதோடு வேறு பல்கலைக்கழகங்களிலிருந்தும், நிறுவகங்களிலிருந்தும் பெறப்படுகின்றனர். இந்நிறுவகமானது உள்நாட்டு தொழில்துறைக்கும் பொது, தனியார் நிறுவனங்களுக்கும் ஆலோசனை சேவைகளை வழங்குகின்றது. இருநாடுகளுக்கிடையேயான மற்றும் கூட்டிணைவு ஆராய்ச்சி நிகழ்ச்சிகள் அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், பிரான்ஸ், சுவீடன், ஜப்பான், இத்தாலி, தாய்லாந்து, தென் கொரியா, புருணை தருசலாம் மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள சர்வதேச நிறுவனங்களின் மூலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் சர்வதேச ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் இந்தியா பர்மா போன்ற நாடுகளும் உள்ளடங்கலாக பல்வேறு நாடுகளின் கூட்டிணைவுடன் நடாத்தப்பட்டன.

### அடைவுகள்

நான்கு விஞ்ஞான முதுமானிப்பட்டங்களானவை 1471 மாணவர்கள் மற்றும் இரண்டு பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சிகள் 37 மாணவர்களுடனும் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் 30 புதிய தத்துவவியல் முதுமானிப்பட்ட மாணவர்கள் 2013ம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். 2013ம் ஆண்டு 4 கலாநிதிப்பட்ட, 15 தத்துவவியல் முதுமானிப்பட்ட, 62 விஞ்ஞான முதுமானிப்பட்ட, மற்றும் 89 பட்டப்பின்படிப்பு மாணவர்கள் தங்களது பட்டங்களை பூர்த்தி செய்துள்ளனர். திரு. ஐ.பீ.எல். ஜயரத்ன (பேராசிரியர் ஆர்.வீரசிங்க மற்றும் கலாநிதி டப்லியு.எம்.ஏ.பீ. பண்டார) திரு. டீ.எச்.பீ. பெரமுனுகம (பேராசிரியர் வீ. கருணாரத்ன மற்றும் கலாநிதி பீ. என் ஏ. விஜேசுந்தர), திருமதி. டப்லியு. எச்.எம்.டி. ஹேரத் (பேராசிரியர் ஆர். சந்ரஜித், பேராசிரியர் என்.கே.பீ. அதிகாரம் மற்றும் கலாநிதி சீ.எல். அபேசேகர), திருமதி. டப்லியு. பீ.சீ.எம். அலஹகோன் (பேராசிரியர் பீ.எஸ்.பீ. கருனாரத்ன ,பேராசிரியர் மாக் ஸ்மித் மற்றும் கலாநிதி ஆர்.எஸ். டொமேடோ) என்போர் தமது கலாநிதி பட்டங்களை முறையே இரசாயன விஞ்ஞான கற்கை சபை, இயந்திர விஞ்ஞானங்கள் மற்றும் பௌதீகவியல் கற்கை சபைகளின் மூலம் பெற்றுக்கொண்டனர். மேற்பார்வையாளர்களின் பெயர்கள் அடைப்புக்குறிகளில் காட்டப்பட்டுள்ளன. திரு. ஏ.எம்.டி.கே. பண்டார (பேராசிரியர் ஜே.ஜீ.எஸ். ரனசிங்க மற்றும் கலாநிதி ஆர். ஜீ. எஸ். சீ. ராஜபக்ச) திருமதி. கே.எச்.கே.டி நிரோஷினி (பேராசிரியர் ஆர். பீ. வீ. ஜே. ராஜபக்ச மற்றும் பேராசிரியர் ஜே.ஜீ.எஸ். ரனசிங்க) திருமதி. ஆர்.

செந்தூரன், (பேராசிரியர் எச்.எம்.டி. நாமல் பிரியந்த) திரு. ஐ.எம்.சீ.டி. பண்டார (பேராசிரியர். ஆர்.எம்.ஜீ.எஸ்.சி. ராஜபக்ச) திருமதி. எம். மகேஹேல்வல (பேராசிரியர் ஆர். வீரசூரிய மற்றும் கலாநிதி எம்.எஸ்.டப்லியு.பீ. சில்வா மற்றும் கலாநிதி ஈ.எம்.ஆர்.கே.டி. எதிரிசிங்ஹ) திரு. டப்லியு.ஐ.எம்.சி.எம். விஜேசிங்ஹ (கலாநிதி ஜகத் குணதிலக மற்றும் கலாநிதி பீ.எச்.டி. குசுமாவதி) திரு. எஸ்.எஸ்.ஆர்.எம்.டி.ஆர். விஜேசேகர (பேராசிரியர் பீ.எப்.ஏ. பஸ்நாயக்க மற்றும கலாநிதி எம். விதானகே) திருமதி. ஜே. சிறிரங்கனேசன் (பேராசிரியர் எச்.எம். நாஸிர்) திரு. எம்.எட.எ.எம். பாஹம் (பேராசிரியர் எச்.எம்.நாஸிர்) திருமதி. யு.வி.எ. புத்திக (பேராசிரியர் ஜீ. செனவிரத்ன மற்றும் கலாநிதி சி.டிஎல். அபேசேகர) திருமதி. எல்.என்..எஸ் பெரேரா (கலநிதி டப்லியு.எ.எம். டவுந்தரசேகர மற்றும் கலாநிதி டி.எஸ்.எ. விஜேசுந்தர) திரு. ஈ.ஆர்.எல். பீ. எடம்பாவல (பேராசிரியர் சி.வீ.எஸ். குணதிலக்க பேராசிரியர் ஐ.ஏ.யு.என் குணதிலக்க மற்றும் கலாநிதி கே.யு.தென்னகோன்) திருமதி. கே.எம்.டி.குணதிலக்க (பேராசிரியர் எஸ்.எ.குலசூரிய, கலாநிதி ஆர்.ரத்னாயக்க மற்றும் கலாநிதி டி.எம். கருனாரத்ன) திரு. ஆர்.எம்.என்.பீ. ரத்னாயக்க (பேராசிரியர் எஸ்ஆர். கொடிதுவக்கு மற்றும் கலாநிதி பிரசாத் எம் ஜயவீர) என்போர் தமது தத்துவவியல் முதுமானிப்பட்டங்களை முறையே உயிரசாயனவியல் மற்றும் கருஉயிரியல், இரசாயன விஞ்ஞானங்கள், பூமி விஞ்ஞானங்கள், சுற்றாடல் விஞ்ஞானங்கள், கணிதவியல், இயந்திர விஞ்ஞானங்கள், மற்றும் புள்ளிவிபரவியலும் கணனி விஞ்ஞானங்களும் என்ற கற்கைச் சபைகள் மூலமாக பெற்றுக்கொண்டனர். மேற்பார்வையாளர்களுடைய பெயர்கள் அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மொத்தமாக 31 செயற்பாடுகள் தேசிய முக்கியத்துவத்திற்காக (பயிற்சிப்பட்டறைகள், குறுங்கற்கைகள், பொதுமன்ற கூட்டம், ஆய்வரங்குகள், பயிற்சி நிகழ்ச்சிகள் என்பன 2013ம் ஆண்டில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளன. இச்செயற்பாடுகளில் பல்வேறுபட்ட பின்னணிகளை கொண்ட பங்குபற்றுனர்கள் 1307 பேர் நன்மையடைந்தனர். இச்செயற்பாடுகள் 16 குறுங்கற்கைகளையும், 09 பயிற்சிப் பட்டறைகளையும் ஒரு பயிற்சி நிகழ்ச்சியையும், ஒரு சர்வதேச ஆய்வரங்கையும், 02 பொதுமன்ற கூட்டங்களையும் ஒரு மகாநாட்டையும் உள்ளடக்கும். ADPC யுடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு அனர்த்த முகாமைத்துவத்திற்காக மாணவர்களுக்கும் அலுவலர்களுக்கும் பல பயற்சிப்பட்டறைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. 30 ஆசனங்ளுடைய பஸ் வண்டியொன்று பட்டப்பின்படிப்பு மாணவர்களின் களப்பயிற்சிக்காகவும் கல்வி சுற்றுலாக்களையும் வலுவடையச் செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டது. விஞ்ஞான பீடத்துடன் இணைந்து இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர்க்கல்வி(HETC) மானிய QIG Window 3 (பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி) இற்கு சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட பிரேரணை வெற்றியளித்தது. ரூ. 30 மில்லியன் பெறுமதியான மானியம் வழங்கப்பட்டதோடு அதில் 09 கலாநிதிப்பட்ட மாணவர்களும் பின்வரும் ஆராய்ச்சி கருத்திட்டங்களில் வேலை செய்கின்றனர்.

1. சூரிய களங்களை சூரிய சக்தி மாற்ற அபிவிருத்தி செய்தல்
2. இலங்கையின் உஷ்ண நீருற்று பிரதேசங்களில் பூகோள அனல் மின்சார சக்தி அபிவிருத்தி குறித்தான சாதகத்தன்மை மதிப்பீடு
3. Deve
4. lopment of Nanoclay-polymer materials as low-cost oxygen reduction electrodes for fuel cell applications.
5. Development of modified photocromic compounds with improved properties for use in molecular electronics.
6. Asseement of antimicrobial agents in plant-mineral formulations.
7. Improving the bioavailability of natural bioactive components for drug and cosmetic based applications.
8. Assessment of environmental impacts of the Mahaweli Diversion Scheme in selected downstream locations(two students)
9. Role of small mammals as reservoir hosts of rickettsioses and leptospirosis in Sri Lanka.

சொத்துக்களின் மீள் மதிப்பீடு மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடானது உயர்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகத்தில் நீண்டகாலமாக உணரப்பட்ட தேவையாகும். இதற்காக அரச மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலமாக சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளதோடு பாவனையாளர் நற்புடைய கணனி மென்பொருள் முறைமையொன்றும் நிலையான சொத்து பதிவேட்டை பராமரிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டது. இது சுயமாகவும் கேள்விகளுக்காக விரைவான பிரதிபலிப்புக்காக சொத்துக்களை பரிசீலனை செய்தல், அவை காணப்படும் இடம், சொத்துக்களின் தேய்மான பெறுமதி போன்ற சட்ட தேவைகளையும் பூர்த்திசெய்கிறது.

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

பட்டப்பின்படிப்பு பட்டதாரிகளின் குறிப்பாக விஞ்ஞான முதுமானிபட்ட மாணவர்களின் பட்டமளிப்பானது குறைந்தளவாக காணப்படுவதற்கு பிரதானமாக அவர்கள் தமது ஆராய்ச்சி கருத்திட்டங்களை அவை எழுத்து வடிவம் பெறும் கட்டத்தில் தாமதமடைவதேயாகும். அவர்கள் வேலைத்தளங்களில் தேவையேற்படும்போது விடுமுறை பெறுவதிலுள்ள சிரமங்கள், தொழில் ரீதியான மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையின் கடமைகள் மற்றும் மாணவர்களின் விஞ்ஞான ரீதியான எழுத்து திறன்கள் குறைவு போன்றவை இத்தாமதத்திற்கு காரணமாகும். இவற்றை ஈடுசெய்வதற்கான பல்வேறு அளவீடுகள் இவற்றுக்காக எடுக்கப்பட்டதோடு முறையான பயிற்சிப்படறைகள் விஞ்ஞான ரீதியாக அறிக்கையெழுதுதலுக்காக நடைபெற்றுள்ளதோடு கலந்துரையாடல்கள் மூலமாகவும் ஆராய்ச்சி திட்ட அறிக்கை தரமாக அமைந்ததோடு குறித்த நேரத்தில் அதனை நிறைவுசெய்யவும் உதவியது. இதன் பெறுபேறாக 2006ம் மாணவர் குழு வரையான பல மாணவர்களை பூர்த்திசெய்ய வைக்க உதவியது. உயர் பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகத்தின் இளைய ஆராய்ச்சியாளர்கள் பொதுமன்றம்(YRF) மூலமாக இதற்கு நிகரான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இதனை தத்துவவியல் முதுமானி, மற்றும் கலாநிதிப்பட்ட மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. அதனுடன் கடந்த ஆண்டு பொதுப்பட்டமளிப்பு விழாவின்போது 4 கலாநிதிப்பட்ட மாணவர்கள், 15 தத்துவவியல் முதுமானிப்பட்ட மாணவர்கள், மற்றும் 118 விஞ்ஞான முதுமானிப்பட்ட மாணவர்கள் பட்டமளிக்கப்பட்டனர்.

பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சிகளுக்கு பிரதான தடைகளாக பாரிய ஆராய்ச்சி கருவிகளுக்கான நிதி பெறப்படாமை, ஆராய்ச்சி மானியங்களின்மை என்பன காணப்பட்டன. மேலும் விஞ்ஞான ஆய்விதழ்களை இணையத்தில் பெற்றுக்கொள்ள முடியாமையும் மேலும் தடையை அதிகரித்தது.

## எதிர்காலத் திட்டங்கள்

உயர்ப்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகத்தின் தூரநோக்கு மற்றும் பணிக்கூற்றுக்கிணங்க செயற்பாடுகளானவை எதிர்வருகின்ற சில வருடங்களுக்காக திட்டமிடப்பட்டுள்ளன (விபரங்கள் கூட்டுருத்திட்டத்திலும் பிரதானதிட்டத்திலும் தரப்பட்டுள்ளன). இவை கருவிமைய ஆய்வு கூடமொன்றை தாபித்தல், தகவல் தொழிநுட்ப ஆய்வு கூட வசதிகளை விரிவாக்கல், தத்துவவியல் முதுமானி மற்றும் கலாநிதிப்பட்ட நிகழ்ச்சிகளை விரிவாக்கல், முழுநேர ஆராய்ச்சி மாணவர்களுக்காக தங்குமிட வசதியளித்தல், மேலும் கலந்துரையாடல் அறைகளை நிறுவுதல், வாசிப்பு அறைகள், பொது அறைகள், மற்றும் உணவகம் போன்ற நோக்கங்களுக்காக மாணவர் சேவைகள் கட்டடமொன்றை நிர்மானிதல் என்பவற்றை உள்ளடக்கும்.

### வளங்கள், மாணவர்கள் மற்றும் அலுவலர்களின் விபரங்கள்

| கற்கை நெறி | மொத்த மாணவர்கள | அலுவலர்கள் | | மாணவர்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கல்விசார் | கல்விசாரா | அனுமதி 2013 | | அனுமதி 2012 | | 2013 இல் பட்டம் பெற்றவர்கள் | |
| | | | | உ | வெ | உ | வெ | உ | வெ |
| பட்டப்பின்படிப்பு டிப்ளோமா | 37 | 2 | 20 | 37 | | 22 | | 89 | |
| விஞ்ஞான முதுமானி | 1471 | | | 373 | 3 | 72 | 1 | 162 | |
| தத்துவவியல் முதுமானி | 213 | | | 30 | | 37 | | 15 | |
| கலாநிதிப்பட்டம் | 38 | | | 2 | | 2 | | 4 | |
| தற்காலிக | | | | | | | | | |
| **மொத்தம்** | 1759 | | | 442 | 3 | 133 | 1 | 270 | |

உ-உள்நாட்டு மாணவர்கள் வெ-வெளிநாட்டு மாணவர்கள்

**நிகழ்ச்சிகளின் விபரங்கள்- 2013**

| விடயம் | | பங்குபற்றியவை | பூர்த்திசெய்யப்பட்டவை | சமர்ப்பித்தவை |
|---|---|---|---|---|
| பட்டப்பின்படிப்பு பட்ட நிகழ்ச்சிகள் | கலாநிதி | 373 | | |
| | விஞ்ஞான முதுமானி | 30 | | |
| | தத்துவவியல் முதுமானி | 02 | | |
| பயிற்சி நிகழ்ச்சிகள் | | 17 | 17 | 17 |
| பயிற்சிப் பட்டறைகள் | | 479 | 479 | 479 |
| ஏனையவை<br>- சர்வதேச ஆய்வரங்கு | | 118 | 118 | 118 |
| -குறுங்கற்கைகள் | | 608 | 608 | 608 |
| -பொதுமன்ற கூட்டம் | | 54 | 54 | 54 |
| -மகாநாடுகள் | | 30 | 30 | 30 |
| **மொத்தம்** | | **1711** | **1306** | **1306** |

**2013 இல் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், பயிற்சிகள், விளிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் குறுங்கற்கைகளின் விபரங்கள்**

| இல | நிகழ்வு /தலைப்பு | நிறுவகம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை | நடைபெற்ற திகதி |
|---|---|---|---|---|
| 1 | உயிரியல் இயந்திரங்களுடனான விளையாட்டு தொழிநுட்ப மதிப்பீடு | உ.ப.விஞ்.நி | 68 | ஜனவரி 10 |
| 2 | புவியியல் தகவல் முறைமை மற்றும் பிரயோகங்கள் தொடர்பான 49 ஆவது குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி | 7 | ஜனவரி 26- பெப்ரவரி 02 |
| 3 | விஞ்ஞான ரீதியாக எழுதுதல் தொடர்பான பயிற்சிப்பட்டறை | உ.ப.விஞ்.நி | 100 | பெப்ரவரி 15 |
| 4 | "R" மற்றும் "R" studio மென்பொருள் மூலமாக தரவு பகுப்பாய்வு குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி | 49 | பெப்ரவரி 21-22 |
| 5 | புவியியல் தகவல் முறைமை மற்றும் பிரயோகங்கள் தொடர்பான 50ம் குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி | 37 | மார்ச் 4-9 |
| 6 | நீர் தரம் மற்றும் ஆளணி சுகாதாரம் முன்னோக்கிய சவால்கள் என்ற தொனிப்பொருளிலான சர்வதேச ஆய்வரங்கு | உ.ப.விஞ்.நி,சர்வதேச ஆராய்ச்சி நிலையம், பேராதனைப் பல்கலைக்கழகம், மற்றும் டொயாமா பிரிபெக்சுவல் பல்கலைக்கழகம், மற்றும் டொபாமா தேசிய தொழிநுட்ப கல்லூரி ஜப்பான் | 118 | மார்ச் 15-16 |
| 7 | புவியியல் தகவல் முறைமை மற்றும் பிரயோகங்கள் தொடர்பான 51ம் குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி | 23 | ஏப்ரல் 1-6 |
| 8 | "R" மற்றும் "R" studio மென்பொருள் மூலமாக தரவு பகுப்பாய்வு 2 ஆவது குறுகங்கற்கை | உ.ப.விஞ்.நி | 47 | ஏப்ரல் 18-19 |
| 9 | பயிற்சிப்பட்டறை-"காடுகளின் எதிர்காலம்:REDD AND REDD+" | உ.ப.விஞ்.நிமற்றும் வனப்பாதுகாப்பு திணைக்களம் இலங்கை | 69 | மே 03 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | புவியியல் தகவல் முறைமை மற்றும் பிரயோகங்கள் 14வது உயர்மட்ட குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி | 10 | மே 16-17 |
| 11 | மனிதவள முகாமைத்துவம் குறுங்கற்கை | உ.ப.விஞ்.நிமற்றும் சுற்றாடல் கற்கை நிலையம்,பேராதனைப் பல்கலைக்கழகம் | 128 | மே 18-19 |
| 12 | புவியியல் தகவல் முறைமை மற்றும் பிரயோகங்கள் 52 வது குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி | 08 | மே27- ஜூன் 01 |
| 13 | 4வது பீடஅபிவிருத்தி பயிற்சிப்பட்டறை- அனர்த்த முகாமைத்துவ விஞ்ஞான முதுமானிப்பட்ட நிகழ்ச்சி-கற்பித்தல் அலுவலர்கள் மற்றும் அக்கறையுள்ளோர் | உ.ப.விஞ்.நி, B.MGF, TU, DRLA, ADPC* | 12 | ஜூன் 1-2 |
| 14 | ISO சான்றிதழுக்கான தரம் மற்றும் சூழல் முகாமைத்துவ முறைமைகள் என்ற குறுங்கற்கை ISO 9001 மற்றும் 14001 இற்கான அறிமுக கற்கை | உ.ப.விஞ்.நி, சுற்றாடல் கற்கை நிலையம் பேராதனைப் பல்கலைக்கழகம் | 88 | ஜூன் 1-2 |
| 15 | அனர்த்த மீட்சி தலைமைத்துவ குறுங்கற்கை (2வது பிராந்திய பயிற்சி கற்கை நெறி) | உ.ப.விஞ்.நி, BMGF, TU, DRLA, ADPC | 27 | ஜூன் 3-7 |
| 16 | சிரேஷ்ட யானைகள் காப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி | உ.ப.விஞ்.நி,தேசிய விலங்கு சரணாலயத் திணைக்களம் | 17 | ஜூன் 3-9 |
| 17 | பூக்களுடன் மற்றும் இலைகளுடன் ஆரம்பித்தல் எனும் தலைப்பிலான பயிற்சிப்பட்டறை | உ.ப.விஞ்.நி | 49 | ஜூன் 28 |
| 18 | புவியியல் தகவல் முறைமை மற்றும் பிரயோகங்கள் 15வது உயர்மட்ட குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி | 11 | ஜூலை 1-6 |
| 19 | மத்திய மாகாண அனர்த்த மீட்பு தலைவர்களுக்கான மண்சரிவு விளிப்புணர்வு பயிற்சிபட்டறை | உ.ப.விஞ்.நி, BMGF, TU, DRLA, ADPC | 36 | ஜூலை 12,13 |
| 20 | 5வது பீட அபிவிருத்தி பயிற்சிப்பட்டறை பூமியதிர்வு மற்றும் சேதங்களை குறைத்தல் | உ.ப.விஞ்.நி, BMGF, TU,DRLA, ADPC | 14 | ஜூலை 16-18 |
| 21 | “R” மற்றும் “R” studio மென்பொருள் பயன்பாடுடனான தரவு பகுப்பாய்வு தொடர்பான 3வது குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி | 31 | ஜூலை 16-19 |
| 22 | புவியியல் தகவல் முறைமை மற்றும் பிரயோகம் தொடர்பான 53ம் குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி | 26 | செப்டெம்பர் 9-14 |
| 23 | பாடத்திட்ட மீளாய்வு பயிற்சிப்பட்டறை 2013- அனர்த்த முகாமைத்துவ விஞ்ஞான முதுமானி நிகழ்ச்சி ஆசிரிய குழாம் மற்றும் அக்கறையுடையோர் | உ.ப.விஞ்.நி, BMGF, TU, DRLA, ADPC | 13 | ஒக்டோபர் 25-26 |
| 24 | அனர்த்த மீட்பு தலைமைத்துவம் | உ.ப.விஞ்.நி,BMGF, TU,DRLA, ADPC | 12 | நவம்பர் 24 |
| 25 | விஞ்ஞான ரீதியில் எழுதுதல் தொடர்பான 2ம் தேசிய பயிற்சிப்பட்டறை | உ.ப.விஞ்.நி,தேசிய விஞ்ஞான மன்றம் | 98 | நவம்பர் 28-29 |
| 26 | புவியியல் தகவல் முறைமை மற்றும் பிரயோகங்கள் தொடர்பான 54ம் குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி | 20 | டிசெம்பர் 2-7 |
| 27 | அனர்த்த மீட்பு தலைமைத்துவ கல்வியக மகாநாடு (நீர்கொழும்பில் நடந்தது) | உ.ப.விஞ்.நி,BMGF, TU,DRLA, ADPC | 30 | டிசெம்பர் 9-11 |
| 28 | அனர்த்த மீட்பு தலைமைத்துவ கல்வியக பொதுமன்ற கூட்டம் (நீர்க்கொழும்பில் நடந்தது) | உ.ப.விஞ்.நி,BMGF, TU,DRLA, ADPC | 42 | டிசெம்பர் 11 |
| 29 | திறந்த தெருக்களில் தேசப்படமெடுத்தல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அதன் விஞ்ஞான முதுமானி புவியியல் தகவல் முறைமை மற்றும் MSc/GIS, RS மாணவர்களின் 2012/2013 மற்றும் 2013/2014 மாணவர் அணிக்கான குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி | 38 | டிசெம்பர் 14-15 |
| 30 | அனர்த்த முகாமைத்துவ பயிற்சிப்பட்டறை | உ.ப.விஞ்.நி,அனர்த்த முகாமைத்துவ நிலையம் | 22 | டிசெம்பர் 20 |
| 31 | மனிதவள முகாமைத்துவம் தொடர்பான குறுங்கற்கை | உ.ப.விஞ்.நி,சுற்றாடல் கற்கைகள் நிலையம், பேராதனைப் பல்கலைக்கழகம் | 57 | டிசெம்பர் 21-22 |

* BMGF - Bill and Melinda Gates Foundation
* DRLA - Disaster Resilience Leadership Academy
* TU - Tulane University
* ADPC - Asian Disaster Preparedness Centre

**2013 இல் நிறுவகம் நடாத்திய சர்வதேச மகாநாடுகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளின் விபரங்கள்**

| இல | நிகழ்வு/ தலைப்பு | ஒழுங்கமைப்பாளர்<br>பீடம் /கல்வித்துறை/ நிலையம் /அலகு | பங்குபற்றியோர் எண்ணிக்கை | நடைபெற்ற திகதி |
|---|---|---|---|---|
| 01. | நீர் தரம் மற்றும் மனித சுகாதாரம் முன்னோக்கிய சவால்கள் என்ற தொனிப்பொருளிலான சர்வதேச ஆய்வரங்கு | உ.ப.விஞ்.நி, சர்வதேச ஆராய்ச்சி நிலையம், பேராதனைப் பல்கலைக்கழகம், டொயாமா பிரிபெக்சுவல் பல்கலைக்கழகம், ஜப்பான் மற்றும் டொயாமா தேசிய தொழிநுட்ப கல்லூரி, ஜப்பான் | 118 | மார்ச் 15-16 |

# பின்னிணைப்பு B பல்கலைக்கழகத்தின் பிரதான நிலையங்கள்

## B1 விவசாய உயிரியல் தொழிநுட்ப நிலையம்(AgBC)

*(பணிப்பாளர் கலாநிதி பிரதீப் பண்டாரநாயக்க அவர்களால் அறிக்கையிடப்பட்டது.)*

### அறிமுகம்

விவசாய உயிரியல் தொழிநுட்ப நிலையமானது(வி.உ.தொ.நி) பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் ஆராய்ச்சிகளை வலுப்படுத்த வசதியளிப்பதற்காகவும் இயலளவை அதிகரிப்பதற்காகவும் உயிரியல் மற்றும் உயிரியல் தொழிநுட்பத்தினை உபயோகித்து சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதற்காகவும் தாபிக்கப்பட்டதாகும். இங்கு முக்கியமாக குறிப்பிடக்கூடிய விடயமாக விவசாய உயிரியல் தொழிநுட்ப நிலையமானது உயிரியல் தொழிநுட்பத்தை உபயோகிக்கும் இலங்கையின் ஒரே நிறுவகமாக உள்ளதை குறிப்பிடலாம். விவசாய உயிரியல் தொழிநுட்ப நிலையமானது விவசாய பீடத்தின் பீடாதிபதியினதும் பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான முழுநேர பணிப்பாளரினதும் வழிகாட்டலின் கீழ் இயங்குகின்றது.வி.உ.தொ.நி இன் புதிய பணிப்பாளராக கலாநிதி பிரதீபா சீ. ஜீ. பண்டாரநாயக்க அவர்கள் 2013 மார்ச் 11ம் திகதி பதவியேற்றார்.

வி.உ.தொ.நி ஆனது ஆராய்ச்சிகளுக்கான பல்லொழுக்கசூழலை வழங்குகிறது,உயிரியல் தொழிநுட்பத்தின் மற்றும் தொடர்புபட்ட நிகழ்ச்சிகள் மூலம் விஞ்ஞான சமுகங்களுடன் இணைவை ஏற்படுத்துதல், ஆராய்ச்சி ஆய்வுகூடங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைக்கு பங்களிப்பு செய்கின்றது. வி.உ.தொ.நி ஆனது பயிற்சிப்பட்டறைகளையும், பயிற்சி நிகழ்ச்சிகளையும், அனுபவ பயிற்சிகளையும் விஞ்ஞான சமுகத்திற்கு புதிய தொழிநுட்ப திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக வழங்குகிறது. நிலையத்தின் எதிர்காலமானது ஒளிமயமாக காணப்படுவதோடு ஏனைய நோக்கங்களுடனும் கூட நாட்டின் மற்றும் பிராந்தியத்தின் வளர்ந்துவரும் கேள்விகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் எமது ஆராய்ச்சிகளை விரிவாக்கவும் பயிற்சி வசதிகளை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கின்றோம். அதேவேளை நாங்கள் திட்டமிட்ட திறமான கல்வி நிகழ்ச்சிகளை வழங்குவதற்கான இலக்குகளுக்காகவும் நோக்கங்களுக்காகவும் முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு மட்டுமல்லாமல் சமூகத்தின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்காக சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை அபிவிருத்தி செய்யவும் முயல்கின்றோம்.

### அடைவுகள்

**சான்றிதழ் கற்கைகள்:**

1. **கரு உயிரியல் தொழிநுட்ப சான்றிதழ் கற்கை**
   கரு உயிரியல் தொழிநுட்பம் என்ற சான்றிதழ் கற்கை நெறி 2013 மே மாதம் 13ம் திகதி முதல் 17ம் திகதி வரை நடைபெற்றது. இதில் பங்குபற்றிய 17 பேர் குழுவில் பல்கலைக்கழக கல்வி அலுவலர்கள் ஆராய்ச்சி நிறுவனங்களையும் தொழிற்துறைகளையும் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும் ஆராய்ச்சி உதவியாளர்களினதும் மற்றும் இரசாயணவியவல் நிறுவகத்தின் மாணவர்களினதும் பிரதிநிதித்துவம் காணப்பட்டது. இந்த கற்கையானது 6 மணித்தியால கோட்பாட்டு விளக்க கற்றல் மற்றும் 24 மணித்தியாள செய்முறைப்பயிற்சியையும் உள்ளடக்கியது. இக்கற்கை நெறியானது DNA எடுத்தல் மற்றும் பரிமானம் (தாவரத்திலிருந்து, பற்றீரியா மற்றும் இரத்தம்) Polymerase Chain Reaction(PCR), Agarose Gel Electrophoresis மற்றும் தரவு பகுப்பாய்வு, பற்றீரியா பரிமாற்றம், பரிசோதனை போன்றவற்றில் அனுபவங்களை வழங்கக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டது. மேலும் ஐந்து நாட்கள் நிகழ்ச்சியானது தென்பகுதி கலப்புசேர்க்கை மற்றும் மரபணு உயிரணுஉலை என்பவற்றின் விளக்கமளிப்புகளை உள்ளடக்கியிருந்தது.

2. **கரு உயிரியலில் அடிப்படை தொழிநுட்ப சான்றிதழ் கற்கை**

இக்கற்கையானது கூட்டாக விவசாய பீட வி.உ.தொ.நி மூலமும் உயிரியல் குழு மூலமாகவும் ஒழுங்கமைக்கப்பட்டது. இக்கற்கையானது DNA எடுத்தல் மற்றும் பரிமானம் (தாவரத்திலிருந்து, பற்றீரியா மற்றும் இரத்தம்),Polymerase Chain Reaction(PCR), Agarose Gel Electrophoresis மற்றும் தரவு பகுப்பாய்வு என்பவற்றில் அனுபவங்களை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டது.

3. **மரபுப்பண்பு வெளிப்படுத்தல் பகுப்பாய்வு அறிமுக சான்றிதழ் கற்கை**

இக்கற்கை நெறியானது 2013 ஜூலை மாதம் 11ம் 12ம் திகதிகளில் 23 பங்குபற்றுநர்களுடன் பல்கலைக்கழக கல்வி அலுவலர், அரச மற்றும் தொழிற்துறையை சேர்ந்த ஆராய்ச்சியாளர்களினதும் ஆராய்ச்சி உதவியாளர்களினதும், பட்டப்பின்படிப்பு மாணவர்களினதும் பிரதிநிதித்துவத்துடன் நடைபெற்றது.

4. **கரு உயிரியல் தொழிநுட்ப சான்றிதழ் கற்கை**

இந்நிகழ்ச்சியானது இரண்டாவது தடவையாகவும் 2013 நவம்பர் மாதம் 4ம் திகதி முதல் 7ம் திகதிவரை 12 பங்குபற்றுநர்களுடன் நடைபெற்றது. பங்குபற்றுனர்களாக பல்கலைக்கழகங்களை சேர்ந்த கல்விசார் அலுவலர் இரசாயணவியவல் நிறுவக மாணவர்கள், பட்டப்பின்படிப்பு மாணவர்கள், ஆராய்ச்சி அலுவலர் மற்றும் சட்டமானி மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**ஆராய்ச்சி:**

1. **பெறப்பட்ட ஆராய்ச்சி மானியங்கள்**

இலங்கை தேசிய ஆராய்ச்சிப் பேரவையிலிருந்து( பெறுமதி ரூபா. 14,592,054.00 காலம் 3 வருடங்கள், திட்டமிட்ட பட்டப்பின்படிப்புகள்: இரண்டு கலாநிதிப்பட்டங்கள்)
தலைப்பு: இலங்கை மாதுளம் பழ கருஉயிரியல் மற்றும் உயிரசாயணவியல் பண்புகள் மற்றும் வித்தியாசமான சூழல் நிலைமைகளில் மரபுப்பண்புகளின் வெளிப்படுத்தல் பகுப்பாய்வு மற்றும் இலங்கை பிரபல்ய விவசாயத்தின் வளர்ச்சிக் கட்டங்கள்

பேராதனைப்பல்கலைக்கழக சர்வதேச ஆராய்ச்சி நிலையத்திலிருந்து (பெறுமதி ரூபா 2,500,000.00, காலம் 3 வருடங்கள், பட்டப்பின்படிப்பு திட்டம்: ஒரு கலாநிதிப்பட்டம்)
தலைப்பு: "Evoluating genetic resources of an endomic wild rice species,Oryza rhizomatis Vaughan, for defeating water scarcity in rice cultivation"

பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டது (பெறுமதி ரூ. 500,000 காலம் ஒரு வருடம்)

தலைப்பு: "Development of anin vitro culture protocol and gene transformation system for Loranthus spp.to study the mechanism of plant parasitism"for funding

2. **புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு வெளிநாட்டு நிதி பெறப்பட்டது.**

AgBC இனால் பின்வரும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கலிபோனியா டாவிஸ் பல்கலைக்கழகத்துடன் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கைச்சாத்திடப்பட்டது.
உபவழங்கல் இலக்கம்: 201223330-01 உபபெறுநர் PI: பிரதீபா சி.ஜீ. பண்டாரநாயக்க.
இச்செயற்பாட்டுக்காக பெறப்பட்ட நிதிப் பெறுமதி: $10 000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள்
செயற்பாட்டுக் காலம்: 01.08.2013 – 31.07.2016
தலைப்பு: Evolutionary Gain and Loss of function in Parasitic Plant Genomes"
முதன்மை அனுசரணையாளர்: தேசிய விஞ்ஞான நிறுவகம்(NSF) வழங்கல்#IQS-1238057
யுசி. டாவிஸ் PI: ஜோன் யோடர்

**கருத்தரங்குகள்:**
விவசாய உயிரியல் தொழிநுட்ப நிறுவனமானது விவசாய பீடத்தின் விவசாய கல்வி அலகுடனும் இணைந்து இலங்கை அமெரிக்க தூதுவராலயத்துடன் உயிரியல் பாதுகாப்பு என்ற தலைப்பிலான கருத்தரங்கை உயிரியல் தொழிநுட்பம் மூலமான உணவுவகைகளின் உயிரியல் பாதுகாப்பையும் இரசாயன உணவுவகைகளின் உயிரியல் பாதுகாப்பையும் அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைத்தது.
திகதி: 2013 ஒக்டோபர் 22 நேரம்: பி.ப. 12.30
இடம்: உயர்பட்டங்களுக்கான விவசாய நிறுவக கேட்போர் கூடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

விவசாய பீடத்தை சேர்ந்த சுமார் 160இளமானிப்பட்ட மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கரு உயிரியல் அடிப்படைத் தொழிநுட்ப கற்கை சலுகை கட்டணத்தில் வழங்கப்பட்டது. எனினும் குறித்த ஒரு குழு மாணவர்களே அதனை பூர்த்தி செய்ததோடு வார இறுதி தினங்களில் மாணவர்களின்மையே இதற்கான காரணமாக இருந்தது.

## எதிர்காலத் திட்டங்கள்

அதிக இணை ஆராய்ச்சி வேலைகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களுடன் செய்வதற்காக ஒரு எண்ணக்கருத்தியல் பத்திரமானது அவ்வாறான நிகழ்ச்சியை அமெரிக்காவின் மிச்சிகன் பிராந்திய பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு விவசாய பீடத்தின் கல்விசார் அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட இரு கருத்திட்டங்கள் நிதி வழங்க ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு கரு உயிரியல் தொடர்பான வேலையை AgBC செயற்படுத்துகின்றது.
2014ம் ஆண்டிற்காக 4 பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

## B2 விவசாய வியாபார நிலையம்(ABC)

*(பணிப்பாளர் பேராசிரியர் எல்.எச்.பி. குணரத்ன அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

விவசாய வியாபார நிலைய தாபிப்பின் பிரதான நோக்கம் வினைத்திறனாகவும் செயல்திறனாகவும் குறை பாவனையுடைய கல்விசார் சமுகத்தின் நிபுணத்துவத்தை ஒழுங்குபடுத்தப்பட்ட ஏற்பாடுகள் மூலமாக பல்கலைக்கழக முறைமையினுள் பயன்படுத்தலாகும். எனவே அந்த கல்விசார் சமுகமானது பல்ஒழுக்க பிரயோக ஆராய்ச்சிகளில் ஈடுபடவும் பயிற்சிகள் மற்றும் ஆலோசனை சேவைகள் மூலமாகவும் பீடமானது தேவைப்படுகின்ற பாடத்திட்ட மாற்றங்களை ஏற்படுத்த முடிவதோடு பொருத்தமான கற்பித்தல் நிகழ்ச்சிகளை ஆராய்ச்சிகளுக்கு வழங்குவதோடு கற்றல் வாய்ப்புகளையும் இளமானிப்பட்ட மாணவர்களுக்கு எதிர்கால சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் வழங்குகின்றது.

ஏனைய நோக்கங்களாக இந்நிலையத்தை தாபிப்பதற்காக பல்கலைக்கழகத்திற்கும் தனியார் துறைக்குமான தொடர்பை வலுப்படுத்தல், தனியார் துறையின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இளமானிப்பட்ட மற்றும் பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கு வழிகாட்டல், பல்கலைக்கழகம் சார்ந்த பயிற்சிகளையும் ஆராய்ச்சிகளையும் அபிவிருத்திகளையும் மற்றும் ஆலோசனை சேவைகளையும் தொழில்துறை அடங்கலாக தேசிய தேவைகளுக்கு தொடர்புபடுத்துவதற்காகவும், பீடத்தை சமுகத்துடன் தொழில் துறையுடனும் வேலை செய்ய ஊக்கமளித்தல் என்பன அமைகிறது. பிரதான தொழிற்பாடுகளாக வெளிக்கள வேலைகள், பயிற்சியளித்தல், மற்றும் ஆராய்ச்சிகள் காணப்படுகின்றன.

### விவசாயவியாபார வெளிக்கள வேலைகள்

- எல்லா தனிப்பட்ட முயற்சியாளர்களுக்காகவும் குழுக்களுக்காகவும் சேவை நிறுவனங்களுக்காகவும் வியாபார ஆலோசனை சேவைகளை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்துவதும்
- விவசாய மற்றும் விவசாயம்சாரா பயிற்றுவிப்பாளர்களுக்காகவும் முயற்சியாளர்களுக்காகவும் கேள்வி எழுப்பப்படக்கூடிய பயிற்சி நிகழ்ச்சிகளை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- விவசாய வியாபார சேவை வழங்கல் முறைகளை விருத்திசெய்யக்கூடிய ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல்.
- இளைஞர்களுக்காக வியாபார சிந்தனைகளை அடையாளம் காணவும் அவற்றை உண்மையான வியாபாரங்களாக அபிவிருத்திசெய்தலுக்காக பயிற்சியளித்தல் சந்தர்ப்பங்களை வழங்கல்

### பயிற்சி மற்றும் தொழில் அபிவிருத்தி

- இளமானிப்பட்ட மாணவர்களுக்கு முயற்சியாண்மை திறன்களை அபிவிருத்தி செய்யக்கூடிய பயிற்சிகளையும் வேலை அனுபவங்களையும் வழங்குதல்
- இளமானிப்பட்ட மாணவர்களுக்கு வியாபார சிந்தனைகளை அபிவிருத்தி செய்வதோடு அவற்றை உண்மை நிலை வியாபாரங்களாக பரிமாற்றல் செய்வதற்காக உதவுவதும் சுய உதவி திட்டங்களுக்கான சந்தர்ப்பத்தை வழங்குதலும்
- எதிர்கால கூட்டிணைவு நிகழ்ச்சிகளுக்காக இளமானிப்பட்ட மாணவர்களுக்காக பகுதிநேர பயிற்சி சந்தர்ப்பங்களை கண்டறிதல்
- விவசாய பட்டதாரிகளுக்கான தொழில் நிலைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சியை நடாத்துதல்
- பட்டதாரிகளின் தொழில் நகர்வுகளை அடையாளம் காணத்தகு வகையில் பீடாதிபதிகாரியாலயத்துடன் இணைந்து தரவு முறைமையொன்றை பேணுதல்
- விவசாய மாணவர்களுக்காக கைத்தொழில் தொடர்புகளுக்கான அடிப்படைகள் மற்றும் தொழில் அபிவிருத்தி திறன்கள் குறித்து கற்பித்தல்
- TMU மற்றும் CDC இற்கு பின்னூட்டல்களை அவர்களின் நிகழ்ச்சிகளில் மாற்றங்களையும் பீடத்தின் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளின் தரத்தை உயர்த்துவதன் நோக்கமாக வழங்கல்
- முயற்சியாண்மை தொடர்பாக இளைஞர்களுக்கும் பரந்த சமுகத்திற்கும் சாதக நடத்தையை அபிவிருத்தி செய்தல்

## ஆராய்ச்சி

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிகழ்ச்சிகளுடனான கூட்டு ஆராய்ச்சிகள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகள் பீட மாணவர்களுக்கும் நாட்டிற்குமாக நன்மையளிக்கிறது.

ABC ஆனது முகாமைத்துவ மற்றும் இணைதல் குழுக்களின் மூலமாக முகாமை செய்யப்படுவதோடு அதில் விவசாய பீட பீடாதிபதி தலைமை வகிக்கிறார். முகாமைத்துவ குழுவானது பின்வருவோரை உள்ளடக்கும். இலங்கை மத்திய வங்கி ஏற்றுமதி விவசாய பிரிவு,கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய வர்த்தக சம்மேளனம், மத்திய மாகாண பெண்கள் வர்த்தக சம்மேளனம், சர்வோதயம், பொறியியல் பீட பொறியியல் உற்பத்தி துறை, உயர்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம், மற்றும் ஒருங்கிணைத்தல் குழுவில் அங்கத்தவர்களாக விவசாய பீடத்தின் அனைத்து கல்வித்துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன. இந்நிலையமானது கௌரவ அடிப்படையிலான பணிப்பாளர் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. பகுதிநேர செயலாளரொருவர் மாதாந்த கொடுப்பனவாக ரூ.5,000 இற்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்.

## 2013ம் ஆண்டின் அடைவுகள்

## நிறைவுபெற்ற கருத்திட்டங்கள்

- இலங்கையின் உலர்மீன் உற்பத்திகளுக்கான சந்தை மற்றும் போட்டியாளர்களின் பகுப்பாய்வு. FAO பிராந்திய மீன் வாழ்க்கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டம்(RFLP),FAO ஆல் நிதியளிக்கப்பட்டது.
- வாசனைத்திரவிய செய்முறை நிலையங்களை தெயன்வெல (அரநாயக்க பிரதேச செயலாளர் பிரிவு) மற்றும் மல்வத்தகம (கங்க இஹலகோரல பிரதேச செயலாளர் பிரிவு) என்ற இடங்களில் தாபிப்பதற்கான சாத்தியப்பாட்டு ஆய்விற்காக விவசாய அமைச்சின் உலர்வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்களிப்பு நிகழ்ச்சி மூலம் நிதி பெறப்பட்டது.
- விவசாய அமைச்சின் காணி சுவீகார உலர்வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்களிப்பு நிகழ்ச்சித்திட்ட இடையீடுகளை மதிப்பீடு செய்தல்

## ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

- HETC –QIG(Window4) மூலமாக நிதியளிக்கப்பட்ட விவசாய பீடத்தின் ஆராய்ச்சி பெறுபேறுகளை வர்த்தகமயப்படுத்தல்.

## நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறைகள்

- பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் IPR ஊடாக ஆராய்ச்சியை வர்த்தகமயப்படுத்தல்.

## எதிர்காலத் திட்டங்கள்

- HETC -விவசாய பீட கருத்திட்ட செயற்பாடுகளை ஆரம்பித்தல் (செயற்பாடு 2)
- நிகரான கருத்திட்டங்களுக்கு கேள்வி அறிவித்தலும் நிலையத்தின் இயலளவை விஸ்தீரணம் செய்தலும்.

## B3 தொலை மற்றும் தொடர்க்கல்வி நிலையம்(CDCE)

*(பணிப்பாளர் கலாநிதி ஏ.ஜி.எச்.ஜே. எதிரிசிங்ஹ அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

தொலை மற்றும் தொடர்க்கல்வி நிலையத்தின் ஆரம்பமானது 1979 இல் வெளிவாரி பரீட்சை நிலைய உருவாக்கலின் மூலம் அடையப்பட முடிந்தது. பல அபிவிருத்திக் கட்டங்களை கடந்து பல பெயர்களில் அழைக்கப்பட்ட இந்நிறுவனத்தின் நடப்பு நிர்வாகக் கட்டமைப்பானது அதன் புதிய பெயரான ‘‘தொலை மற்றும் தொடர்க்கல்வி நிலையம்’’ என்ற பெயரால் 2007 ஏப்ரல் மாதம் முதல் அழைக்கப்படுகின்றது. இந்த நிலையத்தை தாபிப்பதற்கான பிரதான நோக்கமாக பேராதனைப்பல்கலைக்கழக கூட்டுருத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களில் ஒன்றான ‘‘திறந்த மற்றும் தொலைக்கல்வியில் அதியுயர் நிலையமாக முன்வரல்’’ என்பதை அடைவதாக காணப்படுகிறது.

தொலை மற்றும் தொடர்க்கல்வி நிலையத்தின் தூரநோக்காக அனைவருக்கும் அவர்கள் தொழில் குறிக்கோள்களையிட்டு சமமான வாய்ப்புக்களை வழங்குதல் என்பது காணப்படுகின்றது. இதன் பணிக்கூற்று திட்டமாக கல்வி வாய்ப்புக்களை தடைகள் இன்றி அவற்றை எதிர்பார்ப்போருக்கு வழங்குவதன் மூலமாக அனைவருக்கும் கல்வியை வழங்கல் என்பது காணப்படுகிறது.

தொலை மற்றும் தொடர்க்கல்வி நிலையமானது உபவேந்தர் தலைமைதாங்கும் நிலையத்தின் முகாமைத்துவ சபையின் ஆளுகையின் கீழ் இயங்குகின்றது. இந்நிலையத்தின் தலைமைப்பொறுப்பு பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரொருவரான பகுதிநேர பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணிப்பாளர் மேலும் சிரேஷ்ட கல்வி அலுவலர்களாக செயற்படும் பதில் பணிப்பாளர்கள் மூவரின் உதவியோடு செயல்படுகின்றார். இதன் நிர்வாக செயற்பாடுகள் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுவதோடு நிலையத்தில் ஒரு சிரேஷ்ட உதவிப்பதிவாளர், ஒரு உதவிப்பதிவாளர், மற்றும் ஒரு சிரேஷ்ட உதவி கணக்காளரின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது. கல்வி சாரா அலுவலர்களில் 19 இலிகிதர்களும் ஒப்பான தரங்களும் மற்றும் ஒரு திறன்சார் மற்றும் 03 திறன்சாரா தரத்தையுடையவர்கள் உள்ளனர்.

கல்வி நிர்வாகமானது இந்நிலையத்திற்காக பல்கலைக்கழக சட்டத்தில் காணப்படும் நிலையங்கள் மற்றும் பீடங்களுக்கான விதிமுறைகளினடிப்படையில் வழிநடத்தப்படுகின்றன. கலைமானி என்ற 1979 முதல் நடைபெறுவதும் 2008 இல் ஆரம்பிக்கப்பட்ட வியாபார நிர்வாகமானி (இணையமூலம்) பட்டமுமே நடைமுறையில் காணப்படும் இரு பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளாகும். இவ்விரு பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளும் இரு கற்கைச் சபைகளால் வழிநடத்தப்படுதோடு அதற்கான அங்கீகாரம் கலைப்பீடம், கல்வி அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் குழு, பேராதனைப் பல்கலைக்கழக மூதவையினால் பெறப்படுகின்றது.

### 2013ம் ஆண்டுக்கான அடைவுகள்

வெளிவாரி பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளின் தரத்தை அதிகரிக்கவும் நிலையத்தின் நிர்வாக வசதிகளை உயர்த்தவும் 21ம் நூற்றாண்டுக்கான உயர்க்கல்வி (HETC) இற்கு சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட பிரேரணை அடிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு அதன் வளர்ச்சி சுமுகமாக காணப்படுகின்றது.

இந்நிலையத்தின் காரியாலயம் மற்றும் மலசலகூடத்தொகுதிக்கான புனர்நிர்மாணப்பணிகள் 2013ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு நிர்மானப்பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளன.

### தொலை மற்றும் தொடர்க்கல்வி நிலையத்தால் 2013 இல் நடாத்தப்பட்ட பாரிய நடவடிக்கைகள்

- நேர முகாமைத்துவ பயிற்சிப்பட்டறை-2013 ஜனவரி 24ம் திகதி மருத்துவ பீடத்தில் நடைபெற்றது.
- கலைமானி கருத்தரங்கு தொடர் - 2013 பெப்ரவரி 9 முதல் 2013 மார்ச் 31 வரை
- வியாபார நிர்வாகமானிப்பட்ட மாணவர்களுக்கான (இணையம் மூலம்) அறிமுக வழிகாட்டல் நிகழ்ச்சி – 2013 ஏப்ரல் மாதம் 4ம் திகதி தொலை தொடர்க்கல்வி நிலைய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.
- பொது கலைமானி பரீட்சையானது (வெளிவாரி) ஏப்ரல், மே 2013 இல் நடைபெற்றது

- முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி டிப்ளோமா நிகழ்ச்சி-2013- 1 ஜுலை 2013 இல் தொ.தொ.க.நி. பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.
- வெளிவாரிப்பட்ட பட்டதாரிகளுக்கான பொதுப்பட்டமளிப்பு விழா இலங்கை சர்வதேச பௌத்த அகடமி பல்லேகலையில் 2013 ஜுன் மாதம் 27 இர் நடைபெற்றது.
- GAQ கருத்தரங்கு தொடர்- 2013 ஜுன் 15 முதல் ஓகஸ்ட் 10 வரை
- கலைமானி முதலாம் பரீட்சை (வெளிவாரி) -2013 ஓகஸ்ட்/செப்டெம்பரில் நடைபெற்றது.
- உற்பத்தி இயலளவு அதிகரிப்புக்கான தயார்ப்படுத்தல் முகாமைத்துவ கருவியை பாவித்தல் பயிற்சிப்பட்டறை- 2013 செப்டெம்பர் 6ம் திகதி தொ.தொ.க.நி. பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.
- பாடத்திட்ட மீளாய்வு பயிற்சிப்பட்டறை - ஒக்ரே ரீஜன்சி ஹோட்டலில் 2013 டிசெம்பர் 2இல் நடைபெற்றது.
- தொலை தொடர்க்கல்வி நிலைய செயற்பாடுகளை நெறிப்படுத்தல் பயிற்சிப்பட்டறை-2013 நவம்பர் 29ம் 30ம் திகதிகளில் கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவகத்தில் (KITI) நடைபெற்றது.

## எதிர்காலத் திட்டங்கள்

தொலை மற்றும் தொடர்க்கல்வி நிலையத்திற்காக அதன் இடப்பரப்பை கருத்தரங்குகள் விரிவுரைகளை நிகழ்ச்சிகளுக்காக நடத்துதல் போன்ற தேவைப்பாடுகளுக்காக அதிகரிக்கும் நோக்கில் நான்கு மாடி கட்டடமொன்றுக்கான வேண்டுகோளை நிலையத்திற்காக விடுப்பது தொடர்பாக பணிப்பாளர்களினால் கலந்துரையாடப்பட்டுள்ளது. புதிய டிப்ளோமா நிகழ்ச்சியாக தொடர்பாடல் நிகழ்ச்சியானது நிறுவனத்தின் உதவியுடன் ஆரம்பிப்பது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதோடு அதனடிப்படையில் நிகழ்ச்சியை 2014 இல் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## ஏற்பட்ட இடர்கள்

நிர்வாக அலுவலர்கள் அடிக்கடி மாற்றப்பட்டமையானது நிலையத்தின் மேம்பாடுகளுக்கு பெருந்தடையாக அமைந்து.

## B4 பொறியியல் வடிவமைத்தல் நிலையம்

*(பணிப்பாளர் திரு. எஸ்.பீ. விஜேகோன் அவர்களால் அறிக்கை அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

பொறியியல் வடிவமைத்தல் நிலையமானது 1993 இல் பொதுநலவாய விஞ்ஞான பேரவையின் உதவியுடன் தாபிக்கப்பட்டது. ஆரம்பகட்டத்தில் இந்நிலையமானது விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப தனிப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டம் என்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் மூலமாக நிதிவசதியளிக்கப்பட்டதோடு தற்போது முழுமையாக சுயமாக இயங்கக்கூடிய அலகாக பல்கலைக்கழகத்தினுள் காணப்படுகின்றது. பொ.வ.நி. ஆனது பொறியியல் பீடத்தின் வர்த்தக கருவியாக செயற்படுகின்றது.

நிலையத்தின் ஆளுகையானது பல்கலைக்கழக விதிமுறைகளுக்கேற்ப அமைவதோடு கொள்கைத் தீர்மானங்களானவை குறிப்பிட்ட நிறைவேற்றுக் குழுமூலம் எடுக்கப்படுகின்றன. இக்குழுவானது பீடத்தின் ஒன்பது கல்விசார் அலுவலர்களை கொண்டிருப்பதோடு தொழில்சார் அங்கத்தவர் ஒருவரும் அங்கத்துவம் வகிக்கின்றார். பொ.வ.நி. அலுவலர்களாக பணிப்பாளர், 2 பொறியியலாளர்கள், 3 இலிகிதர்கள் மற்றும் ஒரு தொழிலாளி காணப்படுகின்றனர். பணிப்பாளர் நிலையத்தின் சுமுகமான நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவுள்ளார்.

### அடைதல்கள்

- ஒன்பது CPD நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதோடு 250 பேர் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருந்தனர்.
- கருத்திட்டங்களுக்காகவும் CPD நிகழ்ச்சிகளுக்காகவும் ரூ. 22 மில்லியன் வருமானம் ஆண்டினுள் கிடைத்தது.
- மத்திய மாகாண சபையின் பொறியியல் சேவைகள் திணைக்களத்திற்காக தெல்தெனிய மாவட்ட ஆதார வைத்திசாலையில் சத்திர சிகிச்சைக்கூடம் மற்றும் அவசர சிகிச்சை அலகு என்பவற்றின் வடிவமைப்பு வேலைகள் கொண்டு நடாத்தப்படுகின்றன.
- புவியியல் தொழிநுட்ப சேவைகளானவை ஆறு பாரிய நிர்மானப்பணிகளுக்காக மத்திய மாகாண சபைக்கு வழங்கப்பட்டன.
- குடிசார் பொறியில் துறையினூடாக கொத்மலை சர்வதேச பயிற்சி நிலையத்தின் மாணவர்களுக்காக நடைமுறைப்பயிற்சி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.
- 60 ஆலோசனை கருத்திட்டங்கள் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டன.
- மாத்தளை அலுவிகாரை உயர் தொழிநுட்ப பயிற்சி நிறுவக மாணவர்களுக்காக வெளிச்ச பொறியியல் நிகழ்ச்சிக்கான தொழிநுட்ப உதவி வழங்கப்பட்டது.
- 2013 ஒக்டோபரில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பொறியியல் நிறுவகத்தின் ‘Techno 2013’ என்ற தேசிய பொறியியல் மற்றும் தொழிநுட்ப கண்காட்சியில் பங்களிப்பு செய்யப்பட்டது.
- வரையறுக்கப்பட்ட களனி கேபல் தனியார் கம்பனியின் உதவியுடன் பாடசாலை கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்காக மின்னியல் கம்பி இணைத்தல் தொடர்பான சான்றிதழ் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
- பொறியியல் வடிவமைத்தல் நிலைய கருத்திட்டங்களுக்காகவும் மற்றும் CPD நிகழ்ச்சிகள் மூலமாகவும் திரண்ட நிதியாக ரூபா 5.5 மில்லியன் உருவாக்கப்பட்டது.

### தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

- பங்குபற்றுநர்களின் குறைவால் மூன்று CPD நிகழ்ச்சிகள் பிற்போடப்பட்டன.
- பொறியியல் வடிவமைத்தல் நிலையத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலான காரணத்தால் மூன்று மில்லியன் ரூபா பெறுமதியான கருத்திட்ட வேலைகள் நிறுத்தப்பட்டன.

## எதிர்கால திட்டங்கள்

- 2014ம் ஆண்டிற்காக பொ.வ.நி. 15 CPD நிகழ்ச்சிகளை நடாத்த திட்டமிட்டிருப்பதோடு அதன்மூலம் ரூபா. 7 மில்லியன் வருமானம் பெற எதிர்பார்க்கப்படுகிறது.
- பல்கலைக்கழக முறைமையினுள் பொறியியல் வடிவமைத்தல் நிலையத்தை தனியார் பொறுப்பு கம்பனியாக தாபிப்பதற்காக கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

## 2013 இல் கையாளப்பட்ட பாரிய கருத்திட்டங்கள்

| சுட்டிலக்கம் | விபரம் |
|---|---|
| 1 | மினிப்பே அணைக்கட்டில் வீழ்ப்படிவு மற்றும் நீர் தரம், மினிப்பே Lb குழாயிலிருந்து மகாவலி முறைமைக்கு அதிலிருந்து நீர் அனுப்புதல் |
| 4 | பழைய லக்ஷபான மின் நிலையத்தின் கொங்கிரீட் கட்டடத்தின் பலத்தை பரிசோதித்தல் |
| 5 | மெதிரிகிரிய கவுடுலுஓய இடையிலான குழாய்ப்பாலம் வடிவமைப்பு தொடர்பான ஆலோசனை சேவை |
| 6 | சீடி(Ceytea) இற்கான வலு கணக்காய்வு மற்றும் செய்முறை கற்கை |
| 7 | மின்சார இணைத்தல் முறைமை வடிவமைப்பு மீளாய்வு |
| 8 | மான்குளம் - முல்லைத்தீவு வீதியில் தோல்வியடைந்த பாலத்திற்கான மதிப்பீடு |
| 10 | நிகவரட்டிய நீர் விநியோக திட்டத்தில் பழுதடைந்த மோட்டார் கட்டுப்பாட்டு பகுதி தொடர்பான புலனாய்வு |
| 11 | ஹில்டொப் ஹோட்டலில் (கட்டம் A மற்றும் B) மண்சரிவு பகுதிக்கான இட புலனாய்வு |
| 16 | HTTI, மாத்தளை 8ம் 9ம் அணிகளுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு |
| 17 | நுவரெலியா உத்தேசிக்கப்பட்ட கட்டடத்திற்கான இட புலனாய்வு |
| 18 | ஐந்து மின்மாற்றிகளுக்கான சோதனை |
| 20 | மஹியங்கனையின் உத்தேசிக்கப்பட்ட தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத்திற்கான நீரியல் கற்கை |
| 21 | நுவரெலியா சந்ததென்ன கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரத்திற்கான திருத்தல் கருத்திட்ட பிரேரணை |
| 22 | தெல்தெனியாவின் தோல்வியடைந்த பாதுகாப்பு சுவர் பகுதிக்கான சரிப்படுத்துவதற்கான முறைமைகளுக்கான பரிந்துரைகள் தொடர்பான இட புலனாய்வு( RHS 7+342 இலிருந்து மற்றும் +360 கி.மீ. இல் தெல்தெனியாவிலிருந்து கோபெட்ஸ் இடைவீதி C-15) |
| 23 | 2ம் ரஜசிங்க மாவத்தை கண்டியிலுள்ள இல 40ராஜதானி ரிசோட் ஹோட்டலுக்கான விளைவு மதிப்பீடு |
| 26 | டம்கல்லயிலிருந்து வடுமுள்ள வரையாக உடபுஸ்ஸல்லாவ-நில்தண்டாஹின்ன-வடுமுள்ள வீதி பிரிவை பரீசித்தல் (Ch13+120கி.மீ. இருந்து 24+640கி.மீ. வரை) |
| 30 | தூய வலு அபிவிருத்திக்கான இயலளவு அதிகரித்தல் பகுதி B புதிப்பித்தல் அபிவிருத்திக்கான தயாரித்தலும் மற்றும் காற்றுத் தோட்ட பெருந்திட்டமும் காற்றுத் தோட்டத்திற்கான வியாபார மாதிரியும் |
| 33 | HTTI, மாத்தளை 8ம் 9ம் அணிகளுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு |
| 40 | சீதுவையில் நகர திண்மக்கழிவு உர இயந்திரத்திற்கான எண்ணக்கருத்தியல் வடிவமைப்பு |
| 41 | தெல்தெனிய மாவட்ட வைத்தியசாலையின் ஐந்து மாடி கட்டடத்தொகுதி மற்றும் அவசர சிகிச்சை அலகு என்பவற்றுக்காக கட்டட சேவைக்கான ஆலோசனை சேவைகள் |
| 43 | மேல் ஹுலு கங்கை சிறு நீர்மின்நிலைய திட்டத்திற்கான மாதிரியமைத்தல் |
| 53 | மூத்தூர் நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் வெடிப்புகள் குறித்தான ஆரம்ப விசாரணைகள் |
| 55 | தண்ணீர் தர கற்கை வட மத்திய குழாய் நலன் பெறுவோர் பிரதேசம் மற்றும் யான் ஓயா நீர்த்திட்டம் |
| 60 | காலி, ஹொல்சிம் இலங்கை (தனியார்) கம்பனியின் மில்மோட்டாரை பரிசோதனை செய்தல் |

**பொறியியல் வடிவமைத்தல் நிலையத்தினால் 2013 இல் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறைகள் மற்றும் குறுங்கற்கைகள்**

| சுட்டெண் | விபரம் | 2013 இல் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 31.12.2013 வரையில் நடாத்தப்பட்ட மொத்த கற்கை நெறிகள் | தொடங்கிய மற்றும் முடித்த திகதிகள் | பங்குபற்றியோர் |
|---|---|---|---|---|---|
| 1 | மூன்று நாள் மற்றும் இரு நாள் நீராவி பொறியியல் மற்றும் வலுப்பாதுகாப்பு நிகழ்ச்சிகள் | 2 | 22 | மே 2013 மற்றும் ஒக்டோபர் 2013 | 30 மற்றும் 34 |
| 2 | களனிசவிய நிகழ்ச்சிக்காக 3 கற்கை அலகுகள் நடாத்தப்பட்டன | 1 | 4 | மே 2012 முதல் ஒக்டோபர் 2013 | 40 |
| 3 | நான்கு நாள் பயிற்சிப்பட்டறைகள்- பிரயோக பயிற்சிக்குரிய எல்லையுள்ள மூலக்கூறு ஆய்வு | 1 | 1 | மார்ச் 15 முதல் 23 | 26 |
| 4 | நான்கு நாள் குறுங்கற்கை- நீரியல் மாதிரியமைப்பு | 1 | 2 | 31 மே 8 ஜுலை 2013 | 24 |
| 5 | கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவக மாணவர்களுக்கான ஆய்வுகூட வகுப்புகளை நடத்துதல் | 1 | 1 | 29 ஜுன் முதல் 17 ஒகஸ்ட் வரை | கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவன மாணவர்கள் |
| 6 | ADR பொறிமுறையில் வர்த்தக தலையீடு | 1 | 1 | 14 செப்டெம்பர்2013 | 29 |
| 7 | இரும்பு கட்டட வடிவமைப்பு தொடர்பான 4 நாள் குறுங்கற்கை பாடநெறி | 1 | 1 | 27 செப்டெம்பர் 5 ஒக்டோபர் 2013 | 19 |

## B5 மனித உரிமைகள் கற்கை நிலையம் (ம.உ.க.நி)

*(பணிப்பாளர் பேராசிரியர் எம். சோமதிலக்க அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

மனித உரிமைகள் கற்கை நிலையமானது 2002ம் ஆண்டு வெளிநாட்டு நிதிஉதவி கருத்திட்டமாக பேராதனைப் பல்கலைக்கழக மூதவை மற்றும் பேரவையின் அங்கீகாரத்துடன் தாபிக்கப்பட்டதாகும். இந்த வெளிநாட்டு நிதிஉதவி கருத்திட்டமானது 2008 இல் முடிவடைந்ததோடு மனித உரிமைகள் டிப்ளோமா, மனித உரிமைகள் சான்றிதழ் கற்கை நெறி, உள்ளக பயிற்சி என்ற பிரதான 3 செயற்பாடுகள் இக்கருத்திட்ட அமுலாக்கல் காலத்தினுள் காணப்பட்டன. இத்திட்டமானது நிலையத்தின் கற்பித்தலில் அதிக கேள்வி காணப்பட்டதால் தொடர வேண்டிய நிலை காணப்பட்டது. இந்த நிலையமானது கலைப்பீட கன்னங்கர கட்டடத்தின் 4ம் அறையில் காணப்படுகிறது. இங்கு மனித உரிமைகள் கற்கை நிலையத்தின் தூரநோக்காக மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பாக தெளிவான தீர்க்கமான மற்றும் ஊக்கத்துடன் நோக்கும் ஒரு சமுகத்தை உருவாக்குதல் காணப்படுவதோடு பிரதான நோக்கமாக பல்ஒழுக்க கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மூலமாக மனித உரிமைகள் தொடர்பான அறிவை மேம்படுத்தலானது பல்கலைக்கழக சமுகத்தினதும் பொதுமக்களின் பங்குபற்றலால் ஏற்படுத்தல் காணப்படுகின்றது.

### நிலையத்தின் கட்டமைப்பு பின்வருமாறு

1. ஆளுகைசபை
2. பணிப்பாளர்
3. இரு கல்விசார் இணைப்பாளர்கள்
4. நிர்வாக அலுவலர்

மனித உரிமைகள் கற்கை நிலையத்தின் அதிகார சபையானது கொள்கை தொடர்பான காரணங்கள் பாதீட்டு மற்றும் மனித வளங்களை முகாமைசெய்யும் அதிகாரத்தை கொண்டுள்ளது. அதிகார சபையானது கலைப்பீடாதிபதி (நிறைவேற்று தலைவர்), அரசறிவியல் துறைத்தலைவர் (நிறைவேற்று அலுவலர்), மனித உரிமை கற்கை நெறியை கற்பிக்கும் கல்வித்துறையை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவாறு கலைப்பீட சபையால் பரிந்துரைக்கப்படும் இருவர், ஏனைய ஏழு பீட சபைகளிலிருந்தும் பரிந்துரைக்கப்பட்ட அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய உறுப்பினர்களை கொண்டுள்ளது. இந்நிலையத்தின் பணிப்பாளரானவர் அதிகார சபையின் செயலாளராக கடமை புரிகிறார். இந்நிலையத்தின் நாளாந்த செயற்பாடுகள் பணிப்பாளர் மூலமாக கையாளப்படுவதோடு அவர் திறந்த விளம்பரம் மூலமாக பல்கலைக்கழகததின் சிரேஷ்ட கல்வி அலுவலர்களிலிருந்து தெரிவு செய்யப்படுகிறார். பணிப்பாளருக்கு இரு கல்விசார் அலுவலர்களினதும் ஒரு நிர்வாக அலுவலரினதும் உதவியின் மூலமும் உதவி பெற்றுக்கொள்கின்றார். நிலையமானது நிரந்தர கற்பித்தல் அலுவலர்களுக்காக ஊழியப்படையை கொண்டிருக்கவில்லை. அனைத்து வளவாளர்களும் பேராதனைப்பல்கலைக்கழக கல்விசார் அலுவலர்களாவர். அவர்களுடைய சேவைகள் வருகை விரிவுரையாளர் என்றே கொள்ளப்படுகின்றது.

### அடைவுகள்

2004 முதல் 2013 வரையான காலப்பகுதிக்காக இந்நிலையமானது ரூபா 24 மில்லியனை இரண்டு கற்கை நெறிகளுக்கான கற்கைநெறிக் கட்டணங்கள் மூலமாக பெற்றுள்ளதோடு ரூ. 7.6 மில்லியன் சேமிப்பும் அண்ணளவாக காணப்படுகின்றது. தற்போது காணப்படும் இரு கற்கைநெறிகளும் அதிக கேள்வியானது பட்டதாரி மாணவர்கள், பட்டப்பின் கற்கை மாணவர்கள், பொலிஸ், பாதுகாப்பு படை, சிறைக்கூட அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அங்கத்தவர் மத்தியில் காணப்படுகின்றது. 2004 முதல் 2013 வரை நிலையமானது 3151 சான்றிதழ்களையும் 898 டிப்ளோமாக்களையும் வழங்கியுள்ளது.

2012ம் மற்றும் 2013ம் ஆண்டுகளில் நிலையமானது சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகளை நடாத்தியது. பங்குபற்றியோர் விபரம் வருமாறு:

1. மனித உரிமைகள் சான்றிதழ் 2013 – 275 தமிழ் சிங்கள மொழி மூல மாணவர்கள்
2. மனித உரிமைகள் டிப்ளோமா 2011/2012 – 114 தமிழ், சிங்கள மொழி மூல மாணவர்கள்

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

2013ம் ஆண்டில் மனித உரிமைகள் கற்கை நிலையத்தின் பாதீட்டு ஒதுக்கங்களின்படி 4 சான்றிதழ் கற்கை நெறிகளை தவிர்க்க முடியாத காரணங்களால் செயற்படுத்த முடியாமல் போனது. எனினும் நாங்கள் 2013 இற்கான பரீட்சைப் பெறுபேற்றினை குறிப்பிட்ட திகதியில் வழங்கியுள்ளோம்.

## எதிர்காலத் திட்டங்கள்

1. மனித உரிமைகள் கற்கை நிலைய இணையத்தளத்தை புதுப்பித்தல்.
2. நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டு மானிய உதவியை நாடுதல்
3. ஆங்கில மொழியில் மனித உரிமைகள் பாடநெறியை அறிமுகம் செய்தல்.
4. நிலையத்திற்கான பரந்தளவான புத்தகமொன்றை தயாரித்தல்.

## B6 சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையம்

*(பதில் பணிப்பாளர் கலாநிதி.ஜகத் குணதிலக அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையமானது 1992 இல் தாபிக்கப்பட்டதோடு முதவை, பேரவை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. சுற்றாடல் கல்வி மற்றும் பயிற்சி வழங்குவது தொடர்பாக பல்கலைக்கழகம் மற்றும் தேசிய ரீதியாக கடந்த 21 ஆண்டுகளாக இந்நிலையமானது குறிப்பிடத்தக்க அளவு சேவைகளை வழங்கியுள்ளது. எனினும் இந்நிலையத்திற்கும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்குமிடையிலான நெறிப்படுத்தல் முறைமைகளில் குறைபாடுகள் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. சு.க.நி. இல் 2007.01.01. இல் நடைபெற்ற முகாமைத்துவ குழுக்கூட்டத்தில் நிர்வாக நிதி முறைமைகளையும் உள்ளடக்கியதான பிரேரணை ஒன்றும் சமர்ப்பிக்கவும் அதற்காக முதவையில் புதிய கொள்கைத்திட்டத்தை சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

புதிய கொள்கைத் திட்டமானது 2008 இல் பேராதனைப் பல்கலைக்கழக பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டதோடு அதன் தூரநோக்காக சூழல் ரீதியாக விளக்கமளிக்கப்பட்ட மற்றும் பொறுப்புள்ள சமுகத்தை உறுதிப்படுத்தல் காணப்படுகிறது. பணிக்கூற்றாக பலத்த சுற்றாடல் அறிவை வழங்கல், வினைத்திறனான சுற்றாடல் முகாமைத்துவதற்காக திறன்களை அபிவிருத்தி செய்தல், மற்றும் நிலையான சுற்றாடல் பண்புகளை பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்துறை, மற்றும் பொதுமக்களுக்கு வழங்குதல் காணப்படுகின்றது.

### 2013 இற்கான அடைவுகள்

1. “விஞ்ஞானத்தின் இதயமாக தண்ணீர்-2013” என்ற தலைப்பிலான கண்காட்சி விரிவுரைகளும் கலந்துரையாடல்களும் 19 நவம்பர் முதல் 6 டிசெம்பர் 2013 வரை விஞ்ஞான கல்வி அலகு எலியன்ஸ் பிரென்கேயிஸ் டி. கண்டி மற்றும் சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவகம் என்பற்றுடன் இணைந்து நடாத்தப்பட்டது.

2. பல்வேறு நடவடிக்கைகள் 2013ம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை அடிப்படையில் பல செயற்பாடுகள் நடாத்தப்பட்டன/ஆரம்பிக்கப்பட்டன.

   - பேராதனைப் பல்கலைக்கழகத்திவல் திண்மக்கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தை ஆரம்பித்தல்.
   - மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்து நடாத்தும் பாடசாலை ஆசிரியர்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு விளிப்புணர்வு நிகழ்ச்சிகளை பூர்த்தி செய்தல்

3. மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் பேராதனைப் பல்கலைக்கழகம் கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடுகள்.

   - கைத்தொழிற்துறையினருக்கு கைத்தொழில் மாசடைதல் கட்டுப்பாடு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்
   - பேராதனைப் பல்கலைக்கழகத்தில் திண்ம கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தை தொடர்தல்
   - ஹந்தான சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்திற்கான முகாமைத்துவத் திட்டத்தை தயாரித்தலை ஆரம்பித்தல்
   - உயர்ப்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகத்துடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கான மாசடைதலை கட்டுப்படுத்தல் எனும் தலைப்பிலான விளிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்

4. நிலையத்தால் நடாத்தப்பட்ட குறுங்கற்கைகள்

| கற்கைநெறி | காலம் | வழங்கிய திகதி | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ISO 9001 மற்றும் 14001 சான்றிதழ் | 2 நாட்கள் | 2013 ஜுன் 1ஈ 2 | 088 |
| மனித வள முகாமைத்துவம் | 2 நாட்கள் | 2013 மே 18, 19 | 127 |
| மனித வள முகாமைத்துவம் | 2 நாட்கள் | 2013 டிசெம்பர் 21, 22 | 057 |

5. 2013ம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்ட ஆலோசனை கருத்திட்டங்கள்
   - கொனடிகாவத்தை பொதுசுகாதார நிலநிரப்பல் பாதுகாப்பிற்கான சூழல் விளைவு மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்தல் முடிவுற்றது. மத்திய சுகாதார அதிகாரசபையிடமிருந்து இரண்டாம் மற்றும் இறுதி தவணை கொடுப்பனவை எதிர்பார்த்துள்ளது.
   - கொழும்பு-கண்டி மாற்று அதிவேக வீதி கருத்திடம்(RAP)ll
   - வேண்டுகோளின்படி சிங்கள மற்றும் தமிழ் மொழியெபர்ப்புகளை இறுதியறிக்கைக்காக பூர்த்திசெய்து சமர்ப்பித்துள்ளதோடு இறுதி தவணைக்கொடுப்பனவை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து எதிர்ப்பார்த்துள்ளது.
   - மொரகொள்ள நீர்மின்சார கருத்திட்டத்திற்கான இலங்கை மின்சார சபைக்காக மேலதிக சுற்றாடல் கற்கை
   - கற்கையானது நடாத்தப்பட்டதோடு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

1. கைத்தொழில் மாசடைவு கட்டுப்பாட்டிற்கான பயிற்சி நிகழ்ச்சியை கைத்தொழில் துறையின் பங்குபற்றுவோர் போதுமான எண்ணிக்கையில் காணப்படாமையால் நடாத்தவில்லை
2. நிதி மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளால் அங்குரார்ப்பணம் செய்யவிருந்த ஆய்விதழ் பிற்போடப்பட்டது.

## எதிர்காலத் திட்டங்கள்

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளின் விபரங்கள் பின்னிணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளன. சுற்றாடல் கல்விக்கான நிலையமானது சுற்றாடல் பிரச்சினைகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கு உதவுவதற்கு மேலும் பல கருத்திட்டங்களை திட்டமிடுகிறது. இந்த செயற்பாடுகளும் ஏனைய உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளும் பின்னிணைப்பு III இல் தரப்பட்டுள்ளன.

## சுற்றாடல் கற்கைகளுக்கானநிலையத்தால் நடாத்தவிருக்கும் உத்தேசிக்கப்பட்ட ஏனைய செயற்பாடுகள்

### அ). ஆராய்ச்சி மற்றும் அடைதல் செயற்பாடுகள்

1. பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்குமான சுற்றாடல் ஆராய்ச்சி தொடர்பான ஆராய்ச்சி முறைமைகள் என்ற தலைப்பிலான பயிற்சிப்பட்டறை

2. வெளி நிறுவனங்களுக்கும் பேராதனைப் பல்கலைக்கழக சர்வதேச ஆராய்ச்சி நிலையத்திற்கும் ஆராய்ச்சி கருத்திட்ட பிரேரணைகளை சமர்ப்பித்தல்

3. உலகமய சுகாதாரம் மற்றும் சுற்றாடல் தொடர்பான சர்வதேச மகாநாடு

4. சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையத்தை சுற்றாடலுக்கான தகவல் நிலையமாக அபிவிருத்தி செய்யக்கூடிய முயற்சியாக இலங்கையில் சுற்றாடல் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டவை தொடர்பான புத்தகங்களின் விபர அட்டவணையொன்றை அபிவிருத்தி செய்தல்

5. வாழ்க்கை சுற்றோட்ட மதிப்பீடு என்ற அறிமுக கற்கை நெறியை இலங்கையின் வாழ்க்கைச் சுற்றோட்ட மதிப்பீடு மற்றும் நிலையான வலைப்பின்னலுக்கான வடிவமைப்பு இலங்கை என்ற அமைப்புடன் இணைந்து சுற்றாடல் கல்விக்கான நிலையத்தால் நடாத்துதல் (மார்ச் 2014)

6. கைத்தொழில் பாதுகாப்பு கட்டுப்பாடு தொடர்பான குறுங்கற்கை (ஜுன் 2014)

7. ISO 14000 தொடர்பான 4 ஆவது குறுங்கற்கை நெறி சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையத்தால் நடாத்தப்படும் (ஏப்ரல் 2014)

8. மனிதவள முகாமைத்துவம் தொடர்பான 6ஆம் குறுங்கற்கை நெறி சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையத்தால் நடாத்தப்படும் (மே 2014)

9. சுற்றாடல் விளிப்புணர்வு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி (ஜுலை – ஓகஸ்ட் இடையில் 2014)

10. மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்து கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஹந்தானை பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தில் மர நடுகை நிகழ்ச்சி

## ஆ). ஏனைய செயற்பாடுகள்

1. சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையத்திற்காக இணையத்தளமொன்றை ஆரம்பித்தல்
2. சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையத்திற்காக செய்தித்தாள் ஒன்றை வெளியிடல்
3. சு.க. நிலையம் ஏனைய பல்கலைக்கழகங்களுடன் இணை நிகழ்ச்சிகளை ஆரம்பித்தல்
4. சுற்றாடல் விளிப்புணர்வு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகள்
5. பின்வருவனவற்றுக்கான குறுங்கற்கை
    - அ. சுற்றாடல் விளைவு மதிப்பீடு
    - ஆ. சமுக விளைவு மதிப்பீடு
    - இ. மனிதவள முகாமைத்துவம்
    - ஈ. சுற்றாடல் கண்காணிப்பு
    - உ. ISO சான்றிதழ்

## B7 சர்வதேச ஆராய்ச்சி நிலையம்

*(பணிப்பாளர் கலாநிதி நந்தகுணவர்தன அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

2011ம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது இலங்கையின் ஆறு பல்கலைக்கழகங்களை உலக தர பல்கலைக்கழகங்களாக பறிமாற்றல் செய்வதற்காக பரிந்துரைத்திருந்தது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது இந்த நிகழ்ச்சிக்காக குறிப்பிட்டளவு நிதி ஒதுக்கங்களை மேற்கொண்டுள்ளதோடு அதற்கான கருத்திட்ட பரிந்துரைகளை ஆறு பல்கலைக்கழகங்களிலிருந்தும் விண்ணப்பங்களை கோரியுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 2011 ஜுன் 25 இல் நடைபெற்ற 397 ஆவது பேரவைக் கூட்டத்தில் பல்ஒழுக்க ஆராய்ச்சி நிலையத்திற்கான பரிந்துரை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஏப்ரல் 2012 இல் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் உத்தியோகபூர்வமாக அமைக்கப்பட்டது. அதன் ஆளுகை அமைப்பாக உபவேந்தர் தலைமைதாங்கும் முகாமைத்துவ சபை உருவாக்கப்பட்டதோடு அதில் பிரதி உபவேந்தர், பேராதனைப்பல்கலைக்கழக பீடங்களின் பீடாதிபதிகள், பதிவாளர், பிரதான நிதியாளர், பணிப்பாளர் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் (செயலாளர்) என்போர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தின் பிரதான குறிக்கோள்கள்

- ஒழுக்கங்களுக்கிடையிலான ஆராய்ச்சிகளுக்கு பல்கலைக்கழகத்திற்குள்ளும் உயர்பட்டங்களுக்கான நிறுவனங்களுக்காகவும் அவற்றை மேம்படுத்தவும் கூட்டிணைவுகளுக்கு உதவுவதும்
- பல்கலைக்கழகத்திற்காக மானியங்களை தேடும் நிலையமாக செயற்படல்
- உள்நாட்டு மற்றும் சர்வதேச மாணவர்களின் உயர்பட்டங்களுக்கான பதிவு செய்தலுக்காக மேம்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்
- பல்கலைக்கழக ஆராய்ச்சி வெளியீடுகளை சேகரித்தலும் ஒழுங்குபடுத்தலும்
- கைத்தொழில் துறையுடனான ஒன்றிணைவுகளை (1)ஆராய்ச்சி (2)ஆக்கவுரிமை(3)முயற்சியாண்மை என்பவற்றுக்காக ஆய்தலும் மேம்படுத்தலும்
- சர்வதேச ஆராய்ச்சி புலமையாளர்களை பரிமாற்றம் செய்வதை மேம்படுத்தல் மற்றும்ஒருங்கிணைத்தல்
- பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆராய்ச்சி மகாநாடுகள், பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளுக்கான ஒருங்கிணைப்பு நிலையமாக இருத்தல்
- பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி செயற்பாடுகள் மற்றும் வெளியீடுகள் தொடர்பான தரவு அடிப்படையை பேணுதல்

மேலதிக விடயங்களுக்காகவும் தகவல்களுக்காகவும் தயவுசெய்து எமது இணைய முகவரியான http://www.pdn.ac.lk/uop/inrc/index.phpஎன்பதை பார்க்கவும்

### அடைவுகள்

சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது கடந்த ஆண்டில் அதன் குறிக்கோள்களை அடைவதற்காக பல செயற்பாடுகளில் ஈடுபட்டதோடு 2013ம் ஆண்டில் அதன் பிரதான செயற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தினால்ஆரம்பித்துக்கொடுக்கப்பட்டன/உதவப்பட்டன அத்தோடு பங்காளர் நிறுவனங்களோடு தொடர்ச்சியான தொடர்பாடல் மூலமாக மேலும் பல பரிமாற்றல்களையும் ஊக்குவிக்கின்றது.

18 வெளிநாட்டு பல்கலைக்கழக பிரதிநிதித்துவ வருகைகளை ஏற்பாடு செய்தும் ஒழுங்கமைப்பு செய்தும் வெளிநாட்டு பரிமாற்றல்களுக்காகவும் ஒத்துழைப்புகளுக்காகவும் உதவியது. அனைவருடனான சாதகமான பிரதிபலிப்புகள் ஊக்கப்படுத்தப்படுவதோடு எதிர்காலத்தில் இருதரப்பு நன்மைகளுக்காக நிறுவனங்களுடனான உறவை விருத்திசெய்ய உத்தேசித்துள்ளோம்.

டோக்கியோ தொழிநுட்ப நிறுவகத்துடன் மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு டோக்கியோ தொழிநுட்ப நிறுவக மாணவர் குழுவொன்றை 2014ம் ஆண்டு தொடக்கப்பகுதியில் எதிர்பார்த்துள்ளோம். மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சியொன்றை ஹொாகைடோ பல்கலைக்கழகத்துடனும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்துடனும் ஏற்பாடு செய்திருப்பதோடு 2014 நடுப்பகுதியில் அவர்களையும் எதிர்பார்த்துள்ளோம்.

சர்வதேச ஆராய்ச்சிகளுக்கான பாரிய மானியங்கள் பல்வேறு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து விண்ணப்பிக்கப்பட்டதோடு அதில் இரண்டு குறிப்பிடத்தக்க மானியங்களாக நோராட் மானியமானது வாழ்க்கை விஞ்ஞான பல்கலைக்கழகத்துடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் குடிசார் பொறியியல் துறையுடன் இணைந்தும் மற்றையது JSP JICA கருத்திட்டத்திற்காக ஆசிய பசுபிக் பல்கலைக்கழகம் ஜப்பான் மற்றும் இலங்கை ஜப்பான் கற்றல் நிலையத்துடன் இணைந்தும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது 2013ம் ஆண்டு முழுவதிலும் மானியங்களை வழங்க இயலுமை காணப்பட்டதோடு அவை பின்வருமாறு ஒதுக்கப்பட்டன.

| | |
|---|---|
| பிரயாண மானியங்கள் | 88 |
| வெளியீடுகளுக்கான மானியங்கள் | 18 |
| நிகழ்ச்சி ஏற்பாடுகள், அனுசரணை வழங்கல் | 12 |
| கலாநிதிப்பட்ட கற்கைகள், பயிற்சிகள் | 5 |
| வருகை புலமையாளர்கள் | 7 |
| உபகரணங்கள் | 16 |
| ஆராய்ச்சிகள் | 23 |

சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது ஜப்பான் இலங்கை ஒத்துழைப்பு ஆராய்ச்சி மகாநாட்டில் பேராதனைப் பல்கலைக்கழக கல்விசார் அலுவர் குழுவொன்றின் மூலமாக இலங்கை ஜப்பான் கல்வி நிலையத்தை ஆரம்பித்தது.மகாநாடானது இரு நாட்களுக்கு மேலாக நடைபெற்றதோடு 11 முதன்மை பேச்சாளர்கள் வருகைத் தந்ததோடு 150 இற்கும் மேலான ஆராய்ச்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. 45 ஜப்பானியர்கள் 175 இற்கும் மேற்பட்ட இலங்கையரும் இதில் பங்குபற்றினர். இதில் 25 ஜப்பானிய நிறுவனங்களின் பிரதிநிதித்துவம் காணப்பட்டதோடு அநேகமாக எல்லா இலங்கை நிறுவகங்களினதும் பிரதிநிதித்துவம் காணப்பட்டது. சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது இம்மகாநாட்டிற்கான நிதி உதவியை ஜப்பான் மன்றத்திடமிருந்து விண்ணப்பத்திருந்ததோடு அதற்காக ரூ. 2.4 மில்லியன் அவ்வமைப்பினால் வழங்கப்பட்டிருந்தது.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் அடங்கலாக பிரபல்யமான வளவாளர்களின் மூலமான ஆராய்ச்சி மானியத்திற்காக எழுதுதல் என்ற தொனிப்பொருளிலான பயிற்சிப்பட்டறையானது ஏற்பாடு செய்யப்பட்டதோடு அது சாதக பெறுபேற்றை தந்ததுடன் சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது ஆராய்ச்சி முறைமைகள் மற்றும் வெற்றியளிக்கின்ற மானிய கருத்திட்ட பிரேரணை தயாரிப்பு போன்ற பயிற்சிப்பட்டறைகளையும் ஏற்பாடு செய்திருந்தது.
கணனி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவர் சர்வதேச ஆராய்ச்சி நிலையத்திற்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்.
மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.pdn.ac.lk/uop/inrc/NewsFull.php?value=CurAll எனும் இணைய முகவரியை பார்க்கவும்.

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது ஒருங்கிணைப்பு செயலாளர் மற்றும் புதிய பதில் பணிப்பாளர் ஒருவரை ஆட்சேர்க்க முயற்சிகள் மேற்கொண்டிருந்தாலும் நேர்முகத் தேர்வுகளில் காணப்பட்ட காலதாமதம் காரணமாக அது முடியாமற்போனது.

A6 கட்டடமானது சர்வதேச ஆராய்ச்சி நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதோடு கட்டடமானது நிலைய அலுவலகம், விரிவுரை மண்டபங்கள், மற்றும் மத்திய ஆய்வுகூடம், என்பவற்றை உள்ளடக்கியதாக திருத்தப்படவுள்ளது. எனினும் முகப்பில் சிறிய வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது. 2014 இல் ஒதுக்கப்பட்ட கட்டட அலுவலகத்தை முழுமையாக திருத்துவதில் கவனம் செலுத்தவுள்ளோம்.

## எதிர்கால திட்டங்கள்

2014 இல் சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது 20 வெளிநாட்டு புலமையாளர்களின் வருகையை புதிய ஒருங்கணைப்பு நிகழ்ச்சிகளுக்காகவும் அறிவு பரிமாற்றல்களுக்காகவும் ஏற்பாடு செய்யவும் ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளவும் எதிர்ப்பார்த்துள்ளது. இந்நிலையமானது ஆராய்ச்சி திறன்களை மாணவர்கள் மற்றும் கல்விசார் 5 பயிற்சிப்பட்டறைகளையும் 2 பயிற்சிப்பட்டறைகளை நிர்வாக முறைமைகள் மற்றும் நிறுவன இயலளவு நிர்மாணம் தொடர்பாகவும் நடாத்த எதிர்பார்த்துள்ளது.

சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் கருவிகளுக்கான தரவு அடிப்படைகள் உட்பட பல்வேறு தரவு அடிப்படைகளை கருவி தேடல் பொறிக்காக தொகுக்கவுள்ளது. நிலையமானது ஆராய்ச்சி சஞ்சிகையொன்றையும் மிகவிரைவில் வெளியிடவுள்ளது. சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பபகவும ஒருங்கிணைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றது.

## B8 அவசர சுகாதார மற்றும் அனர்த்த முகாமைத்துவ பயிற்சி நிலையம் (HEDMaTC)

*(பணிப்பாளர் கலாநிதி சம்பத் தென்னகோன் அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீட அவசர சுகாதார மற்றும் அனர்த்த முகாமைத்துவ பயிற்சி நிலையமானது அதன் ஆரம்பமான 2005 இலிருந்து இலங்கையில் அவசர சுகாதார மற்றும் அனர்த்த முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதில் முன்னனி வகிக்கின்றது. இந்நிலையமானது வெற்றிகரமாக பதினொரு தேசிய பயிற்சிப்பட்டறைகளை சுகாதார அமைச்சுடனும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்துடனும் இணைந்து ஆபத்தான சூழ்நிலைகளில் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார ஒருங்கிணைப்பு எனும் தலைப்பில் நடாத்தியது. மேலும் நிலையமானது பல்வேறு பாலின மற்றும் இனப்பெருக்க சுகாதார நிகழ்ச்சிகளை அதன் தொடர் நிகழ்ச்சிகளாக நடாத்தியுள்ளது.

மேலும் இந்நிலையமானது அவசர பொது சுகாதாரம் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் என்ற தலைப்பிலான ஆறு தேசிய பயிற்சிப்பட்டறைகளை சுகாதார அமைச்சுடனும் உலக சுகாதார ஸ்தாபன இலங்கை காரியாலயத்துடனும் இணைந்து வெற்றிகரமாக நடாத்தியது. தொடர் நிகழ்ச்சிகளாக அதன் மூன்றாம் மற்றும் நான்காம் நிகழ்ச்சிகளும் கூட அ.ச.அ.மு.ப. நிலையத்தினால் நடாத்தப்பட்டன. இவ்வனைத்து தேசிய மட்ட பயிற்சிப் பட்டறைகளும் பல்கலைக்கழகங்களை சேர்ந்த விரிவுரையாளர்களின் சுகாதார அமைச்சின் சுகாதார அலுவலர்கள் மற்றும் இலங்கையில் பணிசெய்யும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பெறுமதிமிக்க பங்களிப்புகளின் காரணமாக அதன் முடிவில் அதிக வெற்றியை ஏற்படுத்தியது.

பொது அவசர சுகாதார மற்றும் அனர்த்த முகாமைத்துவ பயிற்சி கற்கை நெறிகள் நிர்வாகிகள், சிகிச்சையளிப்பார்கள், கல்விசார் நிறுவனங்களின் கற்பித்தல் உத்தியோகத்தர்கள், அரசாங்க நிர்வாகிகள், சட்ட ஒழுங்கு உத்தியோகத்தர்கள், நகர சபை உறுப்பினர்கள் ,மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகள் தொடர்பான அங்கத்தவர்கள் ,போன்ற தேசிய மட்ட கொள்கை வகுத்தல் மேம்படுத்தல் வழிகாட்டல் நூல்கள் மற்றும் நியம செயற்பாட்டு முறைமைகள் தயாரிப்போர் அல்லது சுகாதார பிரிவு அனர்த்த முகாமைத்துவ கற்பித்தல், பயிற்சியளித்தல்களில் ஈடுபட்டுள்ளோர்களுக்காக நடாத்தப்பட்டது.

### அடைவுகள்

- நிலையமானது வெற்றிகரமாக பொது அவசர சுகாதாரம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ தேசிய கற்கை நெறிகள் 6ஐயும் ஆபத்தான சூழ்நிலைகளில் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார ஒருங்கிணைப்பு என்கின்ற தேசிய பயிற்சி நெறிகள் பதினொன்றையும் மற்றும் முன்வைத்தியசாலை பராமரிப்பு மற்றும் அம்புலன்ஸ் முகாமைத்துவம் என்ற 10 பயிற்சி நெறிகளையும் வெற்றிகரமாக நடர்தியது.
- இந்நிலையமானது பல முன்வைத்தியசாலை பராமரிப்பு நிகழ்ச்சிகளை வைத்தியர்கள் முதலுதவியளிப்போர், தாதியர் மற்றும் பாடசாலை மாணவர்களுக்காக வெற்றிகரமாக நடாத்தியுள்ளது.
- வைத்திய அலுவலர்களுக்காகவும் தொண்டர்களுக்காகவும் பல பொது அவசர சுகாதாரம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பயிற்சி நெறிகளை நடாத்தியது.
- இலங்கையின் அவசர சுகாதார தயார்நிலை மற்றும் பிரதிபலிப்பு இயலுமை தொடர்பாக SEARO Benchmark மதிப்பீடு 2012 மே மாதம் நடைபெற்றதோடு அதில் 78 பேர் பங்குபற்றினர்.
- டிப்ளோமா மற்றும் முதுமானிப்பட்ட கற்கைநெறி அபிவிருத்தி: அவசர சுகாதார மற்றும் அனர்த்த முகாமைத்துவ பாடவிதானமானது பேராதனைப் பல்கலைக்கழக உயர் பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகம் மூலமாக நடாத்தப்படும் அனர்த்த முகாமைத்துவ முதுமானிப்பட்ட நிகழ்ச்சிக்கு சேர்க்கப்பட்டுள்ளது. அவசர சுகாதார மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தைச் சேர்ந்த வளவாளர்கள் இப்பாடத்தை கற்பிக்கின்றனர்.

## எதிர்காலத் திட்டங்கள்

- நிலையமானது தற்போது பொது அவசர சுகாதாரம் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறியொன்றை அபிவிருத்தி செய்துகொண்டிருக்கிறது
- இந்நிகழ்ச்சியானது வார இறுதி கற்கை நெறியாக நடைபெறுவதோடு மருத்துவத்தை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படமாட்டாது.
- இந்நிலையத்தின் முகாமைத்துவ சபையானது சமீபத்தில் வெளிநாட்டு விண்ணப்பதாரர்களுக்காக பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய தீர்மானித்துள்ளது. விண்ணப்பதாரிகளினல் பொதுநலவாய நாடுகளுக்கு அந்நாடுகள் அபிவிருத்தியடைந்து வருவதோடு அங்குள்ள பாரிய பிரச்சினைகள், தனிநபர் உரிமை, யுத்தம், சமத்துவம், இனவாதம், வறுமை, புறக்கணிப்பு, நோய்கள் மற்றும் பால் ரீதியான வன்முறை போன்ற காரணங்களுக்காக முன்னுரிமை வழங்க தீர்மானிக்கப்பட்டது.
- நிலையமானது தனியார் துறையினருக்காகவும் பொது அவசர சுகாதார மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சியை வழங்க திட்டமிட்டு வருகின்றது.
- நிலையமானது அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேம்படுத்தவும் பிராந்திய மற்றும் சர்வதேச தொடர்புகளை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அபிவிருத்தி செய்வதற்காகவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது.

# பின்னிணைப்பு C கற்றல் உதவிச் சேவைகள்

## C1 பேராதனைப் பல்கலைக்கழக நூலக வலையமைப்பு

*(நூலகர், கலாநிதி. கே.ஜீ.டீ.ஜீ. விஜேதுங்க அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழக நூலகமானது ஆரம்பத்தில் 1921ம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழக கல்லூரி நூலகமாக ஆரம்பிக்கப்பட்டதாகும். இது 1952 இல் பேராதனைக்கு மாற்றப்பட்டதோடு தற்போதுள்ள கட்டடத்திற்கு 1960 இல் மாற்றப்பட்டது. பேராதனைக்கு மாற்றப்பட்ட பின்பு நூலகமானது ஒரு வலையமைப்பை அபிவிருத்தி செய்து பிரதான நூலகம் மற்றும் மேலும் ஏழு கிளை நூலகங்களை விவசாய, இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள், பல்மருத்துவ, பொறியியல், மருத்துவம், விஞ்ஞானம், மிருக வைத்தியம் என்ற பீட நூலகங்களையும் கொண்டுள்ளது. ஒன்பதாவது நூலகமாகனது மகாஇலுப்பலம விவசாய பீட உப பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ளது. கிளை நூலகங்கள் அவற்றுக்குரிய குறிப்பிட்ட பீடங்களில் காணப்படுகின்றன. பிரதான நூலகத்தை புதிய கலஹா வீதியில் புதிய கலை அரங்கை அடுத்து மூதவை மண்டபத்திற்கு வலப்புறமாக திரும்புவதன் மூலம் அடைய முடியும். பேராதனைப் பல்கலைக்கழக நூலக வலையமைப்பானது இலங்கையின் மிகப்பழைய மற்றும் மிகப்பெரிய நூலகமாக இலங்கையில் காணப்படுகின்றது. அதன் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்களை வாசிக்க தயவுசெய்து கீழுள்ள இணைய முகவரியில் பார்க்கவும்.

http://www.lib.pdn.ac.lk/About_us/general_info/general_info.html

### அடைதல்கள்

பல சிரேஷ்ட அலுவலக உறுப்பினர்கள் பல்கலைக்கழக நூலக அதிகாரிகள் அமைப்புக்குழு 2013/2014 ம் ஆண்டிற்காக தெரிவுசெய்யப்பட்டனர். திரு. ஆர். மஹேஸ்வரன் என்பவர் தலைவராகவும் திரு. எஸ். பிரேமரத்ன பொதுச் செயலாளராகவும், திருமதி. ச. குணசேகர பொருளாளராகவும் மற்றும் திரு. ஏ. தர்மரத்ன என்பவர் ULA சஞ்சிகைக்கான எழுத்தாளாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ULA இற்கான வருடாந்த ஆராய்ச்சித் தொடர் – 2013- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட கூட்ட மண்டபத்தில் 2013 ஓகஸ்ட் 7ம் திகதி நடைபெற்றது. இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்த முதலாம் தடவையாகும். இதன் பிரதான பேச்சாளராக பேராதனைப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் பேராசிரியர் எஸ்.கே. ஹென்நாயக்க கலந்துகொண்டார். 15 நிகழ்த்துகைகள் காணப்பட்டதோடு அதில் 4 பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட்டவையாகும்.

கலாநிதி (திருமதி) பீ. விஜேதுங்க அவர்கள் 2013 செப்டெம்பர் மாதம் தனது விடுமுறையின் பின்னர் மீண்டும் சேவையில் இணைத்தார். திருமதி. டி.கே. அபேரத்ன என்பவர் உதவி நூலகராக 01.07.2013 முதல் நியமனம் பெற்றார். திரு. ஆர்.பீ. ஹேரத் என்பவர் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக 01.03.2013 அன்று பதவியேற்றார். 07 நூலக உதவியாளர்கள் 10.10.2013 முதல் பதவி நியமனம் பெற்றனர். தொழிலாளர்கள் மூவர் நூலக ஊழியராக பதவியுயர்த்தப்பட்டனர்.

நீதிபதி வீரமன்திரி சேகரிப்புகளுக்கான ஆரம்ப விழாவானது 2013 ஜூலை மாதம் 15ம் திகதி முன்னால் சர்வதேச நீதிமன்ற உபதலைவரான நீதிபதி சி.ஜீ. வீரமன்திரி என்பவர் அன்பளிப்பு செய்திருந்த அவர் எழுதிய புத்தகங்களுக்காக நடைபெற்றது. இந்த சட்ட திரட்டுதல்களில் சுமார் 3500 வெளியீடுகளானவை புத்தகங்கள் சஞ்சிகைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் என்பவை சட்டத்தின் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கியதாக அமைந்தன.

நூலக வலையமைப்பை விட்டு ஓய்வடைந்த, இடமாற்றம் பெற்ற, இறந்த, மற்றும் விலகிய ஊழியர்கள் 7 வேரை கௌரவிக்க நூலக நலன்புரி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கௌரவிப்பு விழாவானது 2013 மார்ச் 22ம் திகதி பிரதான நூலகத்தில் நடைபெற்றது. பிரதி உபவேந்தர் பேராசிரியர் எஸ்.கே. ஹென்நாயக்க அவர்கள் இவ்விழாவின் பிரதம அதிதியாக கலந்துகொண்டு விருதுகளை தி, ஏ.டி. அல்விஸ், திரு. கே.ஜி. ஜயரத்ன, திரு. எச்.எச். சந்திரதாஸ, திருமதி. கமனி ரம்புக்கொத மற்றும் திருமதி. ஈ.எ. குணரத்ன என்பருக்கு அவரின் கணவருக்காக வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நூலகத்தின் சிறந்த நூலக உதவியாளர் மற்றும் சிறந்த நூலகருக்கான பணப்பரிசும் வழங்கப்பட்டது. இந்த விருதுகளானவை முன்னால் நூலகரான திரு. என்.டி.எஸ்.எ. சேனாதீர என்பவரின் சொந்த நிதியின் மூலம் நிறுவப்பட்டவையாகும். சிறந்த நூலக உதவியாளராக திரு. விஜித்த நவரத்ன என்ற பொறியியல் நூலகத்தை சேர்ந்தவரும் திருமதி. எஸ். அமுனுகம என்ற விவசாய பீட நூலகத்தை சேர்ந்தவர்களும் 2010ம் மற்றும் 2011ம் ஆண்டிற்காக தெரிவுசெய்யப்பட்டனர். சிறந்த நூலக ஊழியர்களாக திரு. வி.டி.ஜி. சந்திரசேகரன் மற்றும் திரு. எச்.எம்.

ஹேரத் பண்டா என்ற பிரதான நூலகத்தை சேர்ந்த இருவரும் 2010ம் 2011ம் ஆண்டுகளுக்காக முறையே தெரிவுசெய்யப்பட்டனர்.

பேராசிரியர் ஈ.ஆர். சரத்சந்திர அவர்களின் நூறாவது பிறப்பை ஞாபகார்த்மாக கொண்டு அவரை கௌரவிக்கும் முகமாக அவரால் எழுதப்பட்ட புத்தகங்களின் புத்தகக் கண்காட்சியொன்றை நூலகம் ஏற்பாடு செய்திருந்தது. அடிப்படை எழுத்தறிவு திறன்கள் என்ற கற்கை நெறியை பல்மருத்துவ பீட நூலகம் 2ம் வருட மருத்துவ பீட மாணவர்களின் இணைப்பாடவிதானத்தில் காணப்படும் குறித்த பாடம் குறித்ததான விசேட கற்றலுக்கான இலத்திரனியல் கற்றல் என்பதற்கு கீழ் ஏற்பாடு செய்திருந்ததோடு அது 2013 ஜுன் மாதம் 18 முதல் 25ம் திகதி வரை பேராதனைப் பல்கலைக்கழக தகவல் தொழிநுட்ப நிலையத்தில் நடைபெற்றது. இதன் வளவாளர்களாக திரு. எஜ். பிரேமரத்ன, திருமதி. எச். திஸாநாயக்க, திருமதி. எஸ். பெரேரா மற்றும் திருமதி. சி.என்.கே. அலஹகோன் என்போர் கலந்துகொண்டனர்.

பிரதான நூலகத்திற்கு விலைமதிக்க முடியாத பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர அவர்களின் நாடகக்கலை தொடர்பான கதை வசனங்கள் மற்றும் ஆக்கங்களை பொதுமக்கள் நலனுக்காக அவரின் பாரியார் திருமதி. லலிதா சரத்சந்திர அவர்கள் அன்பளிப்பு செய்துள்ளதோடு பொதுமக்கள் பார்வைக்காக இத்திரட்டுகள் 2014 இல் வைக்கப்படும்.

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

நூலகத்தின் சுத்தப்படுத்தல் வேலைகளுக்காக போதுமான ஊழியர்கள் அற்ற நிலையால் பாதகநிலை ஏற்பட்டுள்ளது. கருவிகள் மற்றும் சேவைகளை பெறுவதிலுள்ள தாமதம் காரணமாக வினைத்திறனானதும் உரிய நேரத்திற்கு பொருத்தமாக சேவையை நூலக வலைப்பின்னலூடாக வழங்குவதில் பாதகதன்மை காணப்படுகிறது.

## எதிர்கால திட்டங்கள்

Bar coding முறைமையை முற்றிலுமாக பிரதான நூலகத்திரட்டுகளில் பூர்த்திசெய்து தன்னிச்சையான முறையில் விநியோகம் நடைபெறல், டிஜிட்டல் நூலகத்தை அபிவிருத்தி செய்தல்,மற்றும் காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்புதல், மேலும் நூலக வலையமைப்பிலுள்ள சிரேஷ்ட அலுவலர்களின் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# C2 தகவல் தொழிநுட்ப நிலையம்

*(பணிப்பாளர் பேராசிரியர் கே.எம். லியனகே அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

## அறிமுகம்

தகவல் தொழிநுட்ப நிலையமானது (ITC) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சிக்காக 2004 இல் தாபிக்கப்பட்டதாகும். இதன் பிரதான நோக்கங்களில் ஒன்றாக பல்கலைக்கழக இளமானிப்பட்ட மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக சமுக ஏனைய அங்கத்தவர்களுக்கு அவர்களின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப திறன்களை வளர்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதாகும். இதனை அடைவதற்காக பல்வகையான பகுதிநேர மற்றும் ஒழுங்குமுறையான பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டும் நடாத்தப்பட்டும் வருகின்றன.

இந்நிலையமானது 320 வேலைத்தளங்களை உள்ளடக்கியதாகவும் அவை பல்வேறு VLANs உடன் ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டதாகவும் 1000Mbps இல் 100 Mbps ஐ தரவு விகிதமாக கணினிக்கு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டது. தற்போது இந்நிலையமானது ஒவ்வொரு file server, web server, mail server , proxy server, database server content management server என்பவற்றையும் 160 இற்கும் மேலாக முறையாக செயற்படும் வேலைத்தளங்களையும் கொண்டிருக்கின்றது. இவ்விணைப்புகளுக்கான பட்டைஅகலமானது குத்தகை அடிப்படையில் இணைய இணைப்பு 20Mbps ஆகவும் 01Mbps என்பதை ஒதுக்கமாக கொண்டதாகவும் இணைய வசதியானது இலங்கை கல்வி மற்றும் ஆராய்ச்சி வலைப்பின்னல் மூலமாகவும் பெறப்படுகின்றது(LEARN). 3 ADSL இணைப்புகளும் இணைய இணைப்புகளுக்காக காணப்படுகின்றன.

## அடைவுகள்

- ICT நிகழ்ச்சிகளை இளமானிப்பட்ட மாணவர்களுக்காகவும் குறுங்கற்கைகளை பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தவர்களுக்கு வழங்குதல்
- LEARN உடன் இணைந்து "பல்கலைக்கழக வலைப்பின்னல் அடிப்படைகள் மற்றும் பிரச்சினை தீர்த்தல்" என்ற பயிற்சி நிகழ்ச்சி
- இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள், கலை, மருத்துவம் மற்றும் மிருக வைத்திய மற்றும் விலங்கு விஞ்ஞான பீடங்களை சேர்ந்த கல்விசார் அலுவலர்களுக்கு இளமானிப்பட்ட கல்வியில் இலத்திரனியல் கற்றல் என்ற தலைப்பிலான ஒருநாள் பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது.
- 21ம் நூற்றாண்டில் உயர்க்கல்வி (HETC)என்ற கருத்திட்டத்தின் மூலம் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்காக தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப திறன்கள் அபிவிருத்தி என்ற பயிற்சி நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- HETC கருத்திட்டத்தின் கீழ் UTEL மற்றும் UCTIT இணைய பரீட்சைகளை நடாத்துவதற்கு தேவையான கணனி வசதி வழங்கப்பட்டது.
- இணைய இணைப்பு வேகமானது மாணவர்களுக்காக 2Mbps இலிருந்து 20Mbps ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்தும் ஒன்றிலுள்ள வசதிகொண்ட புதிய 50 இயந்திரங்கள் நிலையம் திரட்டிய நிதியிலிருந்து வாங்கப்பட்டது.
- உழைத்த நிதியின் மூலமாக கட்டட திருத்த வேலைகள் நடைபெற்றன.
- HETC யின் அனுசரணையுடன் பல்கலைக்கழக முறைமையுள் கல்விசாரா ஊழியர்களுக்காக தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக பயிற்சிக் கையேடு அபிவிருத்தி செய்யப்பட்டது.

## எதிர்காலத் திட்டங்கள்

பொதுப்பயிற்சி நோக்கமானது தொழில்சார் தகுதிகளை பெறுதலை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப விளிப்புணர்வு பெறுவது தொடர்பாக திசைமாற்றம் ஏற்பட்டிருப்பதால் நிலையத்தின் முகாமைத்துவ குழுவானது இதனை விருத்திசெய்யவும் பல்கலைக்கழகத்தின் பல கல்விசார் துறைகளுடன் ஒன்றிணைந்து பட்டப்படிப்பு மட்டத்திலான நிகழ்ச்சிகளை பொதுமக்களுக்காக எதிர்வரும் வருடங்களில் அறிமுகம் செய்யவும் தீர்மானமெடுத்துள்ளது.

இந்நிலையமானது மாணவர்கள் சொந்தமாக கணனி வைத்திருப்பதானது படிப்படியாக அதிகரித்து வருவதனால் கணனி சேவை வழங்குவதில் தேவையான மாற்றங்கள் குறித்து கற்றலுக்கான தேவை ஏற்பட்டுள்ளது.

**நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், மகாநாடுகள், பயிற்சிப்பட்டறைகளின் விபரங்கள்- 2013**

**தகவல் தொழிநுட்ப நிலையத்தால் நடாத்தப்பட்டவை-2013**

### இளமாணிப்பட்ட நிகழ்ச்சிகள்

| பீடம் | கற்கை குறி மற்றும் பெயர் | மாணவர் எண்ணிக் | இருந்து | வரை | காலம் (மணி) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விரிவுரை | ஆய்வுகூடம் | மொத்தம் |
| விவசாயம் | ATM 2- தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | 211 | 7/29/2013 | 8/30/2013 | 16 | 32 | 48 |
| இணைந்த சுகாதாரம் | AH1102- தகவல் தொழிநுட்பம் | 194 | 4/29/2013 | 8/13/2013 | 20 | 30 | 50 |
| கலை | FND115-தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப திறன்கள் | 1148 | 9/10/2013 | 1/3/2014 | 20 | 50 | 70 |
| மிருக வைத்தியம் மற்றும் விலங்கு விஞ்ஞானம் | VMEU312-கணனி அறிவு | 73 | 12/13/2014 | 6/25/2013 | 15 | 30 | 45 |
| கலை | கலை,வணிகம், முகாமைத்துவ பிரிவு இளமானிப்பட்ட மாணவர்களின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப திறன் அபிவிருத்தி | 242 | 2/13/2013 | 4/8/2013 | 24 | 56 | 80 |

## C3 ஆங்கில மொழி கற்பித்தல் அலகு(ELTU)

*(துறைத்தலைவர் திரு. ஏ.என்.எம். சல்காடோ அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் அலகானது கல்வி உதவி அலகாகவும் அதன் அடிப்படை நோக்கமாக இளமானிப்பட்ட மாணவர்களுக்கு ஆங்கில மொழியை கல்வி நோக்கங்களுக்காகவும் பொது நோக்கங்களுக்காகவும் கற்பித்தல் காணப்படுகிறது. ஆங்கில மொழி கற்பித்தல் அலகானது 8 பீடங்களிலும் ஆங்கில கற்கை நிகழ்ச்சிகளை நடாத்துவதோடு தற்போது 4500 மாணவர்கள் வரையில் இவ் அலகின் மூலம் வழங்கப்படுகின்ற கற்பித்தல் பாடநெறிகளுக்காக பல்வேறு மட்டங்களில் பதிவு செய்துள்ளனர். குறித்த பீடங்களின் தேவைகளுக்கேற்ப ஆங்கில கற்கை நெறிகளானவை முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட இளமானிப்பட்ட மாணவர்களுக்காக நடாத்தப்படுகின்றன. நடைபெறும் கற்கை நெறிகளாக இரண்டாம் மொழியாக ஆங்கிலம் (ESL), விசேட நோக்கங்களுக்காக ஆங்கிலம் (ESP),மற்றும் கல்வி நோக்கங்களுக்காக ஆங்கிலம் (EAP) என்பன காணப்படுகின்றன.

இவ் அலகின் தூரநோக்கமாக ஆங்கில அறிவை வழங்குவதன் மூலமாக இளமானிப்பட்ட மாணவர்களுக்கானஅதிசிறந்த வலுவூட்டல் நிலையமாக திகழ்தல் காணப்படுகிறது. எமது ஆவலானது மாணவர்களுக்கு ஆங்கில திறன்களை விருத்தியடையச் செய்வதன் மூலம் அவர்களின் ஒழுக்கங்களில் மற்றும் எதிர்கால தொழில்களில் செயற்திறனாக செயற்பட வைப்பதாகும். முன்பதாக இவ்வலகானது ஆங்கில துறையின் ஆங்கில உபதுறையாக செயற்பட்டு வந்துள்ளது. இது சுயாதீன அலகாக 1987 இல் தாபிக்கப்பட்டது.

இவ்வலகின் பிரதான பொறுப்பாக ஆங்கில வகுப்புகளை புதிய அனுமதி மாணவர்களுக்காக அவர்கள் தாய்மொழி மூலமான பாடசாலை கல்வியிலிருந்து ஆங்கில கல்வியை உயர்கல்வி மட்டத்திற்காக கற்பித்தலாகும். இவவலகால் இரண்டு வகையான கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்றன. மாணவர் பல்கலைக்கழக அனுமதி பெற்றவுடன் அவர்கள் கற்கைநெறிக்கு உள்வாங்கப்பட்டு அடிப்படை ஆங்கில திறன்களை விருத்திசெய்து அவர்கள் தமது பட்டப்படிப்பினை ஆரம்பிக்கும் போது ஆங்கில மொழிமூலமாக இலகுவில் விளங்கிக்கொள்வதற்கு உதவியாக அமையும். இரண்டாவதாக கற்கை நிறைவுற்றதும் தொடர்தேர்ச்சியான ஆங்கில கற்கை நெறியாக ஆங்கில கற்கை நெறி அமையும். தற்பேது பருவத்தவணை முறை அறிமுகபடுத்தப்பட்டதுடன் "Intensive"என்கின்ற பதம் பயன்படுத்தப்படுவதில்லை. எனினும் ஆங்கில மொழி கற்கைகளானவை பல்கலைக்கழக அனுமதியுடன் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக நடைபெறுவதோடு முதலாம் பகுதியான ஆங்கில நிகழ்ச்சி சுமார் 10 வாரங்கள் வரை நடைபெறுவதோடு அது ஒவ்வொரு பீடங்களினதும் தேவைகள் மற்றும் வேண்டுகோள்களுக்கமைய வேறுபடும். தொடர்ச்சியாக நடைபெறும் கற்கைநெறியின் காலம் 1 – 3 வருடங்கள் வரை வேறுபடும்.

மாணவர் வரவு கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு 80 வீதமான வகுப்புகளுக்கு வருகைத் தரவேண்டியது முதல் இரு பருவத் தவணைகளுக்குமான பரீட்சைகளுக்கு தகுதி பெறுவதில் கவனிக்கப்படும். ஒழுங்கான வருகையானது வெற்றியுள்ள கற்றல் விளைவுகளை உறுதிப்படுத்துவதோடு அனைத்து மாணவர்களும் ஆங்கில திறமைகளை வளர்த்துக்கொள்வதற்காக வகுப்புகளுக்கு வருகைத்தர உற்சாகப்படுத்தப் படுகின்றனர். ஆங்கிலத்தில் சித்தியானது ஒரு மாணவர் ஆங்கில வகுப்புகளுக்கு சமுகம் தருவதற்கான கட்டாய தேவையாகும்.

தற்போது உலக வங்கி மூலமான மானியம் மூலமாக மாணவர்களுக்கும் கல்விசார் அலுவலர்களுக்கும் பயிற்சிப்பட்டறைகளை ஏற்பாடு செய்ய உபயோகப்படுத்தப்படுவதோடு பேராதனைப் பல்கலைக்கழக ஆங்கில கற்பித்தல் அலகின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யவும் இந்நிதி பயன்படுத்தப்படும்.

### அடைவுகள்

HETC நிகழ்ச்சியை அமுல்படுத்துதல்

### தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

அலுவலர் வெளியேற்றம் அதிகளவில் காணப்படுகின்றதை ஆசிரியர்களாக எதிர்நோக்குகின்றோம். அநேக பல்கலைக்கழகங்களில் அவர்களுக்கு தகுதிகாண் விரிவுரையாளர் பதவி வழங்கப்படுவதால் இந்நிலை ஏற்படுகின்றது.

## C4 தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகு

*(பணிப்பாளர், கலாநிதி. பீ.எம்.கே. பெரேரா அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகானது 2005 இல் உலக பல்கலைக்கழக சேவைகள் கட்டடத் தொகுதியில் தாபிக்கப்பட்டதோடு தொடர்ச்சியாக வினைத்திறனானதும் செயல்திறனானதுமான முறையில் பல்கலைக்கழக சமூகத்திற்கு பல்வகையான சேவைகளை வழங்குகின்றது. இவ்வலகானது தற்போது இலங்கை பல்கலைக்கழக முறைமையினுள் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆசோசனை கற்பித்தலில் பிணக்குகளற்ற தலைமை வகிக்கின்றது. இந்நிலைமையானது பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் இவ்வலகுடன் இணைந்துள்ள அலுவலர்களின் அயராத முயற்சியினால் ஏற்பட்டதாகும்.

இவ்வலகினால் நடாத்தப்படும் செயற்பாடுகளாக புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அறிமுக நிகழ்ச்சிகள் நடாத்துதல், தொழில் தொடர்பான ஆலோசனைகளை மற்றும் சேவைகளை மாணவர்களுக்கு நடாத்துதல், மாணவர்களுக்கு மென்திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை HETC மூலம் நடாத்துதல், மன உழைச்சலுள்ள மாணவர்களுக்காக உளவியல் ஆலோசனை வழங்கல், மத்திய மாகாண பாடசாலை மாணவர்களுக்காக CSR செயற்பாடுகளை நடாத்துதல், இறுதியாண்டு மாணவர்களை தொழிற்துறையுடன் இணைத்து மென்திறன்களை மேம்படுத்தல் என்பன காணப்படுகின்றன. எல்லா தொழில் நிகழ்ச்சிகளும் கேள்வித் தூண்டல் எழும்புதல் அடிப்படையில் நடைபெற்றுள்ளதோடு அவை பல்கலைக்கழகத்தின் தந்திரோபாயத் திட்டத்திலும் அலகின் தந்திரோபாயத்திட்டத்திற்கும் அமைவாகவே நடைபெறுகின்றன. கலைப்பீட மாணவர்களுக்காக அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த தகவல் தொழிநுட்பம் மற்றும் மென்திறன்கள் தொடர்பான 3 நாள் கலப்பு நிகழ்ச்சியானது 3ம் மற்றும் 4ம் வருட கலைப்பீட மாணவர்களுக்கு அதிக அனுபவத்தை குறிப்பாக சுயவிபரக்கோவை தயாரித்தல் மற்றும் நேர்முகத் தேர்வுகளுக்கு முகம்கொடுக்க தேவையான தந்திரோபாயங்கள் போன்ற எதிர்கால தொழில் ரீதியாக அவர்கள் தெரிவுகளுக்கான முறையில் வடிவமைக்கப்பட்டிருந்ததோடு அதற்கு கடுமையான கேள்வி காணப்பட்டது.

சுமார் 10-12 ஆலோசனை தொடர்கள் கிழமையொன்றுக்கு மாணவர்கள், கல்விசார் அலுவலர், மற்றும் கல்விசாரா அலுவலர்களுக்கு வேண்டுகோள் அடிப்படையில் நடாத்தப்பட்டது. இவ் அலகானது பல்கலைக்கழக சுகாதார நிலையத்துடன் நெருக்கமான உறவை கொண்டிருப்பதோடு தேவையானபோது வைத்தியர்களினதும் ஏனைய துறைசார் நிபுணர்களினதும் உதவிகள் பெறப்பட்டன. அநேக மாணவர்களின் திறன் அபிவிருத்திக்கு உதவி வழங்கியதோடு அவர்கள் கல்வியை தைரியமாக தொடர்கின்றனர். இவ் அலகானது மன அழுத்தத்திலுள்ள அநேக மாணவர்களுக்கு பொருத்தமான நேரத்தில் இடையீடுகளை மேற்கொண்டு மருத்துவ சிகிச்சையளித்ததால் இடைவிலகல் தடுக்கப்பட்டுள்ளதோடு வெற்றி காணப்பட்டுள்ளது. இவ்வலகானது தற்கொலை முயற்சியிலீடுபட்ட மாணவர்களுக்காகவும் உதவி செய்து அவர்களுக்கும் பிரச்சினைகளை முகம்கொடுக்க தேவையான திறன்களை அபிவிருத்தி செய்ய உதவியுள்ளது.

### அடைதல்கள்

- ஆலோசனை வழங்கல் மற்றும் மென்திறன்கள் அபிவிருத்தி தொடர்பான இரு கையேடுகள் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல் தொடர்பாக தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் நிலைய பணிப்பாளரினால் எழுதப்பட்டது(HETC கருத்திட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டிருந்த ஒரு கருத்திட்டம்).
- முயற்சியாண்மை திறன்கள் அபிவிருத்தி தொடர்பான கலைப்பீட கல்விசார் அலுவலர்கள் மற்றும் மாணவர்களுக்கான நிகழ்ச்சி (இலங்கை இளைய முயற்சியாளர்களுடன் இணைந்து நடாத்தப்பட்டது).
- முப்படையினருக்காக விசேட ஒருமாத நீண்ட ஆலோசனை வழங்கல் நிகழ்ச்சியானது பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சியளித்தல் என்ற அடிப்படையில் ரன்தெம்பே தேசிய கடெட் படை நிலையத்தில் நடாத்தப்பட்டது.
- நான்கு HETC அனுசரணையினுடனான மென்திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் கலை, பல் மருத்துவ விஞ்ஞானங்கள், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் மற்றும் விஞ்ஞானபீட மாவர்களுக்காக ஒரு நிகழ்ச்சியில் 160 – 180 பங்குபற்றுநர்களோடு நடாத்தப்பட்டது.
- மூன்று தொழில் விரிவுரைகள் விவசாய பீட மாணவர்களுக்காக நடாத்தப்பட்டது(ஒரு நிகழ்ச்சிக்கு 220).

- இரு தொழில் பயிற்சிப்பட்டறைகள் பல்மருத்துவ பீட மாணவர்களுக்காக நடாதப்பட்டது(96 மாணவர்கள்).
- சுயவிபரக்கோவை தயாரிப்பு பயிற்சியானது கலைப்பீட (180 மாணவர்கள்) மற்றும் விஞ்ஞானபீட (120 மாணவர்கள்) மாணவர்களுக்காக நடாத்தப்பட்டது.
- வணிகமாணிப்பட்ட மாணவர்களுக்காக தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது. (10 நிகழ்ச்சிகள் ஒரு நிகழ்வுக்கு 20 பேர் வீதம்)
- புதிய கல்விசார் அலுவலர்களுக்காக தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் நபர்களுக்கிடையேயான திறன்கள் அபிவிருத்தி மற்றும் உணர்ச்சி மிக்க நுண்ணறிவு எனும் தலைப்புகளில் நடைபெற்றது. (ஒரு நிகழ்வில 26 பேர்கள்)
- தொழிலாளர் தரத்தை சேர்ந்த பல்கலைக்கழக ஊழியர்களுக்காக பத்து ஊழியர் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் (50 பேர்களைக் கொண்ட 10 நிகழ்வுகள் ) வேலைக்கான செயற்திறனான மனப்பாங்கு எனும் தலைப்பில் நடாத்தப்பட்டது.
- தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகின் பணிப்பாளரால்HETC அனுசரணையின் கீழ் கல்விசார் அலுவலர்களுக்காக தந்திரோபாய திட்டமிடல் மற்றும் ஆலோசனை வழங்கல் என்ற தலைப்பிலான ஐந்து பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டன. (60-80 வரையான பங்குபற்றுனர்கள் ஒவ்வொரு நிகழ்ச்சிக்குமாக பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்டிருந்தனர்)
- கல்விசார் மற்றும் கல்விசாரா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அலுவலர்களுக்காக தொழில் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பாக ஆறு பயிற்சிப்பட்டறைகள் நடைபெற்றன.(HETC கருத்ததிட்டம்)
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுசரணையில் மூன்று தேசிய மட்ட ஆலோசனை வழங்கல் பயிற்சிப்பட்டறைகள் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட கல்விசார் மற்றும் கல்விசாரா அலுவலர்களுக்காக நடாத்தப்பட்டன. (ஒரு நிகழ்வுக்கு 80 பேர்கள்)
- யாழ்ப்பாண, ஊவா வெல்லச, மற்றும் சபரகமுவ பல்கலைக்கழககங்களை சேர்ந்த கல்விசார் அலுவலர்களுக்காக பாடத்திட்டத்தில் மென் திறன்கள் அபிவிருத்தியை உட்பொதிதல் எனும் மூன்று பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டன.
- இரு பயிற்சிப்பட்டறைகள் இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்விசார் அலுவலர்களுக்காக (30 – 40 வரை ஒரு நிகழ்வில்) மென் திறன்கள் அபிவிருத்தி என்ற தலைப்பில் நடாத்தப்பட்டன.
- இரண்டு பயிற்சிப்பட்டறைகள் ஜயவர்தனபுர பல்கலைக்கழக அலுவலர்களுக்காக “ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் மனஅழுத்த முகாமைத்துவம்” எனும் தலைப்புகளில் நடாத்தப்பட்டது.
- பாடசாலை ஆசிரியர்களுக்காக கண்டி வலயக்கல்விக் காரியாலயத்தின் அனுசரணையுடன் மூன்று பயிற்சிப்பட்டறைகள் “மாணவர்களின் தேவைகளை புரிந்துகொள்தல் மற்றும் செயல்திறனான ஆலோசனை வழங்கல்” எனும் தலைப்பில் நடாத்தப்பட்டது (ஒரு நிகழ்வுக்கு 80 பேர் வீதம்)
- இந்நிலையத்தின் பணிப்பாளர் கௌரவ அமைச்சரின் தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சியின் தொழில் வழிகாட்டல் பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளித்தலில் வளவாளராக சேயைாற்றுவதோடு திருமதி. அரோசா பெரேரா அவர்களும் கண்டி மாவட்டத்தின் இரு நிலையங்களினதும் மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளை நடாத்துவதற்கான வளவாளராக சேவையாற்றுகின்றார்.

## தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகிற்கான மேலதிக வலுப்படுத்தல் தேவை

இவ் அலகானது தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கலுடன் தொடர்புடைய பல்வேறு வகையான செயற்பாடுகளுக்கு தேவைகளை கையாளக்கூடிய அனைத்து கருவிகளையும் கொண்டுள்ளது. எவ்வாறாயினும் கூரையிலுள்ள நீர் ஒழுக்கு காரணமாக மழைக்காலங்களில் பயிற்சிப்பட்டறைகளை நடாத்துவது பிரச்சினையாகவுள்ளது. கூரையானது முழுவதுமாக திருத்தப்பட வேண்டியுள்ளது. இப்ராமரிப்பு வேலை எதிர்காலத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## எதிர்காலத் திட்டங்கள்

இவ்வலகானது எதிர்காலத்தில் மேலும் அதன் ஒத்துழைப்புகளை கைத்தொழில் துறையின் பல்லின அக்கறை செலுத்துவோருடன் அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. கைத்தொழில் துறையுடனான பங்குடமைகளானவை மாணவர்களுக்கு அவர்கள் கைத்தொழல் சம்பந்தமாக சிறந்த விளிப்புணர்வை அதன் கேள்விகள் மற்றும் அவர்களுக்கு தேவையான மனப்பாங்கு திறன்கள் சேர்க்கப்பட்ட தகுதிகள் போன்றவற்றில் ஏற்படுத்தவும்

தொழில் துறையில் அவர்களுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தலுமாகும். இறுதியாண்டு மாணவர்களுக்காக அவர்கள் ஆரம்ப தொழிலாக முகாமைத்துவ பயிற்சியாளராக இணைவதற்கு தேவையான வெளிவாரி கற்கை நெறிகளை தொடர்பது தொடர்பாக ஆலோசனை வழங்குதல்.

தொழில் ஆலோசனையானது தனிநபர்களின் நீண்டகால கனவுகளுக்கு அமைவாக அவர்களுக்கு கலந்துரையாட தேவையானவற்றுக்காக உதவும் பொருட்டு வலுப்படுத்தப்படும். கைத்தொழில் துறையினால் பெறுமதியாகக் கருதும் பண்புகள் மற்றும் மனோபாவங்கள் குறித்ததாக பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்படும்.

## பின்னிணைப்பு D துணைச் சேவைகள்

### D1 ஊழியர் அபிவிருத்தி நிலையம்

*(பணிப்பாளர் கலாநிதி சி. பெனரகம அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

ஊழியர் அபிவிருத்தி நிலையமானது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1999 மார்ச் மாதம் தாபிக்கப்பட்டது. தனிப்பட்ட பீடங்களின் வேறுபட்ட அலகுகளின் பொதுவான நிறுவனமாக இந்நிலையமானது பேராதனைப் பல்கலைக்கழக மற்றும் முறைமையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களின் ஊழியர் அபிவிருத்தியை மேம்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது ஊழியர் அபிவிருத்தி நிலையமானது நாட்டின் ஏனைய நிறுவனங்களுக்கும் ஊழியர் அபிவிருத்தி சேவைகளை வழங்கக்கூடிய இயலளவை பெற்று காணப்படுகிறது.

### ஊழியர் நிலை

ஊழியர் அபிவிருத்தி நிலையமானது ஒரு பகுதிநேர பணிப்பாளரை (கல்விசார் அலுவலர்) கொண்டுள்ளதோடு நிரந்தர சுருக்கெழுத்தாளர் ஒருவரையும் தொழிலாளி ஒருவரையும் கொண்டுள்ளது. இந்நிலையமானது முகாமைத்துவ குழுவால் முகாமை செய்யப்படுவதோடு நிகழ்ச்சிகளானவை நிகழ்ச்சிகள் குழுவால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

### அடைவுகள்

2013ம் ஆண்டினுள் ஊழியர் அபிவிருத்தி நிலையமானது பின்வரும் பயிற்சிப்பட்டறைகளையும், பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளது.

### 2013 இல் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறைகள்

1. **வேலைத்தள வெற்றியின் இரகசியங்கள் தொடர்பான பயிற்சிப்பட்டறை**
   ஊழியர் அபிவிருத்தி நிலையமானது பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் தரத்திலுள்ள அனைவருக்காகவும் வேலைத்தள வெற்றியின் இரகசியங்கள் என்ற ஒரு நாள் பயிற்சிப்பட்டறையை ஏற்பாடு செய்திருந்தது. இத்தரத்திலுள்ள மொத்த நபர்கள் 500 வரையில் காணப்பட்டதோடு இதேமாதிரியான பயிற்சிப்பட்டறைகள் குழுக்களுக்காக நடாத்தப்பட்டன. இந்த தொடர் பயிற்சிப் பட்டறைகள் 2012 இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதோடு எஞ்சியவை 2013 ஜனவரி மாதம் 3ம் 4ம் 8ம் 10ம் மற்றும் 11ம் திகதிகளில் மு.ப. 9 மணி தொடக்கம் பி.ப. 5 மணிவரை மேல் ஹந்தானை பயிற்சி நிலையத்தில் நடைபெற்றதோடு கலாநிதி. சாலிந்த பெனரகம (பணிப்பளர் உ..அ.நி) மற்றும் கலாநிதி பீ.எம்.கே. பெரேரா (பணிப்பாளர் தொ.வ.ஆ. அலகு) என்பவர்கள் வளவாளர்களாக மேற்குறிப்பிடப்பட்ட 10 பயிற்சிப் பட்டறைகளிலும் கலந்துகொண்டனர்.

2. **செயற்திறனான தொடர்பாடல் மற்றும் நிகழ்த்துகை திறன்கள்**
   செயற்திறனான தொடர்பாடல் மற்றும் நிகழ்த்துகை திறன்கள் என்ற தொனிப்பொருளிலான ஒரு நாள் பயிற்சிப் பட்டறைகள் 2013 ஏப்ரல் 18ம் 19ம் திகதிகளில் மு.ப. 9 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை மேல் ஹந்தானை பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. ஒரே மாதிரியான இரு பயிற்சிப்பட்டறைகள் இரு நிர்வாக அலுவலர் குழுக்களுக்காக நடைபெற்றதோடு இரு பயிற்சிப்பட்டறைகளிலும் இருபத்து மூன்று அலுவலர்கள் பங்குபற்றினர். கலாநிதி சாலிந்த பெனரகம (பணிப்பாளர் ஊ.அ.நி) மற்றும் கலாநிதி. ஜயலத் எதிரிசிங்க (பணிப்பாளர் தொ.தொ.க.நி) ஆகியோர் இதில் வளவாளர்களாக பணியாற்றினர்.

3. **“பல்கலைக்கழகத்தில் நிர்வாக முறைகளும் நிதி நியமங்களும்” தொடர்பான பயிற்சிப்பட்டறை**
   பல்கலைக்கழகத்தில் நிர்வாக முறைகளும் நிதி நியமங்களும் தொடர்பான பயிற்சிப்பட்டறை பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீட கல்விசார் அலுவலர்களுக்காக மருத்துவ பீட சபை அறையில் 2013 ஜூலை மாதம் 25ம் திகதி மு.ப. 9 மணி முதல் பி.ப 1.00 மணிவரை நடைபெற்றது. கல்விசார் துறைத்தலைவர்களும் ஏனைய அக்கறையுடைய முப்பது கல்விசார் அலுவலர்களும் இந்த பயிற்சிப்படறையில் கலந்து கொண்டனர். பேராசிரியர் அநுர விக்கிரசிங்க (பீடாதிபதி விஞ்ஞான பீடம்) மற்றும் திரு. பீ.பீ. உபநந்த (பிரதி நிதியாளர்) ஆகியோர் வளவாளர்களாக பணியாற்றினர்.

4. **“எனது தொழிலும் நானும்”- கல்விசாரா அலுவலர்களுக்கான ஓர் அறிமுக நிகழ்ச்சி**

“எனது தொழிலும் நானும்”- என்ற அறிமுக நிகழ்ச்சி இரு நாள் பயிற்சிப்பட்டறையானது புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட இலிகிதர் மற்றும் இணைந்த தரங்களுக்காக நடாத்தப்பட்டது. இப்பயிற்சிப்பட்டறையானது 2013 ஜுலை மாதம் 3ம் மற்றும் 5ம் திகதிகளில் மேல் ஹந்தானை பயிற்சி நிலையத்தில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4 மணிவரை நடைபெற்றது. இப்பயிற்சிப்பட்டறையில் புதிதாக நியமனம் பெற்ற 28 கல்விசாரா ஊழியர்கள் கலந்துகொண்டனர். கலாநிதி சாலிந்த பெனரகம(பணிப்பாளர் ஊ.அ.நி), கலாநிதி பீ.எம்.கே. பெரேரா (பணிப்பாளர் தொ.வ.ஆ.அ), பேராசிரியர் எஸ்.பீ.எஸ். அபேகோன் (முன்னால் உபவேந்தர்), திருமதி. கோசாம்பிகா சமரதேகர (சிரேஷ்ட தனிப்பட்ட செயலாளர்) மற்றும் திருமதி. சி.எம்.என். ரணவன (சிரேஷ்ட உதவிப் பதிவாளர்) ஆகியோர் வளவாளர்களாக பணியாற்றினர்.

5. **பொது பொறுப்புடைமை மற்றும் திணைக்கள இருப்பு முகாமைத்துவம் என்ற பயிற்சிப்பட்டறை**

பொது பொறுப்புடைமை மற்றும் திணைக்கள இருப்பு முகாமைத்துவம் என்ற பயிற்சிப்பட்டறையானது 2013 டிசம்பர் மாதம் 4ம் 5ம் திகதிகளில் மூதவை அறையில் நடைபெற்றது. பீடங்களின் பீடாதிபதிகள், கல்விசார் மற்றும் நிர்வாக பிரிவு, சேவை அலகு, நூலக, மாணவர் விடுதி என்பவற்றின் தலைமைஅதிகாரிகள் மற்றும் இருப்பு பராமரிப்புக்கு பொறுப்பான உத்தியோகத்தர் என்போர் இதற்காக அழைக்கப்பட்டிருந்தனர். இரு பயிற்சிப்பட்டறைகளுக்குமாக 231 பேர் பங்குபற்றினர். திரு. எஜ்.சி. மாயாதுன்னே (முன்னால் கணக்காய்வாளர் நாயகம்) மற்றும் திரு. என்.ஜீ.கே.கே. செனவிரத்ன (ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர்) என்போர் வளவாளர்களாக பணியாற்றினர்.

6. **கணக்கீட்டு அறிக்கைகளை தயாரித்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை**

ஊழியர் அபிவிருத்தி நிலையமானது நிதி பரிபாலனக் கிளையுடன் ஒன்றிணைந்து கணக்கீட்டு அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறையொன்றை 2013 டிசெம்பர் 18ம் திகதி மு.ப. 9 மணி முதல் ப.ப. 12.30 மணிவரை மூதவை அறையில் நடாத்தியது. திரு. எம்.டி. கன்துனே (பிரதம நிதியாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்) மற்றும் திரு டி.டி. உபநந்த (பிரதி நிதியாளர்) என்போர் வளவாளர்களாக பணியாற்றினர். பீடாதிபதிகள், கல்வித்துறைத் தலைவர்கள், சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள், உதவிப்பதிவாளர்கள், சிரேஷ்ட உதவி நிதியாளர்கள், உதவி நிதியாளர்கள், மற்றும் சிரேஷ்ட கல்விசாரா உத்தியோகத்தர் உட்பட 97 கல்விசார் மற்றும் கல்வி சாரா அலுவலர்கள் இதில் கலந்து கொண்டனர்.

7. **கல்விசாரா அலுவலர்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சி**

ஊழியர் அபிவிருத்தி நிலையமானது தகவல் தொழிநுட்ப நிலையத்துடன் ஒன்றிணைந்து பல்கலைக்கழக கல்விசாரா அலுவலர்களுக்காக (இலிகிதர், தொழிநுட்ப மற்றும் இணைந்த தரங்கள்) அடிப்படை கணனி திறன்கள் மற்றும் பிரயோகங்கள் தொடர்பான 64 மணித்தியால பயிற்சி நிகழ்ச்சியொன்றை ஆரம்பித்தது. இந்நிகழ்ச்சியானது சனிக்கிழமைகளில் 2013 நவம்பர் மாதம் முதல் 2014 ஜனவரி மாதம் 11ம் திகதி வரை நடைபெற்றது.

## பயிற்சி நிகழ்ச்சிகள்

## கல்விசார் அலுவலர்களுக்கான ஆறாம் மற்றும் ஏழாம் அறிமுக நிகழ்ச்சி (2 வேறுபட்ட நிகழ்ச்சிகள்)

ஊழியர் அபிவிருத்தி நிலையமானது 2 அறிமுக நிகழ்ச்சிகளை கல்விசார் அலுவலர்களுக்காக 2013இல் பின்வரும் தினங்களில் நடாத்தியது.

| பிரிவுகள் | 1ம் நிகழ்ச்சி | 2ம் நிகழ்ச்சி |
|---|---|---|
| 1ம் பிரிவு | பெப்ரவரி 12-15 மற்றும் 8-22 | ஆகஸ்ட் 13-16 மற்றும் 19-23 |
| 2ம் பிரிவு | மார்ச் 11-15 மற்றும் 18-22 | செப்டெம்பர் 9-13 மற்றும் 16-20 |
| 3ம் பிரிவு | ஏப்ரல் 18, 19, 26-26 மற்றும் 29 | ஒக்டோபர் 14, 15 மற்றும் 21-25 |

25 பங்குபற்றுனர்கள் பேராதனைப் பல்கலைக்கழகம், ரஜரட்ட, பௌத்த சிராவக பிக்கு பல்கலைக்கழகங்களிலிருந்து 1ம் நிகழ்ச்சியிலும் 24 பங்பற்றுனர்கள் பேராதனைப் பல்கலைக்கழகம், பௌத்த சிராவக, மற்றும் தென் கிழக்குப் பல்கைக்கழகங்களிலிருந்து 2ம் நிகழ்ச்சியிலும் பங்குபற்றியிருந்தனர்.

## தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

ஊழியர் அபிவிருத்தி நிலையமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு 2013ம் ஆண்டிற்கான செயற்பாடுகளுக்கான கருத்திட்ட பிரேரணையொன்றை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 937 இன் கீழ் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை வழங்க முடிவதோடு ஏனைய உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் ஊ.அ.நிலையமானது ஒவ்வொரு பல்கலைக்கழக ஊழியர்களுக்குமாக 2014 இறுதிக்குள் ஒரு பயிற்சி நிகழ்ச்சியையாவது வழங்க எதிர்பார்க்கின்றது.

1. பல்கலைக்கழக உயர் முகாமைக்கு வேலை வினைத்திறனை விருத்தியடையச் செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சி
2. நபர்களுக்கியடையேயான தொடர்புகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான நிர்வாக அலுவலர்களுக்கான பயிற்சி வழங்கல்
3. ஊழியர் அபிவிருத்தி நிலைய சேவைகளை உயர்த்துதல்

## எதிர்காலத் திட்டங்கள்

ஊழியர் அபிவிருத்தி நிலையமானது பல்கலைக்கழகத்தின் அனைத்து மட்டங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஒரு பயிற்சி நிகழ்ச்சியையாவது வழங்க எதிர்பார்த்துள்ளது.

ஊழியர் அபிவிருத்தி நிலையமானது அனைத்து வசதிகளையும் கொண்ட பயிற்சி நிலையமாக புதிய இடத்திற்கு காரியாலத்தை மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது.

## D2 சுகாதார நிலையம் மற்றும் சுகாதார சேவைகள்

*(பிரதம மருத்துவ அதிகாரி வைத்தியக் கலாநிதி பீ.எம்.எ.சமரக்கொடி அவர்களால் அறிக்கையிடப்பட்டது.)*

### அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழக சுகாதார நிலையமானது அரசாங்கத்தால் பராமரிக்கப்படும் அல்லது அரசாங்கவுடைமை அல்லது தனியார்உடைமை நடுத்தர மட்ட நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது இணையற்ற நிலையமாக உள்ளது.

இந்நிலையமானது மருத்துவ பராமரிப்பு சேவைகளை சுமார் 20,000 நபர்களை மாணவர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்குகிறது. மேலும் சமுக சுற்றாடல் சுகாதார பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதோடு குப்பைகளை அகற்றுவதையும் முகாமை செய்கிறது.

நன்கு ஏற்பாடு செய்யப்பட்ட வேலைத்திட்டமானது மாபெரும் சனத்தொகையின் சுகாதார தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு நபருக்குமான தனித்தனியான கோர்ப்புகள் சுகாதார நிலையத்தால் பராமரிக்கப்படுகின்றன. ஒரு ஊழியரின் கோர்ப்பானது அவரின் ஆட்சேர்ப்பு தகுதிக்கான மருத்துவ அறிக்கையுடன் தொடங்கப்படுவதோடு ஒரு மாணவரின் கோர்ப்பானது அவரின் ஆரம்ப மருத்துவ அறிக்கையுடன் தொடங்கப்படுகிறது. ஊழியர்களின் கோர்ப்பானது அவர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெறும்வரை பராமரிக்கப்படுவதோடு மாணவர்களின் கோர்ப்புகள் அவர்கள் பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்யும்வரை பராமரிக்கப்படுகின்றன.

ஒரு அவதானிப்பாளருக்கு ஒவ்வொரு தனிநபர்களுக்குமாக அவர்கள் நோய்வாய்ப்பட்டிருப்பினும் இல்லாவிட்டாலும் தனித்தனியான கோர்ப்புகளை இவ்வளவு பருமனைக் கொண்ட சனத்தொகைக்காக பராமரித்துவரும் ஒரே நிறுவனமாக இந்நிலையத்தை கண்டுகொள்ள முடியும்.

மாணவர்கள் மற்றும் ஊழியர்களுடன் தொடர்புடைய பொது மருத்துவ ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக பின்வரும் சேவைகளும் வழங்கப்படுகின்றன.

1. அதிக அபாயநிலைமையுள்ள மாணவர்களுக்கு ஊசியடித்தல்(கல்லீரல் விக்க B/ARV/TT)
2. ஆலோசனை சேவை வழங்கல்
3. விளையாட்டு தகுதி மருத்துவ பரீட்சை
4. ஆய்வுகூட புலனாய்வுகள்
5. முதலுதவி நிகழ்ச்சிகள்
6. மாணவர்கள் மற்றும் அலுவலர்களுக்காக மருத்துவ சபைகளை கூட்டுதல்
7. பல்கலைக்கழகத்தின் சுகாதார வசதிகள் குறித்ததான விளிப்புணர்வு நிகழ்ச்சிகளை புதிய மாணவர்களுக்காக நடாத்துதல்
8. மாணவர்களுக்கான சுகாதார கல்வி

ஒரு நியமத்திற்குட்பட்ட வைத்தியசாலையிலிருந்து அதற்கு வருகை தருவோருக்கு மருத்துவ சேவை வழங்கப்படுவதே எதிர்பார்க்கப்படும். எனினும் பல்கலைக்கழக சுகாதார நிலையமானது விசேடத்துவம் வாய்ந்ததாக சுகாதார பராமரிப்பு வசதிகளுக்கு மேலதிகமாக பின்வரும் சமுக சேவைகளையும் வழங்குகிறது.

1. பல்கலைக்கழக கழிவு முகாமைத்துவம்
2. சுற்றாடல் ஆரோக்கியம்
3. டெங்கு கட்டுப்பாடு
4. வீதி நாய்கள் தடுப்பூசி, நாய்க்கடி கட்டுப்பாடு ஊசியடித்தல்
5. ஆரோக்கியம் தொட்பாக மாணவர் விடுதி பரிசோதனை மற்றும் மேற்பார்வை
6. உணவக பரிசோதனை மற்றும் சுகாதார பராமரிப்பு
7. எல்லா பல்கலைக்கழக கட்டடங்களுக்குமான கரையான் தடுப்பு
8. உணவு மற்றும் நீர் ஆரோக்கியம்

வினைத்திறனான அம்புலன்ஸ் வண்டிச்சேவையானது 24 மணிநேரமும் நடைமுறைப்படுத்தப்படுவதோடு எந்த நேரத்திலும் அம்புலன்ஸ் வண்டியானது நோயாளிகளை மருத்துவ கவனத்திற்காக ஏற்றும்பொருட்டு அவர்கள் இருக்கும் இடத்தை அடைவதோடு அந்த இடத்திற்கு வருவதற்கு ஆறு கிலோமீற்றர் தூரம் வரையில் ஒரு

நிமிடத்திலிருந்து ஐந்து நிமிடம் வரை எடுக்கும் (இம்முறையானது அபிவிருத்தியடைந்த நாடுகளில் மாத்திரமே காணப்படுவதோடு இந்நாட்டில் வேறு எங்கும் காணமுடியாது).

தினமும் சுமார் 100 நோயாளிகள் வெளிநோயாளர் சேவைப் பிரிவிற்கு வருகைத்தருவதோடு அவர்களது எல்லா மருத்துவ தேவைகளும் இந்நிலையத்தால் வழங்கப்படும். சில காரணங்களால் தேவைப்படும் மருந்து மாத்திரைகள் இந்நிலையத்தில காணப்படாதபட்சத்தில் அவை குறுகிய நேரத்திற்குள் உள்ளூர் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டு நோயாளிகளுக்காக வழங்கப்படும். இதுவும் ஒரு பிரத்தியேக சேவையாக காணப்படுவதோடு வேரெந்த அரச வைத்தியாசலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளிலும் சாதாரணமாக காணப்படாது.

ஒரு விசேட செயற்பாடு பல்கலைக்கழக ஊழியர்களின் மருத்துவ கண்காணிப்பு நிகழ்ச்சியாக நடப்பாண்டினுள் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி பல்கலைக்கழகத்தின் 40 வயதிற்கு மேற்பட்ட அனைத்து ஊழியர்களிலும் சுமார் 1600 ஊழியர்கள் வருடமொருமுறை அல்லது இரு வருடத்திற்கொருமுறை தேவைக்கேற்றபடி பரிசோதிக்கப்பட்டு அனைத்து ஆய்வுகளும் இலவசமாக நடைபெறும்.

அனைத்து பல்கலைக்கழக ஊழியர்களும் இந்நிகழ்ச்சிக்கு உட்படுத்தப்படுவதோடு ஓய்வுபெறும் வரையில் தேவைக்கேற்ப மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுவர். இந்நிகழ்ச்சியின் நோக்கமானது ஒரு தனிநபர் ஓய்வுபெற்றபின்பு நோயற்ற நபராக வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதாகும். இந்நிகழ்ச்சியானது குறைந்த கிரயத்துடன் அமுல்படுத்தப்பட்டதோடு இதனை தேசியமட்டத்தில் அமுல்படுத்தினால் பெறுமதியாக அமையும். அவ்வாறான சூழ்நிலையில் பல்கலைக்கழக நிகழ்ச்சியானது ஒரு மாதிரி கருத்திட்டமாக கற்கப்படமுடியும்.

தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டத்தின்கீழ் தனிநபருக்கான வருடாந்த மொத்த தேசிய செலவு ரூபா 5500 ஆகும். எனினும் தனிநபருக்கான பரந்தளவிலான சுகாதார பாதுகாப்பு செலவாக பல்கலைக்கழகத்தினால் அமுல்படுத்தப்பட்டதறகான தொகை ரூ 3000 ஐ விட குறைவாக காணப்படுகிறது.

இவ்வனைத்து செயற்பாடுகளுக்காகவும் 4 மருத்துவ உத்தியோகத்தர்களும், 9 தாதியரும், மற்றும் 40 ஏனைய உதவிச்சேவை ஊழியர் குழுவும் மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுகாதார நிலையத்திற்கான உட்கட்டமைப்பு கட்டட தங்குமிட வசதியானது அதன் அனைத்து செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்காக ஓர் பழைய மேல்மாடி உத்தியோகபூர்வ விடுதி மற்றும் “சமூக மற்றும் சுற்றாடல் அலகு” என்பவற்றோடு 2000 சதுர அடி அளவை கொண்ட நிலப்பரப்பே காணப்படுகின்றது.

செழுமையான தேசிய சுகாதார நிகழ்ச்சிக்காக கொள்கைத் திட்டங்களை தயாரித்தல் தொடர்பாக அக்கறையுள்ள ஒருவர் அல்லது சுகாதார பொருளியலில் ஈடுபட்டுள்ள விசேட நிபுணர் ஒருவர் பல்கலைக்கழகத்தினால் அமுல்படுத்தப்பட்டிருக்கும் சுகாதார பாதுகாப்பு நிகழ்ச்சியை கற்றலானது பெறுமதியாக அமையும் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

## எதிர்காலத் திட்டங்கள்

1. தற்போது பாவனையிலுள்ள அதிக செலவுடைய குப்பை அகற்றல் முறைமைக்கு பதிலாக பல்கலைக்கழகத்தினுள் இயற்கை உரத்தை உற்பத்தி செய்வதற்கான கருத்திட்டத்தை பதிலீடு செய்தல்.
2. பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்பெறும் ஊழியர்களுக்காக பயிற்சிப்பட்டறைகளை நடாத்துதல், அவர்கள் தமது ஓய்வு வாழ்க்கையை பெறுமதிமிக்க முறையில் எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பான திட்டங்களை தயாரித்தல், மற்றும் அவர்களது நலத்திட்டங்கள் குறித்து ஓய்வுபெற்ற பின்பு இரு வருடங்களுக்கு கண்காணித்தல்.
3. பல்கலைக்கழக உணவகங்களை மீள் ஒழுங்குபடுத்துவதோடு அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களுக்கேற்ப பராமரித்தலை உறுதிப்படுத்துதல்.
4. பொதுசுகாதார பாதுகாப்பு மட்டங்களை மாணவர் விடுதிகளில் விருத்தி செய்தல் மற்றும் தொடர்புபட்ட அடிப்படைகளுக்கான பயிற்சிப்பட்டறைகளை மாணவர்களுக்காக நடாத்துதல்.
5. பல்கலைக்கழகத்திற்கு சுமையில்லாத வகையில் நிலையத்தின் உட்கட்டமைப்பு (கட்டட) வசதிகளை விருத்திசெய்தல்.
6. மாணவர்களுக்காக சுகாதார கல்வி நிகழ்ச்சிகளை வலுவடையச் செய்தல்.
7. ஊழியர்களுக்காக தொழில் ரீதியான சுகாதார ஆபத்து தடுப்பு நிகழ்ச்சியை ஆரம்பித்தல்.
8. வீதிநாய்கள் பிரச்சினைக்காக பல்கலைக்கழகத்தில் “பொறுப்புள்ள செல்லப்பிராணி உரித்துடைமை” என்ற நிகழ்ச்சியை அமுல்படுத்தல்.

# D3 இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர்க்கல்வி (HETC)

(பணிப்பாளர் பேராசிரியர் ரஞ்ஜித் திஸாநாயக்க அவர்களால் அறிக்கையிடப்பட்டது)

## செயற்பாட்டு தொழிநுட்ப செயலகம்(OTS) பேராதனைப் பல்கலைக்கழகம்

இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர்க்கல்வி என்ற கருத்திட்டமானது சர்வதேச அபிவிருத்தி அமைப்பினால் (உலக வங்கி) இலங்கை அரசாங்கத்திற்கு 2011 முதல் 2016 வரையான 5 ஆண்டுகளுக்காக 40 மில்லியன் அமெரிக்க டாலர்களாக வழங்கப்பட்ட கடனாகும். இதன் பிரதான நோக்கமாக உயர்கல்வி முறையின் இயலளவை உயர்த்துவதும் மற்றும் நாட்டின் பாரபட்சமற்ற சமுக மற்றும் பொருளாதார தேவைகளுக்கான தரமான உயர்கல்வியை வழங்குதலுமாகும்.

பேராதனைப் பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக அபிவிருத்தி மானியங்கள்(UDG), தரம் மற்றும் புதுமைபடைத்தல் மானியங்கள்(QIG), மற்றும் ஆளனி வளங்கள் அபிவிருத்தி மானியங்கள்(HRD) ஊடாக HETC கருத்திட்டம் மூலதமாக உதவி பெறுகின்றது. இன்னுமொரு மானியமானது நூலக வளங்களை தரமுயர்த்துவதற்காக ஒதுக்கப்பட்டது.

கருத்திட்ட செயற்பாடுகளை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமுல்படுத்துவதனை மூதவைக் கட்டடத்தில் காணப்படும் செயற்பாட்டு தொழிநுட்ப செயலகம் மேற்கொள்கிறது. செ.தொ.செ. இன் அலுவலர்களில் ஒரு பணிப்பாளர் (பகுதி நேரம்), 2 பிரதி பணிப்பாளர்கள்- பெறுகைகள் மற்றும் நிதி (பகுதிநேரம்), கருத்திட்ட செயலாளர், மற்றும் ஒரு முகாமைத்துவ உதவியாளர் ஆகியோர் உள்ளடங்குவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் HETC கருத்திட்டத்தின் 2013 இற்கான முன்னேற்ற அறிக்கை வருமாறு:

**பல்கலைக்கழக அபிவிருத்தி மானியம்**(UDG) ஆனது தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், ஆங்கிலம், மென்திறன்கள், மற்றும் இன ஒற்றுமை என்பவற்றை மாணவர்கள் மற்றும் அலுவலர்களிடையே அதிகரிக்கக்கூடிய செயற்பாடுகளுக்கு உதவியாக வழங்கப்பட்டதாகும். 2013ம் ஆண்டில் 8 பீடங்களையும் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்கள் HETC கருத்திட்ட கொழும்பு காரியாலயத்தால் தேசிய ரீதியாக நடாத்தப்பட்ட UTEL (ஆங்கில பரீட்சை) மற்றும் UCITC (கணனி பரீட்சை) பரீட்சைகளில் பங்குபற்றக்கூடிய சந்தர்ப்பத்தை பெற்றனர். இதில் குறிப்பிட்ட சில பீடங்கள் மாத்திரமே UTEL மற்றும் UCITC பரீட்சைகளின் அமைத்து பிரிவுகளையும் பூர்த்திசெய்யக்கூடியதாயிருந்ததோடு பீடங்களின் நடைமுறை கல்வி நிகழ்ச்சிகளின் இறுக்கமான முடிவுத்திகதிகள் காணப்படுவதால் பரீட்சைகளை ஒழுங்குபடுத்துவதில் சிரமங்கள் காரணப்படுவதே இந்நிலைமைக்கு காரணமாக அமைந்தது.

**தரம் மற்றும் புதுமைபடைத்தல் மானியங்கள்**(QIG) ஆனவை போட்டி அடிப்படையில் வழங்கப்படுகின்றன. பேராதனைப் பல்கலைக்கழகமானது 9 தரம் மற்றும் புதுமை படைத்தல் மானியங்களை அதிகூடிய எண்ணிக்கையுடைய மானியங்களை (களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து) இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மத்தியிலும் பெற்றுள்ளது. முதல் இரு மானியங்களும் பேராதனைப் பல்கலைககழக உயர்ப்பட்டங்களுக்கான விவசாய நிறுவகம் மற்றும் உயர்ப்பட்டங்களுக்கான விஞ்ஞான நிறுவகம் என்பவற்றால் பெறப்பட்டுள்ளதோடு 17.12.2013 வரையில் அவற்றின் நிதி முன்னேற்றமானது 50% ஐ விட அதிகரித்துள்ளது.

**ஆளணி வளங்கள் அபிவிருத்தி** (HRD) கூறானதுதிறனுடைய ஆசிரியர்களே தரமான உயர்க்கல்வியை வழங்குவதற்கான முக்கிய காரணியாக காணப்படுவதால் அவசர தேவையான உயர்கல்வி துறையில் ஆளணி அபிவிருத்தியில் முதலீடு செய்வதற்கான பிரச்சினையை தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இக்கூறானது 8 பீடங்களையும் சேர்ந்த பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 16 கல்விசார் அலுவலர்களுக்கு உதவியது (விவசாயம் 1, கலை 5, இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் 3, பல்மருத்துவம் 1, மருத்துவம் 1, விஞ்ஞானம் 1, பொறியியல் 2, ஆங்கில மொழி கற்பித்தல் அலகு 1). 16 கல்விசார் அலுவலர்களினதும் முன்னேற்றம் நல்லமுறையில் காணப்படுவதோடு 2013 டிசம்பர் 17 வரையில் 56% ஐ விடவும் நிதி முன்னேற்றம் அதிகரித்துள்ளது.

நூலக மானியமாக கிடைக்கப்பட்ட ரூபா 13 மில்லியனிலிருந்து பல்கலைக்கழகமானது ரூ. 10.1 மில்லியன்(78%) பெறுமதியான புத்தங்களை பெறுகை செய்துள்ளது.

## D4 உடற்கல்விப் பிரிவு

*(பதில் பணிப்பாளர் திரு. பாலித குமார அவர்களால் அறிக்கையிடப்பட்டது)*

### அறிமுகம்

உடற்கல்விப் பிரிவானது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விளையாட்டுகளுக்கு பொறுப்பான அங்கமாக வாழ்க்கையின் நீண்டகால விளையாட்டுப் பயிற்சியானது சுயமேம்பாடு மற்றும் இரண்டாந்தர விளைவுள்ளான சிறந்த உடல்நலம் மற்றும் சுகாதாரம் என்பவற்றுக்கு உதவக்கூடியதாக உள்ளது என்ற விளிப்புணர்வை இளைஞர் மத்தியில் ஏற்படுத்துவது என்ற அதன் குறிக்கோளை கொண்டுள்ளது. இப்பிரிவுக்கு உடற்கல்வி பணிப்பாளர் தலைமை வகிப்பதோடு அவற்றின் நிகழ்ச்சிகளையும் நடைமுறைப்படுத்துகிறார். இங்கு சிறந்த கல்வித்தகுதியுடைய மற்றும் தொழிற்தகுதி படைத்த உடற்கல்வி பயிற்றுவிப்பாளர்கள் 05 பேரும் இப்பிரிவை சார்ந்துள்ளனர். இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாக இளமானிப்பட்ட மாணவர்களுக்கிடையில் விளையாட்டுக்களை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதும் அமுல்படுத்துவதும், அரசாங்க நிறுவனங்களினால், தேசிய, சர்வதேச தலைமை அமைப்புகளினால் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற சந்தர்ப்பம் வழங்குதல், விளையாட்டு விளிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல், மற்றும் காலத்திற்கு காலம் தத்துவ விளக்க வகுப்புகளை நடாத்துதல் என்பன காணப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகளானவை மாணவர்களுக்கு பூரணமாக சந்தர்ப்பத்தை அவர்கள் உடல் மற்றும் உள ரீயான திறன்களை பெற்று தமது உடலியல் மற்றும் கல்விரீதியான வெற்றியினை தமது கல்வியிலும் வாழ்க்கையிலும் அடைய உதவும். உடற்கல்விப் பிரிவானது இவ்வாறான நிகழ்ச்சிகளை பிரதானமாக உடலியல் நிபுணத்துவம், சுகாதாரம் தொடர்பான உடற்தகுதி, சுய பொறுப்பு மற்றும் உடற் செயற்பாடுகளில் மகிழ்ச்சியடைதல் போன்றவற்றை மாணவர்களிடம் ஏற்படுத்தி அவர்கள் வாழ்நாள் முழுவதும உடல் ரீதியாக உற்சாகமாக இருப்பதற்காக நடாத்த திட்டமிட்டுள்ளது.

### அடைவுகள்

#### 11வது இலங்கைப் பல்கலைக்கழக போட்டிகள்

மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 11வது இலங்கைப் பல்கலைக்கழக போட்டிகளின் நிறைவில் பேராதனைப் பல்கலைக்கழகமானது 3 சாம்பியன் பட்டங்களை ஹொக்கி (பெண்கள்), மல்யுத்தம் மற்றும் பாரம்தூக்குவதற்கான ஆண்கள் பிரிவில் வென்றது. மேலும் பேராதனைப் பல்கலைக்கழக இளமானிப்பட்ட மாணவர்கள் முதலாம் மற்றும் இரண்டாம் ஆறுதல் பரிசுகளையும் பல்வேறு விளையாட்டு ஒழுக்கங்களில் பெற்றதன் மூலமாக பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுக்களில் பெருமை சேர்த்துள்ளனர். பேராதனைப் பல்கலைககழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் முதன்மைப் போட்டிகளிலும் இலங்கை பல்கலைக்கழக போட்டிகளிலும் பூர்த்திசெய்து ஆண்கள் பிரிவில் 4ம் இடத்தையும், பெண்கள் பிரிவில் 2ம் இடத்தையும், ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவை இணைத்து ஏனைய 14 தேசிய பல்கலைக்கழகங்கள் மத்தியில் 2ம் இடத்தை வென்றது. பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் ஆண்கள் பிரிவு 20 வேறுபட்ட போட்டிகளிலும் பெண்கள் பிரிவு 14 போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தனர்.

#### உலக பல்கலைக்கழக போட்டிகள் 2013 காஸான், ரஷ்யா

27வது உலக கோடைக்கால பல்கலைக்கழக விளையாட்டு போட்டிகள் ரஷ்யாவின் காஸாவில் 2013 ஜுலை மாதம் 6ம் திகதி முதல் 17ம் திகதி வரை நடைபெற்றது. இந்த புகழ்வாய்ந்த போட்டிகளானவை 27ம் Universiade என்றும் அழைக்கப்பட்டதோடு இதில் 159 நாடுகளை சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர். இதில் திரு. எ.எம்.கே.ஜி. பண்டார(4x100மீ), செல்வி. இயந்தி பியதிகம (100 மீ), செல்வி. எச்.வை. வீரதுங்க, திரு. ஏ.எம்.சி.ஜீ. விஜேரத்ன (பட்மின்டன்), திரு. ஆர்.எம்.சி.எம். ராஜபக்ஷ (செஸ்), திரு. ஹசித் விக்ரமசிங்ஹ செல்வி. சி.எஸ். மாரசிங்க (டென்னிஸ்), திரு. எஸ்.பீ.எஸ்.எல். குணதிலக (பாரம்தூக்குதல்) என்போர் இப்போட்டிகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர்.

## பீடங்களுக்கிடையேயான புதிய மாணவர் விளையாட்டுப்போட்டிகள்

பீடங்களுக்கிடையேயான புதிய மாணவர்களுக்கான விளையாட்டு சுற்றுப்போட்டி 2013 ஆம் ஆண்டு உடற்கல்விப் பிரிவினால் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இம்மாபெரும் நிகழ்வானது பல்கலைக்கழகத்தினால் நிகழ்த்தப்படும் அனைத்து விளையாட்டுகளும் உள்ளடக்கப்பட்டதாக 2013 செப்டெம்பர் மாதம் 9ம் திகதி முதல் 26ம் திகதி வரை நடைபெற்றதோடு நிறைவு விழாவானது வெகுவிமரிசியாக பல்கலைக்கழக உபவேந்தரான பேராசிரியர் அதுல சேனாரத்ன அவர்கள் தலைமையில் நடந்தது.

## கல்வி / பயிற்சி நிகழ்ச்சிகள்

உடற்கல்விப் பிரிவானது வருடம் முழுவதும் மாணவர்களுக்கும் அலுவலர்களுக்குமான உடற்கல்வி மற்றும் வலுவூட்டல் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தியது. இந்நிகழ்ச்சிகள் உடற்கல்விப் பிரிவின் பயிற்றுவிப்பாளர்களால் நடாத்தப்பட்டதோடு பங்குபற்றியோர் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று வெற்றிகரமாக நடந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் 23 விளையாட்டு ஒழுக்கங்களுக்குமான பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் செயலமர்வுகள் இளமானிப்பட்ட மாணவர்களுக்காக ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டு முழுவதும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகள் பிரதானமாக போட்டித்தன்மை கொண்ட விளையாட்டு நிகழ்வுகளுக்காக மாணவர்களை ஆயத்தப்படுத்துவதை பிரதான நோக்கமாக கொண்டிருந்ததோடு சில பொழுபோக்கு வகை விளையாட்டுகளும் காலத்திற்கு காலம் நடாத்தப்பட்டன.

## மாபெரும் விளையாட்டுப்போட்டிகள், அழைப்பு விளையாட்டுப்போட்டிகள், வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள்

(அ) மீளாய்வாண்டிற்காக தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையத்தின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் என்பன முறையே ரூபா 57,955,000 மற்றும் ரூபா 26,527,000 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் என்பன முறையே ரூபா 66,341,099 மற்றும் ரூபா 65,538,406 ஆகவும் இருந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றின் மிகை என்பன முறையே ரூபா 8,386,356 மற்றும் ரூபா 39,011,406 அல்லது முறையே 14 சதவீதத்தாலும் 147 சதவீதத்தாலும் விஞ்சியிருந்தன.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.2.5 இன் பிரகாரம், வருடாந்த பாதீடு, கூட்டிணைந்த திட்டத்தின் அறிக்கையின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு கருவியாக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், கீழே காட்டப்பட்டுள்ள வேறுபாடுகளினால் பாதீடு சிறந்த நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) 37 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாடுகளின் மிகைகளின் கூட்டுத்தொகை ரூபா 354,137,482 ஆக இருந்ததுடன், 29 செலவின விடயங்களில் மிகை மதிப்பீடுகளின் கூட்டுத்தொகை ரூபா 348,673,163 ஆக இருந்தது.

(ii) பாதீட்டில் உள்ளடக்கப்படாத 06 செலவின விடயங்களுக்குரிய ரூபா 155,504,977 கூட்டுத்தொகையான செலவினம் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தன.

(iii) செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 05 செலவின விடயங்களுக்காக 100 சதவீதமான ரூபா 702,000 பெறுமதியான ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் போது சேமிக்கப்பட்டிருந்தன.

(iv) பாதிடப்பட்ட வருமானத்தை உள்ளவாறான வருமானத்துடன் ஒப்பிட்ட போது 04 செலவின விடயங்களுக்குரிய ரூபா 54,503,907 ஆன பற்றாக்குறை வருமானம் அவதானிக்கப்பட்டது.

(v) பாதிடப்பட்ட வருமானத்தை உள்ளவாறான வருமானத்துடன் ஒப்பிடுகையில் 11 வருமான மூலங்களுக்குரிய ரூபா 133,334,989 தொகையான மிகை வருமானம் அவதானிக்கப்பட்டது.

(vi) பாதிடப்பட்ட வருமானமாக இனங்காணப்படாத 03 வருமான மூலங்களின் கீழ் ரூபா 91,439,412 ஆன வருமானம் மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்தன.

(vii) பாதிடப்பட்ட தகவல்களின் பிரகாரம் 04 வரவு விடயங்களுக்காக ரூபா 58,955,000 கூட்டுத்தொகையான வருமானம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அந்த வருமான விடயங்களுக்காக வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) M.Phill மற்றும் PHD பட்டப்படிப்பு அபேட்சகர்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களில் பட்டப்படிப்பு பாடநெறிகளை பின்பற்றுவதற்காக தேவையான நிதியை வழங்குவதற்காக ரூபா 10 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு நபருக்கும் அந்நடவடிக்கைகளுக்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.2.1 இன் பிரகாரம், பாதிடப்பட்ட ஐந்தொகையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டிற்காக பாதிடப்பட்ட ஐந்தொகையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) முற்பண மீதிகளை தீர்வு செய்தல்
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) வாகன நிர்வாகம்
(உ) ஆய்வு மானியங்கள் மற்றும் நிதியப் பயன்பாடு
(ஊ) பதவியணியினர் நிர்வாகம்
(எ) கொள்வனவுச் செயற்பாடுகள்
(ஏ) ஊழியர் கடன் நிர்வாகம்
(ஐ) ஒப்பந்த நிர்வாகம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

## I2 பேராதனை பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்

<table>
<tr><td>2</td><td>நிதிக்கூற்றுக்கள்</td></tr>
<tr><td>2.2</td><td>நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்</td></tr>
<tr><td>2.2.1</td><td>கணக்கீட்டுக் குறைபாடுகள்</td></tr>
<tr><td>(அ)</td><td>இக்கணக்காய்வு விசாரணையில் ரூபா 4,928,578.00 கூட்டுத்தொகையான சர்வதேச ஆய்வு நிலையத்திற்குரித்தாக மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் கூட்டுத் தொகையாகும். சர்வதேச ஆய்வு நிலையம் 2011 ஆம் ஆண்டில் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர்கல்வி அமைச்சின் பரிந்துரையின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட நிலையமொன்றாக இருந்ததுடன், அந்நிலையத்திற்கு கிடைக்கப்பெறும் அனைத்து செலவினங்கள் பொதுத் திறைசேரி மூலம் மூலதனத் தலைப்பின் கீழ் கிடைக்கப்பெறுவதுடன், அது பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 45.2(1) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக நிர்வாக சபைக்கு கிடைத்துள்ள அதிகாரங்களின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பல்கலைக்கழகத்தினுள் இந்த ஆய்வு நிலையம் மனித வள அபிவிருத்திக்கு மாத்திரம் உரித்தாகும் தலைப்பொன்றாக உள்ளது. எவ்வாறாயினும். பல்கலைக்கழக நிதிக்கூற்றுக்களில் ஆய்வு நிலையத்திற்குரித்தாக செலவிடப்படும் சகல செலவினங்களும் மீண்டெழும் மற்றும் மூலதனம் என வேறாக தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ளது. இங்கு உரிய கணக்கீடு சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்வதுடன், பாதீடு மற்றும் கணக்குகளுடன் இணங்கும் வகையிலும் பாதுகாப்பான விதத்திலும் இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>மீண்டுவரும் ஏற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்ட போதிலும் மூலதனச் செலவினமாக விசாரிக்கப்பட்டுள்ள ரூபா 1,065,332.00 தொகையில் ரூபா 681,476.00 மாத்திரம் மூலதனத் தன்மையிலான செலவினமாக இனங்காணப்பட்டுள்ளதால் பின்வரும் முறையில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 383,856.00 ஆன அளவு மீண்டெழும் தன்மையிலான செலவொன்றாகும்.<br><br>• விசாரணையில் உறுதிச்சீட்டு இலக்கம் 031163 மற்றும் 02822 இன் மூலம் ரூபா 456,390.00 தொகை வீதம் ஹல்மனிக்கந்துர விடுதியின் நிர்மாணங்களுக்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு J 14 மற்றும் J 22 ஆகிய நாட்குறிப்பு உறுதிச்சீட்டுமூலம் நடைமுறை வேலைக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விடுதியை அமைத்து பூர்த்தி செய்து பல்கலைக்கழகத்திற்கு கையளித்ததன் பின்னர் குறித்த கொடுப்பனவை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>• D 01196 இன் கீழ் ரூபா 150,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட பேஸ்போல் கையுரை நீண்டகாலப் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாது. ஆதலால் நிதிப்பெறுமதி கூடுதலாக இருந்த போதிலும், நிலையான சொத்தாக கருத முடியாது. பேஸ்போல் மட்டை 01 வருடத்திற்கு மேல் பயன்படுத்த முடியாது. ஆகையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 40,000.00 தொகை மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>• D 01406 இன் கீழ் ரூபா 98,856.35 தொகைக்கு பல்லூடக உபகரணமொன்றின் கொள்வனவு இடம் பெறவில்லை. அந்த 3 பல்லூடகங்களும் 3 திரைகளும் பட்டமளிப்பு விழாவிற்காக வடகைக்கு பெற்றுக்கொண்டவையாகும். அதன் பிரகாரம் கொள்வனவொன்றல்லாமல் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் பட்டமளிப்பு விழாவிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் கீழ் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>• D 101358 இன் கீழ் ரூபா 95,000 தொகைக்கு கிரிகெட்டிற்காக பயனபடுத்தப்படும் ஒரு கருவியாகும். 3-6 மாதங்கள் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதால் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.</td></tr>
</table>

| | |
|---|---|
| (ஆ) | <u>நிதிய மீதிகள் ரூபா 2,210,359.08</u><br><br>1101011103 ரூபா 25,500<br><br>இக்கணக்கு விளையாட்டு மருத்துவ சான்றுப்பத்திர பாடநெறிக்காக ஆரம்பிக்கப்பட்டது. எனினும் அதற்காக ஒரு மாணவரே பதிவுசெய்துள்ளார். அங்கு அம்மாணவன் டிப்ளோமா பாடநெறிக்காக இணைக்கப்பட்ட வருமானம் நாட்குறிப்பு பதிவொன்று மூலம் விளையாட்டு மருத்துவ டிப்ளோமா கணக்கிற்கு மாற்றப்பட்டதுடன், அந்நாட்குறிப்பு பதிவு இரண்டு முறை பதிவுசெய்யப்பட்டமையால் இவ்வாறான வரவு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதனை 79 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.<br><br>**1101011104 - ரூபா 641,511.31 - Diploma Course in Exercise & Sport Science Fund**<br><br>மேற்படி கணக்கில் விளையாட்டு மருத்துவ டிப்ளோமா கணக்கிற்கும் House Hold Survey கணக்கிற்கு முறையே வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 32,025.00 மற்றும் 115,000.00 தொகைகள் இக்கணக்கிற்கு தவறுதலாக வரவு வைக்கப்பட்டிருந்தன. தற்போது இக்கணக்கில் செலவு மீதியொன்று காணப்படுவதுடன், கணக்கு செயற்பாட்டுடன் காணப்படுவதை தெரிவித்துக்கொள்கின்றேன். அதனை 81 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.<br><br>**1101020401 - ரூபா 89,939.24**<br><br>கலைப்பீடத்தில் விசேட தேவைப்பாட்டிற்குரிய இக்கணக்கில் தவறான பதிவொன்று அடிப்படையில் ரூபா 89,939.24 வரவு மீதியொன்று காணப்பட்டது. அதனை 204K0004 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், அக்கணக்கில் தற்போது செலவு மீதி ரூபா 17,511.90 ஆகும். அதன் பிரகாரம் கணக்கு உரிய வகையில் சீராக்கப்பட்டுள்ளது.<br><br>**1101020703 - ரூபா 332,560.15**<br><br>இது பொறியியல் வடிவமைப்பு நிலையத்தின் சுழற்சி நிதிய கணக்கொன்றாகும். (EDC Revolving fund account) இது குறிப்பான நிதியமொன்றல்ல. பொறியியல் வடிவமைப்பு நிலையத்தின் சகல செலவினங்களும் இக்கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு செலவு செய்யப்படுகின்ற அளவு பொறியியல் வடிவமைப்பு நிலையத்தின் வருமானக் கணக்கிலிருந்து மீள்நிரப்பப்படுவதுடன், ரூபா 2,000,000.00 கட்டுநிதியாக பராமரிக்கப்படுகின்றது.<br><br>**11-01-03-00-06 - ரூபா 924,815.26**<br><br>இக்கணக்கிற்காக 2013 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 1,000,000,00 ஆன காசோலையொன்று நவம்பர் மாதம் 22 ஆந் திகதி கிடைக்கப்பெற்றதுடன், அது தவறுதலாக 13-41-00-00-03 இலக்க கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் மறை மீதி ஏற்பட்டுள்ளது. அத்தவறை இனங்கண்டு உடனடியாக 2014 ஆம் ஆண்டில் 08 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.<br><br>**1101041102 - ரூபா 59,530.00**<br>மருத்துவ கல்விப் பிரிவு கணக்கிற்கு இடவேண்டிய ரூபா 41,630.00 தொகை தவறுதலாக குறித்த கணக்கிற்கு வரவு வைத்தமை மற்றும் மருந்துவியல் வருமானக் கணக்கிற்கு இட வேண்டிய ரூபா 18,900.00 தொகை மேற்குறித்த கணக்கில் உள்ளடக்கப்பட்டதை திருத்துவதற்காக பொது நாட்குறிப்பு பதிவுகள் இரண்டு முறை பதிவு செய்யப்பட்டமையால் இவ்வாறான மறை மீதி காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அதனை 77 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. |

**1101041111 - ரூபா 6,877.47**

இக்கணக்கிற்கு வருமானப் பெறுவனவு சிறய அளவில இருப்பதால் இவ்வருமானம் வெவ்வேறு வருமானக் கணக்கிற்கு உள்ளடக்குவதற்கும் கொடுப்பனவுகள் நானாவித செலவினக் கணக்கின் கீழ் பதிவு செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், தவறுதலாக இக்கணக்கிற்கு உள்ளடக்கப்பட்ட ரூபா 6,877.47 செலவினம் 82 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**1101042103 - ரூபா 53,725.65**

குறித்த கணக்கு பல் சிகிச்சைக்காக கிடைக்கும் பணம் மற்றும் அந்த சிகிச்சைக்குரிய நுகர்வுப்பொருள் கொள்வனவு செய்வதை கணக்கீடு செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதியக் கணக்கொன்றாகும். நோயாளர்களின் பல் சிகிச்சைக்காக அறவிடப்படும் தொகை போதியளவில் இல்லாமை மற்றும் இந்நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகின்ற நுகர்வுப்பொருள் இருப்பு இக்கணக்கிற்கு இணங்காமையால் இவ்வாறு தற்காலிக மறை மீதியான்று ஏற்படுவதற்கான காரணமாகும். தற்போது இக்கணக்கின் மீதி சீராக்கப்பட்டு பேணப்படுகின்றது.

**11-01-07-04-02 - ரூபா 35,000.00**

இம்மீதி பல்கலைக்கழகத்தில் நீண்டகாலமாக இருந்து வரும் மீதியொன்றாக இருந்து வருவதுடன், அவை நிதிக் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. அங்கு நிதிக் குழு 326.02(1) இன் பிரகாரம் அம்மீதி கூடிய பொருளதார விளைவொன்றை பெறும் வகையில் பயன்படுத்துவதற்காக பல்கலைக்கழக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் அம்மீதி செயற்பாட்டிலுள்ள மீதியொன்றாக காணப்படுகின்றது.

**110114900-207- ரூபா 3,400.00**

இது புவியியல் தொழில்நுட்ப பட்டப்பின் படிப்பு பாடநெறி நிதியமொன்றாகும். 110114900-207 என்ற இந்த பட்டப்படிப்பு பாடநெறிக்காக முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த கணக்கு மீதியொன்றாகும். பிற்காலத்தில் இப்பாடநெறிக்காக 11012170007 கணக்கு சுட்டி வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்ட ரூபா 3,400 தொகை புதிய கணக்கு சட்டிக்கு உள்ளடக்கப்பட வேண்டும். ஆதலால் 2014.09.11 ஆம் திகதிய JV/2014/74 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**11015200 - ரூபா 37,500.00**

**Medical Faculty Alumini Fund**

சுழற்சி நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 37,500 தொகை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் இவ்வரவு மீதி உருவாகியிருந்தது. அது 80 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**<u>ஆராய்ச்சி நிதிய மீதி 28 - ரூபா 3,321,486.00</u>**

**1301040001 - ரூபா 298,500.00**

| | |
|---|---|
| | கணக்கீட்டு தவறினால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், K01, K12 மற்றும் K43 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.<br><br>**1301041210- ரூபா 3,771.00**<br><br>கணக்கீட்டு தவறினால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், K01, K12 மற்றும் K43 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.<br><br>**1301071201- ரூபா 169,894.63**<br><br>கலாநிதி திரு. ஏ.யூ.எம்.டப். குணவர்தண அவர்களுக்கு பல்கலைக்கழக ஆராய்ச்சி மானியமொன்றான இக் கணக்கு குறியீட்டிற்கு இதற்கு அண்மித்ததாக மேற்கொள்ளப்பட்ட தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மானியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு கட்டளை செலவினத்தை வரவு வைத்ததன் மூலம் ஆராய்ச்சி மானிய பட்டோலையில் குறிப்பிடப்பட்ட மறை மீதி 2014.11.11 ஆம் திகதிய 60 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.<br><br>**1301110904- ரூபா 13,425.00**<br><br>13-01-11-09-04 கணக்கின் கீழ் முன்னைய ஆண்டிலிருந்து வரும் மறை மீதியான ரூபா 13,426.00 தொகையில் ரூபா 12,495.00 தொகை ஏனைய கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும், தவறுதலாக இக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 931.00 ஆன தொகை கலா. திருமதி. டீ.என். அத்தபத்து பணத்தை மீளச் செலுத்தியுள்ளார். 36675 ஆம் இலக்க பற்றுச்சீட்டின் கீழ் 2014.10.14 ஆம் திகதி சரி செய்யப்பட்டுள்ளது.<br><br>1301111201 - ரூபா 57,856.00<br><br>1301111203 - ரூபா 142,104.00<br><br>1301111204 - ரூபா 258,979.00<br><br>1301111205 - ரூபா 5,696.00<br><br>1301111206 - ரூபா 78,991.00<br><br>தற்போது இக்கணக்குகளில் செலவு மீதிகள் காணப்படுகின்றன. (நேர் மீதிகள்) உரிய சீராக்கங்கள் செய்யப்பட்ட கணக்குகளில் பிரதிகள் காண்பிக்கப்பட்டுள்ளன. |

1301141201 - ரூபா 54,155.00 - கலாநிதி.ஆர்.எஸ்.ராஜகருணா செயற்திட்டம் - RG/2012/40/S

1301141202 - ரூபா 106,818.00 - கலாநிதி எம்.ஏ.எஸ்.பீ.கே. மல்லவஆரச்சி செயற்திட்டம் - RG/2012/41/S

1301141204 - ரூபா 50,546.00 - கலாநிதி. எச்.எஸ்பி.எம் மடவள செயற்திட்டம் - RG/2012/43/S.

1301141207 - ரூபா 70,000.00 - கலாநிதி. பி.ஏ.டீ.பெரேரா செயற்திட்டம் -RG/2012/GG-1/46/S

1301141209 - ரூபா 35,161.00 - கலாநிதி. ஜே.டப்ளியு. தமுனுபொல செயற்திட்டம் - RG/2012/GG-1/48/S

1301141210 - ரூபா 46,419.00 - கலாநிதி. எம்.பி.எஸ்.குப்பேரகம செயற்திட்டம் - RG/2012/GG-1/49/S

1301141301 - ரூபா 17,945.00 - கலாநிதி. எஸ்சீ.கே. ரூபசிங்ஹ செயற்திட்டம் - RG/2013/13/S

1301141304 - ரூபா 72,750.00 - கலாநிதி. டீ.என். கருணாரத்ன செயற்திட்டம் - RG/2013/16/S

மேற்குறித்த ஆராய்ச்சி செயற்திட்டங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நிதியங்களிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன. இச்செயற்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், குறித்த ஆண்டின் இறுதியில் மதிப்பீட்டுத் தொகையில் ஒரு பகுதி மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. 2013 ஆம் ஆண்டின் செலவினங்களுக்கு ஒப்பாக இந்த ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் கிடைத்த ஏற்பாடு போதியதாக இல்லாததன் அடிப்படையில் பொது நிதிய கணக்கிலிருந்து குறித்த செலவினத்தை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. அவ்வாறே இச்செயற்திட்டங்களின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிச்செல்வதற்கு நேர்வதால் 2013 ஆம் ஆண்டின் இறுதியின் போது வருமானத்தை மிகைத்து செலவினங்களை காண்பிப்பதற்கு நேர்ந்திருந்த போதும் 2014 ஆம் ஆண்டின் போது ஆராய்ச்சி நிதியம் முறைப்படி கிடைத்தமையால் இம்மறை மீதிகள் தீர்க்கப்பட்டு எஞ்சிய தொகை பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்தமையால் இச்செயற்திட்டங்களின் சரியான மீதிகளை பேண முடியுமாக இருந்தன.

**1301211202- ரூபா 44,000.00**

**1301211301- ரூபா 58,217.00**

RG/2012/31/D - கணக்கு இலக்கம் 1301211202 மற்றும் RG/2013/07/D - கணக்கு இலக்கம் 1301211301 ஆகிய ஆராய்ச்சி நிதியங்களுக்குரிய கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாடுகளை மிகைத்து 2013.12.31 இல் உள்ளவாறு முறையே ரூபா 44,000.00 மற்றும் ரூபா 58,217.00 செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. விரிவுரையாளர்களின் ஆராய்ச்சி நிதியங்களுக்குரிய மதிப்பீடு பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அதற்காக பணமாக நிதி ஏற்பாடு கிடைக்காதிருந்த போதிலும், ஏனைய விரிவுரையாளர்களுக்காக கிடைத்த ஆராய்ச்சி நிதிய ஏற்பாடுகள் எஞ்சியிருக்கும் போது அப்பணம் அங்கீகரித்த வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. பின்னர் மேற்குறித்த ஆராய்ச்சிகளுக்காக 2014 ஆம் ஆண்டில் கிடைத்த பணத்திலிருந்து சரியான சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1301441202- ரூபா 59,848.00**

இம்மீதி இதுவரையில் குறித்த சரியான கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**131024119-211 - ரூபா 1,109,949.00**

| | |
|---|---|
| | **131005118-0211- ரூபா 16,925.00**<br><br>ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி நவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தமையால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் குறித்த கணக்கிற்கு வரவு வைத்த காரணத்தினால் 13-10-05-118-0211 ஆம் கணக்கில் 2013.12.31 இல் உள்ளவாறு மறை மீதியொன்று காணப்பட்டது. எனினும் 2014.03.28 இல் உள்ளவாறு ரூபா 246,023.00 ஆன தொகையொன்று இந்த ஆராய்ச்சிக்காக கிடைத்துள்ளது. அதன் பற்றுச்சீட்டு இலக்கம் 1087966 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதலால் தற்போது இக்கணக்கில் மறை மீதியொன்று இருக்கவில்லை.<br><br>**1311070003 - ரூபா 12,055.00**<br><br>**1342070001 - ரூபா 128,941.00**<br><br>இந்த இரண்டு கணக்குகளும் பன்முகப்படுத்துவதற்கு முன்னர் காணப்பட்ட மீதியொன்றாக இருந்ததுடன், இது தொடர்பாக 2015 சரவரி மாதம் 07 ஆந் திகதி நடைபெற்ற 339 ஆவது நிதிக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பேரேடு சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.<br><br>**1311070712 - ரூபா 40,949.00**<br><br>வெளிநாட்டுக் கட்டளையொன்றின் மூலம் சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது எழுந்த உரிய வகையில் நிச்சயிக்க முடியாத துறைமுக கூலி மற்றும் காப்புறுதி கட்டணங்கள் அதிகரித்தமையும் வெளிநாட்டு நாணயமாற்று விகிதங்களின் தாக்கத்தின் அடிப்படையிலும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் மானியங்களை மிகைத்து செலவினம் ஏற்பட்டமையால் இவ்வரவு மீதி பின்னர் பல்கலைக்கழகத்தின் வருடாந்த ஏற்பாடுகளிலிருந்து தீர்வு செய்யப்பட்டது. 2014.12.31 இல் உள்ளவாறு எந்தவொரு மீதியும் இக்குறியீட்டில் காணப்படவில்லை.<br><br>**1311141103 - ரூபா 47,429.00 – பேராசிரியர் டீ.எம்.டீ.யகன்தாவெல (RG/2011/NRB/03)**<br><br>இச்செயற்திட்டம் தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் பேணப்படும் செயற்திட்டமொன்றாகும். இச்செயற்திட்டம் முடிவடையும் வரையில் செயற்படுத்துவதற்காக பணம் பகுதி பகுதியாகவே கிடைத்திருந்தது. 2013 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்குரிய காசோலை (பெறுமதி ரூபா. 105,000.00 ) அனுப்பியுள்ளதாக கடித மூலம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அக்காசோலை எமக்கு தாமதமாக கிடைத்தமையால் 2014 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலேயே கணக்கீடு செய்யப்பட்டது. அதனால் 2013 ஆம் ஆண்டின் வருமானத்தை மிகைத்து செலவினங்களை காண்பிப்பதற்கு நேர்ந்த போதிலும், இம்மறை மீதி 2014 சனவரி மாதத்தின் போது சீராக்க முடியுமாக இருந்தது.<br><br>**1312000001 - ரூபா 28,355.00**<br><br>ரூபா 28,355.00 தொகை 2015.06.12 ஆந் திகதிய பற்றுச்சீட்டின் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது.<br><br>**13-11-07-12-16 - ரூபா 291,808.00**<br><br>தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வெளிநாட்டு கட்டளையொன்று மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்தொன்றுக்காக செலுத்த வேண்டிய மேலதிக செலவினம் பல்கலைக்கழக ஏற்பாடுகளிலிருந்து வெளிநாட்டு வழங்கல் பிரிவிற்கு செலவு வைக்கப்பட்ட செலவினம் பீடத்தின் மேற்படி கணக்கு குறியீட்டிற்கு வரவு வைத்தமையால் ஏற்பட்ட தவறுகள் எழுந்தமையால் இம்மீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

ஆராய்ச்சி நிதியம் - ரூபா 360,508.00

ஆராய்ச்சி நிதியம் 12 - ரூபா 319,608.00

**1301021204 - ரூபா (7,052.00)**

இது பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியொன்றாக இருந்ததுடன், அதற்காக பல்கலைக்கழகத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்கு நிதி திறைசேரியிடமிருந்து கிடைக்காமையாலும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் இடை நடுவில் நிறுத்த முடியாமையாலும் தேவையான செலவினம் பல்கலைக்கழகத்தின் ஏனைய நிதியங்கள் மூலம் செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2014 ஆம் ஆண்டில் கிடைத்தவுடன், இக்கணக்கில் மறை மீதி தீர்க்கப்பட்டிருந்தது. மேலும் ஆராய்ச்சி செயற்திட்டம் முடிவடைந்திருந்ததுடன், இச்செயற்திட்டத்தில் எந்தவொரு மீதியும் 2014.10.20 ஆந் திகதி காணப்படவில்லை.

**1301021207 - ரூபா 3,148.00**

இது பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியொன்றாக இருந்ததுடன், அதற்காக பல்கலைக்கழகத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்கு நிதி திறைசேரியிடமிருந்து கிடைக்காமையாலும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்த முடியாமையாலும் தேவையான செலவினம் பல்கலைக்கழகத்தின் ஏனைய நிதியங்கள் மூலம் செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2014 ஆம் ஆண்டில் கிடைத்தவுடன், இக்கணக்கில் இருந்த மறை மீதி தீர்க்கப்பட்டிருந்தது. மேலும் ஆராய்ச்சி செயற்திட்டம் முடிவடைந்திருந்ததுடன், இச்செயற்திட்டத்தில் எந்தவொரு மீதியும் 2014.10.20 ஆந் திகதி காணப்படவில்லை.

**1301021213 - ரூபா (5,234.00)**

இது பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியொன்றாக இருந்ததுடன், அதற்காக பல்கலைக்கழகத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்கு நிதி திறைசேரியிடமிருந்து கிடைக்காமையாலும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்த முடியாமையாலும் தேவையான செலவினம் பல்கலைக்கழகத்தின் ஏனைய நிதியங்கள் மூலம் செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2014 ஆம் ஆண்டில் கிடைத்தவுடன், இக்கணக்கில் மறை மீதி தீர்க்கப்பட்டிருந்தது. மேலும் ஆராய்ச்சி செயற்திட்டம் முடிவடைந்திருந்ததுடன், இச்செயற்திட்டத்தில் எந்தவொரு மீதியும் 2014.10.20 ஆந் திகதி காணப்படவில்லை.

**1301040001 - ரூபா (91,282.00)**

பல்கலைக்கழகத்தின் தீர்மானமொன்றின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ச்சி நிதியத்திற்காக வேறான பேரேட்டுக் கணக்கு வழங்குவதை இடைநிறுத்தி 2013 ஆம் ஆண்டில் அனைத்து ஆராய்ச்சி நிதிகளும் ஒரு பீடமொன்றுக்கு வழங்கப்பட்டு தனிப் பேரேட்டுக் கணக்கின் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டின் போது இக்கணக்கிலிருந்து செலவிடப்பட்ட தொகை ரூபா 9,1282.00 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் இக்கணக்கிற்கு வழங்கப்பட்ட ஏற்பாட்டினை கணக்கீடு செய்யாமையால் இந்த மறை மீதி எழுந்துள்ளது. K-001-02-12,40 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் இந்நிலைமை தீர்வுசெய்யப்பட்டுள்ளது.

**1301071101 - ரூபா (16,996.00)**

இது பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியொன்றாக இருந்ததுடன், இம்மானியத்திற்காக முழுத்தொகையும் ஒரே தடவையில் பீடத்திற்கு வழங்காமல் முதலில் 50% பின்னர் செலவினம் மேற்கொண்டதன் பின்னர் எஞ்சிய தொகையை மீள்நிரப்புவது பொதுவான விடயமொன்றாகும். இதன் பிரகாரம் மேலே குறிப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் பயன்படுத்தப்பட்டு அந்த ஆராய்ச்சியாளர் வெளிநாட்டு கட்டளை மூலம் கணனி

மென்பொருளொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், வெளிநாட்டு நாணயமாற்று வேறுபாட்டின் அடிப்படையில் எழுந்த மேலதிகச் செலவினத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட மானியத்தை மிகைத்து செலவிட நேர்ந்திருந்தது. இதன் பிரகாரம் ஏற்பட்ட மறைமீதி பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி சபையின் அங்கீகாரத்தின் பேரில் மேலதிக ஏற்பாட்டை வழங்கியதன் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது.

**1301111102 - ரூபா (8,468.00)**

**1301111103 - ரூபா (9,180.00)**

**1301111106 - ரூபா (11,493.00)**

**1301111109 - ரூபா (8,995.00)**

ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர்களினால் 2011 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட பல்கலைக்கழக ஆராய்ச்சி நிதியத்திலிருந்து 2013.12.31 ஆந் திகதி வரை மேலே குறிப்பிடப்பட்ட மீதிகள் காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அம்மீதியில் இதுவரையில் தீர்ப்பதற்குரிய பேரேட்டுக் கணக்குகள் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பல்கலைக்கழக ஆராய்ச்சி நிதியத்திலிருந்து கிடைப்பனவுகள் தாமதமானதால் பீடத்தின் உழைத்த வருமானத்திலிருந்து இச்செலவினம் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. ஆதலால் குறித்த ஆராய்ச்சி கணக்குகளில் மறை மீதியொன்று காண்பிக்கப்பட்டது. எனினும் 2014 ஆம் ஆண்டில் குறித்த ஏற்பாடு பல்கலைக்கழக ஆராய்ச்சி நிதியத்தின் மூலம் கிடைத்திருந்தது. தற்போது ஆராய்ச்சி முடிவடைந்திருந்ததுடன், கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகள் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிதியத்தின் கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1311070003 - ரூபா (12,055.00)**

இக்கணக்கு பண்முகப்படுத்துவதற்கு முன்னர் காணப்பட்ட மீதியொன்றாக இருந்ததுடன், இது தொடர்பாக 2015 சனவரி மாதம் 07 ஆந் திகதி நடைபெற்ற 339 ஆவது நிதிக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் சீராக்கப்பட்டுள்ளது.

**1311141104 - ரூபா (25,045.00) - :RG/2011/ES/01/NSF – பேராசிரியர் எச்.எம்.எஸ்பீ. மடவள**

இச்செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக ரூபா 1,772,050.00 தொகை மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மூன்று கட்டத்தின் கீழ் அதாவது 2011/2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 805,550.00 தொகையும் 2012/2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 538,600.00 தொகையும் 2013/2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 427,900.00 தொகையுமாக ஏற்பாடுகளை வழங்குவதற்கு தேசிய விஞ்ஞான மன்றத்தினால் இணங்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது இச்செயற்திட்டத்திற்காக ரூபா 437,145.30 செலவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 412,100.00 வழங்கப்பட்டிருந்தது. அத்தொகை 2012 ஆம் ஆண்டிற்கு போதுமானதாக இல்லையென குறித்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் 2012 திசெம்பர் 18 ஆந் திகதி செயற்திட்டத்திற்காக ரூபா 425,450.00 தொகை மாற்றப்பட்டிருந்ததாக எமக்கு தொலைபேசி செய்தியொன்றின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அத்தொகையின் கிடைப்பனவின் நம்பிக்கை அடிப்படையிலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்துவதற்கு முடியாமையால் செலவினம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அக்காசோலை எமக்கு 2013 சனவரி 10 ஆந் திகதி கிடைக்கப்பெற்றிருந்தது. ஆதலால் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் இச்செயற்திட்டத்தில் ரூபா 25,045.30 நிலுவையொன்று காண்பிக்க நேர்ந்திருந்த போதிலும், அது 2014 சனவரி 10 ஆந் திகதி வரையில் தீர்க்கப்பட்டு தற்போது இக்கணக்கில் ரூபா 618,112.20 சேமிப்பொன்று காணப்பட்டது.

| | |
|---|---|
| | **நிதியம் 02 - ரூபா 40,900.00**<br><br>**110114900-207 - புவி தொழில்நுட்ப பொறியியல் பட்டப்பின் படிப்பு பாடநெறி நிதியக் கணக்கு - ரூபா 3,400.00**<br><br>புவி தொழில்நுட்ப பொறியியல் பட்டப்பின் படிப்பு பாடநெறி நிதியக் கணக்காகும். இப் பாடநெறிக்காக 110114900-207 என்ற குறியீடு பழைய கணக்கு முறைமையின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. பின்னர் இக்கணக்கு குறியீடு 11-01-217-00-07 என்ற குறியீட்டிற்கு வரவு வைக்க வேண்டிய ரூபா 3,400.00 தவறுதலாக பழைய கணக்கு குறியீட்டிற்கு வரவு வைத்தமையால் இவ்வாறு மறை மீதியொன்று கணக்கில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2014.09.11 ஆந் திகதிய JV/2014/74 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் சீராக்கப்பட்டிருந்தது.<br><br>**11015200 - பழைய மருத்துவ பீட விஞ்ஞானிகளின் நிதியம் ரூபா 37,500.00**<br><br>சுழற்சி நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய செலவினமொன்று இக்கணக்கிற்கு தவறுதலாக உள்ளடக்கப்பட்டிருந்தது. அது 80 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் சீராக்கப்பட்டிருந்தது. |
| **(இ)** | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலவினம் ரூபா 65,538,406 ஆக கணக்கிடப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் அது வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் செலவினம் ரூபா 44,811,397 தொகை, அட்டுறு செலவினம் ரூபா 25,790,507.00 தொகை, கடன்கொடுத்தோர் ரூபா 622,902.00 தொகை என்வற்றை சேர்த்தமையால் கிடைத்த ரூபா 71,224,806.00 பெறுமதியாக கணக்கிடப்பட்டிருந்தது. இப்பெறுமதிகள் இரண்டிற்கிடையே வேறுபாடு ரூபா 5,686,400.00 தொகை கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட செலுத்த வேண்டிய செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய கடன்தொகைக்காக செலவிடப்பட்ட செலவினம் அவ்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படாமை அதற்கான காரணமாக இருந்தது. எனினும் கணக்காய்வு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் வங்கி மீதியைப் பெற்றுக்கொள்ளும் போது முன்னைய ஆண்டின் செலவினத்திற்காக குறித்த ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செலவினம் சீராக்கம் செய்யப்படாமல் அனைத்து கொடுப்பனவுகளும் செலவினங்களாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனை சீராக்கம் செய்ததன் பின்னர் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதிகளுக்கு சமமாக இருந்தது. அம்முறைக்கு கணக்குகள் சீராக்கப்பட்டுள்ளன. |
| **(ஈ)** | 2007 ஆம் ஆண்டில் உயர்கல்வி அமைச்சின் Distance Education Moderation கீழ் செயற்திட்டத்தின் கீழ் தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,468,164.00 தொகையான சொத்துக்கள் 2007 ஆம் ஆண்டிலிருந்து சரியாக கணக்குகளில் சொத்துக்களாக சீராாக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு முறையாக 2007 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு கணிப்பீடு அவசியமற்றது. |
| **(உ)** | பல்கலைக்கழகத்தின் கைதவிர்ப்பு செயற்பாட்டின் மூலம் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட தொலைக் கல்வி மற்றும் தொடர் கல்வி நிலையத்திற்குரிய பொருட்களுக்குரிய நிலையான சொத்துக்களின் பெறுமதி புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய சொத்துக்கள் மற்றும் பெறுமானத்தேய்வுச் சீராக்கம் 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |

| | |
|---|---|
| **(உ)** | ரூபா 417,034 பெறுமதியான 1913 பயிற்சி கைநூல்களை மீளாய்வாண்டின் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமைக்கூற்றில் இறுதி இருப்பின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதனை 2014 ஆம் ஆண்டிற்கு முன்னரான ஆண்டுகளின் இருப்புச் சீராக்கமாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (எ) | தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,950,000 தொகையான பெறுதியுடன் கூடிய கணனி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கு உள்ளடக்காமல் செலவினக் கணக்கிற்கு வரவு வைத்ததன் பேரில் இது தோன்றியுள்ளது. இச்சொத்துக்கள் 2014 ஆம் ஆண்டின் போது சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெறுமானத்தேய்வு சரியாக 2014 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீரக்கப்பட்டுள்ளது. |
| **(ஏ)** | பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறிக்கு சமூகமளிக்காமை, இடைநடுவில் விட்டுச் செல்லல் போன்ற விடயங்கள் அடிப்படையில் எழுந்திருந்த கிடைக்க வேண்டிய ரூபா 642,271.00 கூட்டுத்தொகையான பாடநெறிக் கட்டணங்கள் தொடர்ந்தும் கிடைக்காமல் இருப்பதால் பெறவேண்டிய வருமானமாக கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு 2013/11 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **(ஐ)** | **13-01-07-12-01 - ரூபா 169,894.63**<br><br>விரிவுரையாளரொருவருக்கு மானியமாக வழங்கப்பட்ட பல்கலைக்கழக ஆராய்ச்சி மானியமொன்றான இக்குறியீட்டிற்கு அதற்கு அண்மித்த செய்யப்பட்ட தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் மானியங்களிலிருந்து கொள்வனவு செய்ய்ப்பட்ட வெளிநாட்டுக் கட்டளைச் செலவினம் வரவு வைத்தன் மூலம் ஆராய்ச்சி மானிய பட்டோலையில் காண்பிக்கப்பட்ட மறை மீதி 2014.11.11 ஆந் திகதிய 60 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **(ஓ)** | ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள தேசிய விஞ்ஞான மன்றத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த Co2 Incubator இற்காக குறித்த ஆராய்ச்சி செயற்திட்டத்தின் மூலம் ரூபா 907,424 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், குறித்த உபகரணத்திற்காக உள்ளவாறாக ரூபா 761,600.00 தொகையே செலவிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய தொகை ரூபா 145,824 மீண்டும் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த உபகரணங்களின் உள்ளவாறான பெறுமதி ரூபா 761,600.00 ஆக இருந்ததுடன், 2012 ஆம் ஆண்டின் ஆராய்ச்சி மானியங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டது.<br><br>ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்குரிய ரூபா 272,067.00 ஆன பொருட்கள் தொடர்பாக பெறுமதி சரியாக இல்லாமல் இருந்ததுடன், அதற்குரிய சரியான பெறுமதி கீழே காட்டப்படடுள்ள ஆண்டுகளுக்கு மூலதனமாக்கப்பட்டுள்ளது.<br><br>**உருப்படிகள்** \| **பெறுமதி** \| **கணக்கீடு செய்யப்பட்ட ஆண்டு**<br><br>Stain steel Arc Welding Machine \| 94,450.00 \| 2012 |

| | | | |
|---|---|---|---|
| | Hamstic Analyzer | 530.00 | 2002 |
| | Hegue duty magnitoldgaugest set | 6,400.00 | 2002 |
| | Miter SAW | 24,000.00 | 2002 |
| | Digital Vane Anometer | 18,600.00 | 2002 |
| (ஓ) | 2013 ஆம் ஆண்டில் அனேகமான பீடங்களுக்காக Z-core சிக்கலுக்கு தீர்வு காணும் போது மேலதிக மாணவர்களை அனுமதிக்க வேண்டியேற்பட்டது. அதன் பிரகாரம் பீடங்களின் கற்பித்தல் இயலளவு அதிகரிப்பதற்காக கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்ய நேர்ந்தது. இதற்காக மேலதிக ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும், 2013 ஆம் ஆண்டின் போது அம்மேலதிக ஏற்பாட்டிற்காக போதியளவு நிதியை திறைசேரி விடுவிக்காமையாலும் கொள்வனவு செய்வதற்கு கட்டளையிட்ட அநேகமான சொத்துக்களுக்காக பல்கலைக்கழகத்திற்கு ஏனைய ஆராய்ச்சி நிதியங்களுக்கான ஏற்பாடுகளைப் பயன்படுத்தி கொடுப்பனவு செய்ய நேர்ந்தது. இதன் காரணமாக சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட தொகையை மிகைத்து செலவு செய்வதற்கு நேர்ந்தது. எவ்வாறாயினும் இந்நிலைமையின் கீழ் மூலதனச் செலவினங்களில் ஈடுசெய்தல் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறே மேலதிக ஏற்பாட்டிற்கான ரூபா 240 மில்லியன் தொகை 2014 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்தமையால் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று உருவாகாது. | | |
| (ஔ) | வெளிநாட்டு மாணவர் வருமானம், வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு ஏதேனும் செலவினமொன்று மேற்கொண்டால் அது செலவினமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் கிடைத்த வருமானத்திலிருந்து மருத்துவ பீடத்தின் 5 மாணவர்களுக்கு மலேசியாவின் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதற்காக தேவையான விமான டிக்கட் பத்திரங்கள் கொள்வனவிற்கான செலவினங்கள் கிடைத்த வெளிநாட்டு மாணவர் வருமானத்தலிருந்து செலவு செய்தமையால் தேறிய வருமானம் கணக்கீடு செய்தமையாலாகும். எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான கணக்கீட்டுப் பிழைகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை மற்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இக்கணக்கு வைத்தல் பிழையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | | |
| (க்) | பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களில் இருப்புச் சீராக்கக் கணக்கு என்ற பெயரில் 12-01-68-00 கணக்கொன்று 1995 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டதுடன், அது ஆரம்பிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கம் பல்கலைக்கழகத்தில் காணப்படும் களஞ்சியங்களின் வருடாந்த இருப்பு மெய்மையாய்வு பெறுமதி மற்றும் இருப்பு புத்தகங்களின் பெறுமதியை ஒப்பிடுவதற்காகும். இங்கு பெறுமதிகளுக்கிடையேயான வேறுபாடு இக்கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. பிற்காலத்தில் இக்கணக்கின் மீதி அவதானிக்கப்படுவதுடன், இணக்கப் பிழைகள் கணிப்பீடுகள், அல்லது விலையிடல் பிழைகள் என்பவற்றினால் இடைக்களஞ்சியங்களில் வருடாந்த கணிப்பீட்டில் இரட்டைக் கணிப்பீடு மூலம் ஆராய்ச்சிக்கான மானியம் மற்றம் கொள்வனவு செய்யப்பட்ட பொருள் கணக்கு செயற்பாட்டிற்கு புறம்பாக களஞ்சியப்படுத்துவதன் மூலம் இவ்வாறான மிகை இருப்பு ஏற்படக் காரணமாக இனங்காணப்பட்டது.<br><br>இருப்புச் சீராக்கக் கணக்கில் செலவு மீதியொன்றாக காணப்பட்ட இம்மீதி மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளில் இருப்புச் சீராக்கத்தின் போது மேற்கொண்ட பிழைகள் காரணமாக | | |

| | |
|---|---|
| | ஏற்பட்ட இனங்காணப்படாத பெறுவனவுக் கணக்கு மீதியொன்றினால் பல்கலைக்கழகத்தின் வருமானமொன்றாக அம்மீதி வருமானச் செலவு பகிர் கணக்கிற்கு செலவு வைத்து இருப்புச் சீராக்கக் கணக்கும் தீர்வு செய்யப்பட்டது.<br><br>இக்கணக்கினை தீர்வு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நிதிக் குழு அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டது. இந்த இருப்புச் சீராக்கக் கணக்கு தீர்ப்பனவு சரியான முறையில் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இக்கணக்கைத் தீர்ப்பதன் மூலம் பல்கலைக்கழகத்தினுள் இருப்புச் சீராக்கக் கணக்கொன்று காணப்படாததுடன், அதன் மூலம் இருப்பு தொடர்பான கணக்கு நடவடிக்கைகள் சரியாகவும் சிக்கலில்லாமலும் மேற்கொள்வதற்கு இதுவரை இயலுமாக இருந்துள்ளது. |
| (க) | CW/CON/2012/938 ஆம் இலக்க ஒப்பந்தத்திற்குரிய 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 300,405.84 தொகையும் CW/CON/2013/978 ஆம் இலக்க ஒப்பந்தத்திற்குரிய ரூபா 221,852.79 தொகை ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் 2014.12.31 இல் மூலதனமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>CW/CON/2012/938 ஆம் ஒப்பந்தத்தின் 2012 ஆண்டிற்குரிய ரூபா 1,262,031.00 தொகை மூலதனமாக்கப்படாதிருந்ததுடன், அதனை 2015 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (கா) | மிருக வைத்திய பீடத்தின் போதனா வைத்தியசாலையின் நிர்மாணத்திற்காக SAR/CW/CON/650 ஒப்பந்தத்தின் கீழ் ஒப்பந்தக்காரருக்கு 2007 ஆம் ஆண்டிலிருந்த 2012 வரை ரூபா 44,800,000.00 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், விடுவிக்கப்படாத நிறுத்தி வைத்தல் தொகை ரூபா 3,200,000.00 ஆக இருந்தது. அவ்வாறே ஒப்பந்தத்தின் இறுதிப்பட்டியலை விடுவிக்கும் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகளுக்கு மேலதிகமாக ரூபா ஒரு மில்லியன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட ரூபா 44,000,000.00 இனை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்படவில்லை.<br><br>அவ்வாறே 2011.06.02 ஆந் திகதி மிருக வைத்திய பீடத்தின் வைத்தியசாலைக்காக மின் வழங்கல் பல்கலைக்கழகத்தின் மீண்டெழும் நிதியத்தைப் பயன்படுத்தி பெற்றுக்கொண்டதற்காக ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாக மின்சார சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,471,987.00 தொகை மேற்படி ரூபா 44 மில்லயினுக்கு மேலதிகமாக மூலதனமாக்கப்பட்டது. அதன் பிரகாரம் மிருக வைத்திய பீடத்தின் வைத்தியசாலை செயற்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட மொத்த செலவினமான ரூபா 45,471,987.00 தொகையாக இருந்த போதிலும், ஏற்பாட்டு நிதியை மிகைத்த பெறுமதியொன்று மூலதனமாக்கப்படவில்லை. |

(கி)

- கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்ட கீழே குறிப்பிடப்பட்ட விரிவுரையாளர்களின் ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்ட போது அவர்களால் உடன்படிக்கை மீறிய திகதியிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உடன்படிக்கை மீறிய காலம் 15 - 40 ஆண்டுகள் வரை பழமையாக இருந்தது. அவர்களின் பிணைப்பொறுப்பு பெறுமதியை அறவிடுவதற்கு சட்டரீதியான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் கடந்திருந்ததால் வழக்குத் தொடர்ந்து அறவிட முடியாமல் இருந்தது. மேலும் இது அவர்களின் தற்போதைய முகவரியைக் கண்டுபிடிக்க முடியாததன் காரணமாக அவர்களின் கோவைகளிலுள்ள முகவரிக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அவை திரும்பி வந்த காரணத்தினால் அவர்களை தொடர்பு கொள்ள முடியாதிருந்தது.

| பெயர் | பல்கலைக் கழகத்திற்கு அறவிட வேண்டியுள்ள தொகை | பெயர் | பல்கலைக்கழகத் திற்கு அறவிட வேண்டியுள்ள தொகை |
|---|---|---|---|
| 1. திரு. பீ.சீ.பே. பர்னாந்து | 1,686,683.51 | 2. திரு. ரீ.கிருபராஜன் | 273,389.65 |
| 3. திரு.எஸ்.எஸ்.ஜயநாயகம் | 1,889,215.00 | 4. திரு.ஜே.ஜே.சீ.லொரொய் | 881,759.94 |
| 5. கே.ஜெகசோதி | 1,493,874.00 | 6. திரு. பொன்னம்பலம் | 122,790.00 |
| 7. கலா. கே.கைலாசபாபதி | 822,580.00 | 8. செல்வி. எஸ்.சாந்தி குமாரி | 408,644.64 |
| 9. திரு. ஆர்.சீ.மில்ஸ் | 428,689.00 | 10. திரு.ஜே.பி.சாந்திகுமார் | 60,000.00 |
| 11. திரு.கே. நடராஜா | 1,630,074.00 | 12. திரு.எஸ்.தமிழ்சேரம் | 313,445.55 |
| 13. திரு.வீ.பவனசிவம் | 65,000.00 | 14. கலா. வீ.தேவேந்திரன் | 41,562.00 |
| 15. திரு.எல்.ஏ.பெரேரா | 1,126,624.00 | 16. பி.டப்.கொடிதுவக்கு | 383,728.56 |
| 17. திரு.எஸ்.பரராஜசிங்கம் | 1,641,697.00 | 18. திரு.வை. மரியநாயகம் | 46,080.00 |
| 19. திரு.எஸ்.ஏ.பிரதாப் | 1,240,048.63 | 20. எஸ். நாகலிங்கம் | 128,210.00 |
| 21. ரி.புனிததாஸ் | 205,081.00 | 22. திரு.கே.ஏ. நாதவிதாரன | 333,921.00 |
| 23. திரு.புவிராஜசிங்ஹ | 1,867,493.00 | 24. திரு.வீ.நெர்மிநாதன். | 49,920.00 |
| 25. திரு.எஸ்.வீ.ராஜகுலேந்திரன் | 1,435,075.00 | 26. திரு.சீ.பத்மநாதன் | 32,640.00 |
| 27. திரு.பி.பி.செல்வேந்திரன் | 274,374.00 | 28. திரு.எஸ்.பி.பி.எல்.எம். த சில்வா | 37,019.00 |
| 29. திரு.ஏ.ஶ்ரீகாந்த | 2,425,529.00 | 30. கலா.எல்.வீ.கே. த சில்வா | 67,459෴00 |
| 31. திரு.என். ஶ்ரீஸ்கந்தராஜா | 33,408.00 | 32. திரு.எம் நவராஜ் | 71,558෴00 |
| 33. திரு. எஸ்.ஶ்ரீ. ஸ்கந்தராஜா | 31,680.00 | 34. திரு.வீ. உமாசந்திரன் | 111,200෴00 |
| 35. திரு.ஏ.திருக்கேதீஸ்வரன் | 3,357.00 | 36. திரு.கே. ஆனந்தராஜா | 618,818,83 |
| 37. திரு.பி.வெந்தர்புடன் | 53,321.00 | 38. திரு. கே.பாலசன்முகம் | 38,904.68 |
| 39. திரு. எம்.எஸ்.விஜேசிங்ஹ | 20,000.00 | 40. திரு.ஏ.குமாரசுவாமி | 15,655.92 |
| 41. திரு.ஆர்.எஸ்.கனகராஜா | 504,364.00 | 42. திரு.எஸ். தயானந்த | 88,083.81 |
| 43. திரு.எம்.டி.தயானந்த | 52,634.00 | 44. திரு.எஸ்.கனகநாதன் | 53,420.00 |

| | | | |
|---|---|---|---|
| 45. திரு.எம்.எஸ்.டீ.கே.திவிசேகர | 59,059.00 | 46. செல்வி..எச்.சீ.பெரேரா | 421,689.00 |
| 47. திரு.எச்.எம்.பொன்சேக்கா | 30,472.00 | 48. திரு.எம்.எக்ஸ்.ஜே.மோனா | 59,308.00 |
| 49. திரு.எச்.பீ.ஜயவீர | 42,220.00 | 50. திரு.ஆர்.நரேந்திரன் | 579,345.00 |
| 51. திரு.ரீ.ஏ.குருப்பு ஆரச்சி | 72,827.00 | 52. திரு.ஏ.பாலசந்திரன் | 80,000.00 |
| 53. திரு.எஸ்.ஏ.மீகம | 25,000.00 | 54. கலா.ஏ.என்.எம்.பெரேரா | 97,454.00 |
| 55. செல்வி.எம்.எல்.சீ.மெல் | 5,700.00 | 56. திரு. எஸ்.பெதியாகொடை | 46,754.00 |
| 57. திரு.எம்.ஏ.எம்.சுக்ரி | 53,900.00 | 58. திரு.பீ.ஏ.கே.ரணவீர | 54,347.00 |
| 59. கலா.ஜே.சீ.எல்.தெஹிபிட்டிய | 101,187.00 | 60. கலா.ஏ.தியாகராஜா | 80,000.00 |
| 61. திரு.ஜே.என்.ஹுவர் | 107,399.00 | 62. திரு.கே விநாயகமூர்த்தி | 81,831.00 |
| 63. திரு.எப்.எம்.ஆர்.கொரயா | 263,360.72 | 64. திரு.ஏ.யசோதரன் | 537,311.20 |
| 65. திரு.ஏ.எச்.ஈ.தர்மராஜா | 230,645.11 | 66. திரு.ஆர்.டீ.சந்திரசேன | 59,449.00 |
| 67. திரு.கே. கந்தசாமி | 122,776.00 | 68. கலா. பீ.கோபாலகிருஷ்னன் | 62,466.00 |

- அவ்வாறான பிணைப்பொறுப்பு உடன்படிக்கையுடன் இருந்த போதிலும், பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 94(இ) பிரகாரம் சேமலாப நிதியத்தின் மீதியை அறவிடுவது தொடர்பாக பிரிவுகளை உள்ளடக்கியிராமையால் அவர்களின் சேமலாப நிதியத்தை பல்கலைக்கழகத்திற்கு விடுவிப்பதில் சிக்கலொன்று காணப்படுவதுடன், குறித்த விரிவுரையாளர்களின் விருப்பமில்லாமல் அந்நிதியை பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொள்ள முடியாதென சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியிருந்தார்.
- இது தொடர்பாக கடந்த COPE குழுவின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இவ்வாறு பிணைப்பொறுப்பு உரித்தாளிகளுக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலுள்ள சேமலாப நிதியத்தை பல்கலைக்கழகத்திற்கு கையளிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பங்களிப்புடன் இம்மீதிகளை பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விரிவுரையாளர்களின் சேமலாப நிதியம் அவர்களின் பிணை முறிப் பெறுமதியை அறிவதற்கு போதுமானதாகும். சேமலாப நிதியத்தை பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

| பெயர் | பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டியுள்ள தொகை |
|---|---|
| 1. ஈ.எம்.ஏக்கநயக்க | 315,000.00 |
| 2. ஜே.கே.டீ.ஜே.ஏ.யூ.ஜயவர்தன | 324,903.00 |
| 3. டீ.எம்.ஏ.பியதிலக்க | 74,054.60 |
| 4. கே.கிரிதரன் | 102,204.74 |
| 5. எஸ்சிவநாதன் | 789,847.54 |
| 6. கலா.சீ.ஜே.பியதிலக்க | 186,255.38 |
| 7. சீ.ஏ.எஸ்.செனவிரத்ன | 610,990.00 |

| | |
|---|---|
| 8. பி.என்.செல்வராஜ் | 202,718.74 |

- கீழே காட்டப்பட்டுள்ள விரிவுரையாளர்களின் பிணைப்பொறுப்பு பெறுமதியை அறவிடுவதற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

| பெயர் | பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டியுள்ள தொகை |
|---|---|
| 1. ஏ.ரீ.எல்.தாலிப் | 203,916.70 |
| 2. எம்.வெத்தசிங்ஹ | 712,447.00 |
| 3. பி.பாஸ்கரன் | 56,878.10 |
| 4. திரு.எஸ்சிவதலாயன் | 495,623.46 |
| 5. கலா.டப்.கே.சீ.வீபத்த | 1,868,641.00 |

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் பிணைப்பொறுப்பு தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு பிணைப்பொறுப்பு குழுவிற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக நியமிக்கப்பட்ட உப குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

| பெயர் | பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டியுள்ள தொகை |
|---|---|
| ஈ.ஜே.எச். கொரயா | 5,410,710.00 |

(கீ) கண்டி கங்கவட்ட கோரளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான ஆதனங்களுக்காக 1997 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 1,034,839 கூட்டுத்தொகையான வீதவரித் தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்த வேண்டிய வீதவரித் தொகை 1997 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை கணக்குகளில் அட்டுறு செலவினமாக வேறாக காண்பிக்கப்படவில்லை.

1994 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட நிலுவை தொகை ஆதன விபரங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அந்த ஆதனங்களைப் பரீட்சித்து சரியான தன்மையைப் உறதிப்படுத்தியதன் பின்னர் 2015.03.12 ஆந் திகதி நடைபெற்ற நிதிக் குழுவின் அங்கீகாராத்தன் படி 2015.04.22 ஆந் திகதி பேராதனை மக்கள் வங்கியின் 032690 ஆம் இலக்க ரூபா 976,635.03 பெறுமதியான காசோலை மூலம் தீர்க்கப்பட்டுள்ளதுடன், அனைத்து நிலுவை வீத வரிகளும் தற்போது செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

(கு) தற்போது கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(கூ) பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 1390 ஏக்கர் 02 ரூட் 21.6 பேர்ச் காணியும் 03

| | |
|---|---|
| | மாணவ விடுதிகளும் "சீ" வகையிலான 03 வீடுகளையும் மதிப்பீடு செய்வதற்காக விலைமதிப்புத் திணைக்களத்தினை தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டு அறிக்கை இதுவரை கிடைக்காதிருந்ததுடன், அறிக்கை கிடைத்தவுடன் நிதி அறிக்கைகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கெ) | 2013 ஆம் ஆண்டில் அட்டுறு செலவினமாக ரூபா 37,733,400.00 பெறுமதியான மிகை ஒதுக்கீடாக கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், ரூபா 11,299,508.33 பெறுமதியொன்று மிகை ஒதுக்கீடாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தவறு தற்போது முன்னைய ஆண்டின் சீராக்கமாக சீராக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2014 ஆம் ஆண்டிலிருந்து சரியாக அட்டுறு செலவினங்களை ஒதுக்கீடு செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (கே) | பல்கலைக்கழகத்தின் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக ஒவ்வொரு கற்கைத்துறையிடமுமுள்ள சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் நிதிப் பிரிவிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டு வருவதுடன், அநேகமான பிரிவுகளினால் அதற்கான விபரங்கள் நிதிப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் ஏனைய துறைகள் தொடர்பாக சகல விபரங்களும் கிடைத்ததன் பின்னர் அச்சொத்துக்கள் தொடர்பாக பல்கலைக்கழகத்தின் பீடங்கள், துறைகள், பிரிவுகள் நிலையங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு விரிவான பட்டோலையொன்று தயாரிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்னர் அரச விலைமதிப்பாளர்களைக் கொண்டு மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் கணக்குகளுடன் இம்மதிப்பீட்டு மீதிகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கே) | **13-01-07-00-02 - ரூபா 49,174.00**<br><br>நீண்டகாலமாக செயலற்று காணப்பட்ட இக்கணக்கு மீதி பீட அபிவிருத்தி நிதியத்திற்கு JV/2015/10 மூலம் மாற்றப்பட்டிருந்தது.<br><br>**13-02-07-00-02 - ரூபா 200.00**<br><br>பொறியியல் பீடத்தில் பல்கலைக்கழக பயிற்சி கணக்கில் சேமிக்கப்பட்டிருந்த இப்பணம் 2014 ஒக்தோபர் மாதத்தின் போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட 373771 ஆம் இலக்க காசோலை மூலம் ஆராய்ச்சி பயிற்சி நிதியத்திற்கு செலவு வைக்கும் பொருட்டு தீர்க்கப்பட்டுள்ளது.<br><br>**13-11-17-00-01 - ரூபா 80,562.00**<br><br>1999 ஆம் ஆண்டின் போது தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்பட்ட இம்மானியம் பீட பேரேட்டிலிருந்து அகற்றப்பட்டு பீட அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றப்பட்டது.<br><br>**13-11-07-00-02 - ரூபா 250,000.00**<br><br>**13-11-07-00-04 - ரூபா 5,000.00**<br><br>**13-11-07-00-05 - ரூபா 25,000.00** |

**13-11-07-00-06 - ரூபா 26,056.00**

2015 சனவரி 07 ஆம் திகதி நடைபெற்ற 339 ஆவது நிதிக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பேரேட்டில் சீராக்கப்பட்டுள்ளது.

**13-11-07-00-07 - ரூபா 9,112.75**

நீண்டகாலமாக விளைவற்று காணப்பட்ட இக்கணக்கு மீதி JV/2015/10 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் பீட அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றப்பட்டது.

**13-34-07-00-01 - ரூபா 174,377.85**

SIDA SAREC மானியத்தின் கணக்காய்வு நடவடிக்கைகள் வெளி கணக்காய்வு நிறுவனமொன்றான Ford Rhodes கணக்காய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்கல் 2013 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்ய்பபட்டது. இந்த எஞ்சிய தொகையை அனுப்புவதற்காக ஒருங்கிணைப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அவரின் ஆலோசனையின் பிரகாரம் நிதி மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**13-42-07-00-03 - ரூபா 42,457.00**

நீண்டகாலமாக விளைவற்று காணப்பட்ட இக்கணக்கு மீதி பீட அபிவிருத்தி நிதியத்திற்கு JV/2015/10 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் மாற்றப்பட்டது.

**1301021202 - ரூபா 37,250.00**

இக்கணக்கில் எஞ்சியிருந்த மீதிப் பணத்தை தற்போது பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி உத்தியோகத்தர் சுகவீனமாக இருப்பதால் ஆராய்ச்சி நடவடிக்கைகள் அக்காலப்பகுதியில் மேற்கொள்ள முடியாமல் போனது. தற்போது இக்கணக்கில் மீதியொன்று இல்லை.

**1301021205 - ரூபா 28,900.00**

இக்கணக்கில் எஞ்சியிருந்த மீதிப் பணத்தை தற்போது பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி உத்தியோகத்தர் சுகவீனமாக இருப்பதால் ஆராய்ச்சி நடவடிக்கைகள் அக்காலப்பகுதியில் மேற்கொள்ள முடியாமல் போனது. தற்போது இக்கணக்கில் மீதியொன்று இல்லை.

**1301021206 - ரூபா 45,000.00**

இக்கணக்கில் ரூபா 45,000 தொகை எஞ்சியுள்ளது. எனினும் ஆராய்ச்சி உத்தியோகத்தரால் ரூபா 53,818.00 தொகையான பட்டியல் மீள்நிரப்புவதற்காக அனுப்பப்பட்டிருந்தது. அத்தொகை நிதியாளரின் அங்கீகாரத்தின் கீழ் பல்கலைக்கழகத்தினால் விடுவிக்கப்பட்டிருந்தமையால் அத்தொகை அவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதனால் கணக்கில் எஞ்சியிருந்த ரூபா 45,000 தற்போது பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது இக்கணக்கில் மீதியொன்று இல்லை.

**1322000002 - ரூபா 243,070.00**

தற்போது 12.020.2014 இல் K0061 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் தீர்க்கப்பட்டுள்ளது. தற்போது

இக்கணக்கில் மீதியொன்று இல்லை.

**13.01.14.12.06 – கலாநிதி மீகஸ்கும்புர RG/2012/45/S**

இது பல்கலைக்கழகத்தின் நிதியத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஆராய்ச்சி செயற்திட்டமொன்றாகும். இச்செயற்திட்டத்திற்காக ரூபா 380,000.00 தொகை ஓதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 190,000.00 வழங்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் செலவினங்களுக்குரிய வேண்டுகோள் சமர்ப்பிக்கப்படாமையால் கிடைத்த பணம் தொடர்ந்தும் மீதியொன்றாக காணப்பட்டமையால் 2014.12.23 ஆந் திகதி அம்மீதி மீண்டும் தலைமை நிதிப் பிரிவிற்கு மாற்றப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014.12.31 இன் பின்னர் இச்செயற்திட்டத்திற்குரிய கணக்கில் மீதியொன்று காணப்படவில்லை.

**13.01.14.12.05 – கலா.வீ.என். செனவிரத்ன RG/2012/44/S**

இது பல்கலைக்கழகத்தின் நிதியத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஆராய்ச்சி செயற்திட்டமொன்றாகும். இச்செயற்திட்டத்திற்காக ரூபா 250,000.00 தொகை ஓதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்கிற்கு ரூபா 125,000.00 மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் செலவினங்களுக்குரிய வேண்டுகோள் சமர்ப்பிக்கப்படாமையால் கிடைத்த பணம் தொடர்ந்தும் மீதியொன்றாக காணப்பட்டமையால் 2014.12.23 ஆந் திகதி அம்மீதி மீண்டும் தலைமை நிதிப் பிரிவிற்கு மாற்றப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014.12.23 ஆந் திகதியின் பின்னர் இச்செயற்திட்டத்திற்குரிய கணக்கில் மீதியொன்று காணப்படவில்லை. இச்செயற்திட்டத்திற்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அத்தொகை பயன்படுத்தப்படாமல் செயற்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யடாதிருந்தமை ஆராய்ச்சி குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**13-11-07-07-14 - ரூபா 108,864.00**

நீண்டகாலமாக விளைவற்று காணப்பட்ட இக்கணக்கு மீதி பீட அபிவிருத்தி நிதியத்திற்கு JV/2015/10 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் மாற்றப்பட்டது.

**1332440004 - ரூபா 75,250.00**

இம்மீதி தற்போது தீர்வு செய்யப்பட்டுள்ளது.

**13-42-07-00-05 ரூபா 93,907.00**

Flood Inundation Modeling Research grant செயற்திட்டம் மஹவெலி அதிகாரசபையிலிருந்து கிடைக்க வேண்டிய தகவல்களின் தாமதம் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. கணக்கு மீதி தீர்க்கப்பட வேண்டிய முறை தொடர்பாக அறிவுறுத்துவதற்கு மானிய வழங்குனர் இணங்கியருந்தார்.

**1312160701- ரூபா 54,440.00**

இம்மீதியிலிருந்து ரூபா 20,000 தொகையான முற்பணம் 2015 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், எஞ்சிய மீதி குறித்த ஆராய்ச்சியாளரின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டது.

**1342160001- ரூபா 137,752.00**

2015.05.08 ஆந் திகதி வரையில் ரூபா 6,440.58 குறைவடைந்திருந்ததுடன், மீதி குறித்த ஆராய்ச்சியாளரின்

சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டது.

**1342160004 - ரூபா164,916.00**

**1342160005 - ரூபா 11,071.00**

இக் கணக்குகளில் நீண்டகாலமாக விளைவற்று காணப்பட்டமையால் பல்கலைக்கழகத்தின் நிதியத்திற்கு மாற்றப்பட்டது.

**1342161001 - ரூபா 10,619.00**

இம்மீதி தற்போது பூச்சியமாக உள்ளது.

**1301161102 - ரூபா 33,756.00**

2014.12.16 ஆந் திகதியில் இம்மீதி பூச்சியமாக உள்ளது.

**1301110801 - ரூபா .17,540.00**

**1301110901 - ரூபா 16,353.00**

**1301110902 - ரூபா 1,502.00**

**1301110903 – ரூபா 1,665.00**

ஆராய்ச்சியாளரினால் குறித்த ஆராய்ச்சி நடவடிக்கை பூர்த்தி செய்துள்ளதாக தெரிவிக்காமையால் மீதியொன்று வருடாந்தம் முன்கொண்டு வரப்படுகின்றது. எனினும் இதுவரையில் ஆராய்ச்சி பூர்த்தி செய்துள்ளதாக அறிவித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது கணக்குகளில் மீதிகள் காணப்படவில்லை.

**1311110001 – ரூபா.69,267.00**

**1311110703 – ரூபா 81,259.00**

இந்த 02 நிதியங்கள் தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து வழங்கப்பட்ட ஆராய்ச்சி நிதியமொன்றாக இருந்ததுடன், இந்நிதியை மீண்டும் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு அனுப்புவது தொடர்பாக தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இதுவரை தேசிய விஞ்ஞான மன்றத்திடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. அதன் பிரகாரம் மீண்டும் நினைவூட்டலின் பின்னர் பதில் கிடைக்காவிட்டால் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**1301041105 - ரூபா 150,000.00 (கலா. டப்.எம்.டப்.பி.சீ.எஸ்.எம். விக்ரமசிங்ஹ)**

இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனினும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டியல்களில் காணப்படும் சில சிக்கல்கலான நிலைமையினால் பணக் கொடுப்பனவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**1301041106 - ரூபா 178,665.00 (கலா.ஜீவக சமன் குமார)**

இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. அத்துடன், 07.03.2013 ஆம் திகதி சிரேஷ்ட உதவி பதிவாளர்/ நிர்வாக சபை மற்றும் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் 30.03.2013 ஆந் திகதி வரை ஆராய்ச்சி அறிக்கையை வழங்குவதற்காக கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி நிதியத்திற்காக ரூபா 190,000/= வழங்கப்பட்டிருந்ததுடன், ரூபா 11,335/= தொகை மாத்திரம் செலவிடப்பட்டுள்ளது.

**1301041107 - ரூபா 75,000.00 (கலா.டப்.எம்.எஸ்.கே.விஜேசுந்தர)**

இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும், வழங்கப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆதலால் இந்நிதி ஆராய்ச்சி நிதியத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1301040901 - ரூபா 30,000.00 – (ஏ.எஸ்.ரீ.ராஜபக்ஷ)**

இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி ரூபா. 110,000/- இல் எஞ்சிய ரூபா 30,000/- மட்டும் கணக்கில் உள்ளது. எனவே, இந்நிதி அகற்றப்பட்டு கணக்கை மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1301040902 - ரூபா 36,000.00 (ஏ.எஸ்.எம். நவ்பல்)**

இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. அத்துடன், செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி ரூபா. 60,000./- இல் ரூபா 24,000/- மட்டும் செலவிடப்பட்டுள்ளதுடன், ரூபா 36,000/- எஞ்சியுள்ளது. இந்நிதியை மீண்டும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1301041104 - ரூபா 80,475.00 (கலாநிதி டீ.டப்ளிவ்.எம்.டீ.டப்ளிவ் பண்டார)**

இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதியில் எஞ்சிய தொகை கணக்கில் காட்டப்பட்டுள்ளது. எனவே, இந்நிதி மீண்டும் பீட நிதியக் கணக்கில் இருந்து பிரதான ஆராய்ச்சி நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**1301041105 - ரூபா 150,000.00 (கலாநிதி டப்ளிவ்.எம். டப்ளிவ்.பீ.சீ.எஸ்.எம். விக்கிரமசிங்க)**

இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எனினும், சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டில் காணப்படும் சில சிக்கலான நிலைமைகளின் அடிப்படையில் பணம் செலுத்துவது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

**130104122 - ரூபா 86,500.00 ( கலாநிதி எம். சோமதிலக்க )**

இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதியில் எஞ்சிய தொகை கணக்கில் காட்டப்பட்டுள்ளது. எனவே, இந்நிதி மீண்டும் பீட நிதியக் கணக்கில் இருந்து பிரதான ஆராய்ச்சி நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**1301041209- ரூபா 216,500.00 (கலாநிதி அமரசிங்க த சில்வா)**

இது நிறைவு செய்யப்படாத ஒரு ஆய்வு செயற்றிட்டமாகவுள்ளதுடன், ஆராய்ச்சியாளர் சேவையில் இருந்து ஓய்வு

பெற்றுள்ளார். ஆராய்ச்சி நிதியம் தற்போது திருப்பியனுப்பப்பட்டுள்ளது. கணக்கில் நிதி மீதியொன்று காணப்படவில்லை.

**134221002- ரூபா 107,512.00**

இக்கணக்கு 2013.12.31 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன், அங்கு மீதியொன்று காணப்படவில்லை.

**1342210903- ரூபா 374,782.00**

இக்கணக்கிற்குரிய மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகள் முடிவடைந்திருந்ததுடன், அதன் மிகையான ரூபா 374,782.00 தொகை ஏனைய ஆராய்ச்சி நடவடிக்கைளுக்கு ஈடுபடுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

இங்கு உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி கணக்கின் பிரகாரம் கணக்கின் பிரகாரமும் அறிக்கையின் பிரகாரமும் பெறுமதிகள் தனிப்பட்ட கோவைகள் பரீட்சிக்கப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிலிருந்து இப்பெறுமதிகள் சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து கூடுதலாக அறவிடப்பட்ட மீதி கணக்கின் பிரகாரம் மீதி மற்றும் சட்டப் பிரிவின் பட்டோலையின் மீதி உரிய தனிப்பட்ட கோவைகளுடன் ஒப்பிடப்பட்டு கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த பணத்தை அதன் உரிய நபர்களுக்கு கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 2.2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ)** **<u>நிலுவை மின் கட்டணம்</u>**

பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள வெளிவாரி நிறுவனங்களிடமிருந்து 2013.12.31 வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 1,257,748 தொகையில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 960,796 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய தொகையை அறவிடுவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன.

| சேவை நிலையம் | பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் | 2013.12.31 இல் நிலுவை மின் கட்டணம் | 2014 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட தொகை | நிலுவைத் தொகை ரூபா | விபரங்கள் |
|---|---|---|---|---|---|
| மருத்துவ பீடத்தின் நலன்புரிச் சங்கம் நிழற்பட பிரதி எடுத்தல் | பொருளாளர் | 24,739.00 | 23,500.00 | 1,239.00 | குறித்த நிலுவைக் கட்டணத்தை தீர்ப்பதற்கு பல்கலைக்கழகத்தின் 342 ஆவது நிதிக் குழுவினால் 05 மாத சலுகை காலம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>அக்காலப்பகுதியில் நிலுவைக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிலையம் | | | | | கட்டணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்க நிழற்பட பிரதி எடுத்தல் நிலையம் | பொருளாளர் | 16,648.00 | 14,500.00 | 2,148.00 | 342 ஆவது நிதிக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| தபால் அலுவலகம் | தபால் நிலையப் பொறுப்பதிகாரி | 25,408.91 | | 25,408.91 | இத்தொகையை செலுத்துமாறு கண்டி தெற்கு, பிராந்திய தபால் அத்தியட்சகருக்கு தெரியப் படுத்துவதற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

| **சேவை நிலையம்** | **பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்** | **2013.12.31 இல் நிலுவை மின் கட்டணம்** | **2014 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட தொகை** | **நிலுவைத் தொகை ரூபா** | **விபரங்கள்** |
|---|---|---|---|---|---|
| பேரவை கூட சிற்றுண்டிச்சாலை | கல்விசாரா தாபன பிரிவு நலன்புரிச் சங்கம் | 59,477.00 | 15,000.00 | 44,477.00 | தற்போது அனைத்த நிலுவைப் பணமும் அறவிடப்பட்டுள்ளது. |
| மாணவர் நிலைய கூட்டுறவு (WUS) | பல்கலைக் கழக மினி மீச்சந்தை | 37,037.00 | - | 37,037.00 | குறித்த ரூபா 37,037.00 தொகையான நிலுவைக் கட்டணம் 2014 நவம்பர் மாதத்தின் போது தீர்வுசெய்யப்பட்டுள்ளது.<br>எதிர்வரும் ஆண்டிற்கான நிலுவைக் கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| மருத்துவ பீடத்தின் | பொருளாளர் | 78,889.00 | 15,000.00 | 63,889.00 | குறித்த நிலுவைக் கட்டணத்தை தீர்ப்பதற்காக பல்கலைக்கழகத்தின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நலன்புரிச் சங்கம் | | | | | 342 ஆவது நிதிக் குழுவினால் 05 மாத சலுகை காலம் வழங்கப்பட்டுள்ளது. அக்காலப் பகுதியில் நிலுவைக் கட்டணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 344 ஆவது நிதிக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| WUS கூட்டுறவு நிலையம் | முகாமையாளர் | 13,500.00 | - | 13,500.00 | குறித்த நிலுவைக் கட்டணத்தை தீர்ப்பதற்காக பல்கலைக்கழகத்தின் 342 ஆவது நிதிக் குழுவினால் 05 மாத சலுகை காலம் வழங்கப்பட்டுள்ளது. அக்காலப் பகுதியில் நிலுவைக் கட்டணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 344 ஆவது நிதிக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| பல்கலைக் கழக கூட்டுறவு நிலையம் (USO) | முகாமையாளர் | 23,820.00 | 2000.00 | 21,820.00 | இத்தொகையை தீர்ப்பதற்காக சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டு கடிதம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. |
| WUS தபால் அலுவலகம் | தபால் அதிபதி | 13,212.00 | 8¸000.00 | 5,212.00 | இத்தொகையை செலுத்துமாறு கண்டி தெற்கு, பிராந்திய தபால் அத்தியட்சகருக்கு தெரியப் படுத்துவதற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

<u>**நிலுவை நீர்க் கட்டணம் - 12-01-56-00**</u>

பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள வெளி நிறுவனங்களிடமிருந்து 2013.12.31 வரை நிலுவை

நீர்க்கட்டணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 512,783 தொகையை அறவிடுவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன.

| சேவை நிலையம் | பொறுப்பான உத்தியோகத்தர் | 2013.12.31 இல் நிலுவை நீர் கட்டணம் | 2014 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட தொகை | நிலுவைத் தொகை ரூபா | விபரங்கள் |
|---|---|---|---|---|---|
| முஸ்லிம் பள்ளிவாசல் | தலைமை மதகுரு | 29,464.00 | 30,000.00 | - | குறித்த ரூபா 29,464.00 ஆன நிலுவைக் கட்டணம் 2014 ஏப்ரல் மாதத்தின் போது தீர்க்கப்பட்டது.<br><br>எதிர்வரும் ஆண்டிற்கான நிலுவைப் பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தலைமை மதகுரு தெரியப்படுத்தியிருந்தார் |
| பீட சமூக மண்டபம் | தலைவர் | 21,330.00 | 317 ஆவது நிதிக் குழுவின் மூலம் 2013 சனவரி முதல் மின் கட்டணத்தை அறவிடாமல் இருக்க தீர்மானிக்கப்பட்டது. | 9,406.00 | எஞ்சிய நிலுவைத் தொகையை செலுத்துமாறு பீட சமூக மண்டபத்திற்கு தெரியப்படுத்தி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| மாலனீ அதிகாரம் | - | 16,785.00 | 10,000.00 | 6,785.00 | எஞ்சிய நிலுவைத் தொகையை செலுத்துமாறு மாலனீ அதிகாரம் அவர்களுக்கு தெரியப்படுத்தி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| சரசவி உயன வித்தியாலயம் | அதிபர் | 22,969.50 | - | 22,969.50 | எஞ்சிய நிலுவைத் தொகையை செலுத்துமாறு அதிபருக்கு தெரியப்படுத்தி கடிதம் அனுப்பி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | வைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| புதிய கலைப் பீட கட்டிடத்தை விரிவுபடுத்தல் | - | 83,218.00 | இச்செயற்திட்டத்தின் இறுதியில் மூலதன பிரிவின் மூலம் செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது குறித்த பணத்தை அறவிடப்பட்டுள்ளது. |
| இரசாயன ஆய்வுகூட புனரமைப்பு | - | 17,650.00 | |
| விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு கட்டிடம் | - | 68,200.00 | இச்செயற்திட்டம் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் மூலம் கேள்விப் பத்திரங்கள் கோரல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், குறித்த கொடுப்பனவுகள் அனைத்தும் அந்த நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

<u>நிலுவை வாடகை வருமானம் - 12-01-51-00</u>

பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள வெளி நிறுவனங்களிடமிருந்து 2013.12.31 வரை நிலுவை வாடகையாக அறவிடப்பட வேண்டிய ரூபா 212,187.00 தொகையில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 202,237.00 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய தொகையை அறவிடுவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன.

| **சேவை நிலையம்** | **பொறுப்பான உத்தியோகத்தர்** | **2013.12.31 இல் நிலுவை நீர் கட்டணம்** | **2014 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட தொகை** | **நிலுவைத் தொகை ரூபா** | **விபரங்கள்** |
|---|---|---|---|---|---|
| மாணவர் கூட்டுறவு நிலையம் | பல்கலைக் கழக கூட்டுறவு சங்கம் | 9,000.00 | - | 9,000.00 | குறித்த நிலுவைக் கட்டணத்தை தீர்ப்பதற்காக பல்கலைக்கழகத்தின் 342 ஆவது நிதிக் குழுவினால் 05 மாத சலுகை காலம் வழங்கப்பட்டுள்ளது.<br>அக்காலப் பகுதியில் நிலுவைக் கட்டணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சங்கத்திற்கு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | அறிவிக்கப்பட்டுள்ளது. |
| | இணைந்த சுகாதார சேவை நிழற்பட பிரதி நிலையம் | கே.ஜீ.சீ. குலதுங்க | 10,950.00 | - | - | இந்தநிழற்பட பிரதி நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக திரு.குலதுங்க அவர்களால் பல்கலைக்கழகத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள இன்னும் விடுவிக்கப்படாத ரூபா 10,000 பிணை வைப்புத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | இலங்கை வங்கி | முகாமையாளர் | 69,117.00 | 69,117.00 | - | குறித்த நிலுவைக் கட்டணம் 2014 மார்ச் மாதம் தீர்வு செய்யப்பட்டுள்ளது. |
| | சலவை சேவை | எஸ். ராஜகோபால் | 62,200.00 | 62,200.00 | - | குறித்த நிலுவைத் தொகையில் ரூபா 55,800.00 தொகை தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன், எஞ்சிய ரூபா 6,200.00 தொகையை அறவிடுவதற்காக அவரால் இதற்கு முன்னர் பல்கலைக்கழகத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 10,000 தொகையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | விஞ்ஞான பீடத்தின் நூலக நிழற்பட பிரதியெடுத்தல் நிலையம் | டீ.டீ.டீ.பீ. பதிரண | 10,920.00 | | - | இந்நிழற்பட பிரதியெடுத்தல் நிலையத்திற்காக திரு.பதிரண அவர்களினால் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 15,000 தொகை அறவிடப்பட்டுள்ளது. |
| | WUS சலூன் | ஏ.ஜீ.ஜீ.கே. லசந்த | 50,000.00 | 50,000.00 | - | குறித்த நிலுவைத் தொகையில் ரூபா 45,000.00 தொகை தீர்வு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 5,000.00 தொகையை அறவிடுவதற்காக அவரால் இதற்கு முன்னர் பல்கலைக்கழகத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 10,000 தொகையிலிருந்து அறவிடப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) | தற்போது நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | **<u>தொலைபேசிக் கட்டணத்தை அறவிடல்</u>**<br><br>பல்கலைக்கழகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 03 நிறுவனங்களிடமிருந்து 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 19,145.00 ஆன நிலுவை தொலைபேசிக் கட்டணங்கள் பின்வருமாறு அறவிடப்பட்டுள்ளது.<br><br>1. **<u>IRQUE செயற்திட்டம் - கலை பீடம்</u>**<br>IRQUE செயற்திட்டத்தின் கலைப்பீட கிளையிலிருந்து தொலைபேசிக் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 24,788 தொகை 10026223 ஆம் இலக்க பற்றுசீட்டின் மூலம் பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.<br><br>**<u>IRQUE செயற்திட்டம் - விவசாய பீடம்</u>**<br><br>IRQUE செயற்திட்டத்தின் விவசாய பீட கிளையிலிருந்து தொலைபேசிக் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 36,540.00 தொகையான நிலுவை தொலைபேசிக் கட்டணங்களை பல்கலைக்கழகத்தின் 328 ஆவது நிதிக் குழு தீர்மானத்தின் மூலம் பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>2. **<u>மக்கள் வங்கிக் கிளை</u>**<br>மக்கள் வங்கி கிளையின்நிலுவை தொலைபேசிக் கட்டணமான ரூபா 19,401.00 தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளது.<br><br>3. **<u>இலங்கை வங்கி</u>**<br>இலங்கை வங்கி கிளையிலிருந்து நிலுவை தொலைபேசிக் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 38,416.00 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய ரூபா 15,729.36 தொகையை அறவிடுவதற்கு வங்கிக்கு அறிவிப்புக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2013/2014 ஆம் கல்வியாண்டிலிருந்து மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம் மற்றும் மண்டபக் கட்டணங்களை மீள அவிடும் போது இதுவரை பின்பற்றிய முறைக்கு மேலதிகமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முடிவடைந்ததுடன் தண்டப்பணம் பரீட்சிக்கப்பட்டு கொடுப்பனவுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளதால் தற்போது அறவிட வேண்டிய மண்டப தண்டப்பணத்தை அறவிடுவதில் முன்னேற்றமொன்று காணப்படுகின்றது.<br><br>அதன் பிரகாரம் கீழே காட்டப்பட்ட முறையில் அறவிடப்பட வேண்டிய மண்டபக் கட்டணங்கள் மற்றும் தண்டப் பணம் என்பவற்றை சுட்டிக்காட்டலாம்<br><br>தண்டத்துடன் கூடிய சான்றிதழ்கள் 246,822.50<br><br>பாடநெறிகளைப் பூர்த்தி செய்யாத 641,596.00 |

தண்டப்பணம் சான்றிதழ்கள் இல்லாமல் 3,069,409.50

மொத்தம் 3,957,828.00

இதில் அறவிடமுடியாத மீதியான ரூபா 3,069,409.50 தொகை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) இம்முற்பணத் தொகையில் ரூபா 206,486.00 பெறுமதியான முற்பணங்களைப் பெற்றுக்கொண்ட விரிவுரையாளர்கள் தற்போது பல்கலைக்கழகத்தில் இல்லாமல் இருந்ததுடன், அவர்களின் சேமலாப நிதியத்தலிருந்து அந்த அறவிட வேண்டிய முற்பணத்தை அறவிட்டு பல்கலைக்கழகத்திற்கு அனுப்புமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அப்பணம் கிடைத்ததன் பின்னர் இம்முற்பணம் தீர்க்கப்படும்.

எஞ்சிய முற்பணங்களில் இதுவரை ரூபா 98,290.00 தொகை இதுவரை தீர்க்கப்பட்டுள்ளது.

Dr. D. K. குணசேகர - PF 01876 - ரூபா 9,000.00

Dr. B. R. K.ஒபேசேகர - PF 06827 - ரூபா 197,486.95

ரூபா 206,487.95

கலாநிதி விக்ரமகே அவர்களால் பெற்றுக்கொண்ட ரூபா 4,977.00 கலாநிதி. ஐ..எம்.எஸ். சத்தியபிரகாஷ் பெற்றுக் கொண்ட ரூபா 20,000.00 முற்பணத்தொகை 2015.08.06 ஆந் திகதி நடைபெற்ற 345 ஆம் இலக்க நிதிக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சம்பளத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரூபா 22,000.00 தொகையான முற்பணத்தை குறித்த ஆய்வாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) **விழா முற்பணம் ரூபா 223,827.00**

| கணக்கு குறியீடு இலக்கம் | பெறுமதி | அறவிடப்பட்ட தொகை | அறவிடக்கூடிய தொகை | இனங்காணப்படாத மற்றும் அறவிட முடியாத தொகை |
|---|---|---|---|---|
| 12-02-03-01 | 65,210.00 | 62,960.00 | 2,250.00 | - |
| 12-02-03-02 | 97,670.00 | 21,750.00 | 46,900.00 | 29,020.00 |
| 12-02-03-03 | 50,880.00 | 9,000.00 | 27,780.00 | 14,100.00 |
| 12-02-03-04 | 104,509.85 | 15,750.00 | 63,850.00 | 24,909.85 |
| 12-02-03-07 | 4,494,00 | - | - | 4,494,00 |
| 12-02-03-08 | 10,544.41 | - | 5,000.00 | 5,541.41 |
| | **333,307.50** | **109,460.00** | **145,780.00** | **78,067.85** |

| | |
|---|---|
| | மேற்படி இனங்காண முடியாத கடன் மீதிகளில் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>**<u>செயற்பாடற்றிருந்த கடன் மீதி - ரூபா 223,524.00</u>**<br><br><u>P 08156 டீ.எம்.டப்.ஜே.ஆர். தஹநாயக்க , P 08268 ஏ.சீ.சீ.ஹனாஸ்</u><br><br>சேமலாப நிதியத்தலிருந்து அத்தொகை அறவிடப்பட்டுள்ளது.<br><br><u>P 04986 டீ.எம்.பி.பிரேமதாஸ P 09120 எஸ்.சீ.எஸ்.மட்டிவெலகெதர</u><br><br>இதவரையில் சேமலாப நிதியம் விடுவிக்கப்படவில்லை அத்துடன் அவர்களின் சேமலாப நிதியத்தை விடுவிக்கும் போது அக்கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br><u>P 00990 எம்.எம்.திலகரத்ன</u><br><br>சேமலாப நிதியத்தலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>**<u>வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன்மீதி ரூபா 162,987.00</u>**<br><br>இந்த உத்தியோகத்தர்களில் எஸ்.பீ.ரீ. விஜேரத்ன (P 05274) சேமலாப நிதியத்தலிருந்து ரூபா 139,936.00 தொகை அறவிடப்பட்டுள்ளது.<br><br>மேலும் சேவையை விட்டுச்சென்ற அல்லது ஓய்வுபெற்ற ஊழியர்களிடமிருந்து கடன்தொகை அவர்களின் சேமலாப நிதியத்தை விடுவிக்கும் போதே அறவிட கூடியதாக இருக்கும். திரு.டீ.ஆர்.கே. ஒபேசேகரவின் சேமலாப நிதியம் இதுவரை விடுவிக்கப்படாதிருந்ததுடன், அவரின் சேமலாப நிதியத்தை விடுவிக்கும் போது ரூபா 23,051.00 தொகையான கடன் மீதி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களம் 1987.12.31 ஆம் திகதி பல்கலைக்கழகத்துடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் முதலாவது ஐந்தாண்டுகளுக்கு ரூபா 12,000 வருடாந்த குத்தகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கையின் 3 ஆவது பந்தியின் பிரகாரம் 1992 ஆண்டு முதல் அரசின் மதிப்பீட்டு அடிப்படையில் வாடகை திருத்தம் செய்யட்டது. குறித்த குத்தகை தொகையை செலுத்துமாறு பல தடவை நினைவூட்டப்பட்டிருந்த போதிலும், அதற்காக நல்ல பதிலொன்று கிடைக்கவில்லை. இச்சிக்கல் இதுவரை தீர்வு செய்யப்பட முடியாமையால் 2013.04.19 ஆந் திகதி காணி கட்டிட பராமரிப்பு குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிறகு இதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2013.06.06 ஆந் திகதி உயர்கல்வி அமைச்சு மற்றும் பொருளதார அபிவிருத்தி அமைச்சு என்பவற்றுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், மீண்டும் இந்த ஆதனங்களை பல்கலைக்கழகத்திற்கு கையளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. 2014.05.28 ஆந் திகதி சட்டமா அதிபருடன் தொடர்புபடுத்தி சட்டரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசின் வழக்கறிஞரொருவரால் குறித்த தரப்பினர் வரவழைக்கப்பட்டு விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுன், அதன் பின்னர் மீண்டும் 2015.06.10 ஆந் திகதி பல்கலைக்கழகத்தின் தரப்பினர் வரவழைக்கப்பட்டு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அதன் பிரகாரம் தற்போதைய நிலைமை தொடர்பாக முழுமையான அறிக்கையொன்று அரச வழக்கறிஞருக்கு வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் மீண்டும் குறித்த தரப்பினர் அறிவிக்கப்பட்டு எடுக்கப்படும் இறுதி நடைமுறைகள் தொடர்பாக பல்கலைக்கழகத்திற்கு அறியத்தருவதாக அரச வழக்கறிஞரால் அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குரிய ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க மாவத்தை கெட்டம்பேயில் அமைந்துள்ள காணி ஆரம்ப வரைபட இலக்கம் 1972 துண்டு இலக்கம் 1,2,3,4 மற்றும் 1896 என்பனவற்றின் கீழ் 1987.12.31 |

| | |
|---|---|
| | முதல் 2017.12.30 வரை இடம் மாத்திரம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆதனங்களின் குத்தகையாளர் மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களமாக இருந்ததுடன், 2005 இன் 26 ஆம் இலக்க உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்த இரண்டு நிறுவனங்களும் ஒரே அமைச்சிற்கு உரித்துடையதாக குறித்த நிறுவகத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| **(ஏ)** | அந்த ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட படி மேற்படி நிறுவகத்திடமிருந்து ரூபா 318,892.00 தொகையை அறவிடுவதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடமுடியுமாக இருந்த தொகை ரூபா 145,000.00 ஆக இருந்ததாக கணக்கிடப்பட்டுள்ளது.<br><br>இத்தொகையை அறவிடுவது தொடர்பாக ஆலோசனைகளை கோரி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அங்கு பெற்றுக்கொண்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிர்வாக சபையின் அனுமதியின்படி நியமிக்கப்பட்ட தீர்ப்பாளர் ஒருவரால் இணக்கப்பாடொன்றிற்காக சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் இணக்கப்பாட்டிற்காக Madhu freighter தனியார் கம்பனியினால் எந்தவொரு முன்வைப்பும் மேற்கொள்ளப்படாதிருந்தமையால் தீர்ப்புச் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| **2.2.4** | **கணக்காய்விற்கான சான்றுகளின்மை** |
| **(அ)** | சர்வதேச ஆராய்ச்சி நிலையம் இலங்கையின் பல்கலைக்கழகங்களை சர்வதேசமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் ஒரு கட்டமாக ஸ்தாபிக்கப்பட்டதாகும். அதன் பிரகாரம் பேராதனைப் பல்கலைக்கழகத்தினுள் ஆராய்ச்சி கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்கும் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் நடவடிக்கை எடுத்திருந்தது. எமது விசுவாத்தின் படி சர்வதேச ஆராய்ச்சி நிலையம் அதன் நோக்கங்களுக்கு முன்னால் இன்னுமொரு நடவடிக்கை எடுத்து பல்கலைக்கழகங்கள் வெபோமெடரிக்ஸ் தரப்படுத்தலின் பிரகாரம் பேராதனைப் பல்கலைக்கழகம் உயர்ந்த இடமொன்றுக்கு இட்டுச் செல்வதற்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் கல்வி நடவடிக்கைகள் மிகவும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடிந்துள்ளது.<br><br>2013-2014 ஆம் ஆண்டில் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் அபிவிருத்தி நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை சர்வதேச ஆராய்ச்சி நிலையத்திடம் முறைப்படி காணப்படுகின்றது. |
| **(ஆ)** | தற்போது இம்மீதிக்கு பட்டோலைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| **(இ)** | தற்போது இம்மீதிக்கு பட்டோலைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| **(ஈ)** | ஒவ்வொரு ஆண்டிலும் ஆராய்ச்சிப் படிகள் கொடுப்பனவு செய்வதற்குரிய ஆராய்ச்சிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகள் உபவேந்தருக்கு எனது அங்கீகாரத்தின் கீழ் கல்வி/ கல்விசாரா பிரிவின் மூலம் நிதிப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படும். இந்த அங்கீரிக்கப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகளுக்காக ஆராய்ச்சிப் படிகளுக்கு உரித்தான காலப்பகுதிக்கு இப்படிகள் வழங்கல் மேற்கொள்ளப்படும்.<br><br>நிதி அமைச்சு செயலாளின் 11/02/2014 ஆந் திகதி வழங்கப்பட்ட 02/2014 ஆம் இலக்க சுற்றிக்கையில் கணக்காய்வு ஐயவினாவின் படி 06 மாதங்களுக்குள் செயன்முன்னேற்றம் உள்ளடக்கப்பட்ட இடைநிலை ஆராய்ச்சி அறிக்கையொன்று பெறுக்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பின்னர் 28.05.2014 ஆந் திகதி வழங்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 05/2014(i) ஆம் சுற்றறிக்கை மூலம் ஆராய்ச்சிப்படிகளுக்காக உயர்கல்வி அமைச்சு செயலாளரின் 01/2011 ஆம் இலக்க மற்றும் 01/2011 (i) ஆம் |

| | |
|---|---|
| | இலக்க இரண்டு சுற்றறிக்கைகள் மூலம் அமுலாகின்றது. அதாவது தற்போது 02/2014 சுற்றறிக்கைக்குப் பதிலாக 01/2011 மற்றும் 01/2011 (i) சுற்றறிக்கைகள் 01/01/2014 முதல் அமுலில் உள்ளதுடன், அந்த இரண்டு சுற்றறிக்கைளின் ஏற்பாடுகளின் படி 06 மாதங்களுக்குள் செயன்முன்னேற்றத்தை உள்ளடக்கிய இடைநிலை ஆராய்ச்சி அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்படவில்லை.<br><br>மேற்படி தெளிவுபடுத்தலின் பிரகாரம் இதுவரை அமுலிலுள்ள அனைத்து சுற்றறிக்கை ஏற்பாடுகள் ஆராய்ச்சிப் படிகளைச் செலுத்தும் போ்து பயன்படுத்தி சரியான முறையில் ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துக்கொள்கின்றறேன். |
| :உ) | பொறியியல் பீடத்தின் மின் மற்றும் இலத்திரனியல் பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக 05 விரிவுரையாளர்கள் மேற்கொண்ட விரிவுரைகளுக்கான கொடுப்பனவுகளின் போது மணித்தியாலத்திற்கான கொடுப்பனவு நிதிக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் பாதீட்டு எதிர்வுகூறலில் (Budget) குறிப்பிடப்பட்டிருந்ததுடன், நடாத்தப்பட்ட திகதி மற்றும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை என்பவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | வைத்தியர் நில்மினீ வனிகசூரிய அவர்கள் இந்நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர்/ கற்பித்தல் வளவாளராக ஆரம்பத்தில் புதிய பாடநெறிகள் மற்றும் பாடவிதான அபிவிருத்தி செய்தல் செயற்பாடுகளுக்காக பங்களிப்புச் செய்திருந்தார். இதற்கு ஆரம்பமாக கலைப்பீடத்தில் பட்டப்படிப்பு பாடநெறியின் புதிய விடயப்பரப்பு அபிவிருத்திக்குரிய ஆரம்ப செயலமர்வுகள் சில பகுதித் தலைவர்கள் மற்றும் விடய விசேட நிபுணர்களின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டது. அதன் மூலம் புதிய விடயப்பரப்பு அபிவிருத்திக்குரிய செயலமர்வுகள் மற்றும் கலைப்பீட விரிவுரையாளர்களுடன் கூட்டிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனத்தின் பேரில் அவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டது. |
| (எ) | பதிவுக் கட்டணங்கள் செலுத்திய வெளிநாட்டு மாணவர்களின் தொகை நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்படுகின்றமையால் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் அம்மீதிகள் எந்த மாணவர்களால் செலுத்தப்பட்டதென கண்டு பிடிக்க முடியாதுள்ளது. இதுவரை அந்த மாணவர்களுக்குரிய இனங்காணப்படாத மீதி ரூபா 13 மில்லியனாக இருப்பதுடன், அவர்களுக்கான அனுசரணையை பூட்டான் அரசே வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் பூட்டான் அரசு அனுசரணை வழங்கும் மாணவ மாணவிகள் தொடர்பான தகவல்கள் வழங்குமாறு பூட்டான் அரசிடம் கோரி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட படி ரூபா 1,468,164 பெறுமதியுடன்கூடிய சொத்துக்களின் மானியமாக Distance Education Modernization Project மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குரிய பட்டோலைகள் மற்றும் ஆவணங்கள் தற்போது தொலைக்கல்வி மற்றும் தொடர் கல்வி அலகில் கோவைப்படுத்தப்பட்டுள்ளன. |
| (ஒ) | நிதிப்பிரமாணம் 502(2) மற்றும் நிதிப் பிரமாணக் கோவை 11 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்படுகின்றது. மேலும் காணி, கட்டிடம் மற்றும் மோட்டார் வாகனங்களுக்காக நிதிப்பிரமாணம் 502(2) மற்றும் நிதிப் பிரமாணக் கோவையின் பிரகாரம் அனைத்து விபரங்களையும் உள்ளடக்கப்பட்டு நிலையான சொத்துப் பதிவேடொன்றும் காணி, கட்டிடம் மற்றும் மோட்டார் வாகனங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மற்றம் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதி ஒன்றுக்கொன்று சமமாக இருந்ததுடன், அதன் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு கணக்கீட்டு திகதியில் உள்ளவாறு நாளது வரையாக்கப்பட்டுள்ளது. ஆதலால் காணி, கட்டிடம் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற மூன்றுக்குரிய மொத்தப் பெறுமதியான ரூபா 9,788,890,563 |

| | |
|---|---|
| | இற்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று இல்லையென்று குறிப்பிடுவது சரியானதல்ல.<br><br>திறைசேரி செயலாளரின் IAI/2002/02 சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட கணனிகள் மற்றும் உப பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரதியொன்று தற்போது கணக்காய்விற்குச் சமர்க்கின்றேன். அதன் பிரகாரம் காணி, கட்டிடம் மற்றும் மோட்டார் வாகனங்கள் தொடர்பாக கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்ட படி விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாதென தெரிவித்துக் கொள்கின்றேன். |
| **(ஒ)** | A 0043 மூலம் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 68,968,339 தொகைக்குரிய பட்டோலை முடிவுக் கணக்கின் 75 முதல் 78 பக்கம் வரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 68,968,339 பெறுமதியான நிர்மாணமாகியுள்ள முறை மற்றும் விபரமாக பெறுமதி ஒப்பந்தத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| **(ஓ)** | யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 3,819,554 தொகைக்கு சமமான தொகையொன்றுக்கு சமமான தொகையொன்று அப்பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டிய பொறுப்புக்களின் அளவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கணக்குகளுடன் காண்பிக்கப்பட்டுள்ளது.<br><br>இதற்கான எழுத்து மூல சான்றுகள் தற்போது பல்லைக்கழகத்திடம் காணப்படாததால் பல்கலைக்கழகத்தின் கணக்காய்வு குழு பரிந்துரையின் 447 ஆம் இலக்க நிர்வாக சபை அங்கீகாரத்தின் கீழ் கணக்கு புத்தகங்களிலிருந்து ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **(ஔ)** | இதற்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. |
| **(க)** | குறித்த 15 விரிவுரையாளர்களில் 05 பேரின் மாத்திரம் தற்போது சேமலாநிதிய இலக்கம் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவர்களின் பிணைப் பொறுப்பு பெறுமதியை அவர்களின் செமலாப நிதியத்திலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்தும் நடைமுறையல்லாத பெறுப்புக்களின் கீழ் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காண்பிப்பது பொருத்தம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. திரு. S. C. B. ரத்நாயக்க மற்றும் திரு. A. L. D. Z சமரசேகர அவர்களிடமிருந்த அறவிடப்படவேண்டிய பிணைப் பொறுப்புக்கள் முறையே ரூபா 52,451.47 தொகை மற்றும் ரூபா 32,274.41 ஆக சரி செய்யப்பட வேண்டும்.<br><br>அவ்வாறே ஏனைய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை குறிப்பாக இனங்காணப்பட்டுள்ளமையால் அவர்களின் அடையாளத்தை இனங்கண்டு கொண்டுள்ளமையாலும் மேலும் நறைமுறையல்லாத சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இது தொடர்பாக பல்ககைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிட்டு அிவுறத்தல் கோரப்பட்டுள்ளது. |
| **2.2.5** | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை** |
| (அ) | பல்கலைக்கழக தாபன விதிக்கோவை |
| | பல்கலைக்கழக தாபனவிதிக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 2.2(ஊ) பிரிவு<br><br>**2013 ஆம் ஆண்டு** |

| வாகன இலக்கம் | விபத்து திகதி | மதிப்பீடு | காப்புறுதி கூ.தாபனத்திடம் இருந்து பெற்ற தொகை | செலுத்திய தொகை | நட்டம் |
|---|---|---|---|---|---|
| KC 8280 | 2013.02.06 | ரூபா 40,850/- | ரூபா 40,850/- வெளித்தரப்பினரால் செலுத்தப்பட்டுள்ளது | ரூபா 40,850/- | வெளித்தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. |
| KC 4977 | 2013.02.18 | ரூபா 161,900/- | ரூபா 127,542/- வெளித்தரப்பினரால் செலுத்தப்பட்டுள்ளது | ரூபா 161,396/- | ரூபா 33,854/- வெளித் தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. |
| KI 8061 | 2013.03.14 | ரூபா 11,500/- | ரூபா 11,500/- வெளித்தரப்பினரால் செலுத்தப்பட்டுள்ளது | ரூபா 11,500/- | - |
| 32-1352 | 2014.04.10 | ரூபா 22,000/- | ரூபா 13,100/- | ரூபா 24,650/- | ரூபா 11,500/- தொகை வாகன விபத்திற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| LW 0638 | 2013.04.23 | ரூபா 33,000/- | ரூபா 32,000/- | ரூபா 33,000/- | ரூபா 1,000/- சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 16-6360 | 2013.06.13 | ரூபா 250,000/- | ரூபா146,020/- முற்பணமாக காப்புறுதி | - | திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கூட்டுத்தாபனத் திடமிருந்து | | |
| | | மொத்தம் | | | ரூபா 46,354/- |

மேற்குறித்த விடயங்களின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்கு உள்ளவாறு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 46,354.00 ஆகும். இந்த இழப்பு தொடர்பான அறிக்கை அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டு பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**பல்கலைக்கழக தாபனவிதிக் கோவையின் II ஆம் பகுதி IX ஆம் அத்தியாயத்தின் 03 ஆம் பந்தி**

2013 நவம்பர், திசெம்பர் மாதங்களில் திறைசேரியிடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட தொகை முறையாக கிடைக்காமையால் திசெம்பர் மாதத்தின் மேலதிக நேர படிகளை செலுத்துவதற்கு போதியளவு பணம் இல்லாதிருந்தமையால் மூலதன செலவின விடயத்திற்கான (காசேட்டு இலக்கம் 20000400) காசேட்டிலிருந்து மீண்டுவரும் செலவின விடயத்திற்காக (காசேட்டு இலக்கம் 20000005) ரூபா 8 மில்லியன் தொகை 2013.12.09 ஆந் திகதி மாற்றப்பட்டிருந்தது. அத்தொகை காசேட்டின் 1151387 ஆம் இலக்க பற்றுச்சீட்டின் மூலம் நிலையான வைப்புக்களை தீர்வு செய்ததன் காரணமாக பெற்றுக்கொண்ட காசு மூலம் மீண்டும் தீர்க்கப்பட்டது. இது மேலதிக நேர கொடுப்பனவை செலுத்தும் சந்தர்ப்பத்தில் உரிய நிலுவையை தீர்ப்பதற்கு தற்காலிகமாக 14 நாட்களுக்கு மாற்றப்பட்டதாகும்.

**1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் XIII ஆம் பகுதியின் 99(1) ஆம் பிரிவு**

பல்கலைக்கழக நிதியத்தின் பகுதியொன்றாக இந்நிதியக் கணக்கு வெவ்வேறாக அந்தந்த பீடங்களில் நிர்வாகம் மற்றும் கணக்குகளை இலகுபடுத்துவதற்காகவும் நிதிக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் உருவாக்கப்பட்டதாகும். ஆண்டின் இறுதியில் ஐந்தொகையில் பல்கலைக்கழக நிதியமொன்றாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

**2005 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2005/01 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரமும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரகாரம்**

ஒப்பந்தம் அல்லது கையளித்தல் அடிப்படையில் நியமிக்கப்பட்ட நியமனங்கள் தொடர்பான சேமலாப நிதியங்கள் கொடுப்பனவு தொடர்பாக தொழில் ஆணையாளரால் வழங்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2012 ஏப்ரல் 16 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 7/2012 மற்றும் 2003 திசெம்பர் 29 ஆம் திகதிய 837 ஆம் இலக்க சுற்றறிக்கை**

கணக்காய்வு ஐயவினாவிற்குரிய செயல்முறை நிகழ்ச்சித்திட்டம் "சர்வதேச தேசிய அணுசக்தி அதிகாரசபையினால் (IAEA)" ஒழுங்கமைக்கப்பட்டதுடன், இந்நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக மிருகவைத்திய பீடத்திற்கு அதற்கு பொருத்தமான விரிவுரையாளர்கள் அங்கு இருப்பதனால் அப்பீடத்திற்கு கையளிக்கப்பட்டது. இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் விசேடமாக வெளிநாட்டு மிருக வைத்தியர்கள் மற்றும் அதற்குரிய உததியோகத்தர்கள் ஆகியோருக்காக மேற்கொள்ளப்படுவதுடன், அதற்காக பல்கலைக்கழகத்திற்கு மேலதிக நிதி கிடைக்கின்றது. அது மாத்திரமல்லாது எமது பல்கலைக்கழகம் சர்வதேச ரீதியிலான பயிற்சி

| | |
|---|---|
| | நிலையமொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும்.<br><br>இப்பயிற்சி பாடநெறிக்காக பயன்படுத்தப்பட்ட வளவாளருக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவிற்காக 22.12.2012 ஆந் திகதி நடாத்தப்பட்ட 317 ஆவது நிதிக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அங்கு அங்கீகரிக்கப்பட்ட பாதீடும் நிதிக்குழுவின் அறிக்கையும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதற்குரிய கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட 7/2012 மற்றும் 837 (2003:1) இலக்க சுற்றறிக்கைகள் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் விரிவுரைகள் மற்றும் செயல்முறை பயிற்சிக்காக உரித்தாகின்றது. இங்கு குறிப்பிடப்பட்ட பயிற்சியளித்தல் பாடநெறி அதிலிருந்து விலகி புறம்பாக நிதியத்தின் கீழ் பல்கலைக்கழகத்திற்கு புறம்பான வெளித்தரப்பினருக்காக செயற்படுத்தப்படுகின்றவைகளாகும். ஆதலால் இங்கு குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகள் இப்பாடநெறிக்காக பொருத்தமற்றது. |
| **(ஆ)** | **இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்க நிதிப் பிரமாணம்** |
| | **(i) நிதிப் பிரமாணம் 71**<br>இதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. இக்கல்வித் துறையின் நிர்வாக செயற்பாடுகளில் ஈடுபடும் கல்வி மற்றும் நிர்வாக செயற்பாட்டு சபைக்கு அப்பொறுப்பு அவர்களின் கடமை செயற்பாட்டிற்கு மேலதிக பொறுப்பொன்றாக இருந்தமையால் அத்துறையில் உழைத்த வருமானத்திலிருந்து படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| | **(ii) நிதிப்பிரமாணம் 104, 104(3)**<br>CPPB 5574 வாகனம் 2011.02.08 இல் விபத்திற்குட்டமை<br><br>இவ்வாகன விபத்து தொடர்பாக ஆரம்ப விசாரணையொன்று நடாத்தப்பட்டதுடன், நட்டம் ரூபா 6,870.83 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது, அவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>CPNB 3979 வாகனம் 2013.07.31 இல் விபத்திற்குட்டமை<br><br>நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை மற்றும் புலனாய்வு அறிக்கை தயாரித்ததன் பின்னர் இவ்விபத்து தொடர்பான பொறுப்பினை சாரதிக்கு பொறுப்பளிக்க முடியாததாக ஆரம்ப அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த நட்டத்தை காப்புறுதி கம்பனியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதபதிக்கும் உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பிவைக்கப்பபட்டுள்ளது. |
| | **(iii) நிதிப்பிரமாணம் 371**<br>i. நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| | ii. 2015 ஆம் ஆண்டில் முற்பணத்தை செலுத்தும் போது அது ஆகக் கூடியது ரூபா 20,000 இற்கு மேற்படாமல் உரிய துறைத் தலைவருக்கு வழங்கப்பட்டது. அத்தொகைய மிகைத்து முற்பணத்தைப் பெற்றுக்கொள்ளும் போது அதற்காக உபவேந்தரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றன. (குறித்த செயற்பாடு ரூபா 20,000 தொகையில் பூர்த்தி செய்ய முடியாத சந்தர்ப்பத்தின் போது) |

| | |
|---|---|
| | **நிதிப்பிரமாணம் 371(1)**<br>i. இந்த ரூபா 201,468 தொகை முற்பணமாக 6 பிரிவுத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இந்த அனைத்து முற்பணங்களைக் கொண்டு வாகன பராமரிப்பு, பொருட்கள் கொள்வனவு செய்தல், நிழற்பட பிரதியெடுத்தல் இயந்திரங்களின் திருத்தம் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிறுவனங்கள் கடன் அடிப்படையில் பொருட்களை வழங்காமையால் இம் முற்பணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. |
| | ii. பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விலைக்கு இணங்க இணைந்த படிகள் அந்தந்த விளையாட்டுக்கள் நடைபெறும் சந்தர்ப்பத்தில் வழங்குவதற்கு முற்பணமாக கொண்டு செலவினம் மேற்கொள்ளப்படுகின்றது. இம்முற்பணம் சரியாக மீள் நிரப்பப்பட்டுள்ளது. நடைமுறை ரீதியாக ஒவ்வொரு மதியுரையாளருக்கும் மாணவர்களுக்கும் வெவ்வேறாக காசோலை எழுதுவது முடியாத விடயமொன்றாக இருப்பதால் முற்பணமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| | **நிதிப்பிரமாணம் 371 (2)(ஆ)**<br><u>விவசாய விஞ்ஞான பீடம்</u><br>இந்த முற்பணத் தொகையிலிருந்து இன்டென்ட் அடிப்படையில் நிறுவனங்களிடமிருந்து பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,205,138 (91.73%) மற்றும் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 134,878 (5.61%) தொகை மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 63,980 (2.66%) தொகையுமாக ரூபா 20,000 முற்பணத் தொகையை மிகைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இன்டென்ட அடிப்படையில் கொடுப்பனவில் மஹாஇலுப்பள்ளம விவசாய உப அலகிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு (பொருட்கள் மற்றும் ஏனைய கொள்வனவுகள் மற்றும் எரிபொருள்) என்பவற்றிற்காக ரூபா 390,910 தொகையும் தொடன்கொல்ல பண்ணைக்கு (பொருட்கள் மற்றும் ஏனைய கொள்வனவுகள் மற்றும் எரிபொருள்) என்பவற்றிற்காக ரூபா 319,185 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. அப்பண்ணைகளுக்குரிய பொருள் கொள்வனவு செய்யும் போது வழங்குனர் கடன் அடிப்படையில் பொருட்கள் வழங்குவதில்லையென குறிப்பிடுகின்றேன்.<br><br>**<u>பொறியியல் பீடம்</u>**<br><br>தற்போது ரூபா 20,000 எல்லையில் மண்டெழும் முற்பணம் வழங்கப்படுகின்றது.<br><br>**<u>விவசாய விஞ்ஞான பீடம்</u>**<br><br>இப்பணமானது இறுதியாண்டு மாணவர்களின் பிரயோக பயிற்சி நடவடிக்கைகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. அப்பணத்திலிருந்து 7 நாட்கள் அளவில் நடாத்தப்பட்ட பரீட்சை நடவடிக்கைகளுக்காக வெளிவாரி பரீட்சகர்களுக்கு உணவு, பானங்களை வழங்குதல், ஏனைய வைத்தியாலை நோயாளிகளுக்கு பணம் வழங்குதல், (சுற்றறிக்கையின் பிரகாரம்) நோயாளிகளுக்கான போக்குவரத்துச் செலவினம், நோயாளர்களுக்கான உணவு பானங்கள் மற்றும் தேனீர் போன்றவற்றிற்காக பயன்படுத்தப்படுகின்றது. மருத்துவ பீடத்தின் பரீட்சைகள் நடாத்தப்படும் போது இம்முறைமை தற்போது பின்பற்றப்படுகின்றது. |

| | |
|---|---|
| | **நிதிப் பிரமாணம் 754, 756(1) மற்றும் 758(1)**<br><br>2014 ஆம் ஆண்டில் இருப்பு கணிப்பீட்டின் போது சகல துறைகளினதும், பிரிவுகளினதும் களஞ்சியங்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டன.<br><br>பொறியியல் பீடத்தின் பீடாதிபதியினால் நியமிக்கப்பட்ட களஞ்சிய காப்பாளரொருவரின் தலைமையில் 07 பேருடன் கூடிய சபையொன்றின் மூலம் குறித்த களஞ்சியத்தின் கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. |
| (ஈ) | **சுற்றறிக்கை** |
| | **1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 40/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை**<br>1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 40/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரீட்சிக்கப்படுகின்றது. |
| | **2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை**<br><br>தகவல் தொழில்நுட்பம்<br>தற்போது நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படுகின்றது.<br><br>கலை பீடம்<br>கலைப் பீடத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பொருள் இருப்பு பதிவேடு உரிய பதிவேடொன்றல்ல என கணக்காய்வுப் பிரிவினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பின்னர மீண்டும் பொருள் இருப்பு பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறாயினும் 2002/10/10 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துக் கொள்கின்றேன்.<br><br>மருத்துவ பீடம்<br>மருத்துவ பீடத்தினால் சகல துறைகள் மூலம் பொருள் இருப்பு பதிவேடு பேணப்பட்டுச் சென்றிருந்ததுடன், பீடாதிபதி அலுவலகத்தில் பிரதான பொருள் இருப்பு பதிவேட்டில் துறைகளுக்குரிய பொருட்கள் ஏடுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.<br>கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட கணனி மற்றும் மென்பொருட்கள் அனைத்தும் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டுள்ளன. |
| **(ஈ)** | **முகாமைத்துவ மற்றும் உள்ளக கட்டளைகள்**<br><br>உத்தியோக பூர்வ விடுதி வாடகை திருத்தம் தொடர்பாக 4.12 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்கு விடுதிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திற்காக கணக்கொன்று வைக்கப்பட்டு உத்தியோகபூர்வ விடுதிகளை அபவிருத்தி செய்வதிலிருந்து புதிதாக வீடுகளை நிர்மாணிப்பதற்கும் பராமரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>குறித்த நிர்வாக சபை தீர்மானத்தின் பிரகாரம் 5 வருடங்களின் பின்னர் உத்தியோக விடுதி வாடகை திருத்தங்களுக்காக நிதியாளருக்கு கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இது 102 ஆம் பதவியணியினர் விடுதிக் குழவிற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அங்கு நிர்வாகத் தீர்மானத்தின் பிரகாரம் அந்த உத்தியோகபூர்வ வாடகை வேறொரு கணக்கிற்கு செலவு வைத்தல் இடம்பெறாமையால் மேற்குறிப்பிட்ட 4.12 ஆம் பந்தியில் |

| | |
|---|---|
| | ஏற்பாடு தற்போது அமுல்படுத்தல் தேவைப்படாததாக 102 ஆம் பதவியணி விடுதிக்குழுவின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br><br>மீண்டும் இது தொடர்பாக 119 ஆவது பதவியணி விடுதிக்குழுவின் போது கலந்துரையாடப்பட்டதுடன், இந்த வாடகை திருத்தம் செய்யப்படமாட்டாதென அங்கு தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக நிர்வாக சபைக்கு தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் வீட்டு வாடகை திருத்தம் தொடர்பாக கருத்துரைகள் மற்றும் ஆலோசனைகள் அடுத்து குழுவின் போது கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| **2.2.6** | **போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்** |
| (அ) | 2012/2013 ஆம் கல்வியாண்டிற்காக பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுமதித்தல் முன்னைய ஆண்டுகளுக்கு ஒப்பாக கருத்திற்கொள்ளக் கூடியளவு அதிகரித்திருந்ததுடன், 2012.09.18 ஆம் திகதிய UGC/AD/AS/NR-official/I தொடர்பு இலக்க கடிதத்தின் பிரகாரம் அனைத்து பீடங்களுக்கும் 770 மாணவர்கள் அளவில் கூடுதலாக பதிவுசெய்வதற்கு நேர்ந்திருந்தது. அவ்வாறே இரண்டாம் ஆண்டு கற்றல் நடவடிக்கையில் இருந்த மாணவர்களுக்காக இப்பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் விடுதி வசதிகள் போதியளவு இல்லாத நிலைமையில் 60 மாணவர்கள் தங்கக்கூடிய சங்கமித்தா விடுதிக்குரிய கோப்பு விடுதியின் சுவர் வெடித்தமையால் அது பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்காக விடுதி வசதிகளை வழங்க முடியாத நிலைமையிலும் மேலதிக மாணவர்களை ஆட்சேர்த்ததன் மூலம் விடுதி வசதிகள் வழங்குவது தொடர்பாக மிகவும் சிக்கல் வாய்ந்த நிலைமையொன்று பல்கலைக்கழகத்தில் உருவாகியுள்ளது. இது தொடர்பாக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் உள்ளேயும் வெளியேயும் கடுமையான எதிர்ப்புக்களில் ஈடுபட்டிருந்ததுடன், பல்கலைக்கழக நிர்வாகம், மாணவர் சங்கங்கள் என்பவற்றுடன் மேற்கொண்ட கலந்துலையாடல்களில் எழுந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் எழுந்திருந்த கடுமையான எதிர்ப்பு நிலைமை மிகவும் குறுகிய காலத்தில் இணக்கப்படுத்துவதற்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தினைச் சுற்றி விடுதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான வீடுகள் / கட்டிடங்கள் குத்தகைக்கோ அல்லது வாடகைக்கோ எடுத்து மாணவர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பிரச்சினைக்குரிய நிலைமையை மிகவும் குறுகிய காலத்தில் தீர்வுசெய்வதற்கு மேல்மட்டத்திலிருந்து கிடைத்த ஆலோசனைகளின் பிரகாரம் இந்நடவடிக்கை முடியுமான அளவில் செய்ய வேண்டியிருந்தமையால் AQ 40 வீடு தவிர பல்கலைக்கழகத்திற்குரிய ஏனைய கட்டிடங்கள் எதுவும் இல்லாமையால் இவ்வீடு வாடகைக்கு எடுத்தல் பொது மக்கள் செயற்பாடொன்றை நிறைவேற்றுவதற்காக அத்தியாவசிய செயற்பாடொன்றாக இருப்பதால் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தினால் கிடைத்த அதிகாரங்களின் பிரகாரம் குறித்த கேள்வி நடைமுறையைப் பின்பற்றி 02 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் கொள்வனவுக் குழு அங்கீகாரம் மற்றும் நிதிக்குழு அங்கீகாரத்தின் அடிப்படையில் 04 வீடுகள் / கட்டிடங்கள் வாடகைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்துக்கொள்கின்றேன்.<br><br>அடுத்த 2013/2014 ஆம் கல்வியாண்டின் போது உபவேந்தரின் ஆலோசனையின் பேரில் மாணவர்களுக்கு சிறந்த முகாமைத்துவத்துடனான விடுதி வசதிகள் வழங்கும் நடவடிக்கை மேற்கொண்ட காரணத்தினால் இவ்வாறு வாடகைக்கு எடுத்த வீடுகள் / கட்டிடங்களின் முதலாவது வரிக் கால எல்லையின் பின்னர் மீண்டும் குத்தகை கால எல்லையை நீடிப்பதற்கு தேவையில்லாததால் பின்வரும் திகதிகளில் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வீடுகள் / கட்டிடங்கள் அனைத்தும் மீண்டும் அதன் முதல் உரிமையாளர்களுக்கு |

| | |
|---|---|
| | கையளிக்கப்பட்டன.<br><br>1. பீ.எம்.மனம்பேரி 25A/1 கண்டி கெதரவத்த, கிரிபத்கும்புர எனும் வீடு 2014/06/30 இல் மீள கையளிக்கப்பட்டது.<br><br>2. எம்.உ.ம்.ஏ.ஈ.மனம்பேரி 25A/2 கண்டி கெதரவத்த, கிரிபத்கும்புர எனும் வீடு 2014/06/30 இல் மீள கையளிக்கப்பட்டது.<br><br>3. கே.ஏ. மாலனீ 272 வலவ்வத்த பேராதெனிய எனும் வீடு 2014/06/03 இல் மீள கையளிக்கப்பட்டது.<br><br>4. பீ.பீ.ஆர்.எஸ்.கல்கொங்கொட இலக்கம் 14 கால்கொஹோ, ஹொடியாதெனிய எனும் வீடு 2014/0829 இல் மீள கையளிக்கப்பட்டது.<br><br>கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் நி.பி 835(2)(இ) இன் கீழ் மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்கு மேலும் அவசியப்படாததுடன், எதிர்காலத்தில் ஏதேனும் வகையில் மீண்டும் வீடு/கட்டிடங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு தேவைப்பட்டால் நி.பி 835(2)(இ) இன் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். |
| (ஆ) | **<u>கலை பீடம்</u>**<br>கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் நிரந்தர சேவையில் விரிவுரையாளர்களுக்கு சம்பளத்திற்காக செலவிடப்பட்டுள்ள செலவினம் ரூபா 1318 மில்லியன் ஆக இருந்ததுடன், வெளி விரிவுரையாளர்களுக்கு அவ்வாண்டில் செலவிடப்பட்டுள்ள செலவினம் ரூபா 14 மில்லியனாக இருந்தது. மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 500 ஆக காணப்பட்ட வெளி விரிவுரையாளர் கட்டணம் 1:3 (300) என்ற விகிதத்தில் அதிகரிக்கப்பட்டதன் பேரில் அச்செலவினம் அதிகரித்திருந்தமை குறிப்பிடப்பட வேண்டியதுடன், அது நிரந்தர விரிவுரையாளர்களுக்கு ஏற்பட்ட செலவினத்தில் 1.08% ஆகும்.<br><br>தாபன விதிக்கோவையின் பிரகாரம் வெளி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதை ஊக்குவிக்க கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், விரிவுரையாளர்கள் விடுமுறை பெற்றுச் செல்லும் போது தற்காலிக விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதை தவிர்த்திருக்கவில்லை. ஆதலால் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள மற்றும் தேசிய சேவைகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ள மற்றும் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காகவும் விசேட நிபுணத்துவம் உள்ள வளவாளர்கள் மூலம் பாடங்களைக் கற்பிப்பதற்காக வெளி விரிவுரையாளர்களை சேர்த்துக்கொள்ள நேர்ந்தது.<br><br>எவ்வாறாயினும் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களுக்கு செலுத்தும் சம்பளத்தின் 1.08% அளவில் வெளி விரிவுரையாளர்களுக்காக செலவின அளவை பேணிச் சென்றமை பல்கலைக்கழக தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வெளி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதை பல்கலைக்கழகத்தால் அதைரியப்படுத்தப்பட்டுள்ளமை புலனாகின்றது.<br><br>அவ்வாறே ஐயவினாவில் உத்தேசிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக நிரந்தர |

| | |
|---|---|
| | விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதால் அவர்களுக்கு செலுத்த வேண்டிய சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகள் என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது சம்பள செலவினம் இதனை விட கூடிய பெறுமதியை எடுப்பதற்கு வாய்ப்பிருந்தது. எவ்வாறாயினும் வெளி விரிவுரையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் விரிவுரையாளரின் பதவியணியில் வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் புதிய ஆட்சேர்ப்பு தொடர்பான தரவுகளுக்கிடையே வருடாந்தம் இனங்காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடலாம்.<br>ஆதலால் வெளி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதை பல்கலைக்கழகத்தால் அதைரியப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடுவதுடன் எவ்வாறாயினும் கல்வி தேவைப்பாட்டின் முன்னுரிமை அடிப்படையில் எதிர்காலத்தில் வெளி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்கு தேவையான சந்தர்ப்பத்தில் அவ்வாறு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.<br><br><u>பொறியியல் பீடம்</u><br>பொறியியல் பீடத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 150 மாணவர்களுக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது E 11 வகுதியில் 480 மாணவர்கள் காணப்படுகின்றனர். அவ்வாறான பின்னணியில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் அளவினை விட விரிவுரையாளர்களின் அளவை சேவையில் ஈடுபடுத்துவதற்கும் அதுவும் போதியளவில் இல்லாமையால் வெளி விரிவுரையாளர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள நேர்ந்துள்ளது.<br><br>வெளி விரிவுரையாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாடங்களை கற்பிப்பதற்கு நிரந்தர பதவியணி இருந்த போதிலும், ஆட்சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் கருத்திற்கொள்ளக்கூடிய அதிகரிப்பொன்றும் வகுப்பறைகளில் காணப்படும் இடவசதிகள் போதியளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதன் பேரில் ஒரே விரிவுரை இரண்டு முறையோ அல்லது பல தடவைகள் நடாத்துவதற்கும் அப்பாடங்களுக்குரிய விரிவுரையாளர்களுக்கு நேர்ந்துள்ளது. அப்போது குறிப்பிட்ட மணித்தியாலத்தில் மேற்கொள்ள வேண்டிய வேலையின் அளவும் அதிகமாக இருக்கும். அவ்வாறே வொஷிங்டன் அக்ரிடேஷன் குழு போன்ற கல்விசார் நியம நிறுவனங்களின் மூலமும் கைத்தொழில் துறையின் நிபுணத்துணத்துவம் கொண்டவர்களின் விரிவுரைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளமையால் பொறியியல் பாடத்துறைக்குரிய வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. |
| (இ) | <u>தொழில்நுட்ப பீடம்</u><br>மீளாய்வாண்டின் போது நிதிக்குழுவின் அங்கீரிக்கப்பட்ட பாடநெறி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டே பாடநெறி இணைப்பு படிகள் வழங்கப்பட்டன. அதற்காக முகாமைத்துவக் குழுவினதும் நிதிக்குழுவினதும் பூரண அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.<br><br>1990 பெப்ரவரி 06 ஆந் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 422 3 (5) இன் பிரகாரம் பல்கலைக்கழக பதவியணியினருக்கு அச்செயற்பாட்டினை செய்வதற்கு திறமையிருந்தால் அவ்வாறு கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடு வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக இருப்பதும் அதற்கு வேறொரு வகையில் கொடுப்பனவு வழங்கப்படவில்லையாயின் கௌரவப் படிகள் வழங்க முடியும். தகவல் தொழில்நுட்ப நிலையம் வெளிவருமானம் உழைக்கும் நிறுவனமொன்றாக இருப்பதுடன், அதன் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு நிரந்த உதவி நிதியாளர் நியமிக்கப்படாமையால் பொறியியல் பீடத்தின் உதவி நிதியாளராக பணிபுரியும் திருமதி கே.ஐ.எஸ். ரணசிங்க அவர்கள் தனது கடமைக்கு மேலதிகமாக இந்நிறுவனத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலும், அக்கடமைகள் வழமையான கடமை நேரங்களுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டதாலும் அக்கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய இயலுமை காணப்பட்டமையாலும் வேறு வகையில் |

| | |
|---|---|
| | நிதிச் செயற்பாட்டிற்காக கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்படாமையாலும் நிதிக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அவருக்கு கணக்கீட்டு நடவடிக்கைளில் ஈடுபட்டமைக்காக பிரதான கணக்குப் பிரிவின் எம்.எச்.எம்.ரியாஸ் மற்றம் எச்.எம்.ஏ.பண்டார ஆகியோருக்கும் இவ்வாறு கௌவரப் படிகள் சுற்றரிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டன.<br><br><u>பொறியியல் பீடம்</u><br><br>நிதிக்குழுவின் அங்கீகாரத்துடன் 1990 பெப்ரவரி 06 ஆந் திகதிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 422 4 (5) இன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br><br><u>கலை பீடம்</u><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 422 இன் a,b,c,d,e பிரகாரம் ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக எந்தவொரு தடையும் காணப்படவில்லை. அவ்வாறு அரசின் தாபன விதிக்கோவையின் xxx ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுப்பனவுகள் தொடர்பாக எந்தவொரு தடையும் காணப்படாததுடன், இக்கொடுப்பனவிற்காக உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிட்டுள்ளதாக அறியத்தருகின்றன். |
| 3 | **நிதி மீளாய்வு** |
| 3.1 | **நிதி விளைவுகள்** |
| 4. | **செயற்பாட்டு மீளாய்வு** |
| 4.1 | **முகாமைத்துவ செயற்திறனின்மை** |
| **(அ)** | i. கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் ரூபா 84,225,964.00 தொகை செலவு செய்து அலுவலக உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் எந்தவொரு பீடத்திற்கும் அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இப்பணம் பயன்படுத்தப்பட்டது எமது நிலையத்தின் நோக்கத்தை முன்னுரிமையாக கொண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி கலாசாரமொன்றை கட்டியெழுப்புவதற்கு ஆராய்ச்சி கொள்வனவு செய்வதற்காகும். அவ்வாறு 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஆராய்ச்சி உபகரணங்கள் 02 (High-End Instrument) இன் தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதற்குரிய பட்டியல் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.<br>* Automated DNA Sequencer (Genetic Analyzer) –ரூபா . 23,905,400.00<br>* Scanning Electron Microscope – ரூபா. 55,349,000.00<br><br>மேலே குறிப்பிடப்பட்ட ஆராய்ச்சி கட்டளை தற்போது விஞ்ஞான பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், இலங்கையில் அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும் போது Scanning Electron Microscope பேராதனைப் பல்கலைக்கழகத்திடம் மாத்திரமே காணப்படுவதுடன், DNA Sequencer உபகரணமும் மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்களிலேயே காணப்படுகின்றன. அதன் பிரகாரம் இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் விஞ்ஞான ஆய்வுகளுக்காக ஒத்துழைப்பொன்றை இந்த ஆராய்ச்சி உபகரணங்கள் மூலம் கிடைக்கின்றது. அவ்வாறே தற்போது இந்த உபகரணங்களைப் பயன்படுத்தி சர்வதேச ஆராய்ச்சி அறிக்கைகள் பாரியளவில் இதன் மூலம் பதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இது பல்கலைக்கழகத்தின் நன்மதிப்பை அதிகரிப்பதற்கு மிகவும் துணை புரிந்துள்ளது. |

| | |
|---|---|
| | ii. சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தினால் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணிக்கும் மாண மாணவிகளுக்கு சர்வதேச மாநாடுகளுக்கும் பங்குபற்றுவதற்காக பாதீட்டில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நிதி வழங்கப்பட்டது. இந்நிதிகள் முறையான பிரமாணங்களுக்கு இணங்கவே வழங்கப்பட்டதுடன், அவ்வாறு மாநாடுகளுக்கு சமூகமளித்ததன் பின்னர் பங்குபற்றிய நபரினால் அது தொடர்பான அறிக்கையொன்று வழங்க வேண்டியதுடன், சமூகமளித்து ஓராண்டிற்குள் அம்மாநாட்டிற்குரிய ஆராய்ச்சி அறிக்கை சர்வதேச சஞ்சிகையொன்றில் pdn email என்ற முகவரியைப் பயன்படுத்தி வெளியிடப்பட வேண்டும். இவ்வாறு சர்வதேச செயலமர்வுகளில் அவர்கள் பங்குபற்றுவதற்கு அவர்களுக்கு பங்களிப்பினை வழங்கியதன் பெறுபேறாக பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு கூடிய அங்கீகாரமொன்று சர்வதேச மட்டத்தில் ஆராய்ச்சி தொடர்புகளும் ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்காக மிகவும் பலம்வாய்ந்த அடித்தளமொன்றை இடுவதற்கும் எமது நிலையத்திற்கு முடியுமாக இருந்தது. |
| | iii. 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 4,033,627.00 தொகை எமது நிலையத்தினால் எமது நோக்கத்திற்கு இணங்கும் வகையிலான செயற்பாட்டிற்கு செலவிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இவ்வாண்டில் பல்கலைக்கழக பதவியணியினரில் 26 பேருக்கு சர்வதேச மாநாடுகளுக்கு செல்வதற்கு நிதி வழங்கப்பட்டதுடன், பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டது. |
| (ஆ) | குறித்த விரிவுரையாளருக்கு இங்கிலாந்தின் லிசெஸ்டர் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை பின்பற்றுவதற்காக உபவேந்தரின் 2007.08.06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2007.08.03 ஆம் திகதி தொடக்கம் 02 ஆண்டுகளுக்கு சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், பின்வருமாறு அந்த சம்பளமற்ற விடுமுறை திருத்தப்பட்டு நீடிக்கப்பட்டிருந்தது.<br><br>2007.08.13 முதல் 2008.01.01 வரை - 04 மாதங்கள் 19 தினங்கள்<br>2008.08.18 முதல் 2009.06.25 வரை - 10 மாதங்கள் 08 நாட்கள்<br>2009.10.15 முதல் 2011.06.14 வரை - 01 வருடம் 08 மாதங்கள்<br>2012.02.13 முதல் 2012.06.17 வரை - 04 மாதங்கள் 04 நாட்கள்<br>} 03 வருடங்கள் 03 மாதங்கள் (39 மாதங்கள்)<br><br>அதன் பிரகாரம் அவர் பட்டப்பின் படிப்பிற்காக 39 மாதங்கள் அனுமதிக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுக்கொண்டார். லிசெஸ்டர் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட 2014.11.01 ஆந் திகதிய கடிதத்தி மூலம் கலாநிதி பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>சீனாவின் பூடன் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை பின்பற்றுவதற்காக உபவேந்தரின் 2003.08.15 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் திருமதி சூழனி ரம்புக்வெல்ல அவர்களுக்கு 24.08.2003 ஆம் திகதி முதல் 02 ஆண்டுகளுக்கு சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், சுகயீன நிலை காரணமாக சீனமொழி பாடநெறி பின்பற்றியதன் பின்னர் தொல்லியல் திணைக்களத்திற்கு மீண்டும் சேவைக்கு வந்திருந்தார். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 445-1990-07-31 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஆங்கில மொழி அல்லாத நாடொன்றில் கலவி விடுமுறை பெற்றுக்கொள்ளும் போது அந்நாட்டில் மொழியை பின்பற்றுவதற்கு 06 மாதங்கள் மேலதிக கல்வி விடுமுறை வழங்குவதற்காக அனுமதியுண்டு. அதன் பிரகாரம் அவருக்கு வழங்கப்பட்டுள்ள சம்பளத்துடனான 45 மாத விடுமுறை மற்றும் செலுத்தப்பட்ட சம்பளம் என்பன சுற்றறிக்கையின் பிரகாரம் சரியானதாகும். |

| | |
|---|---|
| **(இ)** | வாகன வேலைப் பிரிவிடம் உள்ள மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் போதியவில் இல்லாமையால் சில வாகனங்களின் பழுதுபார்ப்புகள் வெளிநிறுவனங்கள் மூலம் நிறைவேற்ற வேண்டியிருந்தது. எனினும் வாகனப் பிரிவில் உள்ள மனித வளங்களை மேம்படுத்துவதற்காக அந்த பிரிவிற்குரிய ஊழிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்டு தேவையான ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு வேண்டுகோள் விடப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், தேவையான மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் வாகனப் பழுதுபார்த்தல்களுக்காக வெளி நிறுவனங்களிற்கு அனுப்பவேண்டிய தேவை ஏற்படாது.<br><br>மேலும் வாகனப் பராமரிப்பு பிரிவு மூலம் பொறியியல் பீடத்தின் வாகனங்கள் மாத்திரம் அல்லாமல் பல்கலைக்கழகத்தின் அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் (வாகனப் பராமரிப்பிற்குரிய) நவடிக்கைககள் மேற்கொள்ளப்படும். |
| (ஈ) | பீடாதிபதி அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்த மிருக வைத்திய பீடத்தின் போதனா பண்ணைகளின் அனைத்து நடவடிக்கைகள் 256 ஆவது பீடச்சபை கூட்டத்தின் பூரண அனுமதியின் கீழ் பண்ணைகள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஆதலால் பண்ணையின் அனைத்து நிர்வாக, கல்வி மற்றும் ஏனைய நடவடிக்கைகள் பண்ணைகள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் தலைவரின் ஆலேசனையின் பேரில் மேற்கொள்ளப்பட்டது.<br><br>அவ்வாறே கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பிரிவுத் தலைவரால் பண்ணைகள் முன்னேற்றம் தொடர்பாக மாதாந்தம் பீடச்சபைக்கு விடயங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.<br><br>ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த பண்ணை மேற்பார்வையாளர் 2015.02.01 ஆந் திகதியிலிருந்து சேவையிலிருந்து விலகியிருந்தார். அத்துடன் அவருக்குப் பதிலாக வேலை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பிரிவுத் தலைவரின் ஆலோசனையின் பேரில் திணைக்களத்தின் கால்நடை வைத்தியரால் மேவுகை செய்யப்படுகின்றது. பண்ணை மேற்பார்வையாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக பத்திரிகை அறிவித்தல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. |
| (உ) | புதிய மிருக வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தை பேணி பட்டப்படிப்பு அபேட்சகர்களின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக 2012 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. கால்நடை சிகிச்சை விஞ்ஞானப் பிரிவிற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரால் மிருக வைத்தியசாலையை பராமரித்துச் செல்லல் சிரமம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் உயர்கல்வி அமைச்சிற்கும் நிதிப் பிரமாணம் 71 இன் பிரகாரம், தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2011 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக அவ்வப்போது உயர் கல்வி அமைச்சின் செயலாளரையும் குறித்த அதிகாரிகளையும் சந்தித்து பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டுள்ளன.<br><br>அதன் பிரகாரம் போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட வேண்டுமென அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டு உயர் கல்வி அமைச்சின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர் எண்ணிக்கை வருமாறு,<br><br>சிரேஷ்ட விரிவுரையாளர் II — 04<br>தற்காலிக விரிவுரையாளர் — 06<br>தொழில்நுட்பவியலாளர் — 01<br>நுண்கதிர்படவியலாளர் — 01<br>மருந்தியலாளர் — 01 |

| | |
|---|---|
| | சிறாப்பர் 01<br>ஆய்வுகூட மேற்பார்வையாளர் 04<br>தொழிலாளர் 03<br><br>2012 ஆம் ஆண்டிற்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனர் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அனுப்பியுள்ள அறிக்கையின் பிரகாரம் 06 தற்காலிக விரிவுரையாளர்களுக்குப் பதிலாக தற்காலிக கண்காணிப்பாளர் பதவிகள் 10 வழங்கப்பட்டிருந்தது. அந்த தற்காலிக கண்காணிப்பாளர் பதவிகள் 10 இல் 06 மிருக வைத்தியசாலைக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், கால்நடை பீடத்தில் அப்பதவிகள் பகிரப்பட்டு வைத்தியசாலைக்கு 02 பதவிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. தற்காலிக கண்காணிப்பாளர் பதவிகளுக்காக முதலாம் மற்றும் இரண்டாம் வகுப்பு பட்டதாரிகள் சம்பளம் குறைவாக இருப்பதால் சேவைக்கு சேர்வதற்கு விருப்பமின்மையை தெரிவிக்கின்றனர்.<br><br>பூரண ஊழியர் எண்ணிக்கை கிடைக்காமையால் வாரத்தின் 07 நாட்கள் 24 மணித்தியாலமும் திறந்துவைப்பதும் மாணவர்களின் சிகிச்சை நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதும் எமது பொறுப்பாகும். ஆதலால் சேவைத் தேவைப்பாட்டின் பிரகாரம் தற்காலிக விரிவுரையாளர்கள் மற்றம் அத்தியவசிய கல்விசாரா ஊழியர்களையும் நியமித்து சேவைகளை பராமரித்துச் செல்வது தவிர வேறு மாற்று வழியொன்று இல்லை. |
| (உ) | பீடத்தில் கடமை பிரயாணங்களுக்காக தனியார் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது முதலில் பீடத்திடமுள்ள வாகனத்தை ஒதுக்கிக்கொள்வதற்காக வாகன ஒதுக்கீட்டுப் பத்திரமொன்று வாகனத்தைக் கோரும் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்விண்ணப்பத்திற்காக பீடத்திலிருந்து வாகனமொன்றை வழங்க முடியாது போனால் பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களிலிருந்து வாகனமொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமா என ஆராய்ந்து பார்க்கப்படும். அதனூடாக வாகனமொன்றைப் பெற்றுக்கொள்ள முடியாது போனால் மாத்திரம் குறித்த ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து வாகனமொன்றை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு பீட நிர்வாக உத்தியோத்தரின் எழுத்து மூல அறிவுறுத்தல் பேரில் வழங்கப்படும். |
| (உ) | நிதிக்குழுவின் அனுமதியின் கீழ் முறையான பரிந்துரையின் பேரில் வெளித்தரப்பினருக்கு பரிசோதனை அறிக்கை விநியோகிப்பதன் மூலம் உழைத்த வருமானத்தில் 60% அண்மித்த அளவு பங்களிப்புச் செய்த விரிவுரையாளர்களுக்கும் பதவயணியினருக்கும் வழங்கப்பட்டன.<br><br>எவ்வாறாயினும் 446 ஆவது நிர்வாகசபையின் மூலம் இவ்வாறு பரிசோதனை அறிக்கை வழங்கல் தொடர்பான கொடுப்பனவிற்குமுரிய முழு பல்கலைக்கழகத்தினதும் ஒவ்வொரு பீடத்திற்கு உரித்தாகும் வரையில் முறையான நடைமுறைகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றைப் பரிந்துரை செய்வதற்காக மூன்று பீடாதிபதிகளுடன் நான்கு உத்தியோகத்தர்களுடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அதன் பரிந்துரையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஏ) | மூலதன கொடுப்பனவின் கீழ் விடுதிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் குறித்த விதப்புரைகளுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். பொருட்கள் ஏற்றுக்கொள்ளும் குழுவின் பரிந்துரை இதற்காகக் கிடைத்துள்ளது.<br><br>அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 36 மேசைகளில் 20 விஜேவர்தன மண்டபத்திலும் 16 மேசைகள் ராமநாதன் மண்டபத்தில் மாணவிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் குறித்த இருப்புக்கள் பதிவேடுகளில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| (ஐ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 291 இன் பிரகாரம் அரச சேவையிலிருந்து பெற்றுக்கொண்ட அறிவு மற்றும் பயிற்சியைப் பயன்படுத்தி அலுவலக வேலைக்குப் புறம்பாக அங்கீகாரத்துடன் அலுவலக நேரத்தினுள் செய்யப்பட்ட அலுவலக வேலைகளுக்காக 10% அளவு பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைத்தமை தொடர்பாக உபவேந்தரின் அங்கீகாரத்துடன் செயற்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஒ) | கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் நிரந்தர சேவையில் விரிவுரையாளர்களுக்கு சம்பளத்திற்காக செலவிடப்பட்டுள்ள செலவினம் ரூபா 1318 மில்லியன் ஆக இருந்ததுடன், வெளி விரிவுரையாளர்களுக்கு அவ்வாண்டில் செலவிடப்பட்டுள்ள செலவினம் ரூபா 14 மில்லியனாக இருந்தது. மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 500 ஆக காணப்பட்ட வெளி விரிவுரையாளர் கட்டணம் 1:3 (300) என்ற விகிதத்தில் அதிகரிக்கப்பட்டதன் பேரில் அச்செலவினம் அதிகரித்திருந்தமை குறிப்பிடப்பட வேண்டியதுடன், அது நிரந்தர விரிவுரையாளர்களுக்கு ஏற்பட்ட செலவினத்தில் 1.08% ஆகும்.<br><br>தாபன விதிக்கோவையின் பிரகாரம் வெளி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதை ஊக்குவிக்க கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தற்காலிக விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதை தவிர்த்திருக்கவில்லை. ஆதலால் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள மற்றும் தேசிய சேவைகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ள மற்றும் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காகவும் விசேட நிபுணத்துவம் உள்ள வளவாளர்களால் மூலம் பாடங்களைக் கற்பிப்பதற்காக வெளி விரிவுரையாளர்களை சேர்த்துக்கொள்ள நேர்ந்தது.<br><br>எவ்வாறாயினும் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களுக்கு செலுத்தும் சம்பளத்தின் 1.08% அளவில் வெளி விரிவுரையாளர்களுக்காக செலவின அளவை பேணிச் சென்றமை பல்கலைக்கழக தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வெளி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதை பல்கலைக்கழகத்தால் அதைரியப்படுத்தப்பட்டுள்ளமை புலனாகின்றது.<br><br>அவ்வாறே ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக நிரந்தர விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதால் அவர்களுக்கு செலுத்த வேண்டிய சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகள் என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது சம்பள செலவினம் இதனை விட கூடிய பெறுமதியை எடுப்பதற்கு இடமிருந்தது. எவ்வாறாயினும் வெளி விரிவுரையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் விரிவுரையாளரின் பதவியணியில் வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஆட்சேர்ப்பின் பிரகாரம் வருடாந்தம் இனங்காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிட வேண்டும்.<br><br>ஆதலால் வெளி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதை பல்கலைக்கழகத்தால் அதைரியப்படுத்தப்பட்டுள்ளமையை குறிப்பிடுவதுடன் எவ்வாறாயினும் கல்வி தேவைப்பாட்டின் முன்னுரிமை அடிப்படையில் எதிர்காலத்தில் வெளி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்கு தேவையான சந்தர்ப்பத்தில் அவ்வாறு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.<br><br>அத்தோடு மருத்துவ பீடத்திற்காகப் பின்வரும் காரணங்கள் காரணமாக விரிவுரையாளர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்தது.<br><br>மருத்துவ பீடத்திற்காக விரிவுரைகளை நடாத்துவதற்கும் செய்முறை பயிற்சிகளை வழங்குவதற்கும் வெளி விரிவுரையாளர்களின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அவ்வாறு சேவை பெற்றுக்கொண்ட விடயங்களுக்காக பீடத்தினுள் விசேட நிபுணத்துவம் உள்ள விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| | சத்திரசிகிச்சை துறையின் மூலம் நரம்பு சிகிச்சை விசேட நிபுணத்துவ அறிவு, கண்,காது, தொண்டை தொடர்பான அறிவு, நோய் தொடர்பான அறிவு போன்றன வெளி விரிவுரையாளர்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றன. அப்பாடங்கள் தொடர்பான விசேட நிபுணர்கள் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களாக ஆட்சேர்க்கப்படாமல் இருந்ததுடன், அரசாங்க மருத்துவ மனைகளிலிருந்தும் ஓய்வுபெற்ற விசேட நிபுணர்களில் சில விரிவுரையாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.<br><br>மருத்துவ துறையின் மூலம் வெளி விரிவுரையாளர்களாக தோல் நோய், புற்றுநோய், சமூக நோய்கள் போன்ற விடயங்கள் தொடர்பான விசேட நிபுணர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கு காரணம் அவ்விடயம் தொடர்பான விசேட நிபுணர்கள் பீடத்தில் இல்லாமையாகும்.<br><br>சமூக மருத்துவ துறை மூலம் மருத்துவ மாணவர்களுக்கு சமூகத்தின் வெவ்வேறு துறைகளில் செய்முறை அறிவு வழங்கப்படுகின்றது. நோய்கள் பரவுதல் மற்றும் தடுத்தல் தொடர்பான புத்திக்கூர்மை, மகப்பேற்று சிகிச்சை நடவடிக்கை தொடர்பான கற்பித்தலுக்காக குடும்ப சுகாதார சேவையாளர்கள், குடும்ப சுகாதார தாதிகள், பொது சுகாதார பரிசோதகர்கள், குருடர், செவிடர், ஊமை பாடசாலை பதவியணியினர், ஹொட்டேல் பதவியணியினர், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் ஆகியோரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்தது. அது அந்த உத்தியோகத்தர்கள் அத்துறையியல் தொடர்பான விசேட அறிவினைக் கொண்டுள்ளமையினாலாகும்.<br><br>நினைவிழக்கச் செய்யும் வைத்தியத் துறையினால் வெளி விரிவுரையாளர் ஒருவரின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பது நிரந்தர பதவியணியினரில் ஒரு பெண் விரிவுரையாளர் மட்டுமே சேவையாற்றுவதனால் ஆகும். இரண்டு விரிவுரையாளர்கள் பட்டப்பின் படிப்பு பயிற்சிக்காக கல்வி விடுமுறை பெற்றுள்ள காரணத்தினால் இவ்வனைத்து கல்விசார் நடவடிக்கைகளும் ஒரு விரிவுரையாளரினால் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இத்துறையினால் பேராதனை வைத்தியசாலைக்காக விசேட நிபுணர்களின் சேவை வழங்கப்படுவதுடன், மாணவர்களிற்கான சிகிச்சை வகுப்புக்களும் நடாத்தப்படுகின்றன.<br><br>இவ்விடயங்களுக்காக நிரந்தர விரிவுரையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படும் போது பல்கலைக்கழகத்திற்கு பாரிய செலவினப் பொறுப்பொன்றை ஏற்க வேண்டியுள்ளது. வெளி விரிவுரையாளர்களைக் கொண்டு அதனை விட குறைந்த செலவில் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.<br><br>**இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்** மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டமையினால் தற்போது பீடத்திலுள்ள அனைத்து நிரந்தர வெற்றிடங்களும் நிரப்பப்படாத காரணத்தினால் வெளி விரிவுரையாளர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வது கட்டயமாகவுள்ளது. எவ்வாறாயினும், நிரந்தர விரிவுரையாளர்களை சேர்த்துக் கொண்டால் வெளி விரிவுரையாளர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வது மட்டுப்படுத்தப்படும்.<br><br>**பொறியியல் பீடத்தில்** நிரந்தர வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் இருப்பதற்கான காரணம், அச்சம்பளத்திற்கு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொள்வதற்கு பொறியியலாளர்கள் விரும்பாமையாகும். அவர்களுக்கு இந்நாட்டிலும் வெளி நாடுகளிலும் உயர் சம்பளத்தில் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொள்வதற்கான அதியுயர் வசதி வாய்ப்புக்கள் காணப்படுகின்றமையாகும். இந்நிலைமையின் கீழ் பொறியியல் பீடத்தில் பல துறைகளிற்கு வெளி விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (ஓ) | பல்வேறு கடன் ஒப்பந்தங்களின் அடிப்படையில் பின்வரும் ரூபா 5,902,577.00 நிதி தொடர்பாக பின்வரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| | CW/CON/2008/781 - ரூபா 61.191.00<br><br>கொடுப்பனவிற்காக ஒப்பந்தக்காரரினால் வினவப்பட்டிருக்கவில்லை. வினவப்பட்டதுடன் இந்நிதியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br><br>SAR/CW/CON/650 - ரூபா 3,200,000.00<br><br>இவ்வொப்பந்தத்தில் பணம் செலுத்துவதில் குறைபாடு காணப்படுவதனால் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக பல்கலைக்கழக ஊழியர்கள் மேற்கொண்ட வேலையின் பெறுமதி மதிப்பிடப்பட்டு குறைக்கப்பட்டதன் பின் வேலை பொறியியலாளரின் விதந்துரைக்கேற்ப எஞ்சிய தொகை செலுத்தப்படும்.<br><br>CW/CON/2009/824 - ரூபா 7,947.00<br><br>இந்நிதிக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கான விதந்துரை இதுவரை பொறியியலாளரிடம் இருந்து கிடைக்கப் பெறாமையினால் மேற்படி கணக்கில் பேணப்பட்டுள்ளது.<br><br>CW/CON/2007/749 - ரூபா 142,313.00<br><br>இதனை விடுவிக்க வேண்டாம் என செயற்றிட்ட முகாமையாளர் அறிவித்துள்ளமையினால் 2014 ஆம் ஆண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.<br><br>CW/CON/2009/847 - ரூபா 39,484.00<br><br>இது 2014 ஆம் ஆண்டு செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.<br><br>ரூபா 2,401,745.00 - இந்நிலுவை CECB நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதி ஒன்றாகும். அத்துடன், தற்போது இம்மீதியை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>ரூபா49,897. 00 - தீர்க்கப்பட்டுள்ளது.<br><br>உரிய நபர்களை இனங்காண முடியாமையினால் அனைத்து நிறுத்தி வைப்புக்களும் நிலுவை, நிதிக் குழுவின் தீர்மானத்திற்கமைய அரசின் வருமானத்திற்கு இணக்கம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு தேவையான சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (ஔ) | 1970 முதல் 1989 வரை 20 ஆண்டு காலப்பகுதியில் உடன்படிக்கை மீறிய 70 விரிவுரையாளர்களின் பிணைப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 23,952,25.58 ஆக இருந்ததுடன், இவ்விரிவுரையாளர்களின் கோவைகளைப் பரீட்சித்த போது இவர்களால் பிணைப்பொறுப்பு மீறப்பட்ட காலம் 21 - 40 ஆண்டுகள் வரை பழமையானதாக இருந்தது. இவர்களிடமிருந்து பிணைப்பொறுப்பு பெறுமதியை அறவிடுவதற்கு சட்டரீதியான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் கடந்திருந்ததால் வழக்குத் தொடர்ந்து அறவிட முடியாமல் இருந்தது. மேலும் இது அவர்களின் தற்போதைய முகவரியைக் கண்டுபிடிக்க முடியாததன் காரணமாக அவர்களின் கோவைகளிலுள்ள முகவரிக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அவை திரும்பி வந்த காரணத்தினால் அவர்களை தொடர்பு கொள்ள முடியாதிருந்தது.<br><br>அவ்வாறான பிணைப்பொறுப்பு உடன்படிக்கையுடன் இருந்த போதிலும், பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 94(இ) பிரகாரம் சேமலாப நிதியத்தின் மீதியை அறவிடுவது தொடர்பாக பிரிவுகளை உள்ளடக்கியிராமையினால் |

| | |
|---|---|
| | அவர்களின் சேமலாப நிதியத்தை பல்கலைக்கழகத்திற்கு விடுவிப்பதில் சிக்கலொன்று காணப்படுவதுடன், குறித்த விரிவுரையாளர்களின் விருப்பமின்றி அந்நிதியை பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொள்ள முடியாதென சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியிருந்தார். இது தொடர்பாக கடந்த COPE குழுவின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இவ்வாறு பிணைப்பொறுப்பு உரித்தாளிகளுக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலுள்ள சேமலாப நிதியத்தை பல்கலைக்கழகத்திற்கு கையளிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பங்களிப்புடன் இம்மீதிகளை பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விரிவுரையாளர்களின் சேமலாப நிதியம் அவர்களின் பிணை முறிப் பெறுமதியை அறவிடுவதற்கு போதுமானதாகும். சேமலாப நிதியத்தை பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>கணக்காய்வுப் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட உடன்படிக்கையை மீறிய 214 விரிவுரையாளர்களின் பணத்தை அறவிடுவது தொடர்பாக பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ள முறை பல்கலைக்கழகத்தினால் குறித்த கணக்காய்வு ஐயவனாவிற்குரிய வழங்கப்பட்ட பதிலில் விளக்கமாக காண்பிக்கப்பட்டுள்ளதால் அந்நிலைமை கீழே காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சமர்ப்பிக்கின்றேன்.<br><br>1. 2013 ஆம் ஆண்டில் உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்களின் பதிவேட்டின் பிரகாரம் 90-99 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உடன்படிக்கை மீறிய 33 விரிவுரையாளர்கள் இருந்ததுடன், பிணைப் பொறுப்பின் பெறுமதி 2015.05.31 வரை ரூபா 22,627,793.13 ஆக இருந்தது.<br><br>(அ) அதில் 6 பேரின் முழுமையான பிணைப் பொறுப்பின் பெறுமதி ரூபா 4,148,203.33 தொகை அறவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br><br>(ஆ) மேலும் 6 விரிவுரையாளர்கள் தொடர்பாக பிணைப் பொறுப்பின் பெறுமதி ரூபா 4,507,305.62 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>(இ) மேலும் 9 பேரின் பிணைப் பொறுப்பின் பெறுமதி ரூபா 3,911,838.04 தொகை சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு போதுமானதாக இருந்தது.<br><br>இந்த சேமலாப நிதியத்தை பல்கலைக்கழகத்திற்கு கையேற்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அந்த கோவைகளின் பங்களிப்புத்தொகை தொடர்பாக சில குறைபாடுகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அக்குறைபாடுகளை சரிசெய்து மீண்டும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.<br><br>(ஈ) மேலும் இக்காலப்பகுதியில் 10 விரிவுரையாளர்களிடமிருந்து சேமலாப நிதியத்தின் மீதிகள் தற்போது பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட்டுள்ளதுடன், நிலுவைப் பொறுப்பின் பெறுமதியை அறவிட முடியாத நிலைமையில் காணப்படுவதால் பிணைப்பொறுப்பு குழு மற்றும் நிதிக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் அம்மீதிகளை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>(உ) இந்த 33 விரிவுரையாளர்கள் மிகவும் பழமையான உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்கள் வகுதியில் வருகின்றனர். இவர்களிடமிருந்தும் சேமலாப நிதியத்தின் மீதிகள் தற்போது பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட்டுள்ளதால் நிலுவைத் தொகையை மேற்குறித்த படி புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>**<u>2015 மே மாதம் வரையில் பிணைப்பொறுப்பு பெறுமதியில் ரூபா 9,083,836.15 தொகையினை பிணைப்பொறுப்பு</u>** |

| | |
|---|---|
| | <u>பெறுமதியாக அறவிடப்பட்டுள்ளது.</u><br><br>2. 2013 ஆம் ஆண்டில் உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்களின் பதிவேட்டின் பிரகாரம் 2000-2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உடன்படிக்கை மீறிய 74 விரிவுரையாளர்களின் பிணைப் பொறுப்பின் பெறுமதி 2015.05.31 வரை ரூபா 126,903,441.90 ஆக இருந்தது.<br><br>(அ) அதில் 30 விரிவுரையாளர்களிடமிருந்து பிணைப் பொறுப்பின் பெறுமதியான ரூபா 126,903,441.93 தொகை அறவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br><br>(ஆ) மேலும் 15 விரிவுரையாளர்களின் பிணைப் பொறுப்பின் பெறுமதியான ரூபா 12,186,315.52 தொகையை அறவிடுவதற்கு சேமலாப நிதியத்திலிருந்து போதுமானதாக இருந்ததுடன், அதில் 10 விரிவுரையாளர்களின் கோவைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 04 கோவைகளின் சேமலாப நிதியத்தை விடுவிப்பதற்கு வேலைகள் கணக்குப் பிரிவில் நடைபெற்றுவருவதுடன், ஒரு ஆவணமொன்றில் சில குறைபாடுகள் இருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்ததுடன், அக்குறைபாடுகளை சரிசெய்து மீண்டும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.<br><br>(இ) விரிவுரையாளர்கள் 4 பேரின் பிணைப் பொறுப்பின் பெறுமதி ரூபா 11,900,175.63 தொகையை அறவிடுவதற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.<br><br>(ஈ) மேலும் இக்காலப்பகுதியில் 12 விரிவுரையாளர்களின் பிணைப் பொறுப்பின் பெறுமதியான ரூபா 42,909,560.62 தொகை தவணைக் பணமாக செலுத்தப்பட்டு வருவதுடன், இதுவரை ரூபா 22,390,270.96 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவர்களின் சேமலாப நிதியத்தின் மீதிகளும் தற்போது பல்கலைக்கழகத்திற்கு மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br><br>(உ) ஒரு விரிவுரையாளரிடமிருந்து நிலுவைத் தொகையான ரூபா 58,369.50 அறவிடுவதற்கு அவரின் பணிக்கொடைத் தொகை போதுமானதாக இருந்தது. பணிக்கொடைத் தொகையை இத்தொகைக்கு தீர்ப்பதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>(ஊ) ஒருவர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்.<br><br>(எ) 03 பேரின் பிணைப்பொறுப்பின் பெறுமதியை கணக்கிடுவது தொடர்பில் சிக்கல் காணப்படுவதால் அச்சிக்கல் ஆராயப்பட்டு வருகின்றது.<br><br>(ஐ) இதற்கு மேலதிகமாக 3 கோவைகளின் சேமலாப நிதியத்தை பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட்டதன் பின்னர் எஞ்சிய மீதியை அறவிட்டுக் கொள்வதற்கு அந்த நபர்களின் தற்போதைய முகவரியைக் கண்டுபிடிக்க முடியாமையால் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்காக பிணைக்குழு மற்றும் நிதிக்குழுவிற்கும் காரணங்கள் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றேன்.<br><br>(ஒ) மேலும் 4 கோவைகளுக்குரிய பிணைப் பொறுப்பின் பெறுமதி தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக பிணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>(ஓ) இக்காலப்பகுதியில் உடன்படிக்கை மீறியவர்களுக்கிடையே ஒரு ஊழியருக்கு அவர்களின் சுகவீன நிலைமையின் கீழ் குறித்த பட்டப்பின் படிப்பினை பூர்த்தி செய்ய முடியாமை தொடர்பில் நிர்வாக சபையால் அவருக்கு ஏனைய பட்டப்பின் படிப்பினை பின்பற்றி சான்றிதழொன்றை தருமாறு |

| | |
|---|---|
| | அறிவித்துள்ளது. அதன் பிரகாரம் அவரால் பட்டப்பின் படிப்பை நிறைவு செய்து சான்றிதழைச் சமர்ப்பித்த பின் அவரின் பெயரை உடன்படிக்கை மீறியவர்களின் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>**2015 மே மாதம் வரையில் பிணைப்பொறுப்பு பெறுமதியில் ரூபா 24,331,484.76 தொகையான பிணைப்பொறுப்பு பெறுமதியாக அறவிடப்பட்டுள்ளது.**<br><br>3. 2013 ஆம் ஆண்டில் உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்களின் பதிவேட்டின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் பின்னர் காலப்பகுதியில் உடன்படிக்கை மீறிய 29 விரிவுரையாளர்களின் பிணைப் பொறுப்பின் பெறுமதி 2015.05.31 வரை ரூபா 42,669,721.73 ஆக இருந்தது.<br><br>(அ) அதில் 09 பேரின் பிணைப் பொறுப்பின் பெறுமதியான ரூபா 16,008,407.93 தொகை அறவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br><br>(ஆ) இக்காலப்பகுதியில் 06 விரிவுரையாளர்களின் சேமலாப நிதியத்தின் மீதி பிணைப் பொறுப்பின் பெறுமதியான ரூபா 5,167,280.68 தொகையை அறவிடுவதற்கு போதுமானதாக இருந்ததுடன், இவ்விரண்டு பேரின் கோவைகள் தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>(இ) 2 விரிவுரையாளர்களின் பிணைப் பொறுப்பின் பெறுமதியான ரூபா 11,312,669.39 தொகையை அறவிடுவதற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மேலும் ஒரு கடிதம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.<br><br>(ஈ) மேலும் 08 விரிவுரையாளர்கள் தவணை ரீதியாக பிணைப் பொறுப்பின் பெறுமதியான ரூபா 12,966,589.30 தொகையை செலுத்தி வருவதுடன், அவர்களின் சேமலாப நிதியத்தின் மீதிகளையும் தற்போது பல்கலைக்கழகத்திற்கு மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br><br>(உ) 04 விரிவுரையாளர்களுக்கு பிணைத்தொகையினை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அவர்கள் குறித்த மேலதிக விபரங்கள் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்களின் பதிலின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>**2010 ஆம் ஆண்டின் பின்னர் உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து 2015 மே மாதம் வரையில் ரூபா 21,796,536.13 தொகையான பிணைப்பொறுப்பு பெறுமதியாக அறவிடப்பட்டுள்ளது.** |
| **(க)** | **1101040002 - ரூபா 718,687.54**<br><br>நிதிக்குழு இலக்கம் 326.02(1) இன் பிரகாரம் இம்மீதி கூடிய பொருளாதார நன்மையை கிடைக்கும் வகையில் பயன்படுத்துவதற்காக பல்கலைகக்ழக அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டதுடன், தொடர்ந்தும் இம்மீதி செயற்பாடற்ற மீதியொன்றல்ல.<br><br>**11-01-04-00-01 கண்டி வீதி விற்பனைக் கணக்கு ரூபா 170,687.50**<br><br>இது Kandy Road புத்தகத்தை விற்பனை செய்தமையால் கிடைத்த வருமானம் மற்றும் அதற்காக ஏற்பட்ட செலவினத்தை கணக்கீடு செய்ய தயாரிக்கப்பட்ட கணக்கொன்றாகும். இக்கணக்கின் மீதி வெளியீட்டுக் |

கணக்கிற்கு மாற்றப்பட்டு தீர்வு செய்யப்பட்டுள்ளது.

**11.01.04.14.01 - ரூபா 570,301.56 - பௌதீகவியல் துறை வருமானக் கணக்கு**

இந்நிதியத்தில் 2013.01.01 இல் உள்ளவாறு ரூபா 568,301.56 தொகையும் 2013.12.31 இல் உள்ளவாறு ரூபா 570,301.56 தொகையும் காணப்பட்டதுடன், தற்போது அக்கணக்கில் மீதி ரூபா 599,801.56 ஆக இருந்தது. இப்பணம் பயனுள்ள செலவினமென்றாக பயன்படுத்தப்படவுள்ளது.

**11-01-06-07-02 - ரூபா 3,146,723ரு49**

பொறியியலாளர் வேலைத்தளத்தின் வெளிநிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் சேவை வழங்கியமைக்காக உழைத்த இந்த வருமானம் எதிர்காலத்தில் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**11-01-02-07-01 - ரூபா 329,797ரு00**

இந்த வருமானம் கணனி நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டது.

**1101040203 - ரூபா 234,198.00 – மண் விஞ்ஞான நிதியம் - விவசாய பீடம் -**

இக்கணக்கு மண் விஞ்ஞானத் துறையினால் வெளித்தரப்பினருக்கு செய்யும் ஆய்வுகூட சேவைகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. இக்கணக்கில் அத்தியவசிய சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் செலவுசெய்யப்படுகின்றது.

**1101031601 ரூபா 642,490.97**

இக்கணக்கிலிருந்து பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் அபிவிருத்திக்காக ஏற்பாடு செய்யப்பட்ட தொகையே காண்பிக்கப்பட்டுள்ளது. பீடங்களில் விரிவுரையாளர்களின் கடந்த ஆண்டின் செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் என்பவற்றிற்காக பணம் கோரப்படாமையால் இக்கணக்கிலிருந்து எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் 2014 ஆம் ஆண்டின் பீடங்களில் விரிவுரையாளர்களின் கடந்த ஆண்டின் செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் என்பவற்றிற்காக ரூபா 140,000.00 செலவிடப்பட்டுள்ளது. இத்திகதியில் இக்கணக்கில் மீதி ரூபா 502,490.97 ஆக இருந்தது. ஆதலால் இந்நிதியத்தின் மீதி மூலம் நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**1101041603 ரூபா 2,581,429.67**

இக்கணக்கின் மூலம் Revolving fund of lab service இற்கான பணம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. 2013 ஆம் ஆண்டில் இக்கணக்கிலிருந்து எதுவித செலவினமும் மேற்கொள்ளப்படவில்லை. ஆய்வுகூட பரிசோதனைகளுக்குத் தேவையான இரசாயன பொருள் இருப்பொன்று காணப்பட்டமையால் கொள்வனவு செய்வதற்கு தேவைப்பாடொன்று ஏற்படவில்லை. மேலும் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 819,318.84 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஆதலால் இந்நிதியத்தின் மீதிகள் மூலம் நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**11-01-04-11-03 - ரூபா 270,890.16**

உடற்கல்வி திணைக்களத்தின் மூலம் 1997 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக்கணக்கு அத்திணைக்களத்தின் மாணவர்களுக்கு கைநூல் அச்சிடுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இக்கணக்கில் உள்ள பணம் நீண்டகால

| | |
|---|---|
| | நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமையால் உரிய பணம் அத்துறையின் நிர்மாணிக்கப்பட்டு வரும் நூதனசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு செலவிடுவதற்கு துறையின் தலைவர் தீர்மானித்திருந்ததுடன், அக்கணக்கின் மீதி அவ்வாறே பேணிச்சென்று அக்கணக்கின் பெயர் Museum Development Fund ஆக மாற்றுவதற்கு நிதிக்குழுவின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2011.05.11 ஆந்திகதி அதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது.<br><br>இந்த நூதனசாலையின் வேலைகள் இதுவரை முடிவடைந்திராததுடன், அவ்வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், அப்பணம் நூதனசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகாக பயன்படுத்தப்படும்.<br><br>**<u>1101032102 - ரூபா 314,097.50</u>**<br><br>பல்மருத்துவ விஞ்ஞான பீடத்திற்குரிய 1101032102 ஆம் கணக்கில் தற்காலிகமாக இவ்வாறான தொகையொன்று காணப்பட்ட போதிலும், வாய் தாடை பிரிவு உபகரணங்களைப் பராமரித்தல் உட்பட பல்வேறு நடவடிக்கைகளுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் இது பயன்பாட்டிற்காக எடுக்கப்படுவதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>**1101040004 - ரூபா 1,668,025.00**<br><br>இக்கணக்கு இப்பிரிவின் விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்துவதற்காக சேரும் பணத்தை சேகரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ஒன்றாகும். விளையாட்டு மைதானங்களின் பராமரிப்பு, அடிக்கடி பயன்படுத்துதல் காரணமாக ஏற்படும் சேதங்கள் என்பனவற்றைத் திருத்துவதற்காகவும் அவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் அவ்வாறு சேரும் பணத்தை பயன்படுத்துவது முகாமைத்துவத்தின் நோக்கமாகும்.<br><br>தற்போது அதிக குறைபாடுகளுடன் காணப்படும் இப்பல்கலைக்கழகத்தின் விளையாட்டரங்கின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பல்வேறு செயற்திட்டங்கள் முன்மொழியப்பட்டு காணி, கட்டிடங்கள் மற்றும் பராமரிப்புக் குழுவின் அங்கீகாரம் இருந்தும் இதுவரை செயற்பாட்டு நிலைமையில் இல்லாததால் குறித்த பணத்தைப் பயன்படுத்தவில்லையென தெரிவித்துக்கொள்கின்றேன். உத்தேச செயற்திட்டங்களின் பகுதயொன்று காணப்படும் உழைப்பினைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தின் மூலம் மேற்கொள்வதற்கும் அவ்வாறு செய்யப்படாத செயற்திட்டங்களை வெளி ஒப்பந்த முறைமை மூலம் மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டதால் தற்போது மீதியாக காணப்படும் அப்பணம் எதிர்காலத்தில் கண்டிப்பாக செலவிடுவதற்கு நேரும்.<br><br>**1101041104 - ரூபா 28,819.71**<br><br>இது தற்போது விளைவற்ற நிலைமையில் காணப்படவில்லை. |
| **(கா)** | இந்நிறுவனத்தின் அடிப்படை நோக்கம் பல்கலைக்கழக மாணவர்களின் கணனி அறிவினை மேம்படுத்துவதாக இருப்பதுடன், இவ்வாறான பாடநெறிகள் நிறுவனத்தில் உள்ள தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை முறையாக பராமரிப்பதற்கு செலவாகும் தொகையின் பகுதியொன்றையோ தீர்க்கும் நோக்கில் நடாத்தப்படுகின்றன. எவ்வாறாயினும் வருமானத்தை உழைக்கும் நோக்கில் பாடநெறி திட்டமிடல் மேற்கொள்ளப்படவில்லை. |
| **(கி)** | இந்நிலைமை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **(கீ )** | ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரை பயன்படுத்தாத நிதிகளே Unutilized Funds குறித்த நிலையான வைப்புக்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இந்நிதி தற்காலிக அடிப்டையில் குறுங்கால முதலீடுகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 12-04-14-00 |

| | |
|---|---|
| | கொண்ட ஆராய்ச்சி செயற்திட்டங்களின் கீழ் நிலையான வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 5 மில்லியன் தொகை 2013.12.26 ஆந் திகதி குறித்த வைப்புக்களிலிருந்து விடுவித்து ஆராய்ச்சி செயற்திட்ட செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| (கு) | அனைத்து புலமைப்பரிசில்களும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் குறித்த பீடங்களினால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதிகளவிலான புலமைப் பரிசில்களுக்காக சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் தகைமை பெறும் மாணவர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் புலமைப்பரிசில் வழங்கப்படமாட்டாது. இதுவரை தகைமை பெற்றுள்ள அனைத்து மாணவ மாணவிகளுக்கு வழங்ப்பட்டிருந்ததுடன், 80% அளவு புலமைப்பரிசில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதும் தகைமை பெறாததன் அடிப்படையில் அந்த அளவினை வழங்க முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்பட்டது. இப்புலமைப்பரிசில் நிதியம் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கணக்கீட்டுக் குறைபாடாக கூற முடியாது. |
| (கூ) | 2004 ஆம் ஆண்டில் பதிவு செய்ய்பட்டிருந்த இம்மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் 2005 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அம்மாணவர்களின் இறுதி ஆண்டு 2010 ஆம் ஆண்டாக இருப்பதால் 2011 ஆம் ஆண்டின் வருமானமாக பணம் பெற்ற வருடம் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (கெ) | **<u>அறவிடப்படாத கடன் மீதி</u>** |

| அ.அ. இலக்கம் | பெயர் | 2013.12.31 இல் மீதி | பதில் |
|---|---|---|---|
| P 03486 | எச்.எம்.சந்திரதாச | 1,825.00 | ஓய்வு பெற்று சென்றுள்ளார். சேமலாப நிதி இதுவரை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| P 11108 | பீ.பீ.எஸ். விக்கிரமநாயக்க | 1,870.00 | அறவிடப்பட்டு முடிவடைந்துள்ளது. |
| P 06975 | எச்.ஏ.ஜயதிலக்க | 8,000.00 | ஓய்வு பெற்று சென்றுள்ளார். சேமலாப நிதி இதுவரை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| P 01140 | எஸ்.எஸ்.விக்கிரமசிங்க | 45,830.00 | அறவிடப்பட்டு முடிவடைந்துள்ளது. |
| P 08305 | ஏ.டீ.பீ.சரத்சந்திரா | 3,910.00 | சேமலாப நிதியில் அறவிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| P 14181 | டப்.பீ.ஆர் விக்ரமரத்ன | 3,060.00 | கல்வி விடுமுறை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளார். |
| P 03418 | ஆர்.எம்.எஸ்.கே.ரத்னாயக்க | 7,990.00 | சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| P 01643 | கே.எச்.ஜயவர்தன | 34,349.00 | அறவிடப்பட்டு முடிவடைந்துள்ளது. |
| P 01894 | எம்.ஏ.சீ.எஸ்.அல்வஸ் | 21,979.00 | அறவிடப்பட்டு முடிவடைந்துள்ளது. |
| P 01932 | ஏ.பீ.பீரிஸ் | 67,500.00 | ஓய்வுபெற்றுள்ளார். சேமலாப நிதியம் இதுவரை விடுவிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | P 03418 | ஆர்.எம்.எஸ்.கே.ரத்னாயக்க | 14,405.00 | சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| | | P 03759 | எம்.என்.எம்.கமல் அசட் | 41,758.00 | விலகியுள்ளார். சேமலாப நிதியம் இதுவரை விடுவிக்கப்படவில்லை. |
| | | P 04545 | ஆர்.எம்.எஸ்.கே.ரத்னாயக்க | 55,179.00 | சேவையில் இல்லை. சேமலாப நிதியம் இதுவரை விடுவிக்கப்படவில்லை. |
| | | P 05510 | எஸ்.காரியவசம் | 16,104.00 | சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| | | P 05769 | எஸ்.ஐ.எல்.பி.ரத்னாயக்க | 35,390.00 | சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| | | P 07047 | பீ.ஈ.எம்.டீ.சீ.சீ.பண்டார | 101,378.00 | சேவையில் இல்லை. சேமலாப நிதியம் இதுவரை விடுவிக்கப்படவில்லை. |
| | | P 09127 | டப்.பீ.சரத்சந்திரா | 34,664.00 | சேவையில் இல்லை. சேமலாப நிதியம் இதுவரை விடுவிக்கப்படவில்லை. |
| | | P 10120 | எஸ்.ஆர்.விஜேரத்ன | 32,498.00 | அறவிடப்பட்டு முடிவடைந்துள்ளது. |
| | | P 10463 | எச்.எம்.என்.டீ.ஹேரத் | 38,746.00 | சேவையில் இல்லை. சேமலாப நிதியம் இதுவரை விடுவிக்கப்படவில்லை. |
| | | P 10679 | கே.எம்.பி.எஸ்.எஸ்.கே. நவரத்ன | 3,099.00 | அறவிடப்பட்டு முடிவடைந்துள்ளது. |
| | | P 11840 | ஏ.யூ. பண்டாரநாயக்க | 8,780.00 | சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| | | P 08607 | பீ.பி. சந்தரானந்த எ | 26,000.00 | அறவிடப்பட்டு முடிவடைந்துள்ளது. |
| | | P 02424 | டப்.ஆர்.எம்.யூ. விக்கிரமசிங்க | 193,796.00 | வெளிநாடு சென்றோ அல்லது சேவையை விட்டுச்சென்றோ உள்ளார். சேமலாப நிதியம் இதுவரை விடுவிக்கப்படவில்லை. |
| | | P 04249 | எஸ்யூ.பி.சமன்த குமார | 32,705.00 | 2001.12.18 ஆந் திகதி சேவை முடிவுறுத்தப்பட்ட அவரின் சேமலாப நிதியத்தை விடுவிப்பதற்காக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பல்கலைக்கழகத்திற்கு 2011.06.28 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. அங்கு அவரின் சேமலாப நிதியத்தை விடுவிக்கும் போது ஏற்பட்ட தாமதத்திற்காக அவர் பொறுப்பாக இருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. கணக்குப் பிரிவினால் இந்த ஆவணங்கள் பல்கலைக்கழக |

| | | | |
|---|---|---|---|
| | | | மானியங்கள் ஆணைக்குழுவிற்கு 2012 திசெம்பர் மாதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் இந்த சேமலாப நிதியத்தை விடுவிப்பதில் தாமதம் தொடர்பான பொறுப்பினை குறித்த நபரால் பொறுப்பேற்பதாக அவரிடம் பெற்றுக்கொண்ட கடிதமொன்றை சமர்ப்பிக்குமாறு அறவிக்கப்பட்டது. இது தொடர்பாக சமன்த குமார அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை அவரால் அக்கடிதம் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| அ.அ. இலக்கம் | பெயர் | 2013.12.31 இல் மீதி | பதில் |
|---|---|---|---|
| P 04796 | வை.எம்.ரணசிங்க பண்டா | 21,902.00 | வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள அவரால் பல்கலைக்கழகத்திற்கு எதிராக தொழில் நியாயசபை முன் தொடரப்பட்டுள்ள வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருகின்றது. ஆதலால் அவரின் சேமலாப நிதியத்தை விடுவிப்பதற்கு முடியாதுள்ளது. ஆதலால் குறித்த கடன்தொகையை அறவிடுவது தாமதமாக்கப்பட்டிருந்தது. |
| P 06351 | எஸ்.கே. அரம்பேபொல | 90,529.00 | அறவிடப்பட்டு முடிவடைந்துள்ளது. |
| P 07193 | எச்.எம்.சரித ஹேரத் | 93,312.00 | இந்த உத்தியோகத்தர் பல்கலைக்கழகத்தில் சேவையில் சம்பளமில்லாமல் விடுவிக்கப்பட்டி ருந்ததுடன், சுற்றாடல் அமைச்சின் செயலாளராகவும், ஊடகத்துறை அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தமையால் பல்கலைக்கழகத்திலிருந்து சம்பளக் கொடுப்பனவு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதுவரை மீண்டும் பல்கலைக்கழக சேவைக்கு மீண்டும் சேர்ந்துள்ளமையால் சம்பளத்திலிருந்து மீண்டும் கடன் தவணை அறவீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| P 10016 | பி.வீ.ஏ.டீ.ஐ.பி.பீரிஸ் | 21,900.00 | சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| P 10900 | ஆர்.எம்.டீ.ரத்னாயக்க | 40,555.00 | அறவிடப்பட்டு முடிவடைந்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | P 10929 | எம்.பி.எம்.ரஸாக் | 31,815.00 | கல்வி விடுமுறை (சம்பளமற்ற) பெற்று வெளிநாடு சென்றுள்ளார். |
| | P 11774 | ஐ.பீ.எல்.பீ.வீரசேன | 64,050.00 | |
| | P 12118 | டீ.எம்.குமாரசிங்ஹ | 32,645.00 | |
| | P 11480 | ஏ.யூ.பண்டாரநாயக்க | 8,780.00 | சேமலாப நிதியம் P 11480 திரு. ஏ.யூ.பண்டாரநாயக்கவிற்குரிய இடர் கடன் கணக்கில் ரூபா 8,780.00 மீதியொன்று காணப்பட்டது. எனினும் அது தொடர்பாக ஆழமாக விசாரித்த போது அக்கடன் மீதி அவருக்கு மீதியொன்றல்ல எனவும் பட்டோலை தயாரிக்கும் போது ஏற்பட்ட தவறொன்றாக கண்டறியப்பட்டது. அதன் பிரகாரம் இதுவரையில் அது 2015 பட்டோலை மூலம் அகற்றப்பட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | P 11975 | பீ.எச்.எம்.குணவர்தன | 66,660.00 | சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| | P 12195 | ஏ.பராக்கிரம | 168,300.00 | 2014 மே மாதம் வரையில் மீண்டும் அறவிடப்பட்டு வருகின்றது. |
| | P 12322 | ஆர்.எம்.எஜ்.ரத்னாயக்க | 349,769.00 | 2008-09-22 ஆம் திகதிய கடிதத்தில் இராஜினாமாவை அறியத்தந்திருந்ததுடன், 2008.10.21 ஆந் திகதிய உபவேந்தரின் கடிதத்தினால் அவரின் இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் சேமலாப நிதியம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. |
| **(கே)** | இதற்குரிய பேராசிரியர் திரு. கே.ஏ. நந்தசேன அவர்களிடமிருந்து அறவிடுவதற்குள்ள அனைத்து நிலுவை பணத்தையும் அவரின் ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | | | |
| **(கை)** | ஓய்வுபெற்ற ஆர்.எம்.ரத்னாயக்க 2012.08.15 ஆந் திகதி வரை பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்றிருந்ததுடன், 2012.02.16 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த வீட்டை கையளிக்குமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் 2013.02.26 ஆந் திகதி AQ/38 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இல்லத்தை பல்கலைக்கழகத்திற்கு கையளித்தார். 2012.08.15 ஆந் திகதி முதல் 2012.11.15 ஆந் திகதி வரை மத்திய தரத்திலான வீட்டிற்கு அறவிடப்பட வேண்டிய சாதாரண வாடகையான ரூபா 500 வீதமும் எஞ்சிய காலத்திற்காக தண்டப்பணமாக மாதமொன்றிற்கு ரூபா 7,500 வீதமும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் படி அவரது சேமலாப நிதியத்தினை விடுவிக்கும் போது அனைத்து நிலுவை தொகைகளும் அறவிடப்பட்டது. | | | |
| **(கோ)** | குறித்த நிலுவைத் தொகை உட்பட 2015.05.30 ஆந் திகதி வரை பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது. | | | |

**4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

பேராதனைப் பல்கலைக்கழகம் உட்பட மஹா இலுப்பள்ளம, தொடங்கொல்ல, மாவலவத்த மற்றும் மீவதுரை ஆகிய பண்ணைகளுக்காக பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் ரக்னா பாதுகாப்பு கம்பனி மூலம் சேவை வழங்கும் சேவை நிலையங்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பாதுகாப்பு திணைக்களத்தின் சேவை வழங்கும் நிலையங்கள் | 28 |
| ரக்னா பாதுகாப்பு சேவை வழங்கும் நிலையங்கள் | 56 |
| | **84** |

84 பாதுகாப்பு நிலையங்கள் 08 மணித்தியால 3 சேவை தடவைகளின் கீழ் (ஒரு நாளைக்கு) மேவகை செய்வதற்கு தேவயையான பாதுகாப்பு காப்பாளர்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| 84 x 3 எண்ணிக்கை | 252 |
| 5% விடுமுறை | 12 |
| | **264** |

தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள திரட்டிய ஊழியர் எண்ணிக்கை 186 ஆகும். அதன் பிரகாரம் இதுவரை நாளாந்த பாதுகாப்பு சேவைககள் தொடர்ச்சியாக பேணிச்செல்லும் போது முகங்கொடுத்துள்ள ஊழியர் பற்றாக்குறை பின்வருமாறு

| | |
|---|---|
| தேவையான ஊழியர் எண்ணிக்கை | 264 |
| நாளாந்த பாதுகாப்பு காப்பாளர் எண்ணிக்கை | 186 |
| **பற்றாக்குறை** | **78** |

அதன் பிரகாரம் தரமான பாதுகாப்பு சேவைகளை பேணிச் செல்வதற்காக தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ள மொத்த ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக 78 பாதுகாப்பு காப்பாளர்கள் பற்றாக்குறையாக இருப்பது தெளிவாகின்றது.

பாதுகாப்பு திணைக்களம் அத்தியவசிய சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றாக இருப்பதால் ஊழியர் பற்றாக்குறை மற்றும் எனைய காரணங்கள் அடிப்படையில் சில சேவை நிலையங்கள் வெற்றிடமாக இருக்க முடியாதிருந்ததுடன், இங்கு முதலில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் 78 பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையை தீர்ப்பதற்காக மாதாந்தம் வேலை செய்யப்பட வேண்டிய மணித்தியாலம் 78 x 192 = 14,976 மணித்தியாலமாக இருந்தது. இம்மணித்தியாலங்கள் மேவுகை செய்யும் பொருட்டு எல்லையை மிகைத்து மேலதிக நேர வேலை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இப்பற்றாக்குறையான 14,976 மணித்தியாலமான மேவுகை செய்வதற்கு தற்போது உள்ளகப் பாதுகாப்பு பிரிவின் உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு இம்மேலதிக அளவினை விட கருத்திற்கொள்ளக்கூடிய எண்ணிக்கையில் சேவையில் ஈடுபடுத்துதல் வழமையாக மேற்கொள்ளப்படுகின்றது.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

**(அ)** i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2012 செப்தெம்பர் 27 ஆந் திகதி பேராதனைப்

| | |
|---|---|
| | பல்கலைக்கழகத்தின் உப வேந்தரால் LEARN நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்காக பொருத்தமான நிலையமொன்றாக இப்பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>அதன் பிரகாரம் 325 ஆவது நிதிக்குழுவின் மூலம் LEARN நிறுவனத்திற்கு வழங்கப்படும் வசதிகளுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், 2013.01.01 ஆந் திகதி முதல் அமுலாகும் வரையில் LEARN நிறுவனத்திற்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையே உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த அறவீடுகள் LEARN நிறுவனத்தினால் பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| | ii. இந்நிறுவனம் உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட கம்பனியொன்றாக உள்ளதுடன், ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் இணையத்தள வசதிகள் கூட்டிணைத்தல் இந்நிறுவனத்தினூடாக வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் இந்நிறுவனததிற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | 19.01.2000 இன் 380 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றிக்கையின் முதலாவது பந்தியின் பிரகாரம் பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் மதியுரை சேவைகளை வழங்குவதற்கும் ஆராய்ச்சிகளில் ஈடுபட வேண்டுமெனவும் மதியுரை சேவை மற்றும் பரிசோதனைகளுக்கு கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு இப்பரிந்துரைகளில் பல்கலைக்கழக மறுசீரமைப்பு ஜனாதிபதி செயலணி மூலம் வழங்கப்பட்ட பரிந்துரைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள படி மொத்த வருமானத்தில் 5% சதவீதம் பல்கலைக்கழக நிர்வாகத்திற்காக ஒதுக்கப்படுவது உண்மையான விடயமொன்றாகும். இங்கு 5% பின்வருமாறு செயற்பாடுகளுக்கு பகிரப்பட்டுள்ளது.<br><br>1. ஆரய்ச்சிகள் மேம்படுத்தல் 40%<br>2. பல்கலைக்கழக பிரயோக கட்டணம் 10%<br>3. பல்கலைக்கழக நிர்வாகக் கட்டணம் 30%<br>    a. உப வேந்தர் நிதியம் 35%<br>    b. பீடாதிபதி நிதியம் 30%<br>    c. பதிவாளர் நிதியம் 10%<br>    d. நிதியாளர் நிதியம் 25%<br>4 பீடங்கள்/ நிலைய நிர்வாக கட்டணம் 20%<br><br>100%<br><br>இங்கு நிதியாளர் நிதியத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை மொத்த வருமானத்தில் ஆக 0.0375% இருந்ததுடன், அந்நிதியத்திலிருந்து அதாவது கிடைக்கும் மொத்த வருமானத்தில் பல்கலைக்கழகத்தின் கணக்குப் பிரிவின் பதவியணியினருக்காக செலுத்தப்படுகின்றது. இது 2002 நிர்வாக சபை அங்கீகாரத்தின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டிலிருந்து அல்ல 2002 ஆம் ஆண்டிலிருந்து செலுத்தப்படுகின்றது.<br><br>பல்கலைக்கழகத்திற்கு மிகவும் கூடிய வருமானமொன்றை உழைத்துக்கொள்வதற்கு பங்களிக்கும் இந்த ஆரய்ச்சி மற்றும் மதியுரை சேவைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ள கணக்கு பிரிவின் உத்தியோகத்தர்கள் பின்வரும் கடமைகளை நிறைவேற்றுகின்றனர்.<br><br>i. வெளிநாட்டு நிறுவனங்களுடன் கலந்துரையாடி நிதியைக் கொண்டு வருதல்.<br>ii. பொது திறைசேரியினதும் ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புடைய நிதியைக் கொண்டு |

| | |
|---|---|
| | வருதல்.<br>iii. கொடுப்பனவிற்காக உறுதிச்சீட்டுக்களைத் தயாரித்தல்.<br>iv. உரிய அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளல்.<br>v. கொள்வனவுகளை மேற்கொள்ளல்.<br>vi. தேவையான நிதி தரவுகளை தயாரித்தல்.<br>vii. கணக்குகளை முறையாக பேணுதல்.<br><br>மேலே குறிப்பிடப்பட்ட ஆரம்ப கடமைகள் கணக்குப் பிரிவின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுவதுடன், அக்கடமைகள் 2000 ஆம் ஆண்டின் 380 ஆம் இலக்க பல்கலைக்கழக நிதியத்திலிருந்து சுற்றறிக்கையின் 7.3 ஆம் பந்தியின் பிரகாரம், தேறிய வருமானத்தில் 65% - 85% நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்க முடியுமெனவும் நிதிப்பிரிவின் பங்களிப்பிற்காக அத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.<br><br>இங்கு பல்கலைக்கழக தாபன விதிக்கோவையில் பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்களுக்கு பல்கலைக்கழக நிதியத்திலிருந்து படியொன்று செலுத்த முடியாதென குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவு பல்கலைக்கழக நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படாதிருந்ததுடன், 2000 ஆம் ஆண்டின் 380 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநிறுவனங்கள் மூலம் பல்கலைக்கத்திற்கு உழைக்கப்பட்ட வருமானத்தில் அது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் படி இது சட்டரீதியான கொடுப்பனவொன்றாகும். |
| **(இ)** | பல்கலைக்கழகத்தின் வாகன அணியின் கட்டுப்பாட்டு பிரிவிற்குச் சொந்தமாக பேரூந்தொன்று மாத்திரம் காணப்படுவதுடன், பீடங்களில் காணப்படும் பேரூந்துகள் பிரதானமாக அந்தந்த பீடங்களின் கல்விசார் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. ஆதலால் மேற்குறிப்பிட்ட நிர்வாக பிரிவிடம் உள்ள பேரூந்து ஏனைய அனைத்து தேவைகளுக்காக பயன்படுத்த வேண்டியிருந்தது. இப்பேரூந்தை ஏனைய நடவடிக்கைகளுக்காகவும் மாணவர்களைப் போக்குவரத்து செய்வதற்காகவும் பயன்படுத்தி தொடர்ச்சியாக சேவையொன்றை வழங்க முடியாதுள்ளது. இக்காரணத்தின் அடிப்படையில் மாணவர்களைப் போக்குவரத்து செய்வதற்காக பேருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>பல்கலைக்கழகத்தினுள் குறுந்தூர போக்குவரத்து மேற்கொள்ளப்படுவதாலும் அந்த பிரயாண தடவைகளில் கூடுதலான எண்ணிக்கையானோர் போக்குவரத்துச் செய்யப்படுவதாலும் எரிபொருள் பயன்பாடு அதிகளில் ஏற்படுகின்றது. எவ்வாறாயினும் தற்போது இதற்காக விலை விபரங்கள் கோருவதற்கு பொருத்தமான பேருந்து ஒன்றை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| (ஈ) | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் இருப்பு மெய்மையாய்வு குழுக்களின் உத்தியோகத்தர்களுக்காகவும் ஊழியர்களுக்காகவும் பணம் செலுத்தப்பட்டுள்ளது. அங்கு தாபனக் விதிக்கோவையின் xxvi அத்தியாயத்திற்கு இணங்க இச்சட்டரீதியான செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக இக்கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் IX ஆம் அத்தியாயத்தின் 2.2 பந்தியின் பிரகாரம் மேலதிக நேர படிகள் வழமையான கடமை நேரங்களுக்கு புறம்பான சந்தர்ப்பங்களுக்கே செலுத்த முடியும். இருப்பு மெய்மையாய்வு குழுவின் உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு மேலதிக நேரக்கொடுப்பனவொன்றல்லாததுடன், அந்த அத்தியாயத்தில் எந்தவொரு இடத்திலும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பாக குறிப்பிடப்படவில்லை. இங்கு 1985 இன் 07 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகார திருத்தச்சட்டத்தின் vii ஆம் பகுதியின் 45 iv இன் பிரகாரம் நிர்வாக சபைக்கு கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் இக்கொடுப்பனவு நிர்வாகக் குழுவொன்றான நிதிக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br><br>பல்கலைக்கழகத்தின் கணக்கு முறைமையில் 1995 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வரும் இணங்காத இருப்புக் கணக்கொன்று ஆகும். இதனைத் தீர்வு செய்வதற்காக இருப்பு முகாமைத்துவ பிரிவு நிறுவப்பட்டு அறிக்கையிடல், களஞ்சியப்படுத்தல் என்பனவற்றைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் எமது அவதானிப்புக்களின் பிரகாரம் இருப்பு மெய்மையாய்வில் அதிகமான பலவீனங்கள் காணப்பட்டமை கண்டறியப்பட்டது. பல்கலைக்கழகத்திற்காக பொறுப்புடன் நிறைவேற்றக்கூடிய உத்தியோகத்தர்களுக்கு மேலதிக கடமையொன்றாக கையளித்து அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊக்குவிப்பு படியொன்று செலுத்த தீர்மானித்திருந்தது. அத்தீர்மானம் சரியாக இருந்ததுடன், இருப்பு மெய்மையாய்வினை வெற்றிகரமாக நிறைவேற்ற பல்கலைக்கழகத்திற்கு இயலுமாக இருந்தது.<br><br>இதன் போது 1995 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வரும் இணங்காத இருப்புக் கணக்கின் மீதி ரூபா 13,168,099.00 ஆன இணங்காமைக்கான இந்த பௌதீக மெய்மையாய்வு மிகவும் முக்கியம் வாய்ந்ததொன்றாகும். இங்கு பல்கலைக்கழகத்தின் இருப்புக் கட்டுப்பாட்டில் காணப்பட்ட பல பலவீனங்கள் இந்த இருப்பு மெய்மையாய்வின் போது கண்டறிவதற்கு முடியுமாக இருந்தது. இங்கு விசேடமாக முன்னர் காணப்பட்ட இனங்காணப்படாத இருப்பு அதிகளவில் இனங்காண்பதற்கு மெய்மையாய்வு குழுவிற்கு முடியுமாக இருந்தது. அங்கு 2010 இன் மொத்த இருப்பு மீதியான ரூபா 63,136,289.20 தொகையும் 2011 வரையில் ரூபா 95,509,319.00 ஆகும்.<br><br>மேலும் அது 2012 ஆண்டில் ரூபா 99,341,023.00 ஆக இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் ரூபா 166,980,387.00 வரை அதிகரித்திருந்தது. பல்கலைக்ழகத்தின் இருப்பு தொடர்பாக பல சிக்கல்கள் தீர்க்கப்பட்டு இனங்காணப்படாத பல இருப்புக்கள் இந்த இருப்பு மெய்மையாய்வு மூலம் இனங்காணப்பட்டதாகவும் அதன் மூலம் பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமை முடியுமான வரை சரிசெய்யப்பட்டதாகவும், இருப்பு மெய்மையாய்விற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்திற்கு ஆகக்கூடிய பொருளாதார நலன்கள் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்துள்ளதாக தெரிவித்துக்கொள்கின்றேன்.<br><br>எவ்வாறாயினும் தற்போது இக்கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது. |
| (உ) | 2013 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து இதுவரை புதிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்றது. அதே போல் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள் 2013 ஆம் ஆண்டு வரை நடாத்தப்பட்டன. ஆதலால் புதிய கணனிகள் அப்போது பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமாக இருந்தன. அது மாத்திரமல்லாது இக்கணனிகள் புதிய தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதால் பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கு அவர்களுக்கு நாளாந்தம் ஆய்வுகூட வசதிகள் வழங்கும் போது இக்கணனிகளை பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. ஆதலால் இக்கணனிகளை நல்ல |

| | |
|---|---|
| | வகையில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. |
| | CW/CON/2008/791 | அஜித் கன்ஸ்ரக்ஷன் | | நியமிக்கப்பட்ட படி அலுமினியம் பொருத்துதல் தொடர்பாக தரச்சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் மற்றும் குறித்த தரத்தின் பிரகாரம் அளவீட்டுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட வித்துரைகளுக்கு இணங்காமையால் உள்ளகக் கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை சீராக்காமையால் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டது. |

| | |
|---|---|
| (ஐ) | ராமநாதன் மண்டபத்திற்கு பூச்சு பூசுதல்<br><br>இந்த ஒப்பந்த செயற்பாடு ஆகக்குறைந்த விலை விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கே.எச்.பீ.என்டர்பிரய்சஸ் நிறுவனத்தினால் இணை செயற்திட்டம் சமர்ப்பிக்காமை (Similar Projects) வருடாந்த மொத்த விற்பனை புரள்வு சமர்ப்பிக்காமை, (Annual Turn Over) நிதித் தகவல்கள் சமர்ப்பிக்காமை போன்ற காரணங்களினால் நிராகரிக்கப்பட்டது. ஐயவினாவின் மூலம் குறைந்த விலையைச் சமர்ப்பித்திருந்த ஒப்பந்த நிறுவனம் நிராகரிக்கப்பட்டமைக்காக காரணம் காட்டப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மதிப்பீட்டுக்குழு அதற்கான காரரணத்தை தெரிவித்துள்ளதாக தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (ஒ) | இது தொடர்பாக பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டு பரிந்துரை பெறப்பட்டு 410 ஆவது நிர்வாக சபையின் 410.3.1.8 மூலம் மேற்படி ஒப்பந்தச் செயற்பாடு தொடர்பாக பல்கலைக்கழகத்திற்கு எதுவித நட்டமொன்றும் ஏற்படவில்லை எனவும் அவ்வாறான சம்பவமொன்று மீண்டும் இடம்பெறாதிருப்பதற்கு பொருத்தமான நடைமுறையொன்றை தயாரிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த நிர்வாக சபைத் தீர்மானத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலொன்றாக சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஓ) | மஹஇலுப்பள்ளம உப பல்கலைக்கழகத்தின் புணரமைப்பு செயற்பாடு 2005.04.10 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டது. எனினும் இச்செயற்பாடு குறித்த மேலதிக வேலைக்காக கொடுப்பனவு அங்கீகரிக்காமை அடிப்படையில் இறுதிப்பட்டியலுக்காக கொடுப்பனவு செய்யப்படவில்லையென்பதை தயவுடன் தெரிவிப்பதுடன், |

| | |
|---|---|
| | அதன் அடிப்படையில் இச்செயற்பாடு முடிவடையவில்லையென்பதை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இச்செயற்பாடு முறையாக நிறைவுபெற்றுள்ளது. |
| (ஔ) | மார்ஸ் மண்டபத்தின் மலசலகூடத் தொகுதியை திருத்தியமைத்தல் வேலைகள் 2013.10.10 ஆந் திகதி செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டது. எனவே அதன் பிரகாரம் உரிய காலத்தில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யாமையால் ஆகக்கூடிய தண்டப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (க) | அச்செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை பின்வருமாறு, |

| | செயற்பாடுகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 01 | மார்ஸ் மண்டபத்தின் குளியலறைத் தொகுதியைப் புதுப்பித்தல் CW/CON/2011/908 | வேலைப் பொறியியலாளரின் பரிந்துரை மற்றும் செயற்பாடு பூர்த்தி செய்ததன் அடிப்படையில் ஆகக்கூடிய தண்டப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதிப் பட்டியல் செலுத்தப்பட்டது. |
| 02 | விலங்கு விஞ்ஞானப் பிரிவின் சீமேந்து தாங்கி நிர்மாணம் CW/CON/2012/945 | வேலைப் பொறியியலாளரின் பரிந்துரை மற்றும் செயற்பாடு பூர்த்தி செய்ததன் அடிப்படையில் ஆகக்கூடிய தண்டப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதிப் பட்டியல் செலுத்தப்பட்டது. |
| 03 | மருத்துவ பீடத்தின் விரிவுரை மண்டபங்களை நவீனமயப்படுத்தல். CW/CON/2012/940 | செயற்பாடு பூர்த்தி செய்தல் மற்றும் வேலைப் பொறியியலாளரின் பரிந்துரை அடிப்படையில் இறுதிப் பட்டியல் செலுத்தப்பட்டதுடன், ஒப்பந்தகாலத்தை நீடிப்பதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்தது. |
| 04 | அக்பர் மண்டபத்திற்கு பின்புறமாக வேலி நிர்மாணம். CW/CON/2013/957 | செயற்பாடு பூர்த்தி செய்தல் மற்றும் வேலைப் பொறியியலாளரின் பரிந்துரை அடிப்படையில் இறுதிப் பட்டியல் செலுத்தப்பட்டதுடன், ஒப்பந்தகாலத்தை நீடிப்பதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்தது. |
| 05 | செயற்பாடு பூர்த்தி செய்தல் மற்றும் வேலைப் பொறியியலாளரின் பரிந்துரை அடிப்படையில் இறுதிப் பட்டியல் செலுத்தப்பட்டதுடன், ஒப்பந்தகாலத்தை நீடிப்பதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்தது. | செயற்பாடு பூர்த்தி செய்தல் மற்றும் வேலைப் பொறியியலாளரின் பரிந்துரை அடிப்படையில் இறுதிப் பட்டியல் செலுத்தப்பட்டதுடன், ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்தது. |

| | |
|---|---|
| (கா) | இச் செயற்பாட்டிற்கு பல்கலைக்கழகத்தின் மதிப்பீடு ரூபா 1,752,750.00 ஆகும். ஐயவினாவில் குறிப்பிட்ட படி ரூபா 959,400 இற்கு இந்த ஒப்பந்தம் வழங்கப்படவில்லை. ரூபா 1,476,000.00 தொகைக்கே வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் இரண்டிற்கிடையே ரூபா 276,750.00 தொகை வேறுபாடாக இருந்தது. அது 15.78 % வீதமாக |

| | |
|---|---|
| | இருந்ததுடன், ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட ரூபா 793,350 தொகையான வேறுபாடு இல்லையென தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (கி) | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.9.2 இன் பிரகாரம் கணதி ரீதியான பிழை சரியாக கணிப்பிடப்பட்டு கேள்வி வழங்கப்பட வேண்டியிருப்பதால் அதன் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் பல்கலைக்கழகம் எடுத்துள்ள செயற்பாடு சரியானதாகும். |
| (கீ) | சிவில் பொறியியல் பிரிவின் வேலைத்தளத்திற்கு காற்றுச்சீராக்கி இயந்திரம் வழங்கப்பட்டு பொருத்துவதற்குரிய 2012.12.04 ஆம் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு முதலில் கோரப்பட்ட காற்றுச்சீராக்கி இயலளவு குறித்த வளவிற்காக போதியதாக இருக்கவில்லை எனத் தெரிவித்திருந்தது. அத்தோடு சில தொழில்நுட்ப குறைபாடுகள் இருப்பதாகவும் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பொறியல் பீடத்தின் பீடாதிபதியின் ஆலோசனையுடன் விதந்துரைகள் மீண்டும் தயாரிக்கப்பட்டு வேலைப் பொறியியலாளருக்கு வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட விதந்துரைகளின் கீழ் விலை விபரங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரே ஒப்பந்தக்காரரான பொஸ்டெயா நிறுவனத்திற்கு 129 ஆவது கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்துடன் இவ் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. |
| (கு) | கட்டிடத் திணைக்களத்தின் திட்டத்தின் பிரகாரம் லம்நெக்ஸ் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்ட மின் முறைமையை திருத்துதல் அல்லது நவீனமயப்படுத்தல் என்பவற்றிற்கு தேவையான உயர் தொழில்நுட்பம் வேலைத்துறையின் மின்சாரப் பிரிவில் காணப்படுகின்றன.<br><br>உள்ளக விளையாட்டுக்கள் தொடர்பான விசேட நிபுணரின் பரிந்துரையின் பிரகாரம் வெவ்வேறு விளையாட்டுகளுக்கு வெளிச்சம் வேறுபடுவதால் அவ்வேறு மட்டத்தில் (Lux Level) பேணிச் செல்லும் வகையில் மின் விளக்குகளின் இயலளவு மாற்றப்பட்டிருந்தன.<br><br>இம்மின்சார முறைமைக்குரிய அனைத்து உபபாகங்கள் இலங்கை சந்தையில் கொள்வனவு செய்ய முடியும். மின்சார முறைமையில் ஐயவினாவில் சுட்டிக்காட்டிய பிழைகள் காணப்படவில்லை. ஆட்களினதும் உபகரணங்களினதும் பாதுகாப்பு கருதி தரமான மின்முறைமையொன்று இடி முழக்கம் போன்ற சந்தர்ப்பங்களில் ஏற்படும் கசிவு மின் இயலளவு காரணமாக துண்டிக்கப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மீண்டும் எரிந்ததன் பின்னர் கூடிய நிலைமைக்கு வருவதற்கு சிறிது நேரம் எடுக்கும்.<br><br>இவ் ஒப்பந்தத்திற்குரிய கேள்வி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஓராண்டு உத்தரவாத காலத்தில் செயலற்ற பழுதடைந்த உதிரிப்பாகங்கள், மின்விளக்குகள் என்பன ஒப்பந்தக் கம்பனி மூலம் மீண்டும் பொருத்தப்பட்டது. |
| (கூ) | இச்செயற்பாடு 2008.09.03 ஆந் திகதி அமைச்சரவை கூட்டத்தின் போது ரூபா 328 மில்லியன் மொத்த கிரயத்தில் 2009 ஆம் ஆண்டில் செயற்படுத்தும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒப்பந்தச் செயற்பாடு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் விலை அளவீட்டுப்பத்திரம் சமர்ப்பித்தன் பின்னர் அது நிர்மாண சேவைகள் அமைச்சின் நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் |

| | |
|---|---|
| | அங்கீகாரத்தின் பின்னர் எனவும் இச்செயற்திட்டம் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட வேண்டிய திட்டமொன்றெனவும் உயர்கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் படி சமோச்சா வரைபட தயாரிக்கப்படாமல் செயற்திட்டத்தின் திட்டமிடல் நடவடிக்கைகள் மற்றும் விலை அளவீட்டுப்பத்திரம் என்பவற்றை தயாரிக்க முடியாததால் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த சமோச்ச கோட்டு வரைபடம் இப்பல்கலைக்கழகத்தன் சிரேஷ்ட பதிவாளர் நிர்வாகத்தின் கீழ் பாதுகாப்பாக உள்ளது. அந்த சமோச்ச கோட்டு வரைபடத்தை வரைவதற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,725,000.00 தொகை கோரப்பட்டிருந்தது. அதன் படி இச்செயற்திட்டம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையாலும் உபவேந்தரால் இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகுயோருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது இவ்வரைபடத்தை தயாரித்தமைக்காக ரூபா 1,500,000.00 தொகை செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் செலவின மதிப்பீட்டை தீர்த்துக்கொள்வதற்கு போதியளவு தொகையொன்று அதாவது ரூபா 500,000.00 தொகை மாத்திரம் கொடுப்பனவு செய்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் அமைச்சரவை அங்கீகரித்த இச்செயற்திட்டம் பல்கலைக்கழகத்தின் பிரதான திட்டத்திற்கும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், தற்போது செயற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள மாநாட்டு மண்டபத்தின் நிர்மாண வேலைகளைத் திட்டமிடுவதற்காக இச் சமோச்சா கோட்டு வரைபடம் அதிகளவில் பயனுள்ளதாக அமையும் என தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். |
| **4.9** | **தாமதமான செயற்திட்டங்கள்** |

இந்த ஐயவினாவின் மூலம் காமினி இஞ்சினியரிங் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள 04 செயற்திட்டங்கள் தொடர்பாக விசாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் தற்போதைய நிலைமை பின்வருமாறு காணப்படுகின்றன. அத்தோடு பின்வரும் செயற்திட்டங்களின் அசையும் முற்பணங்கள் அனைத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பல்மருத்துவ விஞ்ஞான பீடத்தின் விரிவுரை மண்டப நிர்மாணம்<br>CW/CON/2013/1019 | இச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இறுதிப் பட்டியல் செலுத்தப்பட்டது. |
| பொறியியல் பீடத்தின் அதிகளவு இயலளவிலான ஆய்வுகூடத்தை நவீனமயப்படுத்தல்<br>CW/CON/2013/1016 | இச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இறுதிப் பட்டியல் இதுவரை செலுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் அனைத்து அசையும் முற்பணங்கள் அறவிடப்பட்டுள்ளது. |
| மிருக மருத்துவ பீடத்தின் நோயியல் பிரிவை நவீனமயப்பபடுத்தல் CW/CON/2013/997 | இச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு வருவதுடன், அனைத்து அசையும் முற்பணங்கள் அறவிடப்பட்டுள்ளது. |
| மிருக மருத்துவ பீடத்தின் மூலக்கூற்று இரசாயனப் பிரிவை நவீனமயப்பபடுத்தல் CW/CON/2013/998 | இச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு வருவதுடன், அனைத்து அசையும் முற்பணங்கள் அறவிடப்பட்டுள்ளது. |

**4.10 பதவியணியினர் நிர்வாகம்**

(அ) இணையத்தள மற்றும் தொடர்பாடல் சேவை அலகின் பல்கலைக்கழகத்தினுள் மிகவும் முக்கியமானதும் பெறுமதியானதும் யெற்பாடொன்றை நிறைவேற்றும் அலககாக இருப்பதால் அந்த அலகு மீளமைக்கப்பட்டு முறைப்படி ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு இணங்க:-

- இணையத்தள மற்றும் தொடர்பாடல் சேவை அலகினை மீளமைப்பதற்காக 434 ஆம் நிர்வாக சபையில் மெமோ பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக நிர்வாக சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- அத்தீர்மானத்தின் பிரகாரம் மேற்படி மேற்குறித்த விண்ணப்பம் NAE-E/17, 2015.01.17 ஆந் திகதிய கடிதத்தினால் அங்கீகாரத்திற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்குப் பதிலாக எதிர்காலத்தில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ சேவைகள் திணைக்கள வெற்றிட மீளாய்வு குழுவிற்கு (Cadre Review Committee) அறிவிக்குமாறு 12.02.2014 ஆம் ஆண்டின் UGC/HR/09/01/151 ஆம் இலக்க கடிதத்தில்

| | |
|---|---|
| | குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்படி நடவடிக்கைகளின் ஊடாக இணையத்தள மற்றும் தொடர்பாடல் சேவை அலகினை ஸ்தாபிப்பதற்கும் பதவியணியை ஆட்சேர்ப்பதற்கும் சட்டரீதியான அங்கீகாரம் கிடைப்பதுடன், மேற்படி கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மும்மொழிவுகளின் பிரகாரம் ஆறு பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்திற்கு கொண்டு வரும் தேவைப்பாட்டின் அடிப்படையில் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்காக 100 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரினால் UGC/F/CE /2011 ஆம் இலக்க 2011-01-10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு 2011 யூன் 17 ஆந் திகதி சமர்ப்பித்த செயற்திட்ட அறிக்கை 2011 யூன் 21 ஆந் திகதி UGC/F/CE/TSUIL/2011 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்கும் அதன் பதவியணியினர் உள்ளடக்கம் மற்றும் முகாமைத்துவ சபைக்கான அங்கீகாரம் 2012 செப்தம்பர் 22 ஆந் திகதி நடைபெற்ற 412 ஆவது நிர்வாகச் சபை கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டதாக தெரிவித்துக் கொள்வதுடன், அதன் பிரகாரம் 2012 ஏப்ரல் மாதத்திலிருந்து சர்வதேச ஆராய்ச்சி நிலையம் மற்றும் அதன் பணிப்பாளர் (ஒப்பந்த அடிப்படையில்) செயற்படுவதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அச்செயற்திட்ட அறிக்கையில் ஆரம்ப ஆண்டில் மேற்கொள்வதாக குறிப்பிட்டிருந்த குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களுக்கு இடையே உள்ளக ஒழுக்காற்று ஆராய்ச்சி நிலையம் “Interdisciplinary Research Centre” ஒன்றை தாபிப்பது பிரதான முன்மொழிவாக இருந்தது. 2011 யூன் 21 ஆந் திகதிய UGC/F/CE/TSUIL/2011 ஆம் இலக்க கடிதத்தினால் மொத்த முன்மொழிவும் அங்கீரிக்கப்பட்டதன் ஊடாக ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்காக முறையான அங்கீகாரம் கிடைத்துள்ளது. செயற்திட்ட முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டதால் ஆய்வு நிலையத்தை தாபிப்பதற்கான முறையான அங்கீகாரம் கிடைத்துள்ளது. செயற்திட்ட திட்டம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதியத்தினால் நிர்வகிக்கப்படும் சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தின் அனைத்து நியமனங்கள் நிதிக்குழுவினதும் நிர்வாக சபையினதும் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டது. மேலும் திறைசேரி மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2014 மார்ச் 10 ஆந் திகதி UP/CMD/INRC/GENERAL/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரின் ஊடாக உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மும்மொழிவுகளின் பிரகாரம் ஆறு பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்திற்கு கொண்டு வரும் தேவைப்பாட்டின் அடிப்படையில் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்காக 100 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரினால் UGC/F/CE /2011 மற்றும் 2011-01-10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு 2011 யூன் 17 ஆந் திகதி சமர்ப்பித்த செயற்திட்ட அறிக்கை 2011 யூன் 21 ஆந் திகதி UGC/F/CE/TSUIL/2011 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்கும் அதன் பதவியணியினர் உள்ளடக்கம் மற்றும் முகாமைத்துவ சபைக்கான அங்கீகாரம் 2012 செப்தம்பர் 22 ஆந் திகதி நடைபெற்ற 412 ஆவது நிர்வாகச் சபை கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டதாக தெரிவித்துக் கொள்வதுடன், அதன் பிரகாரம் 2012 ஏப்ரல் மாதத்திலிருந்து சர்வதேச ஆராய்ச்சி நிலையம் மற்றும் அதன் பணிப்பாளர் (ஒப்பந்த அடிப்படையில்) செயற்படுவதாக |

| | |
|---|---|
| | தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அச்செயற்திட்ட அறிக்கையில் ஆரம்ப ஆண்டில் மேற்கொள்வதாக குறிப்பிட்டிருந்த குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களுக்கு இடையே உள்ளக ஒழுக்காற்று ஆராய்ச்சி நிலையம் "Interdisciplinary Research Centre" ஒன்றை தாபிப்பது பிரதான முன்மொழிவாக இருந்தது. 2011 யூன் 21 ஆந் திகதிய UGC/F/CE/TSUIL/2011 ஆம் இலக்க கடிதத்தினால் மொத்த முன்மொழிவும் அங்கீரிக்கப்பட்டதன் ஊடாக ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்காக முறையான அங்கீகாரம் கிடைத்துள்ளது. செயற்திட்ட முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டதால் ஆய்வு நிலையத்தை தாபிப்பதற்கான முறையான அங்கீகாரம் கிடைத்துள்ளது. செயற்திட்ட திட்டம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதியத்தினால் நிர்வகிக்கப்படும் சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தின் அனைத்து நியமனங்கள் நிதிக்குழுவினதும் நிர்வாக சபையினதும் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டது. மேலும் திறைசேரி மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2014 மார்ச் 10 ஆந் திகதி UP/CMD/INRC/GENERAL/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரின் ஊடாக உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | மோட்டார் வாகன திருத்தப் பிரிவின் வேலை அத்தியட்சகரால் கடமைகள் மேற்கொள்ளப்படுகின்ற நாட்களில் குறித்த கடமைகளுக்குரிய ஊழியர்களுக்கு கையளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வேலைக்கும் வேலைத்தாள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், உரிய வேலைத்தாளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தொழிலாளர்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பிரிவில் உள்ள ஊழியர் பற்றாக்குறையினால் உப வேந்தரின் அங்கீகாரத்துடன் இப்பிரிவில் சேவை புரியும் விரிவுரையாளர் ஒருவர் மற்றும் மின் தொழில்நுட்பவியலாளர் (தமது கடமைகளுக்கு மேலதிகமாக) தற்காலிக வேலை பரிசோதகர் மற்றும் களஞ்சிய காப்பாளருக்குரிய கடமைகளிலும் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.<br><br>இதன் பிரகாரம் இப் பிரிவின் அனைத்து ஊழியர்களுக்காக கடமைப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொறியியல் பீடத்தின் தொழிற்சாலையின் பொறியியலாளரினால் தொழிற்சாலையில் நாளாந்தம் செய்யப்படும் ஒவ்வொரு வேலைக்கும் வேலைத்தாள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வேலை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வேறாக இணைக்கப்பட்டுள்ளனர். தொழில்நுட்ப உத்தியோகத்தரால் அக்கடமைகளுக்கு பொருத்தமான ஊழியர்கள் இணைக்கப்பட்டு அவர்களால் கடமைகள் நிறைவேற்றப்படும்.<br><br>இதற்கு மேலதிகமாக தேவையான காலப்பகுதியில் இயந்திரப் பராமரிப்பு போன்ற நடவடிக்கைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் வேலை மேற்பார்வையின் கீழ் தகைமையான ஊழியர்களை இணைத்து நிறைவேற்றுவதும் பொறியிய நிலையான பொருட்கள் பதிவேடுகளைப் பராமரித்தல், சிறு காசேட்டினைப் நிர்வகித்தல் என்பனவும் வெவ்வேறாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.<br><br>தொழிற்சாலையின் கடமைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவு தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரமும் சுற்றறிக்கைகளின் பிரகாரமும் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (உ) | இந்த ஊழியர்கள் நிரந்தர சேவையாளர்கள் அல்ல. பணிப்பொறுப்பு அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றது. ஆதலால் நிதிப் பிரமாணம் 71 பிரிவு இதற்கு தாக்கமளிக்காது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஏற்படுத்தப்படாததுடன், பணிப்பொறுப்பு அடிப்படையில் மாத்திரம் சேர்க்கப்பட்டு சம்பளம் செலுத்தப்படுவதே இங்கு இடம்பெற்றுள்ளது. எவ்வாறாயினும் தற்போது பணிப்பொறுப்பு அடிப்படையில் உத்தியோகத்தர்கள் மாத்திரம் |

| | |
|---|---|
| | சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். |
| (ஊ) | பேராதனைப் பல்கலைக்கழகம் கடந்த காலத்தில் மிகவும் விரைவான முன்னேற்றமொன்றை அடைந்து வருகின்றது. புதிய பீடங்கள், துறைகள் மற்றும் நிறுவனங்கள் கருத்திற் கொள்ளக்கூடியளவு அதிகரித்துள்ளன. அதன் பிரகாரம் மாணவர்களின் எண்ணிக்கை, விரிவுரையாளர்களின் எண்ணிக்கை, கல்விசாரா ஊழியர்கள் உட்பட கட்டிட தொகுதிகளும் புதிதாக இணைந்துள்ளன. இந்த அதிகரிப்பிற்கு ஒப்பாக பாதுகாப்பு செலவினம் உட்பட ஏனைய மீண்டெழும் செலவினங்களும் கிரமமாக அதிகரித்தன. கணக்காய்வு ஐயவினாவில் இந்த மேம்பாட்டு நிலைமை கருத்திற்கொள்ளப்படாமல் 2010 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகம் இவ்வாறு காணப்பட்டதாக கருதி கணிப்பீடு செய்தமையால் எதிர்பார்த்த அதிகரித்த இலக்கிற்கான சீராக்கங்கள் கருத்திற்கொள்ளப்படாமல் இருந்தமையால் இவ்வாறு கணிப்பீடு செய்தல் சரியானதல்ல.<br><br>**2010 ஆம் ஆண்டில் அதிகரித்த பீடங்கள், துறைகள் பட்டப்பின் படிப்பு நிறுவனங்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**<br><br><table><tr><th>பிரிவு</th><th>புதிதாக இணைக்கப்பட்ட பாதுகாப்பு காப்பாளர்கள் எண்ணிக்கை</th></tr><tr><td>ஒன்றிணைந்த விஞ்ஞான பீடம்</td><td>06</td></tr><tr><td>சட்டதுறை பீடம்</td><td>02</td></tr><tr><td>முகாமைத்துவத் துறை பீடம்</td><td>02</td></tr><tr><td>மிருக போதனா வைத்தியசாலை</td><td>04</td></tr><tr><td>கலை பட்டப்பின் நிறுவகம்</td><td>02</td></tr><tr><td>வேலைத்துறை அலுவலக வளவு</td><td>02</td></tr><tr><td>மொத்தம்</td><td>**18**</td></tr></table><br>பாதுகாப்புத் துறையின் கடமை தடவைகள் நாளொன்றுக்கு 24 மணித்தியால சேவைக் காலமாகும். இது வழமையாக 08 மணித்தியாலத்திலான 03 சேவை தடவைகளாக மேவுகை செய்யப்படுகின்றன. அதன் பிரகாரம் பாதுகாப்பு துறையினால் இதுவரை சேவை வழங்கப்படுகின்ற 28 சேவை இடங்களுக்காக பின்வருமாறு பாதுகாப்பு காப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.<br><br>28 x 3 = 84<br><br>5% லீவு = 04<br><br>எனினும் தற்போது சேவையில் 60 பாதுகாப்பு காப்பாளர்கள் இருப்பதுடன், நாளாந்த சேவைகளை |

தொடர்ச்சியாக பேணிச்செல்வதற்காக 28 பாதுகாப்பு காப்பாளர்கள் பற்றாக்குறையாக காணப்படுகின்றனர்.

**இப்பற்றாக்குறை மாதமொன்றுக்கு வேலை செய்யும் மணித்தியாலங்களில் பின்வருமாறு காட்டலாம்**

28 x 192=5,376

இது 5,376 மணித்தியாலப் பற்றாக்குறையை தீர்ப்பதற்காக பாதுகாப்பு காப்பாளர்களை மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்துவதற்கு கட்டாயமாக மேற்கொள்ள வேண்டியதுடன், அவ்வாறில்லாவிட்டால் பில்லியன் கணக்கில் பெறுமதியான பல்கலைக்கழகத்தின் ஆதனங்களின் பாதுகாப்பற்ற நிலைமைக்கு உட்படுவதுடன், பல்கலைக்கத்தில் நீதி மற்றும் சமாதானம் என்பவற்றை பேணுவதற்கும் இயல்பான கற்றல் சூழலொன்று பேண முடியாத நிலையொன்று காணப்படும்.

**பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை பின்வருமாறு,**

| | |
|---|---|
| பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் | 01 |
| பிரதி பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் | 01 |
| பாதுகாப்பு பரிசோதகர் | 11 |
| பாதுகாப்பு காப்பாளர் | 97 |
| | 110 |
| தொழிலாளர் | 01 |
| | 111 |
| மஹா இலுப்பள்ளம பண்ணை | 07 |
| | **118** |

**தற்போது சேவையில் ஈடுபடுத்தியுள்ள முறை**

| | |
|---|---|
| பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் | 01 |
| பாதுகாப்பு பரிசோதகர் | 08 |
| பாதுகாப்பு காப்பாளர் | 60 |
| | 69 |
| இலங்கை ரக்னா பாதுகாப்பு கம்பனி | 117 |
| | **186** |

**இதன் படி அங்கீகரித்த ல்லையை மிகத்து சேவையில் ஈடுபடுத்தியுள்ள ஆளணி**

| | |
|---|---|
| | 118<br>**68**<br>இந்த அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 1970 இல் அங்கீகாரம் பெறப்பட்ட எண்ணிக்கையாக இருந்ததுடன், அக் காலப்பகுதியிலிருந்து இதுவரையிலும் பல்கலைக்கழகத்தின் 08 பீடங்கள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை 12,000 வரை அதிகரித்திருந்தது. விரிவுரையாளர் எண்ணிக்கை கல்விசாராத பதவியணியினர் உட்பட மொத்த பல்கலைக்கழக சமூகம் 20,000 ஐ அண்மித்திருந்தது. எவ்வாறாயினும் அந்த அதிகரிப்பிற்கு ஒப்பாக பாதுகாப்பு சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்திருக்கவில்லை. பாதுகாப்பு சேவை அத்திவசிய மற்றும் கட்டாய சேவையொன்றாக இருப்பதால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை மிகைத்து 68 பேர் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நேர்ந்திருந்தது. |
| (எ) | அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல். |
| **5** | **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்** |
| **5.1** | **கூட்டிணைந்த திட்டம்** |
| (அ) | 2015 ஆம் ஆண்டிலிருந்து குறித்த திகதிக்கு முன்னர் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு நிலையத்திற்காக வெவ்வேறு கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமல் இருப்பதுடன், தகவல் தொழிநுட்ப நிலையத்தினையும் ஒன்றிணைத்து பல்கலைக்கழகத்திற்கு முழுவதுமாக கூட்டிணைந்த திட்டமொன்றும் செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன. |
| 5௦2 | **செயல் நடவடிக்கைத் திட்டம்** |
| **(அ)** | கணக்காய்வு ஐயவினாவிற்கான காரணம் செயல்நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிக்கும் போது அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பரிந்துரைகளுக்கு இணங்க தயாரப்பதற்கு நேர்கின்றது. அதாவது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சகல செலவினங்களையும் 9 தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்ட போதும், செயல்நடவடிக்கைத் திட்டத்தை ஒப்பிடும் போது அச்செலவினங்களை வகைப்படுத்தல் தொடர்பாக கருத்திற் கொள்ளப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக உயர் திறன் பரிசோதனையொன்று கோரப்பட்டு பரிசோதனைக் குழுக்களை தயார்படுத்தல் மற்றும் கூட்டிணைப்புக்காக ரூபா 500,000.00 செலவிடப்பட்டதாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அச்செலவினம் நிதிக்கூற்றுக்களில் நேரடியாக காண்பிக்கப்படாத போதிலும், அச்செலவினம் சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தினுள் செலவினமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பல்கலைக்கழகத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு அடிப்படையாக கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) | கூட்டிணைந்த திட்டத்தின் கீழ் 2013 – 2017 ஆகிய 4 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 2013 ஆம் ஆண்டில் எதிர்பார்த்த கிரயம் பாதிடப்பட்ட பெறுமதி மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் படி இவ்வாறு 05 வருடங்களில் மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் 2013 ஆம் ஆண்டில் மாத்திரம் செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் சரியாக இருக்கவில்லை. |

| | |
|---|---|
| | |
| 5.3 | **நிர்வாக சபைக் கூட்டங்கள்** |
| | PED / 12 சுற்றறிக்கையின் 4.2.2 பிரகாரம் பல்கலைக்கழகத்தின் மூலம் நிர்வாக சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அனைத்து பதிவேடுகளையும் 2014 ஆம் ஆண்டில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துக்கொள்கின்றேன்.<br>அவ்வாறே கடன்கொடுத்தோர் மற்றும் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு, மற்றும் பழைய, பயன்படுத்தப்படாத மற்றும் மெதுவாக அசையும் இருப்புக்கள் போன்ற பதிவேடுகள் PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம், குறிப்பிடாமையால் நிர்வாக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 5.4 | **உள்ளகக் கணக்காய்வு** |
| | தகவல் தொழிநுட்ப நிலையம் பல்கலைக்கழகத்தினுள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இன்னுமொரு நிலையமொன்றாக இருப்பதுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு திட்டத்தில் இந்நிலையம் உட்பட பல்கலைக்கழகத்தின் 74 கற்கைத் துறைகளுடன் கூடிய 8 பீடங்கள், 51 நிதிப் பிரிவுகள், 2 பட்டப்பின் படிப்பு நிலையங்கள் மற்றும் தொலைக்கல்வி மற்றும் தொடர்கல்வி கேந்திரம் உட்பட 17 நிலையங்களுடன் கூடிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் இந்தப் பிரிவுகளில் 90% அளவினை மேவுகை செய்யக்கூடிய வகையில் வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அன்றாட கடமையாக (Routine duties) பணிக்கொடை கொடுப்பனவு முன் கணக்காய்வு, சேமலாப நிதியத்தை விடுவித்தல் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு, ஒப்பந்த பட்டியல் முன் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் அரசின் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக உரிய பிரிவுகளிலிருந்து கிடைக்கப்பெறும் பதில்களை பரீட்சித்தல் மற்றும் தயாரித்தல் கூட்டிணைக்கப்படுவதுடன், உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பல்கலைக்கழகத்தின் நிர்வாக அதிகாரியால் காலத்திற்கு காலம் நிர்ணயிக்கப்படும் வேறு கடமைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>2007 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பிரிவின் சேவையிலுள்ளவர்களின் எண்ணிக்கை தொடர்பாக ஒப்பீட்டு அறிக்கையொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அக்கால எல்லை மேவுகை செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட காலாண்டு மற்றம் அரையாண்டு செயன்முன்னேற்ற அறிக்கை அனைத்தும் குறித்த கால எல்லையின் இறுதியின் போது பல்கலைக்கழகத்தின் கணக்காய்வு குழு மூலம் மீளாய்வு செய்ததன் பின்னர் பரிந்துரைக்கப்பட்டது.<br><br>2008 திசெம்பர், 2009 சனவரி மற்றும் 2010 திசெம்பர் ஆகிய மாதங்களில் (3 சந்தர்ப்பங்களில்) தகவல் தொழிநுட்ப நிலையம் தொடர்பாக பின்வருமாறு துறைகளில் மேவுகை செய்யப்படக்கூடிய வகையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.<br><br>i. வங்கிக் கணக்கிணக்க கூற்றினைப் பரீட்சித்தல் மற்றும் வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்படும் பணத்தை முதலீடு செய்யக்கூடிய இயலுமை தொடர்பாக பரீட்சித்தல்.<br>ii. பொருட்கள் சேவைகள் கொள்வனவு தொடர்பான உள்ளகக் கணக்காய்வு.<br>iii. பொருட் பதிவேடு தொடர்பாக பரீட்சித்தல்.<br>iv. நுகர்வுப்பொருட்களை பௌதீக ரீதியாகப் பரீட்சித்தல்.<br>v. சில்லறைக் காசு பௌதீக ரீதியாகப் பரீட்சித்தல் சில்லறைக் காசு உறுதிச்சீட்டை பரீட்சித்தல். |

vi. வருமானம் மற்றும் செலவினங்களை கணக்கீடு செய்தல் தொடர்பான உள்ளக் கட்டுப்பாடு முறைமை பரிசோதித்தல்.

மேற்படி ii ஆம் இலக்கம் முதல் vi வரையான உருப்படிகள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு பரிசோதனையொன்று மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட துறைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொண்டு 2010.03.24 ஆந் திகதிய IA/UP/OBS/2010/04 ஆம் இலக்கமுடைய "Possibility of Investing Excess Cash Idling in Bank Current Accounts" மற்றும் 2011.07.30 ஆம் திகதிய "IA/UP/CH6/2011/06" ஆம் இலக்க "Checking of Bank Reconciliation Statements" என்ற உள்ளக கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டது. மேலும் 2014.09.30 ஆம் திகதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை பரிசோதனை என்ற உள்ளகக் கணக்காய்வு அறிக்கை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

ஆதலால் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் தகவல் தொழிநுட்ப நிலையம் ஸ்தாபிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வுத் திகதியான 2014 சனவரி 08 ஆந் திகதி வரை அந்நிலையத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போதியளவு பங்களிப்பொன்று வழங்கப்பட்டுள்ளது.

**5.5 கொள்வனவுத் திட்டம்**

**(அ)** கொள்வனவுத் திட்டம் தயாரிக்கும் போது எதிர்வரும் ஆண்டில் செயற்படுத்தப்பட வேண்டிய அனைத்துச் செயற்திட்ட செயற்பாடுகள் குறித்த கொள்வனவுகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழக வருடாந்த மதிப்பீடு தயாரித்தலின் போது கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் செயற்திட்டங்கள் தெரிவுசெய்யப்படும். முழுமையான வருடாந்த மதிப்பீட்டிற்காக திறைசேரியிலிருந்து நிதி ஏற்பாடு வழங்கப்படாததால் தெரிவுசெய்யப்பட்ட செயற்திட்டங்களுக்காக மதிப்பீட்டை மீண்டும் ஒருமுறை அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டின் பிரகாரம் திருத்துவதற்கு நேர்ந்தது. அதன் காரணமாக இவ்வாறு கொள்வனவுத் திட்டம் மற்றம் மதிப்பீட்டிற்கிடையே வேறுபாடு காணப்படுகின்றது.

**(ஆ)** திட்டமிடப்பட்ட போக்குவரத்துச் செலவினம், கொள்வனவுத் திட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொண்ட சேவைகளின் கீழ் வாடகை மற்றும் கட்டணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. தொடர்பாடல் கட்டணங்கள் மற்றம் தபால் கட்டணங்கள் என்பன அத்தியவசியமான செலவினமாக இருப்பதால் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

**5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**(அ)** இந்நிதி ஒதுக்கீடு மற்றும் திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியத்திற்கிடையே போதியளவு வேறுபாடொன்று ஒவ்வொரு வருடமும் ஏற்படுவதுடன், பல்கலைக்கழக நடவடிக்கைகள் உள்ளவாறான நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் பாதீடு சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துவது சிரமமான விடயமொன்றாக இருப்பதுடன், எப்பொழுதும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**ஆ)** கீழே காட்டப்பட்டுள்ளபடி வருடாந்தம் பல்கலைக்கழகத்தின் ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு அடிப்படையில் பாதிடப்பட்ட மற்றும் உள்வாறானவற்றிற்கிடையே கிரய வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

| விடயம் | 2013 | | |
|---|---|---|---|
| | பாதிடப்பட்ட செலவினம் | உள்ளவாறான செலவினம் | பாதிடப்பட்டதை மிகைத்து செலவிடப்பட்ட செலவினம் |

| | | | |
|---|---|---|---|
| கல்விசார் சேமலாபம் | 86,788,500.00 | 111,099,881.00 | 24,311,381.00 |
| கல்விசார் ஓய்வூதியச் சம்பளம் | 16,941,500.00 | 25,275,975.00 | 8,334,475.00 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 17,326,000.00 | 27,325,291.00 | 9,999,291.00 |
| கற்கைப் படிகள் | 214,870,000.00 | 294,998,039.00 | 80,128,039.00 |
| பணிக்கொடை | 9,267,000.00 | 50,104,501.00 | 40,837,501.00 |
| ஆராய்ச்சிப் படிகள் | 90,000,000.00 | 129,211,907.00 | 39,211,907.00 |
| **கல்விசாரா** | | | |
| மேலதிக நேர படிகள் | 75,427,000.00 | 85,671,237.00 | 10,244,237.00 |
| பணிக்கொடை கல்விசாரா | 37,654,000.00 | 45,094,268.00 | 7,440,268.00 |

(02) பாதீட்டுக் கட்டுப்பாடு

:அ) **கல்விசார் சேமலாபம், ஓய்வுதிய சம்பளம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை மற்றும் மேலதிக நேரம்**

2013 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு 2012 ஆம் ஆண்டின் மத்திய பகுதியில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அங்கு 2012 இன் பாதீட்டு மதிப்பீடு மற்றம் உள்ளவாறான செலவினம் அடிப்படையில் எதிர்வரும் ஆண்டிற்காக பாதீடு தயாரிக்கப்படும். மேற்படி மதிப்பீட்டுச் செலவினத்தை மிகைத்து உள்ளவாறான செலவினம் அதிகரித்தமைக்காக பின்வரும் விடயங்கள் நேரடியாக தாக்கமளித்திருந்தன.

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 03/2013, 03/2013(i), 03/2013(ii) ஆகிய சுற்றிக்கை மூலம் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்காக பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் அதனூடாக ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை அதிகரித்தல்.

II. வாழ்கைச் செலவுப் படி, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றை பணிக்கொடைக் கணிப்பீட்டிற்காக பயன்படுத்தல்.

III. வருடாந்த சம்பள ஏற்றங்கள் காணப்பட்ட பெறுமதியை விட கூடிய பெறுமதி மீளாய்வாண்டில் அதிகரித்தமை.

**ஆராய்ச்சிப் படிகள்**

2013 ஆம் ஆண்டில் ஆராய்ச்சிப் படிகள் உள்ளவாறான செலவினம் பாதிடப்பட்ட செலவினத்தை மிகைப்பதற்கு மேற்குறித்த காரணங்களுக்கு மேலாக 2013 ஆம் ஆண்டில் ஆராய்ச்சிப் படிகள் கோரப்பட்ட அளவு 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக அதிகரித்தமை நேரடியாக தாக்கம் செலுத்தியது.

**கற்கைப் படிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 1000 இன் படி 2013 ஆம் ஆண்டின் போது கல்விப் படிகள் அதிகளவில் அதிகரித்தமை கல்விப்படிகள் உள்ளவாறான செலவின மதிப்பீட்டை

மிகைத்து செல்வதற்கு காரணமாக இருந்தது.

**(ஆ) கல்விசார், கல்விசாரா விசேட படிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 998 இன் மூலம் பல்கலைக்கழக ஊழியர்களுக்காக ரூபா 2,500.00 ஆன விசேட படியொன்று 2013 நவம்பர் மாதம் முதல் கொடுப்பனவு செய்தமை இதற்காக தாக்கமளித்திருந்ததுடன், அதுவரையில் 2013 ஆம் ஆண்டின் பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தமையால் இப்படிகள் பாதீட்டில் உள்ளடக்கப்படவில்லை என தெரிவித்துக்கொள்கின்றேன்.

பல்கலைக்கழகத்தினால் தனது மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது காணப்படும் செலவின அளவு மாற்றம், எதிர்காலத் திட்டம் மற்றும் விலை முரண்கள் உட்பட பொதுத் திறைசேரியிலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் எமக்கு வழங்க முடியும் என்று முடிவெடுக்கப்படும் பணத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

இந்நிதி ஒதுக்கீடு மற்றும் பொதுத் திறைசேரியிலிருந்து வழங்கப்பட்ட தொகைக்கு இடையே போதிய அளவு வித்தியாசம் ஒவ்வொரு ஆண்டும் காணப்படுவதுடன், பல்கலைக்கழகம் உள்ளவாறான நிதி ஏற்பாட்டு அடிப்படையிலேயே செயற்படுகின்றது. இதனால் பாதீடு சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துவது சிரமமான விடயமொன்றாக இருப்பதுடன், செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையே எப்போதும் வேறுபாடுகள் அவதானிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டின் போது முரண்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(1) தொடர்பாடல் செலவினம்**

2013 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு LEARN நிறுவனம் மூலம் வழங்கப்படுகின்ற இணையத்தள இணைப்பிற்காக நுழையும் இயலளவு 1560Kbps முதல் 5000Kbps வரை அதிகரித்திருந்ததுடன், அதனால் அதற்காக செலவிடும் கட்டணத்தின் அளவிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 982,650/- அளவிலான மாதாந்த பட்டியல் ரூபா 2,710,640/- வரை அதிகரித்தது. (275% சதவீதம்) அவ்வாறே தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் இணையத்தள நுழைவு இயலளவு அதிகரிக்கப்பட்டதுடன், ரூபா 135,390/- ஆன மாதாந்த பட்டியல் ரூபா 355,420/- வரை அதிகரித்தது. (262% சதவீதம்)

2013 ஆம் ஆண்டில் கைவிரலடையாள இயந்திரங்களை செயற்படுத்துவதற்காக வேலைத்துறைக்கும் சுகாதார நிலையத்திற்கும் தொடம்கொல்ல பண்ணைக்கும் ADSL தொடர்புகள் வழங்கப்பட்டதுடன், அதற்கான பட்டியலையும் தீர்வு செய்ய வேண்டியிருந்தன.

ஒப்பந்த அடிப்படையில் மாணவர் விடுதியாக வழங்கப்பட்ட வீடு மற்றும் பல்கலைக்கழகத்துடனும் தொடர்பாடல் இணைப்புக்களை பேணிச்செல்வதற்காக புதிய தொடர்பாடல் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக மேலதிக பட்டியல் கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்டது.

2013 ஆம் ஆண்டின் போது ஒன்பது நிறைவேற்று உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றமையாலும் / புதிய நியமனம் பெற்றுக்கொண்டு பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்திருந்ததுடன், அந்த உத்தியோகத்தர்களுக்காக தொலைபேசிப் பட்டியலுக்கான கட்டணங்கள் செலுத்த வேண்டியேற்பட்டது.

2013 ஆம் ஆண்டின் போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வேலை ஆரம்பிக்கப்பட்ட கால்நடை மருத்துவ

வைத்தியசாலை, பூகோள விஞ்ஞான கல்விப் பிரிவு, அரசறிவியல்துறை விஞ்ஞான கற்கைப் பிரிவு என்பவற்றிற்காக தொலைத் தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டதுடன், அதற்காக கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்டது.

(2) **உபசரிப்புச் செலவினம்**

வெளிநாட்டு தூதுவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தமை 2013 ஆம் ஆண்டில் அதிகரித்தமை உபசரிப்புச் செலவினம் அதிகரிப்பதற்கான விசேட காரணமாக இருந்தது.

(3) **வாடகைக் கட்டணம்**

2013 ஆம் ஆண்டில் மருத்துவ, விவசாய மற்றம் ஒன்றிணைந்த சுகாதார பீடங்களுக்காக வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொண்டமை, மதிப்பிடப்பட்ட செலவினம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

:4* **வீத வரி மற்றும் வரிகள்**

வருமானத்திற்காக நிறுத்தி வைத்தல் வரிக்கொடுப்பனவு காரணமாக அதிகரித்திருந்தது.

(5) **அச்சீடு மற்றும் விளம்பர செலவினம்**

2014 ஆம் ஆண்டிற்காக கூடுதலாக 2569 மாணவர்கள் சேர்த்துக்கொள்வதற்காக வசதிகள் வழங்குதல் மற்றும் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புதல் போன்ற நடவடிக்கைகளுக்காக 2013 ஆம் ஆண்டில் விளம்பர செலவினம் மற்றும் மாணவர் கைநூல் உட்பட மாணவர் நடவடிக்கைகள் தொடர்பாக அச்சீட்டு செலவினம் அதிகரித்தமையும் பல்கலைக்கழகத்தின் வெளியீடுகளின் நிலைமையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை பாதிப்புக்களை கூடுதலாக அச்சிடுவதற்கு நேர்ந்தமை காரணமாக மதிப்பிடப்பட்ட செலவினம் மிகைத்திருந்தது.

(6) **மின்சாரச் செலவினம்**

பேராதனைப் பல்கலைக்கழகம் 2013 ஆம் ஆண்டிற்காக ஆட்சேர்க்கப்பட்ட புதிய மாணவர்களின் விடுதிக்காக ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொண்ட 06 வீடுகளுக்காக மின் கட்டணங்களைச் செலுத்த வேண்டியேற்பட்டது.

பல்கலைக்கழகத்தின் நிர்மாணம் தொடர்பான செயற்திட்டத்திற்காக மின் வழங்கலுக்காக கொடுப்பனவு செய்தல் பல்கலைக்கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன், அச்செயற்திட்டத்தின் இறுதியின் போது அம் மின்சார வழங்கலுக்காக செலவிட்ட தொகை செயற்திட்டத்திற்குரிய ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டதுடன், அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தில் அமுலில் இருந்த 72 செயற்திட்டங்களுக்கான மின்கட்டணம் பல்கலைக்கழகத்தின் பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அதன் பிரகாரம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொலைத்தொடர்பு மற்றும் மின்சாரச் செலவினத்தை மிகைத்து செலவு ஏற்பட்டிருந்தது.

**:7) தபால் கட்டணங்கள்**

2012/2013 ஆண்டிற்குரிய 2013 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்ததுடன், அம்மாணவர்களுக்குரிய அதிகரித்த முத்திரைக்

| | |
|---|---|
| | கட்டண அளவு செலவிட வேண்டியேற்பட்டது.<br><br>2013 ஆம் ஆண்டின் பட்டமளிப்பு விழாவிற்கான கடித தொடர்புகள் மேற்கொண்ட போது அதிகரித்த மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஒப்பாக கடிதம் அனுப்ப நேர்ந்தமையால் அதற்காக அதிக முத்திரைக்கட்டணம் செலுத்த வேண்டியேற்பட்டது.<br><br>**(8) வாகன பராமரிப்பு**<br><br>இப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், புதிதாக பெற்றுக்கொண்ட வாகனங்கள் வாகன முகவர்களுக்கு அனுப்பி திருத்த வேலைகள் செய்யப்படுவதால் அவற்றின் பராமரிப்பிற்காக கூடுதலாக செலவிட வேண்டியேற்பட்டது. அதற்கு மேலதிகமாக திருத்தங்களுக்கான உதிரிப்பாகங்களின் விலையும் அடிக்கடி அதிகரிப்பதால் வாகனப் பராமரிப்பின் போது மதிப்பிடப்பட்ட பெறுமதியை மிகைத்திருந்தது.<br><br>(9) **போக்குவரத்து செலவினம்**<br><br>பல்கலைக்கழகத்தினால் வாகனங்களை வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் அனைத்து கல்வி மற்றம் கடமை பிரயாணங்களுக்காக தனியார் துறையிடமிருந்து போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு நேர்கின்றது. கடமை தேவைப்பாடுகளுக்காக விண்ணப்பிக்கின்ற போக்குவரத்து தேவைப்பாடு வழங்கப்பட வேண்டியதால் மதிப்பிடப்பட்ட செலவினத்தை மிகைத்து போக்குவரத்து செலவினத்தை மேற்கொள்வதற்கு நேநர்ந்தது. அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களை போக்குவரத்துச் செய்வதற்கும் ஒழுக்காற்றுப் பிரிவிற்கும் அத்தியவசிய சேவைகளுக்காக வழங்கிய வாகனங்களுக்காக செலவிட வேண்டியேற்பட்டது.<br><br>**(10) மாணவர் அபிவிருத்தி செலவினம்**<br><br>2013 ஆம் ஆண்டில் இக்வதோரில் நடைபெற்ற உலக இளைஞர் மற்றும் மாணவர் விழாவிற்காக பல்கலைக்கழகத்தின் சார்பில் அதில் பங்குபற்றும் பொர்ருட்டு முன்வந்த மாணவர்களுக்கு செலுத்திய விமான டிக்கட் மற்றும் ஏனைய படிகளுக்காக ரூபா 700,000 (ரூபா 350,000 வீதம்) தொகை இந்த மாணவர் அபிவிருதி செலவினத்தின் கீழ் உபவேந்தர் அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட்டது.<br><br>(11) **கல்விசாரா பதவியணியினர் செலவினம் - பணிக்கொடை**<br><br>03/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் சம்பள அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்ததுடன், பணிக்கொடை கணிப்பிடும் போது அச்சம்பள அதிகரிப்பும் கருத்திற்கொள்ளப்பட்டது. அதற்கு மேலதிகமாக ஓய்வுபெற்ற மற்றும் சேவையிலிருந்து விலகிய ஊழியர்களின் எண்ணிக்கை இவ்வாண்டில் அதிகரித்திருந்தது. |
| (இ) | M.Phil மற்றும் PHD பட்டப்படிப்பு அபேட்சகர்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களில் பட்டப்படிப்பு பாடநெறிகளை பின்பற்றுவதற்காக ஆண்டு பூராகவும் சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தினால் நிதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்நிதி வழங்கும் போது வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையானோர் தெரிவு செய்யப்பட்டதுடன், அவ்வாறு செய்வதற்கான காரணம் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும் போது அவர்களின் பயிற்சி பாடநெறி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி கலாசாரத்தை மேம்படுத்துவதற்கு பங்களிப்பினை வழங்கினால் மாத்திரம் அவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றமையினாலாகும். |

| | |
|---|---|
| (ஈ) | 2015 ஆம் ஆண்டில் பாதிடப்பட்ட ஐந்தொகையொன்று சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 6 | **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்** |
| (அ) | பல்கலைக்கழகத்திற்கு வெவ்வேறு மூலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் அனைத்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிப்பதுடன், அவ்வப்போது கணக்குகளுக்கிடையே கணக்கு வகைப்படுத்தும் வழுக்கள் காணப்பட்ட போதிலும், அனைத்து வருமானமும் அரசின் மானியம் உட்பட கணக்களுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் 14 நாட்களுக்குள் பெற்றுக்கொண்ட முற்பணங்களைத் தீர்க்குமாறு பல்கலைக்கழகத்தின் சகலரும் அறிவுறுத்தப்பட்டு சுற்றறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அச்சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க இதுவரை முற்பணங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | தலைமை களஞ்சியங்கள் நான்கிற்குரிய இருப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சரியாகவும் வினைத்திறனாகவும் பேணிச்செல்வதற்காக இதுவரை பல இருப்புக் கட்டுப்பாட்டு முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், இருப்பு தொடர்பான பெறுவனவுகள் வழங்கல்கள் மற்றும் இருப்பினைக் கையாளும் போது காணப்படும் அதிகளவிலான நலிவுகள் இனங்காணப்பட்டதுடன், அவை சரியாக திருத்தமாகவும் மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் இதுவரை களஞ்சிய முகாமைத்துவ பிரிவின் மூலம் எடுக்கப்படுள்ளது.<br><br>தற்போது தலைமை களஞ்சியத்தில் இருப்புக்களை பேணிச் செல்வதற்கு தேவையான பல இருப்பு மட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அங்கு களஞ்சியத்தில் உள்ள இருப்புக்கள் இருப்புப் பற்றாக்குறையில்லாமல் இருப்புக்களை பேணிச்செல்ல முடிந்தது. பாதுகாப்பு இருப்பு மட்டம், ஆகக்குறைந்த மட்டம், மீள கட்டளையிடும் மட்டம் போன்ற இருப்பு மட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், இதன் மூலம் இருப்பு தொடர்பாக நடவடிக்கை வினைத்திறனாக இருந்தது.<br><br>அவ்வாறே இருப்புக் களஞ்சியங்களில் இருப்புக் கட்டுப்பாடு முறையாக பராமரித்துச் செல்வதற்காக பின்காட் பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அங்கு தலைமைக் களஞ்சியத்திற்கு மேலதிகமாக பல்கலைக்கழகத்தின் இருப்புக்களை பராமரித்துச் செல்லும் ஏனைய துறைகள் பிரிவுகள் மற்றும் மாணவர் விடுதிகள் போன்ற பிரிவுகளுக்கும் இந்த பின்காட் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>நான்கு தலைமைக் களஞ்சியங்களுக்குரிய மாதாந்த இருப்பு மீதிகள் களஞ்சிய முகாமைப் பிரிவிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அங்கு இருப்பு பற்றாக்குறை இனங்காணப்பட்டு அது தொடர்பாக களஞ்சியங்களில் விசாரித்து இருப்பு மட்டங்களை பேணிச்செல்லப்படுகின்றது.<br><br>இதுவரை களஞ்சியங்களில் பயன்படுத்தப்படுகின்ற இருப்பு பேரேடுகள் புதிய மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், இருப்பு பெறுவனவு, விநியோகம் மற்றும் இருப்பு மீதிகளில் சகல தகவல்களும் உள்ளடக்கி அதாவது அளவு, அலகொன்றின் விலை மற்றும் மொத்தப் பெறுமதி உள்ளடக்கப்படுவதுடன், இருப்பு புத்தக பரிசோதனையில் குறித்த இருப்பு தொடர்பாக சகல தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.<br><br>இந்த வகையில் இருப்பு பராமரித்துச் செல்லல் தொடர்பாக களஞ்சிய முகாமைத்துவ பிரிவின் மூலம் அவ்வப்போது வனத்துடன் இருப்பதுடன், களஞ்சியப் பொறுப்பாளர்கள் மற்றும் ஏனைய களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக ஊழியர்களை அறிவூட்டுதல், களஞ்சிய முகாமைத்துவ பிரிவின் உதவி நிதியாளரால் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் தற்போது இதுவரை இருப்பு தொடர்பாக நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதுடன், இதற்குப் பின்னர் தற்போது காணப்படும் குறைபாடுகள் |

| | |
|---|---|
| | இனங்காணப்பட்டு அது தெடர்பாக கவனம் செலுத்துவதாக தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (ஈ) | எப்போதும் பல்கலைக்கழகத்தின் அனைத்து வாகனங்கள் பதிவுசெய்தல் மற்றும் அதற்குரிய பதிவேடுகள் முறையாக பராமரித்துச் செல்லப்படுவதுடன், நட்ட அறிக்கைப்படுத்தும் போது சில சந்தர்ப்பங்களில் தாமதங்கள் ஏற்படும் சகல நட்ட அறிக்கை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன். எவ்வாறாயினும் சேதங்களை அறிக்கையிடல் தொடர்பாக உத்தியோகத்தர்களின் தாமதத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து வைக்கப்பட்டுள்ளது. |
| (உ) | **ஆய்வு மானியங்கள் மற்றும் நிதியப் பயன்பாடு**<br><br>தற்போது ஆராய்ச்சி மானியங்களுக்காக கிடைக்கும் பணத்தின் பயன்பாடு கூடிய பெறுமதியை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கு அதிகமான ஆராய்ச்சிகள் மெதுவாக மேற்கொள்ளப்படுவதால் ஆராய்ச்சி மானியங்கள் குறைப்பயன்பாட்டிற்கு உட்படுவதற்கான காரணங்களாக உள்ளது. எடுத்துக்காட்டாக அதிகமான பரிசோதனைகள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் எடுக்கின்றது. அவ்வாறான காரணங்களினால் ஒவ்வொரு ஆண்டும் ஒரே வகையில் செலவினங்களை எதிர்பார்க்க முடியாமல் இருப்பதுடன் சில வருடங்களில் மிகவும் அதிகமான செலவினங்களை மேற்கொள்வதற்கு ஏற்படுவதுடன், சில ஆண்டுகளில் மிகவும் குறைந்த செலவுகளை மேற்கொள்ள வேண்டியேற்படுகின்றது.<br><br>எவ்வாறாயினும் கடந்த சில ஆண்டுகளில் ஆராய்ச்சி நிதியத்தின் பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஐயவினாவினால் பல்கலைக்கழகம் பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளது.<br><br>1. குறித்த காலத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>2. ஆரம்ப கட்டத்தில் ஆராய்ச்சி பெறுமதியில் 20% விடுவித்தல் மற்றும் ஆராய்ச்சி முன்னேற்றத்தின் பிரகாரம் எஞ்சிய பணத்தை விடுவித்தல்.<br><br>3. ஒரு ஆய்வாளருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பரிசோதனையை மாத்திரம் வழங்குதல்.<br><br>மேற்படி தீர்மானங்கள் காரணமாக ஆய்விற்காக வழங்கப்பட்ட அதிகளவிலான நிதி இவ்வாண்டில் விளைவற்ற நிலைமையில் காணப்படவில்லையெனவும் எதிர்காலத்தில் மேலும் கவனத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>நிதியப் பயன்பாடு<br><br>விசேடமாக பல்வேறு சிரமங்கள் உள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக பல்வேறு கொடை வல்லுனர்களின் அனுசரணையில் புலமைப்பரிசில் நிதியம் பல்கலைக்கழகத்தில் காணப்படுவதுடன், அந்நிதியைப் பயன்படுத்தும் போது எப்போதும் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட போது இணங்கப்பட்ட நியதிகளுக்கு இணங்க பணத்தை செலவிடுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு கடப்பாடாக உள்ளது. ஆதலால் எதிர்பார்த்த பிரகாரம் நிதியத்தை பயன்படுத்துவதற்கு பல்கலைக்கழகத்திற்கு முடியாத போதிலும் அந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட போது இணங்கியதன் நியதிகளின் பிரகாரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | பல்கலைக்கழகததின் கல்விசாரா பதவியணிக்கு carder இணங்கக்கூடிய வகையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், கல்விசார் பதவியணியினர், பீடங்களின் அத்திவசியத் தேவை அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், தகைமை வாய்ந்த |

| | |
|---|---|
| | விரிவுரையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காமை அடிப்படையில் ஏதேனும் தாமதங்கள் இடம்பெற்றிருந்ததாக தெரிவித்துக்கொள்கின்றேன். எவ்வாறாயினும் முடியுமான வரை (carder) இணங்க கல்விசார் மற்றும் கல்விசாராத பதவியணிக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (எ) | 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு இணங்க விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவுச் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| (ஏ) | பொதுத் திறைசேரியிதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றிக்கைக்கு இணங்க ஊழியர் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், கடன் அறவிடும் போது பல நடைமுறை சிக்கல்கள் காணப்பட்ட போதிலும் முடியுமான வரை கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (ஐ) | பல்கலைக்கழகத்தின் விசாலத்தின் பிரகாரம் ஒரே தடவையில் ஒப்பந்த செயற்பாடுகள் பல்கலைக்கழகத்தில் செயற்படுத்துவதன் அடிப்படையில் ஒப்பந்தச் செயற்பாடுகளில் சில குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன. ஆதலால் எதிர்காலத்தில் ஒப்பந்த நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பில் பல்கலைக்கழகம் கூடிய கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**ஒப்பம்: பேராசிரியர் உபுல் பீ திசாநாயக்க**

**உப வேந்தர்**

புள்ளிவிபரவியல் தகவல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை
www.pdn.ac.lk